N. 2430

தினமணி
வெளியீடு 43

பதிப்பாசிரியர்:
ஏ. என். சிவராமன்.

சுதந்திர இந்திய

# அரசியல் நிர்ணயம்

"தினமணி" ஆசிரியர்
**ஏ. என். சிவராமன்**
எழுதியது.



"இருள் அகற்றும்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை"

**தினமணி காரியாலயம்**
**100,** மவுண்ட் ரோடு, சென்னை
*1946*

காபிரைட்]

[விலை ரூ. 1-8-0

பிரிட்டிஷ் தூதுகோஷ்டித் திட்டம் அரசியல் நிர்ணய சபை முதலியவை களைப் பற்றிய ஓர் ஆராய்ச்சி.

அமெரிக்கா, ஸ்விட்ஜர்லாந்து, கானடா முதலிய பல தேசங்களின் அரசியலமைப்புகளின் உதாரணத் துடன் இந்தியாவின் பிரச்னைகள் இதில் விளக்கப்படுகின்றன.

MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1
24814

# முன்னுரை

அரசியல் நிர்ணய சபை சம்பந்தமாக பிரிட்டிஷ் தூதுகோஷ்டி தயாரித்துள்ள திட்டத்தையும், அரசியல் நிர்ணயசபை கூடிய பிறகு ஏற்படக்கூடிய சர்ச்சைகளையும் பத்திரிகைகளில் படிக்கும்போது, அவற்றை நன்கு புரிந்து கொள்ள உதவிசெய்வதே இந்த புத்தகத்தின் முக்கிய நோக்கம். இதில் வெளியிடப்பட்டிருக்கும் அபிப்ராயங்களும் இந்த நோக்கத்துடன் கூடியவைதான். அவற்றைக் காங்கிரஸின் அபிப்ராயத்துக்கு அறிகுறியாக கருதக்கூடாது.

இந்தப் புத்தகத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். 1 முதல் 5-வது அத்தியாயம் வரை தூதுகோஷ்டி திட்டம் வெளியானது சம்பந்தமான சரித்திர வரலாறுகள். 6 முதல் 13-வது அத்தியாயம் முடிய உள்ள பகுதி தூது திட்டத்தின் ஷரத்துக்கள் பற்றிய ஆராய்ச்சி. 14 முதல் 17-வது அத்தியாயம்வரை உள்ள பகுதி, பல நாடுகளில் நடந்த அரசியல் நிர்ணய சபைகளையும், ஆங்காங்கு ஏற்பட்டுள்ள அரசியலமைப்புகளையும் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் இந்திய அரசியல் நிர்ணயசபை கவனிக்கவேண்டிய பிரச்னைகளை விளக்குகிறது. அந்த அத்தியாயங்களை நன்கு படித்தால்தான் முடிவுரை — அத்தியாயமான 18-வது அத்தியாயத்திலுள்ள சில விஷயங்களை புரிந்துகொள்வது சுலபமாக இருக்கும்.

புத்தகத்தின் மூன்று பகுதிகளும் பரஸ்பரம் சம்பந்தமுள்ளவை. ஆகையால், ஒரே விஷயம் புத்தகத்தில் இரண்டு மூன்று இடங்களில் காணப்படும். இது தவிர்க்கமுடியாதது. ஆங்காங்கு விவாதிக்கப்படும் விஷயம் எளிதில் பிடிபடுவதற்காக ஏற்கனவே கூறின பல விஷயங்களை மீண்டும் கூறுவது அவசியமாகிறது.

அரசியலமைப்பு சம்பந்தமாக ஆங்கிலத்தில் பல புத்தகங்கள் இருக்கின்றன. அந்த புத்தகங்கள் பல

வற்றையும் படித்து, சென்ற பத்துவருஷ காலமாக பத்திரிகைகளில் வெளியான சர்ச்சைகளையும் பாடம் படிப்பதுபோல படித்து, அதே சமயத்தில் நாட்டின் அரசியல் வேலையிலும் ஒருவர் பங்கு கொண்டிருந்தால், அப்படிப்பட்டவருக்கு இப்புத்தகத்தில் புதிது ஒன்றும் இருக்காது.

இந்தப் புத்தகத்தின் சாராம்சம் 6, 13, 14, 18 ஆகிய அத்தியாயங்களில் இருக்கின்றன.

ரஷியாவின் அரசியலமைப்பின் விவரங்களை தெரிந்து கொள்ள பலருக்கு ஆவல் இருக்கும். ஆயினும் ரஷிய அரசியலைப்பற்றி இப்புத்தகத்தில் பிரஸ்தாபிக்கப்பட வில்லை. இதற்கு ஒரு காரணம் உண்டு. அது யாதெனில், அந்த தேசத்தின் அரசியலமைப்புச் சட்டம் பூர்ண ஜனநாயக வடிவத்திலேயே இருந்த போதிலும், அங்கு நடக்கும் ஆட்சியானது ஒரு தனிக்கட்சியின் ஏகபோக மான சர்வாதிகார ஆட்சியே. தனி மனித சுதந்திரத்தை ஒப்புக்கொள்ளும் ஜனநாயக ஆட்சியைப்பற்றிய சர்ச்சை யில் ரஷிய அரசியலமைப்புச் சட்டத்தைப்பற்றி பிரஸ்தா பிப்பது பலவிதமான தப்பபிப்ராயத்துக்கே இடமாகும். கிட்டத்தட்ட இதே காரணங்களால்தான் சீனாவின் அரசியலமைப்பைப் பற்றியும் ஜப்பானின் அரசிய லமைப்பைப் பற்றியும், இப்போதுள்ள ஸ்பெயினின் அரசியலைப் பற்றியும் இந்தப் புத்தகத்தில் பிரஸ்தாபிக்க வில்லை.

புத்தகத்தில் உபயோகித்துள்ள சொற்களைப்பற்றி ஒருவார்த்தை. "பார்லிமென்ட்", "மைனாரிட்டி" "மெஜாரிட்டி", "வோட்டு" இவை போன்ற சில ஆங்கில வார்த்தைகள் இப்புத்தகத்தில் தமிழ் வார்த்தைகளாகவே கையாளப்படுகின்றன. சர்க்கார் களில் சட்டமியற்றும் ஸ்தாபனம் இரண்டு சபைகள் கொண்டதாக இருக்கும்போது, இரண்டையும் சேர்த்துக் குறிப்பிட "சட்டமன்றம்" என்ற

வார்த்தையை ஒன்றிரண்டு இடங்களில் உபயோகித் திருக்கிறோமாயினும், பெரும்பாலும் "பார்லிமென்ட்" என்ற வார்த்தையையே உபயோகித்துள்ளோம். மைனாரிட்டி, என்ற வார்த்தையை மைனாரிட்டி ஜாதியார் என்ற அர்த்தத்தில் சில இடங்களில் உபயோகித் திருக்கிறோம். சிறுபான்மையான வோட்டுக்கள் என்ற அர்த்தத்திலும் சில இடங்களில் உபயோகித்திருக் கிறோம்.

மைனாரிட்டி ஜாதிகளை குறிக்கும்போது ஜனத் தொகையில் 20 சத விகிதத்துக்குக் குறைந்த மைனா ரிட்டிகளை "சிறிய மைனாரிட்டிகள்" என்றும் 30 சத விகி தத்துக்கு மேற்பட்ட மைனாரிட்டிகளை "பெரிய மைனா ரிட்டிகள்" என்றும் பிரஸ்தாபித்திருக்கிறோம். அது போலவே 60 அல்லது 70 சத விகிதத்துக்கு குறைந்த மெஜாரிட்டியை "சிறிய மெஜாரிட்டி" யென்றும் சுமார் 60 அல்லது 70 சத விகிதத்துக்கு மேற்பட்ட மெஜா ரிட்டியை "பெரிய மெஜாரிட்டி" யென்றும் குறிப்பிட் டிருக்கிறோம். உதாரணமாக வங்காளத்தில் ஹிந்துக்கள் பெரிய மைனாரிட்டி : முஸ்லிம்கள் சிறிய மெஜாரிட்டி.

ஒவ்வொரு அத்தியாயத்திலும், பாராக்களுக்குத் தலைப்புக் கொடுத்திருப்பது பற்றி அட்டவணை எதுவும் சேர்க்கப்படவில்லை. 7 முதல் 13வது அத்தியாயம் வரை உள்ளது உண்மையில் ஒரே அத்தியாயமாகக் கருதத் தக்கதுதான். ஆயினும் திட்டத்தின் ஒவ்வொரு, அம்சத் திலும் வாசகர்கள் கவனம் செலுத்தும் பொருட்டு, அவ் வாறு தனி அத்தியாயங்களாக பிரித்துள்ளோம். 7, 8, 9, 10-வது அத்தியாயங்கள் "தினமணி" யில் "ஒரு மாணவன்" எழுதியதாக பிரசுரமாகியிருக்கின்றன. "குமரி மலர்" சஞ்சிகைக்காக எழுதிய கட்டுரை ஒன்று இதில் பதினொன்காவது அத்தியாயமாகச் சேர்க்கப் பட்டிருக்கிறது.

சென்னை
23—7—'46

ஏ. என். சிவராமன்

# பொருள் அடக்கம்


| அத்தியாயம் | விஷயம் | பக்கங்கள் |
| --- | --- | --- |
| 1. | **சுதந்திர இயக்கத்தின் வளர்ச்சி:** 1857-க்குப் பிறகு — ஒத்துழையாமை இயக்கம்—தேசிய சுய மதிப்பு — சத்யாக்ரஹத்தின் சக்தி — தேசிய இயக்கத்தின் புது அந்தஸ்து—யுத்த காலத்தில் ஏற்பட்ட புது உணர்ச்சி — பிரிட்டிஷ் ஜம்பம் தகர்ந்தது — "வெளியேறுக" — "இ. தே. ரா" கொள்கை பரவி விட்டது. ... | 8—20 |
| 2. | **நம் தேசியத்தின் பலவீனம்:** லீகின் ஆரம்பம் — தனித் தொகுதி— லக்ஷ்மணபுரி ஒப்பந்தம்—1919-ம் வருஷ அரசியல்—லீகின் புதிய கொள்கை — பிளவின் ஆரம்பம் — கூட்டுத் தொகுதியை லீக் கைவிட்ட வரலாறு — பிரிட்டனின் விபரீதக் கொள்கை — ஜின்னாவின் 14 அம்சத் திட்டம் — 1937-ல் லீகின் தோல்வி — அட்டூழிய புரளிகள் — இந்திய சுதந்திரத்தில் அசிரத்தை — முஸ்லிம்களின் மனக்குறை—கலப்பு மந்திரி சபை ஏற்படாததேன்—"தனி ராஜ்யக்" கோரிக்கை—கிரிப்ஸ், ராஜாஜி ஊட்டின தைரியம்—பிளவு விரிவடைந்த வரலாறு—மூன்று கட்டங்கள். ... | 21—48 |
| 3. | **பிரிட்டனின் தேவையும் இந்தியாவின் தேவையும்:** ராஜதந்திரத் தேவைகள்—பிரிட்டனின் தேசிய கவுரவம் — யுத்த பலம் பற்றிய தேவைகள் — பொருளாதார தேவைகள் — பிரிட்டனிலுள்ள பொது ஜன உணர்ச்சி — நிலைமை நீடித்தால்—சமரசத்துக்கு சரியான சந்தர்ப்பம்—இந்தியாவின் அவசரத் தேவைகள். ... | 48—57 |

4. சிக்கலைத் தீர்க்கும் முயற்சி :
பழைய கொள்கையின் விபரீதம் — நேர்மையான கொள்கை — தீர்ப்பின் தன்மை. ... 58—62

5. இப்போதுள்ள அரசியலமைப்பு : ... 62—64

6. தூது கோஷ்டியின் திட்டம் :
அபிப்ராயங்கள் — அரசியல் நிர்ணய சபை பிரேரணைகள் — அகில இந்திய அரசியல்—அடிப்படை அரசியல் பிரேரணைகள்—நிர்ணயித்த அரசியலை மாற்றும் உரிமை—பிரிட்டிஷ் இந்திய உடன்படிக்கை—சொல்லாத விஷயங்கள் ... 65—70

7. அகில இந்திய யூனியனும் மாகாணங்களும் : ... 71—75

8. யூனியன் சர்க்காரிடம் விடப்படும் விஷயங்கள் :
விஷயங்கள் பிரிவினை—யோசிக்க வேண்டிய பிரச்னை — கூப்லண்ட் கருத்து— ரயில்வே விஷயம். ... 75—83

9. அகில இந்திய ஆட்சியும் சமஸ்தானங்களும் : ... 83—87

10. சமஸ்தானங்கள் "விட்டுக் கொடுக்கும்" விஷயங்கள் :
சமஸ்தானங்களும் மாகாணங்களும் ... 88—90

11. தொகுதிவட்ட சர்க்கார்கள் :
பாகிஸ்தானுக்கு பதிலாக—இதிலுள்ள அநீதி—கட்டாயம் இல்லை—அஸ்ஸாம் மாகாணத்தின் நிலைமை — சிந்துவின் நிலைமை—தொகுதிவட்டம் எதற்காக— தொகுதிவட்டமும் ராஜாஜி திட்டமும் — வங்காளத்தின் நிலைமை—கிரிப்ஸ் திட்டமும் தொகுதிவட்டமும் — கூப்லண்ட் திட்டமும் தொகுதிவட்டமும். ... 91—112

**12.** மத்ய சர்க்காரில் வகுப்புப் பிரச்னை :
முஸ்லிம்களை திருப்திசெய்ய — முட்டுக் கட்டைக்கு இடமாகலாம் — ஜின்னாவின் பழைய கோரிக்கை — மத்ய சர்க்காரின் பொக்கிஷம்—அரசியலமைப்பை மாற்றும் உரிமை —தொகுதிவட்டங்களிடம் இல்லை ... **112—121**

**13.** ஸிம்லா பேரங்களும் இறுதித் தீர்ப்பும் :
அகில இந்திய யூனியன்—யூனியன் விஷயங்கள்—யூனியன் பொக்கிஷம் — யூனியன் சட்டசபை — யூனியன் சட்ட சபையில் பிரதிநிதித்துவம்—யூனியன் சட்ட சபையில் "வகுப்புப் பிரச்னை"—யூனியனும் சமஸ்தானங்களும்—தொகுதி வட்டங்கள் — அரசியலை மாற்றும் உரிமை. ... **122—127**

**14.** இந்திய அரசியல் நிர்ணய சபையில் சில புதுமைகள் : ... **127—133**

**15.** சில அரசியல் நிர்ணய சபைகள் :
(1) அமெரிக்கா (2) ஆஸ்திரேலியா (3) ஸ்விட்ஜர்லாந்து (4) கானடா (5) தென்னாப்பிரிக்கா, (6) செக்கோஸ்லொவாகியா (7) அயர்லாந்து குடியரசு— சரித்திர வரலாறு — போட்டி சர்க்கார்கள் — சமரச உடன்படிக்கை — உடன்படிக்கைக்குப் பிறகு அரசியல் நிர்ணயம். —இந்தியாவிலோ ... **134—157**

**16.** அரசியலமைப்பில் பல விதங்கள் :
சமஷ்டி முறை — "சம்மேளனம்" — "ஒருமை சர்க்கார்" ... **157—168**

**17.** சமஷ்டி உறுப்புகளில் பல வகைகள் :
நிர்வாக முறைகள்—பார்லிமெண்டரி நிர்வாகம்—நிரந்தர நிர்வாகம்—ஸ்விட்ஜர்லாந்திலுள்ள முறை — சட்டமன்றத்தின் அமைப்பு : "மேல் சபை"—"மேல் சபையின் தன்மை:"—அமெரிக்கா—கானடா—ஆஸ்திரேலியா — ஸ்விட்ஜர்லாந்து—

தென்னுப்பிரிக்கா — அயர்லாந்து — பிரான்ஸ்—ஒரு பொது அம்சம்—"கீழ் சபைகள்"—ராஜாங்க அதிபதி: அமெரிக்கா — ஸ்விட்ஜர்லாந்து—பிரான்ஸ் — அயர்லாந்து — அரசியலமைப்பை திருத்துவது: அமெரிக்கா, தென்னுப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, ஸ்விட்ஜர்லாந்து, இத்தாலி உதாரணங்கள்—விஷயப் பிரிவினை: ஆஸ்திரேலியா, ஸ்விட்ஜர்லாந்து அமெரிக்க உதாரணங்கள்—சமஷ்டி சர்க்காரின் வருமானத் துறைகள். ... 168—199

18. எதிர்கால முறை என்ன?

தெற்குதிவட்ட சர்க்கார் அந்தஸ்து—புது மாகாணங்கள் ஏற்படுத்துவது—நிர்வாக அமைப்பு — சட்ட சபை பிரதிநிதித்துவம்—மைனுரிட்டி பாதுகாப்புகள்: துருக்கி, எஸ்தோனியா உதாரணங்கள்; ஒரு புது யோசனை—உடன் படிக்கை விஷயங்கள்—முடிவுரை ... 200—217

19. அனுபந்தம்

தூது கோஷ்டியின் மே 16-ந் தேதி அறிக்கை முழு விவரம் ... 218—234

---

## தயவு செய்து திருத்திக்கொள்ளவும்

பார்லிமெண்ட், ஆஸ்டிரேலியா என்ற ஆங்கிலப் பெயர்கள் சில இடங்களில் பார்லிமெண்ட், ஆஸ்திரேலியா என்று வெவ்வேறு விதமாக அச்சாகியிருப்பதையும், வேறு சில சொற்களிலும் நாலைந்து இடங்களில் "ன"வுக்கு பதில் "ண" என்று அச்சாகியிருப்பதையும், வேறு சில அச்சுப் பிழைகளையும் வாசகர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும். பின்வரும் வாசகங்களை வாசகர்கள் முதலிலேயே திருத்தம் செய்து கொள்ளும் படி கேட்டுக் கொள்கிறோம்.

53-ஆவது பக்கத்தில் 16-ஆவது வரியில் "கோடிக்கான" என்றிருப்பதை "கோடிக் கணக்கான" என்று திருத்திக் கொள்ளவேண்டும்.

68-ஆவது பக்கத்தில் 12-ஆவது வரியில் "அரசியலமைப்பு அமலுக்கு வந்த 2 வருஷத்துக் குள்ளாக" என்றிருப்பதை "அரசியலமைப்பு அமலுக்கு வந்த பின்னர்" என்று படித்துக் கொள்ள வேண்டும்.

சுதந்திர இந்தியாவின்

# அரசியல் நிர்ணயம்

## முதல் அத்தியாயம்

## சுதந்திர இயக்கத்தின் வளர்ச்சி

உலக சரித்திரத்திலே அரசியல் நிர்ணய சபைகள் இரண்டுவித சந்தர்ப்பங்களில் கூடுவது வழக்கம்.

அடிமைப்பட்டுள்ள ஒரு தேச மக்கள் "இன்றுமுதல் நாம் சுதந்திர மக்கள்" என்று பிரகடனம் செய்து கொண்டு, போர் செய்து, அன்னிய ஆதிக்கத்தை ஒழித்த பின்னர் தம் அரசியலை நிர்ணயிப்பார்கள். அமெரிக்காவில் நடந்தது இதுதான். ஆட்சி புரியும் அன்னியரே தம் ஆதிக்கத்தில் உள்ள மக்களைப் பார்த்து "இனி நீங்கள் சுதந்திர மக்கள்! உங்கள் அரசியலை நீங்களே வகுத்துக்கொள்ளுங்கள். நாங்கள் இனி உங்கள் எஜமானர்கள் அல்லர்—நண்பர்கள்" என்று பிரகடனம் செய்வதும் உண்டு. இந்த இரண்டாவது முறையைத் தான் கானடாவிலும் ஆஸ்டிரேலியாவிலும் தென்னாப்ரிக்காவிலும் பிரிட்டன் கையாண்டது.

ஆள்வோர் தாமாகவே அடிமை நாட்டை விடுவிப்பது, இரண்டு சந்தர்ப்பங்களில் நடைபெறும்.

ஒன்று—அந்த நாட்டின் மீதுள்ள அனுதாபத்தால்; இதுதான் ஆஸ்டிரேலியாவில் நடந்தது. மற்றொன்று—அந்த நாட்டை ஆள்வதிலுள்ள சிரமத்தால். இந்த இரண்டாவது சந்தர்ப்பந்தான் இந்தியா விஷயத்தில் ஏற்பட்டுள்ளது. இதுதான் தென்னாப்ரிக்காவில் நடந்தது.

இந்தியாவை இனி அடக்கி ஆள்வது சுலபமல்ல என்று பிரிட்டிஷார் உணரும் நிலைமை, இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. சுயாட்சியாயினும் சரி, அன்னிய ஆட்சியாயினும் சரி, ஆட்சிக்கு அடிப்படை ராணுவமே. இது பற்றியே திருவள்ளுவர் "படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு" என்ற குறளில் "படை"யை முதலிடத்து வைத்தார் போலும். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கும், இந்திய ராணுவத்துக்கும் இடையேயுள்ள உறவு ஆட்டம் கண்டுவிட்டது. தாம் எது செய்தாலும் இந்தியப் படை கட்டுப்பட்டு நடக்கும் என்ற நம்பிக்கை பிரிட்டிஷாருக்கு இல்லை. இந்த நிலைமை ஏற்பட்டதற்கு யுத்தகால நிகழ்ச்சிகளே காரணம்.

இந்த யுத்தத்தின்போது நடந்த சம்பவங்கள் இந்திய ராணுவத்தின் மனப்பான்மையை மிகவும் மாற்றியது. 1914—18 வருஷத்தில் நடந்த யுத்தத்திலும் இந்தியப் படைகள் போரிட்டனவென்றாலும், பல விஷயங்களில் அந்த யுத்தமும் இப்போதைய யுத்தத்தைப் போன்றதேயென்றாலும், புதிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு அந்த காலத்தில் இந்திய சிப்பாய்களின் மனது பண்பட்டிருக்கவில்லை. தவிரவும் வெள்ளையர்கள் ஆசியா வாசிகளை விட உயர்ந்தவர்கள் என்ற அபிப்பிராயத்தை மாற்றும்படியாக அந்த யுத்தத்தில் கண்கூடாக எதுவும் காணப்படவில்லை. வெள்ளையர் சாதிப்பதை ஆசியாக்காரரும் சாதிக்க முடியும் என்ற உண்மை இந்திய ராணுவத்தினருக்கு நன்கு புலப்பட்டது இந்த யுத்தத்தின்போதுதான். பொதுஜனங்களிடையே கூட "இந்தியா இந்தியருடையதே; வெள்ளையருக்கு இங்கு ஆட்சிபுரிய உரிமை இல்லை" என்ற உணர்ச்சி நன்கு வேரூன்றாததால் தான், அந்த காலத்தில் இந்திய ராணுவத்தின் மனப்பான்மையில் மாறுதல் ஏற்படவில்லை. அதனால்தான் 1919-ஹு அமிர்தசரஸில் படுகொலை நடந்தபோதுகூட இந்திய ராணுவத்தின் "ராஜவிசுவாசம்" சிறிதும் ஆட்டமெடுக்காமல் இருந்தது!

## 1857-க்குப் பிறகு

1857 வருஷத்தில் நடந்த இந்திய சுதந்திர இயக்கத்துக்கு முன்னர் இந்தியாவிலுள்ள சமஸ்தானங்கள் பெரும்பாலும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தை ஒப்புக்கொண்டுவிட்டனவாயினும், "சுதேச அரசர்களின்" ஒளி பூர்ணமாக மங்கிப் போய்விடவில்லை. டில்லியில் பெயரளவாகிலும் முகலாய பாதுஷாவின் ஆட்சி இருந்து வந்தது. ஆகையால் ஜனங்களின் தேசபக்தியை ஒருமுகப் படுத்தவும், வீர உணர்ச்சியை தட்டி எழுப்பவும் ஒரு லக்ஷியம் இருந்தது. வெள்ளையரின் ஆட்சியை ஒழித்தால் உடனே இந்தியரின் ஆட்சியை, அல்லது இந்திய மன்னர்களின் ஆட்சியை, ஏற்படுத்திவிடலாம் என்ற ஆசையை எளிதில் கிளப்ப முடிந்தது. "பரங்கிகளின் ஆட்சியை ஒழிப்போம்," "தீன் தீன்! அல்லா ஹோ அக்பர்," "ஹர ஹர மகாதேவ்" "பாத்ஷா கி ஜே" என்ற கோஷங்களை படைகளினிடையே பரப்புவது எளிதாக இருந்தது. முகலாயர்களை நெடுநாளாக எதிர்த்துவந்த மராட்டியர்கூட வெள்ளையரை எதிர்த்து டில்லி பாதுஷாவின் ஆட்சியை ஸ்தாபிக்க திரண்டு வந்தார்கள். இதன் பயனாகக் கிளம்பியதுதான் 1857-ம் வருஷத்திய "சிப்பாய் கலகம்" என்று வர்ணிக்கப்படும் இந்திய சுதந்திரப் போர். அந்தப் போரில் பல சமஸ்தானாதிபதிகள் துரோகம் செய்ததின் விளைவாக இந்தியர்கள் தோற்றனர். எல்லா சமஸ்தானங்கள் மீதும் பிரிட்டிஷ் ஆதிக்கம் ஸ்திரமாக சுமத்தப்பட்டது. சுதந்திரப் போரை நடத்திய ஜனங்களை ஒடுக்கியபிறகு பிரிட்டன் மிகத் திறமையாக ராஜதந்திர சாதுர்யத்தை உபயோகித்து, பிரிட்டிஷ் ஆட்சி இந்தியரின் நன்மைக்காகவே நடக்கிறது என்ற ஒரு எண்ணத்தை எளிதில் பரப்பியது. அதே சமயத்தில், ராணுவத்திலும் பிரிட்டிஷ் ஆபீஸர்களை அதிகமாக ஏற்படுத்தி இந்தியர்களை வெறும் "கூலிப் பட்டாள"மாக்கியது. ஜனங்களுக்கும் ராணுவத்துக்கும் சிறிதும் தொடர்பில்லாதபடி செய்தார்கள்.

பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்க்கவேண்டும் என்ற ஆசையோ, எதிர்க்கமுடியும் என்ற நம்பிக்கையோ இந்திய

சிப்பாய்களின் மனதில் எழவே முடியாதபடி, ராணுவம் முழுதும் மாற்றி யமைக்கப்பட்டது. ஆகையால் 1857-ம் வருஷம் முதல் 1920 வருஷம் வரை பிரிட்டன் இந்த நாட்டில் ராணுவத்தின் "ராஜபக்தியை" பற்றி கவலைப் பட சந்தர்ப்பம் ஏற்படவில்லை. அதாவது "சுடு" என்று உத்தரவிட்டவுடன், இந்திய சிப்பாய்கள் சுட மறுத்ததே இல்லை.

## ஒத்துழையாமை இயக்கம்

1919-ம் வருஷம் வரையில் இந்திய ராணுவம் மட்டுமல்ல, இந்திய பொதுமக்களும் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்க்கத் துணிந்ததில்லை. பிரிட்டிஷ் ஆட்சியின் கொள்கைகளை ஆக்ஷேபித்ததுண்டு; ஆனால் உத்தரவுக்குப் பணியமாட்டோம் என்று எதிர்த்ததில்லை. "நியாயமான உத்தரவுக்குத்தான் பணிவேன்; அநியாயமான உத்தரவுக்குப் பணியமாட்டேன்" என்று 1919-ஆத்துக்குமுன் எதிர்த்து நின்றவர் மகாத்மா காந்தி ஒருவர்தான். 1920-ஆத்தில் மகாத்மா காந்தி தமது சத்யாக்ரஹத்தை தேசத்துக்கு ஆயுதமாகத் தந்து "அன்னிய ஆட்சியுடன் ஒத்துழைப்பதில்லை" என்ற ஒத்துழையாமைக் கொள்கையை காங்கிரஸில் புகுத்திய பின்னர் தான் நிலைமை மாற ஆரம்பித்தது. அவர் காங்கிரஸில் புகுத்திய அந்தப் புதிய கொள்கைதான் இந்நாட்டில் புரட்சியின் முதல் வித்து. அமிர்தசரஸில் நடந்த படு கொலையையும், துருக்கியிடமிருந்த அரபு நாடுகளில் பிரிட்டிஷ், பிரெஞ்சு ஆதிக்கம் ஏற்பட்டதையும் எடுத்துக்காட்டி இந்திய சுதந்திரத்துக்கு அதை ஒரு காரணமாகவும், ஒத்துழையாமையை கருவியாகவும் அவர் இந்திய மக்களுக்கு அளித்தது நாட்டில் புரட்சி மனப்பான்மையையும் தேசீய ஒற்றுமையையும் பரப்பியது. பள்ளிக்கூடங்களையும், கோர்ட்டுகளையும் பகிஷ்கரிக்க வேண்டுமென்று அவர் கூறிய யோசனையை காங்கிரஸ் ஏற்றுக்கொண்டதின் பயனாக ஆயிரக்கணக்கான மாணவர்களும், நூற்றுக்கணக்கான வக்கீல்களும், பள்ளிக் கூடங்களையும், கோர்ட்டுகளையும் விட்டு விட்டு ஜனங்க

னிடையே தேச பக்தியை ஊட்டி, " ராஜத்துவேஷத்தை " வளர்க்கும் வேலையில் ஈடுபட்டார்கள். சட்டசபைகளை யும், பட்டங்களையும் பகிஷ்கரிக்க வேண்டுமென்று கூறியது, ஜன மனப்பான்மையை மாற்றி, பிரிட்டிஷ் ஆட்சியைப் பற்றிய மோகம் கலைவதற்கு உதவி யாயிற்று. மதுவிலக்கு, குடிசைத் தொழில் முன்னேற்றம் முதலியவற்றை காங்கிரஸின் வேலைத் திட்டத்தில் சேர்த் தது சமூகத்தில் பரஸ்பர உதவி மனப்பான்மையை வளர்த்தது. அரசியல் உணர்ச்சியும், அறிவும் இல்லாத பாமர மக்கள் கூட காங்கிரஸும், சுயராஜ்யமும் பொது ஜனங்களுக்கு நல்லதுதான் என்று உணரலாயினர். தீண்டாமை ஒழித்தல் என்பது பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் மனப்பான்மையில் புரட்சிகரமான மாறுதலை விளைவித்தது. இவை யாவும் தேசிய உணர்ச்சியை உறுதிப்படுத்தின. பிரிட்டிஷ் ஆட்சி மீது துவேஷம் வளர்ந்தது. பிரிட்டன் இங்கு ஆட்சி புரிய கொஞ்சங்கூட உரிமை இல்லை என்பதை எல்லோரும் ஏக மனதாக ஒப்புக்கொண்டனர். " இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டது, கடவுள் இந்தியாவுக்கு செய்த நன்மை களில் ஒன்று" என்று காலஞ்சென்ற ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலே (தம் குருநாதன் என்று காந்திஜியால் வர்ணிக்கப்படுகிறவர்) ஒரு காலத்தில் கூறினார். அதை மறந்து 'பிரிட்டிஷ் ஆட்சி சாத்தான் தன்மை வாய்ந்தது' என்று ஜனங்கள் கருதும்படி காந்திஜி செய்துவிட்டார்.

### தேசிய சுயமதிப்பு

அன்னிய ஆட்சியின் கீழ் வாழ்வது தமக்கு அவமானம் என இந்தியர்கள் எப்போது நினைக்கின் றனரோ, அந்த நிமிஷமே இந்தியாவிலிருந்து பிரிட்டன் வாபஸாகவேண்டியதுதான் என்று ஒரு ஆங்கில சரித்திர ஆசிரியர் (ஸர் ஜான் ஸீலி) கூறினார். அவர் வர்ணித்த அந் நிலைமையை 1922-ஆம் ஆண்டுக்குள் காங்கிரஸ் ஏற் படுத்திவிட்டது. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வாழ்வது அவமானம் என்று கோடிக்கணக்கான மக்கள் உணர்ந் தனர். அது மட்டுமல்ல, அந்த அவமானத்தைத் துடைப்

பதற்காக சிறைச்சாலை புகவும் பதினாயிரக்கணக்கான மக்கள் தயார் என்ற நிலைமை ஏற்பட்டது. பர்தோலி வரிகொடா இயக்கம், நாகபுரி கொடி சத்யாக்ரகம் முதலியவற்றின் இறுதியில் அந்த அந்த பிரச்னைகளில் அதிகாரவர்க்கம் தனது பிடிவாதத்தையும், வரட்டு ஜம்பத்தையும் கைவிட்டு காங்கிரஸுடன் சமரசம் செய்துகொள்ளவும் முன்வந்தது.

இதற்குப் பிறகு 1929-ல் காங்கிரஸ் மகா சபையானது, இந்தியர் கோரும் சுயராஜ்யம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குட்பட்ட பொறுப்பாட்சி அல்லவென்றும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு புறம்பான பூர்ண சுதந்திரத்தை அடைவதே இந்தியாவின் லக்ஷியமென்றும், தீர்மானம் நிறைவேற்றியது. பிரிட்டனுக்கு இங்கு ஆட்சி புரிய உரிமை இல்லை என்ற கோஷத்துடன் தான் 1930-ஆண்டில் லக்ஷக்கணக்கான மக்கள் சத்யாக்ரஹத்தில் ஈடுபட்டனர்.

## சத்யாக்ரஹத்தின் சக்தி

சத்யாக்ரஹம் என்பது காந்திஜீ சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு புனிதமான தார்மீக யோக சாதனமாகும். ஆனால் காங்கிரஸ் இதை ஒரு அரசியல் ஆயுதமாகவே கையாண்டது. ஆகையால் சத்யாக்ரஹம் என்ற வார்த்தையை உபயோகிப்பதற்கு பதிலாக காங்கிரஸ் ஸ்தாபனம் சம்பந்தப்பட்ட மட்டில் "சட்ட மறுப்பு" என்ற வார்த்தையை உபயோகிப்பது பொருத்தமாக இருக்கும். இந்த சட்ட மறுப்பின் நோக்கம் சர்க்காரின் யந்திரம் ஸ்தம்பிக்கும்படி செய்வது. கட்டுப்பாடும், உறுதியுமுள்ள சில கோஷ்டிகள் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏக காலத்தில் பல இடங்களில் சட்டத்தை மீறினால் சட்டத்தை மீறுவோரைப் பிடித்து, தண்டிப்பதற்குள்ள அவ்வளவு போலீஸோ, சட்டத்தை மீறாமல் தடுப்பதற்கு வேண்டிய ராணுவமோ இந் நாட்டில் இருக்க முடியாது. சர்க்கார் ஸ்தம்பித்துதான் போகும்; அவ்வாறு சர்க்கார் ஸ்தம்பித்துப் போகும்போது, அதுவரை பிரிட்டிஷ் சர்க்

காரின் சிப்பந்திகளாக வேலை பார்த்தவர்கள் தம்மை ஜனங்களின் சிப்பந்திகளாக மதித்து ஜனத் தலைவர்களின் கட்டளைக்கு பணிய ஆரம்பித்தால், உடனே சுதந்திர பிரகடனம் செய்யமுடியும். ஆனால் இவ்வாறு ஒரே காலத்தில் பல இடங்களில் சர்க்காரின் அமலை எதிர்ப்பதற்கு வேண்டிய சந்தர்ப்பமும், வசதியும், கட்டுப்பாடும் நாட்டில் ஏற்படவில்லை. ஆனால் ஜனங்களில் ஒரு பகுதியினராவது, சர்க்காரை எதிர்த்து எந்த தியாகத்துக்கும் தயார் என்று காட்டாவிடில், தேச பக்தி என்பது வெறும் அலங்கார வார்த்தையாக ஆகிவிடும். அந்த நிலைமை ஏற்படாமல் தடுத்து "எதிர்ப்பு சக்தி"யை வளர்ப்பதற்கு 1930-ஆந்திய சட்ட மறுப்பு இயக்கம் பயன்பட்டது.

அந்த சட்ட மறுப்பு இயக்கம் சுமார் 8 மாதங்கள் நடந்த பின்னர் சிறிது தளர்ச்சி யடைய ஆரம்பித்தது என்பது உண்மையே. ஆனால் இயக்கம் நடந்தபோது லக்ஷக் கணக்கானவர் செய்த தியாகம் பிரிட்டிஷ் உறவில் ஆசை வைத்துக்கொண்டிருந்த பல மிதவாதிகளின் மனப்பான்மையை மிகவும் மாற்றிவிட்டது. அந்த இயக்கத்தின் போதுதான் முதல் தடவையாக ஒரு இடத்தில் இந்திய ராணுவத்தில் உள்ள சில சிப்பாய்கள், தம் அதிகாரிகளின் உத்தரவை அலக்ஷியம் செய்தனர். வட மேற்கு எல்லைப் புற மாகாணத்தில் ஒரு நகரில் ஒரு பட்டாணிய ஊர்வலத்தின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்படி ஒரு படைத் தலைவன் உத்திரவிட்டபோது, "ஒரு பலாத்காரமும் செய்யாத இவர்களை ஏன் சுடவேண்டும்"? என்று சிப்பாய்கள் சிறிது திகைத்து படைத் தலைவனின் உத்தரவைப் புறக்கணித்து அதை நிறைவேற்றவில்லை; மீறினர். அவ்வாறு உத்தரவை மீறிய கர்வாலி சிப்பாய்கள் கடுந்தண்டனைக்கு ஆளாயினர் என்பதும், வேறு எந்த இடத்திலும் அவ்வாறு சிப்பாய்கள் சுட மறுக்கவில்லையென்பதும் உண்மையே. ஆயினும் சத்யாக்ரஹ ஆயுதத்தின் வலிமைக்கு அது ஒரு அத்தாட்சியாக இருந்தது.

## தேசீய இயக்கத்தின் புதிய அந்தஸ்து

1931 ஸூத்தில் வைஸ்ராய் இர்வின் காந்திஜியுடன் சமரசம் பேசி "ஒப்பந்தம்" செய்துகொண்டது தேசீய இயக்கத்துக்கு புதியதோர் அந்தஸ்தை அளித்தது.

தேசீய இயக்கத்தின் சரித்திரம் முழுவதையும் விவரிப்பது இந்த அத்யாயத்தின் நோக்கமல்ல. நாமிருக்கும் நாடு நமதே; இதை ஆளும் உரிமையும் நம்முடையதே என்ற உணர்ச்சி 1920-ம் வருஷத்துக்கும் 1930-ம் வருஷத்துக்கும் இடையேதான் பலமடைந்தது என்பதை மட்டுமே இங்கு வற்புறுத்த விரும்புகிறோம். 1931-க்கு முன்னர் நடந்த சம்பவங்கள் இப்போது 30 வயதுக்குட்பட்ட பலருக்கு நன்கு தெரியாதாகையால், அவற்றை விவரித்தோம். அந்த வருஷத்துக்குப் பிறகு நடந்தவைகள் சமீபகால சரித்திரமே. அதை விவரிப்பது அவசியமில்லை. 1934-ம் ஆண்டிலிருந்து 1940-ம் ஆண்டு வரை காங்கிரஸானது சட்டசபை வேலையில் பிரவேசித்து நிர்வாகத் திறமை, ராஜீயக் கட்சிக் கட்டுப்பாடு முதலிய விஷயங்களில் ஜனங்களுக்கு தன்னம்பிக்கை ஏற்படும்படி செய்தது. தாம் காங்கிரஸ்காரரல்ல என்று சொல்லிக்கொள்வதற்கே பலர் வெட்கப்படும்படியான நிலைமை ஏற்பட்டது. தேசிய லக்ஷியத்துக்காகப் போராடுவதில் காங்கிரஸுக்கு இணையாக வேறு எதுவுமில்லை என்று ஏற்படுத்தி இந்திய தேசீயம் என்பதும், காங்கிரஸ் என்பதும் ஒன்றுதான் என்ற கருத்தை உலகம் முழுவதிலும் பரப்பியது.

1939-ம் வருஷம் செப்டம்பரில் உலக மகாயுத்தம் ஆரம்பமானது. அந்த சமயத்தில் காங்கிரஸ் என்ற பெயர் தெரியாத குக்கிராமமே இல்லை. காங்கிரஸ் கமிட்டி இல்லாத ஊரே இல்லையென்றுகூட சொல்லலாம்.

## யுத்தகாலத்தில் ஏற்பட்ட புது உணர்ச்சி

யுத்தம் ஏற்பட்டவுடன், பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவின் சுதந்திரம் பற்றி வாக்குறுதி கொடுக்காததால் காங்கிரஸ் ஒத்துழையாமையை அனுஷ்டித்தது. தேசத்

தில் வேலையில்லாத் திண்டாட்டம் இருந்ததால், பலர் ராணுவத்தில் சேர்ந்தார்களாயினும் ராணுவத்தில் சேர்ந்தவர்களின் அண்ணன் தம்பிகள் யாவரும் காங்கிரஸ் வாதிகளாகவும் காங்கிரஸ் அபிமானிகளாகவும் இருந்தனர். படிப்புள்ளவர் பலர் ராணுவத்தில் சேர்ந்திருந்தனர். இவர்கள் வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட்டவுடன், இந்த சிப்பாய்களில் பெரும்பாலோருக்கு ஒரு புதிய உணர்ச்சி ஏற்பட்டது. தாங்கள் என்ன வேலை செய்கிறார்களோ, அதே வேலையைச் செய்யும் வெள்ளையர்களுக்கு அதிக சம்பளம் இருப்பதும், பிரிட்டிஷ் படையிலுள்ள ஒரு சிறிய சோல்ஜர் இந்தியப் படையிலுள்ள "ஆபீஸர்களை"க்கூட மிகவும் துச்சமாக மதிப்பதும், ஓய்வு காலங்களில் பிரிட்டிஷ் சோல்ஜர்களுக்குள்ள வசதிகள் இந்திய சிப்பாய்களுக்கு சிறிதும் இல்லாததும் இந்திய சிப்பாய்களின் மனதில் வெறுப்பை வளர்த்தது. இதை நேரில் அறிவதற்கு 1945-ம் வருஷத்தில் எனக்கு சந்தர்ப்பம் இருந்தது. இந்திய சிப்பாய்களில் எழுத்து வாசனை உள்ளவர்களுக்கு மிகுந்த அதிருப்தியும் மனக்கசப்பும் இருந்தது மட்டுமல்ல, இதை பகிரங்கமாக வெள்ளை ஆபீஸர்கள் முன்னிலையில் வெளியிடவும் அவர்கள் துணிந்தனர். 1945-ம் வருஷம் பிப்ரவரியில் நானும் இன்னும் சில இந்திய பத்திரிகாசிரியர்களும் இத்தாலி, எகிப்து, பாலஸ்தீனம், ஸிரியா, இராக், பாரசீகம் முதலிய சில இடங்களுக்கு சென்றிருந்தபோது, "இவர்கள் என்னை சுட்டால் சுடட்டும்; அதற்காக நான் உண்மையை மறுப்பப் போவதில்லை" என்று ஜெருஸலேத்தில் ஒரு இடத்தில் சில இந்திய சிப்பாய்கள் தம் ஐரோப்பிய ஆபீஸர்கள் முன்னிலையில் அவர்கள் மீது குற்றம் சாட்டியது எங்களுக்குப் புதுமையாகவே இருந்தது.

### பிரிட்டிஷ் ஜம்பம் தகர்ந்தது

1942-ம் வருஷம் காங்கிரஸானது ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்த பிறகு இந்திய ராணுவ மனப்பான்மையில் பெரிய மாறுதல் எற்பட்டது. ஆபீஸர்க

ளிடையே நிறத்துவேஷம் மிகவும் அதிகமாகக் காணப் பட்டது. கிழக்கே ஜப்பானின் திடீர் முன்னேற்றம் "வெள்ளைக்காரன் கெட்டிக்காரனே" என்ற பழைய ஐப்பத்தை தகர்த்தது. பர்மாவிலும். மலாயிலும் இந்தியர்கள் நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸின் ராணுவத்துக்கு உதவி செய்தது பற்றியும், அந்த ராணுவத்தின் தன்மை பற்றியும் பூர்ணமாக அப்போது விவரங்கள் கிடைக்காவிட்டாலும், இந்தியாவின் மானத்தை அவர்கள் பூர்ணமாகக் காப்பாற்றுகிறார்கள் என்ற உணர்ச்சி இந்திய சிப்பாய்களிடையே நன்கு பரவியது. இத்தாலிப் போர் முனையில் 6 கம்பளிப் போர்வைகள் போட்டு போர்த்திக்கொண்ட பிறகும் குளிர் நடுக்கக் கூடிய பனிமலைக் காடுகளில் ரோடுகளும், பாலங்களும் அமைத்து மனமொடிந்துகொண்டிருந்த நம் சிப்பாய்கள் நாங்கள் அங்கு சென்றபொழுது "காந்தி சிறையில் இருக்கிறாரா? நேரு சிறையில் தான் இருக்கிறாரா?" என்று விசாரித்த அந்தக் குரலில் அவர்களுடைய உணர்ச்சி நன்கு பிரதிபலித்தது. ஒவ்வொரு சிறு 'கம்பெனி' யிலும் (சிப்பாய் தொகுதி) இரண்டு மூன்று பேர் சிறிது ஆங்கிலம் தெரிந்தவர்களாக இருந்தனர். இவ்வாறு படிப்புள்ளவர்கள் ராணுவத்தில் இருந்தது அங்கு தேசிய உணர்ச்சி தீவிரமாகப் பரவுவதற்கு உதவியாக இருந்தது.

### "வெளியேறுக!"

1942-ம் வருஷத்தில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியார் யுத்த ஒத்துழையாமை தீர்மானத்தை நிறைவேற்றியதைத் தொடர்ந்து நடந்த சில சம்பவங்கள் ஒரு புதிய நிலைமையை ஏற்படுத்தின. காங்கிரஸின் நியாயமான கோரிக்கையை நிராகரித்து நள்ளிரவில் காந்திஜி, நேரு முதலியவர்களை சர்க்கார் கைது செய்தது, "குவிட் இந்தியா" (வெள்ளையர் வெளியேற வேண்டும்) என்ற உணர்ச்சியை நன்கு பரப்பியது. அந்த ஆகஸ்ட் மாதத்தில் தோன்றிய பலாத்கார சம்பவங்கள் ஜனங்களின் மனக் கொதிப்புக்கு அத்தாட்சியாகும். மனங் கொதித்தால் இந்திய ஜனங்கள் இனி, மூலையில் உட்கார்ந்துகொண்டு

அழுவதோடு நிற்கமாட்டார்கள், உயிரைப் பணயம் வைத்து வஞ்சம் தீர்க்கவும் சிலர் கிளம்புவார்கள் என்ற படிப்பினை அப்போது பிரிட்டிஷ் சர்க்காருக்கு நன்கு புலப்பட்டது. சிற்சில இடங்களில் சில வாரங்கள் பிரிட்டிஷ் ஆட்சியே இல்லையென்ற நிலைமை ஏற்பட்டது. ஜனங்கள் காட்டிய இந்த உணர்ச்சி இந்திய ராணுவத்தின் மனப்பான்மையை ஓரளவு பாதித்துத்தான் இருக்கும் என்பது பிரிட்டிஷாருக்கு தெரியும்.

## "இ. தே. ரா." கொள்கை பரவிவிட்டது

யுத்தம் முடிந்தவுடன் இந்த உண்மைகள் பிரிட்டனுக்கு வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தன. சுபாஷ்பாபு தலைமையில் அமைக்கப்பட்ட இந்திய தேசீய ராணுவத்தைப் பற்றிய செய்திகள் வெளியாக ஆரம்பித்தவுடன், தேசத்தின் மனப்பான்மையே அடியோடு மாறிவிட்டது. 1942-ல் நடந்த சம்பவங்களுக்குத் தாம் முழுப்பொறுப்பை ஏற்பதாக ஸ்ரீ நேரு கூறியதும், இந்திய தேசீய ராணுவத்தைப்பற்றி பெருமை கொள்வதாக அவர் பகிரங்கமாக அறிக்கை வெளியிட்டதும், தேசம் முழுவதும் புதிய உணர்ச்சியை கிளப்பிவிட்டது. ஷாநவாஸ், டில்லான், ஸெய்கால் முதலியோர் மீது டில்லி செங்கோட்டையில் வழக்கு நடந்தபோது, இந்தியாவின் அந்தஸ்தே மாறி விட்டது.

ஒரு ராணுவத்தில் இருந்தவர்கள் எதிரியால் கைது செய்யப்பட்ட பின்னர் எதிரியின் துணையுடன் தாம் முன்னர் பதவி வகித்த ராணுவத்தை எதிர்த்துப் போராடுவது, ராணுவச் சட்டத்தில், மரண தண்டனைக் குரிய குற்றம். ஆனால் ஒரு நாடு தனக்கு சொந்தமான சர்க்காரைப் பெற்றிராமல் அந்நிய ஆதிக்கத்தில் இருந்தால் அந்த சர்க்காரை எதிர்த்துப் போர் புரிய உரிமை உண்டு என்று தேசம் துணிகரமாக வற்புறுத்தியது. சுமார் 3 மாத காலத்துக்கு பத்திரிகைகளில் எங்கு பார்த்தாலும் இ. தே. ரா. செய்திகளாகவே இருந்தன.

இ. தே. ரா. ராணுவத்தினிடம் அனுதாபம் காட்டுவதில் பொது ஜனங்களை விட இந்திய சர்க்காரின் ராணுவம் மிகவும் முனைந்து நின்றதுதான் இதில் முக்கியமாக குறிப்பிடவேண்டிய அம்சம். சுமார் 90 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய ராணுவம் மறுபடியும் தேச பக்தியுள்ள ராணுவமாக மாற ஆரம்பித்துவிட்டது.

1942 ஆகஸ்டில் இந்தியாவில் சர்க்காருக்கு எதிராக நடந்த கிளர்ச்சியை சர்க்கார் ஒடுக்க முடிந்தது. போலீஸின் படையும் வெற்றி பெற்றுவிடவில்லை. ஆகவே போர்க் களத்தில் தேசிய இந்தியா தோற்கடிக்கப்பட்டதாகவே மதிக்கலாம். அப்படியிருந்தும் தோற்றுப் போன தேசிய இந்தியாவை பிரிட்டன் அலக்ஷியம் செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டது. இவ் விஷயத்தில் தென்னுப்பிரிக்காவில் நடந்த போயர் யுத்தத்தில் ஏற்பட்ட நிலைமையை உவமையாகச் சொல்லலாம். அங்கு பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்த போயர் படைகள் போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டனவாயினும், தோற்கடிக்கப்பட்ட தளகர்த்தர்களுடனேயே சமாதானம் செய்து கொண்டு பிரிட்டன் அவர்களிடம் ராஜ்யத்தை ஒப்படைக்க வேண்டியதாயிற்று. அது போலவே இந்தியாவிலும் நடப்பதாகச் சொல்லலாம்.

யுத்தத்தில் ஜெயித்த நாடுகள் தோற்ற நாடுகள் மீது தம் இஷ்டப்படி நிபந்தனைகளைச் சுமத்துகின்றன. இந்தியாவிலோ, போரில் தோற்றுப் போன இந்தியாவிடம், போரில் ஜெயித்த பிரிட்டன் தயவு கோரி சமரசம் பேசுகிறது! இந்த நிலைமை ஏற்பட்டதற்கு எத்தனையோ காரணங்கள் உண்டு என்றாலும், ராணுவத்தின் மனப்பான்மையில் ஏற்பட்ட மாறுதல் ஒரு முக்கிய காரணமாகும்.

## அடுத்த அத்தியாயத்தில்

இந்த அத்தியாயத்தில் நமது தேசீயத்தின் "பலம்" என்று கருதத் தக்க அம்சங்களை மட்டுமே சொல்லியிருக்கிறோம். ஆனால் நமது பலம் வளரும் போதே பல

வீனமான சில அம்சங்களும் கூடவே வளர்ந்திருக்கின்றன. அவற்றையும் கவனிப்பது அவசியம். ஏனென்றால் இந்த புத்தகத்தில் ஆராயும் அரசியல் நிர்ணயசபையும், அதன் முன்பு வைக்கப்படும் புது அரசியல் அடிப்படைக் கொள்கைகளும் நமது "பலம்" "பலவீனம்" ஆகிய இரண்டுக்குமிடையே ஏற்படும் சமரசமாகும். ஆகையால் அடுத்த அத்தியாயத்தில் நமது தேசீயத்தின் பலவீனத்தை ஆராய்வோம்.

---

## இரண்டாவது அத்தியாயம்

# நம் தேசியத்தின் பலவீனம்

நமது பலவீனங்களில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது ஹிந்து—முஸ்லிம் பிரச்னையேயாகும். ஹிந்து முஸ்லிம் வேற்றுமைபற்றி மேனாடுகளில் பரவியுள்ள அபிப்ராயம் மிகவும் தவறான அபிப்ராயமே; ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தமது மதத்தின் காரணமாக அடிக்கடி சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதே மேனாடுகளில் உள்ள அபிப்ராயம். சுமார் 9 கோடி முஸ்லிம்களும், 30 கோடி ஹிந்துக்களும் சுமார் 7½ லக்ஷம் கிராமங்களில் விவசாயம், வர்த்தகம், கைத்தொழில் ஆகிய துறைகளில் ஒன்றுபட்டே வாழ்கிறார்கள் என்பதையும், ஹிந்து முஸ்லிம் கலவரமென்பது ஒரு வருஷத்தில் ஒரு சில நகரங்களில் மட்டுமே ஏற்படுகிறதென்பதையும் வெளிநாட்டார் உணருவதில்லை. மற்றெந்த தொழில்களையும் விட சர்க்கார் உத்யோகங்களில் சற்று அதிக சௌகரியமும் நிரந்தரமான வருமானமும் இந் நாட்டில் இருந்து வந்ததால், அந்த உத்யோகங்களுக்கு அதிகமான போட்டி இருந்து வந்தது. ஏதேனும் ஒரு விசேஷ காரணத்தை சொல்லி அந்த உத்யோகங்களில் பங்கு கேட்பது ஒவ்வொரு வகுப்புக்கும் சகஜமாயிற்று. படித்தவர்கள் உத்யோகப் போட்டிக்காக இந்த வகுப்புப் பிரிவினையை வற்புறுத்தி விதாச்சாரம் பெற்று உத்யோகங்களைப் பெறலாமென்று நினைத்தனர். இதுதான் இந்த நாட்டில்

ஒவ்வொருவரும் தமது வகுப்பு இன்னது என்பதை வற்புறுத்தி வருவதற்கு முக்கிய காரணம். சார்க்கார் உத்யோகத்தைப்போலவே போதிய வருமானமும் சௌகரியங்களுமுள்ள வேறு பல வேலைகள் இருந்தால் பிறப்பு வேற்றுமையின் பேரால் சர்க்காரிடம் பங்கு கேட்கும் மனப்பான்மை வளர்ந்திருக்காது. வேறு நாடுகளில் சர்க்கார் உத்யோகஸ்தர்களுக்கு யுக்தானுசார அதிகாரம் எதுவும் கிடையாது. மற்ற நாடுகளில் சர்க்கார் உத்யோகம் என்பது ஒரு தொண்டு என்று மதிக்கப்படுகிறதே ஒழிய, "அதிகாரம்" என்று மதிக்கப்படுவதில்லை. இந்நாட்டில் சர்க்கார் உத்யோகஸ்தர்களுக்கு யுக்தானுசார அதிகாரங்கள் ஏராளமாக இருந்து வந்தன. உதாரணமாக, 1909 ஸூத்துக்கு முன்னர் ஒரு தாலுக்காவின் டெபுடி கலெக்டருக்கு இருந்த அதிகாரம் ஒரு சிற்றரசனுக்குள்ள அதிகாரத்துக்குச் சமமாக இருந்தது. இந்த உத்யோகத்தை வகிப்போருக்கு பிரமாதமான அந்தஸ்தும், கவுரவமும் இருந்ததால் இவற்றுக்குப் போட்டி இருந்தது. உத்யோகப் போட்டிக்காக தம் தம் வகுப்பு இன்னதென்று சொல்லும் சுபாவம் சட்டசபை விஷயத்திலும் வந்தது.

### லீகின் ஆரம்பம்

1909 ஸூத்தில் மிண்டோ—மார்லி சீர்திருத்தம் வருவதற்கு சில வருஷங்களுக்கு முன் சில முஸ்லிம்கள் தமது வகுப்பினருக்குத் தனியாக பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்று கோரினர். அதை தூண்டிவிட்டது இங்கிருந்த வைசிராய்தான் என்பதே இந்திய தேசியவாதிகளின் அபிப்ராயம். அலிகார் சர்வ கலாசாலையில் ஆசிரியராக இருந்த ஒரு ஆங்கிலேயர் இங்கும் இங்கிலாந்திலும் முஸ்லிம்களிடை தனி யுணர்ச்சியை வளர்க்க தூபம் போட்டாரென்பதற்கு ஆதாரம் இருக்கிறது. பிரிட்டிஷார் தாம் வகுப்புப் பிரச்னையை கிளப்பி விட்டார்கள் என்ற குற்றச்சாட்டை இப்போது பிரிட்டிஷார் மிகவும் கடுமையாக எதிர்க்கிறார்களாயினும், இங்கு வைசிராயாக இருந்த லார்ட் மிண்டோவின் மனைவியார்

சமீபத்தில் எழுதியுள்ள ஒரு புத்தகத்தில் ஒரு உத்தியோகஸ்தர் அவருக்கு எழுதியுள்ள கடிதத்தைப் பற்றி பிரஸ்தாபிக்கிறார். "முஸ்லிம் தூதுகோஷ்டிக்கு லார்ட் மிண்டோ அளித்த பதில் 620 லக்ஷம் முஸ்லிம்களை ராஜத்துவேஷக்காரருடன் சேராமல் தடுத்தது" என்று கூறுகிறார். அதாவது முஸ்லிம்களை காங்கிரஸுடன் சேராமல் ஒதுக்கும்பொருட்டு லார்ட் மிண்டோ முஸ்லிம் தூதுகோஷ்டியார் மூலம் சில ஆசைகளை தூண்டிவிட்டார் என்று ஏற்படுகிறது.

## தனித்தொகுதி

ஆகவே தேசியத்துக்கு எதிராக முஸ்லிம்களை பிரிட்டிஷார் கிளப்பிவிட்டார்களா இல்லையா என்பது பற்றி பிரிட்டிஷார் எதிர்வாதம் சொல்ல முடிந்தாலும், முஸ்லிம்களின் வகுப்புவாதத்துக்கு வைஸிராய் ஊக்கமளித்தார் என்பது மறுக்க முடியாத விஷயமே. 1909-ல் ஏற்பட்ட மிண்டோ — மார்லி சீர்திருத்தத்தில் சட்டசபைகளில் முஸ்லிம்களுக்குத் தனித் தொகுதி ஏற்படுத்தப்பட்டது.

இவ்வாறு தனித் தொகுதி ஏற்படுத்தியது, நியாயமா இல்லையா என்பதைப் பற்றி இப்போது விவாதிப்பதில் பயனில்லை. இந்த தனித்தொகுதி முறையானது பிரதிநிதித்துவப் பொறுப்பாட்சி என்று சொல்லும் "பார்லிமெண்டரி சுயாட்சி"க்கு முரணானது என்பதையும், தனித் தொகுதியின் விளைவுதான் இன்றைய பாகிஸ்தான் கோரிக்கை யென்பதையும் மட்டுமே இங்கு நாம் கவனிக்கவேண்டும்.

தனித் தொகுதி முறையானது பார்லிமெண்டரி பொறுப்பாட்சிக்கு முரணானது என்பது 1909-ம் வருஷத்திய மிண்டோ — மார்லி அரசியலைத் தயாரித்தவர்களுக்கு நன்கு தெரியும். தாம் ஏற்படுத்துவது பொறுப்பாட்சியல்ல என்பதை அப்போது இந்தியா மந்திரியாக இருந்த லார்ட் மார்லி பல தடவை எடுத்துக் காட்டியுள்ளார். ஆகையால் அவர் தம் மனசாட்சிக்கும் தமது

கொள்கைகளுக்கும் முரணுக தனித்தொகுதியை புகுத்தினுர் என்று நாம் குற்றம் சாட்ட முடியாது! பொறுப்பாட்சி ஏற்படுத்தும் உத்தேசமே அவருக்கில்லை; ஆகையினுல்தான் தனித்தொகுதியை அவர் ஏற்படுத்தினுர்.

ஆனுல் பின்னர் 1919 ம் வருஷத்தில் இங்கு பொறுப்பாட்சியை ஏற்படுத்துவதாகவே பிரிட்டிஷ் சர்க்கார் சொல்லியது. அப்போதாவது அவர்கள் தனித்தொகுதியை ரத்து செய்து, முஸ்லிம்களின் உரிமையை பாதுகாப்பதற்கு சில புதிய முறைகளுடன் ஒருவித பொதுத்தொகுதியை ஏற்படுத்தி யிருந்தால், பிரிவினை மனப்பான்மை வளர்ந்திருக்காது. பிரிட்டன் அவ்வாறு செய்யவில்லை.

### லக்ஷ்மணபுரி ஒப்பந்தம்

ஓரளவு பொறுப்பாட்சி ஏற்படுத்தின 1919-ம் வருஷத்திய சட்டத்தில் பொறுப்பாட்சிக்கு முற்றிலும் மாறுன வகுப்புவாரித் தனித் தொகுதிகளும் புகுத்தப்பட்டன. ஆனுல் அப்போது தனித் தொகுதியை புகுத்தியதற்கு பிரிட்டன்மீது பழி சொல்ல முடியாது. ஏனென்றுல் தனித் தொகுதியை அதுவரை எதிர்த்துவந்த காங்கிரஸானது 1916-ம் வருஷத்தில் காங்கிரஸ் — லீக் ஒப்பந்தம் ஒன்றை (லக்ஷ்மணபுரி ஒப்பந்தம்) ஏற்படுத்திக் கொண்டது. லக்ஷ்மணபுரி ஒப்பந்தம் ("லக்னௌ பாக்ட்") என்று சொல்லப்படும் அந்த ஏற்பாட்டின்படி முஸ்லிம்களுக்கு தனித் தொகுதிமுறை இருப்பதற்கு காங்கிரஸ் ஒப்புக்கொண்டது 1909ல் ஏற்பட்ட விஷமம் நீடித்தது.

அந்த லக்ஷ்மணபுரி ஒப்பந்தம்தான் இன்றைய இன்னல்களுக்கு காரணம் என்று சொல்ல முடியும் அந்தக் காலத்தில் காங்கிரஸ் மகாசபையானது ஆஸ்டிரேலியா, கானடா முதலிய பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளிலிருந்தது போன்ற பொறுப்பாட்சி முறை இந்தியாவுக்கும் வேண்டும் என்று கோரிக்கொண்டிருந்தது. இந்த கோரிக்கையில் முஸ்லிம் லீகும் சேர்ந்துகொண்டால், கோரிக்கையை வற்

புறுத்துவதற்கான ஒற்றுமை ஏற்படும் என்ற ஆசையுடன் காங்கிரஸ்காரர்கள் லீகர்களை "திருப்தி செய்விக்க" ஆரம்பித்தனர். அந்த முயற்சியின் பயனாக ஏற்பட்ட காங்கிரஸ்—லீக் ஒப்பந்தத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை காங்கிரஸ் ஒப்புக்கொண்டது மட்டுமல்லாமல் சட்ட சபைகளில் முஸ்லிம்களுக்கு ஜனத்தொகை வீதாசாரத்தை விட மிகவும் அதிகமான ஸ்தானங்கள் ஒதுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

தாம் இவ்வளவு விட்டுக் கொடுக்கும்போது முஸ்லிம்களும் ஏதாவது விட்டுக் கொடுக்க வேண்டாமா என்று அப்போது காங்கிரஸ்காரர் கருதினர் போலும்! காங்கிரஸ்காரரின் இந்தக் கருத்துக் கிணங்கி முஸ்லிம்களும் அதுவரை அனுபவித்துக்கொண்டிருந்த ஒரு சலுகையை விட்டுக்கொடுத்தார்கள். அவ்வாறு முஸ்லிம்கள் அந்த சலுகையை விட்டுக்கொடுக்க மறுத்திருந்தால் வகுப்புவாரி மனப்பான்மை இவ்வளவு மோசமான நிலைமைக்கு வந்திருக்காது! பேரம் செய்யும் காலத்தில் நமக்கு அனுகூலம் என்று நாம் கருதும் சில விஷயங்களே பிற்காலத்தில் அனர்த்தத்துக்கு காரணமாகும் என்பதற்கு லக்ஷ்மணபுரி ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்ட ஒரு ஷரத்து உதாரணமாகும். அது என்ன ஷரத்து என்பதைக் கவனிப்போம்.

1909-ம் வருஷத்து மிண்டோ—மார்லி அரசியலில் சட்டசபைகளில் சில ஸ்தானங்களை முஸ்லிம்களுக்கென்று ஒதுக்கி அவற்றுக்குத் தனித் தொகுதி முறையும் ஏற்படுத்தினார்கள். ஆனால் முஸ்லிம்களுக்கு என்று ஒதுக்காத ஸ்தானங்களுக்கு நடக்கும் தேர்தல்களிலும் வோட்டுச் செய்ய முஸ்லிம்களுக்கு உரிமை கொடுக்கப்பட்டிருந்தது. லக்ஷ்மணபுரி ஒப்பந்தத்தில் இந்த உரிமையைத்தான் முஸ்லிம்கள் விட்டுக்கொடுத்தனர். இதைப் பெற்றதைப்பற்றி காங்கிரஸ்காரர்கள் திறமையாகப் பேரம் நடத்தி சாதித்த காரியமாக நினைத்திருப்பார்கள்! ஆனால் உண்மையில், பழைய முறையே நீடித்திருந்தால் தனித் தொகுதியின் தீமையை சிறிது தணிக்க உதவியாக

இருந்திருக்கும். லக்ஷ்மணபுரி ஒப்பந்தத்தில் காங்கிரஸ் காரர் பெற்ற "லாபம்" காரியாம்சத்தில் தேசீய ஐக்கிய உணர்ச்சியின் வளர்ச்சிக்கு பாதகமே யாகும். ஹிந்து சட்டசபை மெம்பர்களை பொறுக்குவதில் முஸ்லிம் களுக்கும் உரிமை கொடுத்திருந்தால் தேர்தல்களில் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே சிறிது தொடர்பு ஏற்பட உதவியாக இருந்திருக்கும். முஸ்லிம் கள் இவ்விஷயத்தில் "விட்டுக் கொடு"த்ததின் பயனுக தேசீயத்துக்கு தீமையே ஒழிய நன்மை இல்லை.

லக்ஷ்மணபுரி ஒப்பந்தத்தின் இன்னும் ஒரு ஷரத்தை யும் இங்கு பிரஸ்தாபிப்பது நலம். பார்லிமெண்டரி ஜன நாயகம் ஏற்பட்டால் அது மெஜாரிட்டி யாட்சியாகவே இருக்கும்; இந்நாட்டில் பல மாகாணங்களில் ஹிந்துக்களே மெஜாரிட்டி; அவர்கள் முஸ்லிம்களின் மத உணர்ச்சியை மதிக்காமல் ஏதேனும் செய்யக்கூடும் என்ற பீதியை சிலர் வளர்த்திருந்தார்கள். ஆகவே அந்தக் கவலையை நீக்கும் பொருட்டு லக்ஷ்மணபுரி ஒப்பந்தத்தில் ஒரு ஷரத்தைச் சேர்த்திருந்தார்கள். "சட்ட சபையில் வரும் பிரேரணை ஏதேனும் ஒரு வகுப்பினரை பாதிப்பதாக இருந்தால் அந்த பிரேரணையை அந்த வகுப்பு அங்கத்தினர்களில் முக்கால் பாகத்தினர் எதிர்த்தால், அதை விவாதிக்கவோ சட்டமாக்கவோ கூடாது" என்று அவ்வொப்பந்தத்தில் சேர்க்கப்பட்டது. அதாவது ஒரு வகுப்பினரை பாதிக்கக் கூடிய சட்டம் ஏதேனும் வந்தால், அந்த வகுப்பினரில் கால்வாசிப் பேராவது அதை ஆதரித்தால்தான் அதை சட்டமாக்கலாம் என்பது இதன் கருத்து. மெஜா ரிட்டி ஆட்சி என்ற ஜனநாயகத்துக்கு இது ஒரு சிறு விதி விலக்கேயாயினும் இதை ஒரு நியாயமான ஏற்பாடு என்றே மதிக்கலாம்.

லக்ஷ்மணபுரி ஒப்பந்தத்தில் முஸ்லிம்களின் வகுப்பு வாத உணர்ச்சியை திருப்திசெய்ய காங்கிரஸ் தயாரா யிருந்ததற்கு ஒரே ஒரு காரணம்தான் உண்டு. அதா வது காங்கிரஸும் லீகும் சேர்ந்து பிரிட்டனிடம் சில

கோரிக்கைகளை வற்புறுத்துவதற்காகவே இந்த ஒப்பந்தம் பிறந்தது. காங்கிரஸ்—லீக் அரசியல் பிரேரணைகளும் தயாரிக்கப்பட்டன.

ஆனால் பிரிட்டிஷ் சர்க்கார் வகுப்புவாரி ஒப்பந்தத்தை மட்டும் ஏற்றுக்கொண்டு அரசியல் கோரிக்கையை நிராகரித்துவிட்டது!

ஆகவே காங்கிரஸ்—லீக் ஒப்பந்தத்தால் தனித் தொகுதி என்ற தீமை மட்டும் ஊர்ஜிதமாயிற்றே ஒழிய அவ்வொப்பந்தத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட அரசியல் முன்னேற்றம் கைகூடவில்லை. லக்ஷ்மணபுரியில் காங்கிரஸ் மகாசபை லீகுடன் ஒப்பந்தம் செய்துகொண்டது தவறு என்று ருசுச்செய்வது நமது நோக்கமல்ல. அவ்வாறு ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது இந்தியப் பிரச்னையை அவசரமாக கவனிக்கும்படி பிரிட்டனை தூண்டுவதற்கு உதவியாக இருந்தது என்பதையும் நாம் மறுக்கவில்லை. ஆனால் அவ்வொப்பந்தத்தின் மூலம் எதிர்பார்த்த அரசியல் முன்னேற்றம் பூர்ணமாக ஏற்படாமல், ஒப்பந்தத்தில் சேர்த்திருந்த வகுப்புத் தொகுதிமட்டும் அமலுக்கு வந்ததால் நன்மையை விட கெடுதியே அதிகமாயிற்று.

தனித்தொகுதியும் பொறுப்பாட்சியும் பரஸ்பரம் முரணானவை என்று 1919-ம் வருஷத்து மாண்டேகு—செம்ஸ்போர்ட் சீர்திருத்தத்தின் ஆசிரியரான ஸ்ரீ. மாண்டேகு பல இடங்களில் வற்புறுத்தியிருந்தார். இந்தக்கொள்கையை அவர் திடமாக பின்பற்றியிருந்தால் அவரது சீர்திருத்தத்திலுள்ளதைவிட குறைவான சுயாட்சிகூட அதிக நன்மையை விளைவித்திருக்கும். அரைகுறையான சுயாட்சியுடன் தனித்தொகுதியையும் சேர்த்தது பெரிய கெடுதியாகவே முடிந்தது.

1935-ம் வருஷத்தில் மாகாணங்களில் அநேகமாக பூர்ணமான பொறுப்பாட்சியை ஏற்படுத்தியிருந்தபோதும் இந்த தனித் தொகுதி முறை கைவிடப்படாதததுதான் "தொகுதிப் பிரிவினை" கோரிக்கை தேசப் பிரிவினை கோரிக்கையாக முற்றியதற்கு முக்கிய காரணம். (இதனால்

தான் 1944-ம் வருஷத்தில் சப்ரு கமிட்டியார் தயாரித்த பிரேரணையில், பொதுத் தொகுதி ஏற்பட்டால் முஸ்லிம்களுக்கு மத்ய சர்க்காரில் ஜனத்தொகையைவிட இரண்டு மடங்கு ஸ்தானங்கள் வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்று சிபார்சு செய்திருக்கிறார்கள். எத்தனை ஸ்தானங்கள் என்பது முக்கியமல்ல; தனித் தொகுதியா? பொதுத் தொகுதியா? என்பதுதான் முக்கியம்.)

## 1919-ம் வருஷத்து அரசியல்

1919-ம் வருஷத்தில் மாண்டேகு—செம்ஸ்போர்ட் சீர்திருத்தம் என்று அழைக்கப்படும் அரசியலமைப்பு அமலுக்கு வந்தது. இப்போது டில்லியில் உள்ள மத்ய அசெம்பிளி, ராஜாங்க சபை இவற்றின் அமைப்பு அந்த சட்டப்படி நிர்ணயிக்கப்பட்டதுதான். அந்த அரசியல் சட்டப்படி மத்ய சர்க்காரில் பொறுப்பாட்சி கிடையாது. ஆனால் மாகாணங்களில் "இரட்டையாட்சி" அமலுக்கு வந்தது. அதாவது மாகாண சட்டசபைகளிடம் விடப்பட்ட விஷயங்களில் போலீஸ், சட்டம், நிதி முதலிய விஷயங்கள் சட்டசபைக்கு பொறுப்பில்லாத நிர்வாக சபை மெம்பர்களிடமும், வைத்யவசதி, கல்வி முதலியவை சட்டசபைக்கு பொறுப்பான மந்திரிகளிடமும், விடப்பட்டன. மத்ய சட்டசபையில் இப்போது இருப்பது போலவே 1919 வருஷத்திய சட்டத்தின் கீழ் ஏற்படுத்திய மாகாண சட்டசபைகளில் தேர்தல் மூலம் மட்டுமல்லாமல் கவர்னரால் "நியமிக்கப்பட்ட" மெம்பர்களும் இருந்தனர்.

அந்தச் சட்டம் இயற்றப்பட்ட அதே வருஷத்தில் தான் பஞ்சாப் படுகொலையும் நடந்தது. சட்டம் அமலுக்கு வந்தகாலத்தில் காங்கிரஸ் ஒத்துழையாமையை அனுஷ்டித்தது. ஆகையால் தனித் தொகுதிகளின் நன்மை தீமைபற்றி அப்போது யாரும் கவலைப்படவில்லை. உண்மையான பொறுப்பாட்சி அந்தச் சட்டத்தின் கீழ் ஏற்படவில்லை என்ற பெருங் குறைபாட்டில் தான் காங்கிரஸும் லீகும் கவனம் செலுத்தின. அதுமட்டுமல்ல, 1916-ல், பார்லிமெண்டரி பொறுப்பாட்சியே இந்தியாவுக்கு

பொருந்தாது என்று வாதித்த ஜனுப் ஜின்னுவே 1924-ல் "டொமினியன்களில் இருப்பது போன்ற பொறுப்பாட்சி முறையை" இந்தியாவின் "ஏக மனதான கோரிக்கையாக" வர்ணித்துப் பேசினுர்.

## லீகின் புதிய கொள்கை

பார்லிமெண்டரி ஜனநாயக முறை இந்தியாவுக்கு உதவாது என்று 1913-ல் சொல்லி வந்த கொள்கையை ஜனுப் ஜின்னு கைவிட்டு விட்டார். ஆனுல் அவரது தலைமையில் லீகில் அந்த வருஷம் நிறைவேற்றிய தீர்மானத்தில் "மத்ய சர்க்காரின் ஆதிக்கத்தில் உள்ள விஷயங்களை சாத்யமான அளவு குறைத்து மீதமுள்ள விஷயங்களில் மாகாணங்களுக்கு பூர்ணமாண சுயேச்சை வேண்டுமென்றும், மத்ய சர்க்காரானது ஒரு சமஷ்டியாக இருக்க வேண்டுமென்றும், மாகாண எல்லைகளை மாற்றியமைக்கும் எந்த ஏற்பாட்டிலும் பஞ்சாப், வங்காளம், வடமேற்கு எல்லை மாகாணங்களில் முஸ்லிம் மெஜாரிட்டி பாதிக்கப்படலாகாதென்றும் வற்புறுத்தினுர்.

முஸ்லிம்கள் மெஜாரிட்டியாயுள்ள மாகாணங்கள் சில இருக்க வேண்டும்; அவற்றுக்கு ஏராளமான அதிகாரம் இருக்க வேண்டும். மாகாணத்தினிடம் விடப்பட்ட விஷயங்களில் மத்ய சர்க்கார் தலையிடக் கூடாது. இவ்வளவும் இருந்தால், மத்ய சர்க்காரிடம் விடப்படும் விஷயங்கள் மிகவும் சொற்பமாகவே இருக்கும். இப்படி யிருந்தால் மத்ய சர்க்காரில் ஹிந்து மெஜாரிட்டி இருப்பதுபற்றி முஸ்லிம்கள் கவலைப்பட வேண்டியதில்லை. இதுதான் 1924-ல் ஜனுப் ஜின்னு வற்புறுத்திய விஷயம், இப்புத்தகத்தில் விவாதிக்கப்படும் விஷயத்துக்கும் இந்த தீர்மானத்தில் உள்ள கருத்துக்கும் சம்பந்தமுண்டு. அதற்காகவே இதைச் சற்று விரிவாகவே இங்கு பிரஸ்தாபிக்கிறோம். ஆனுல் இந்த அத்தியாயத்தின் விஷயம் அதுவல்ல. வகுப்பு வாதத்தின் வளர்ச்சியை விவரிப்பதே இந்த அத்தியாயத்தின் நோக்கம். ஆகையால் அந்த பிரதான விஷயத்தைக் கவனிப்போம்.

1920 முதல் 1927 வரை பல இடங்களில் அடிக்கடி வகுப்புவாத கலகங்கள் நடந்தன. இந்தக் கலகங்களுக்கு ஹிந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய இரண்டு சமூகத்திலுமுள்ள சோம்பேறிகளும் குண்டாக்களுமே காரணம் என்றாலும், இது ஹிந்து, முஸ்லிம்களின் அரசியல் போக்கையும் மாற்றியது.

ஆனாலும், அரசியல் லக்ஷியங்களில் பிளவு அதிகரிக்கவில்லையென்றே சொல்ல வேண்டும். அப்போது நடந்த சர்ச்சைகள் யாவும் வகுப்புவாத கலகங்களை எப்படி சமாளிப்பது, மசூதி முன் மேளம், முஸ்லிம் பண்டிகையில் பசு பலி, முதலியவை சம்பந்தமாகக் கலகம் வராமல் தடுக்க என்ன செய்யலாம் என்பதைப் பற்றித்தான் இருந்தன. அரசியல் கொள்கைகள் பற்றி அதிகமான அபிப்பிராய பேதங்கள் ஏற்படவில்லை யென்றே சொல்லலாம்.

## பிளவின் ஆரம்பம்

இந்த நிலைமையில் 1927-ல் பிரிட்டிஷ் சர்க்கார் ஒரு இந்தியர்கூட இல்லாத ஒரு அரசியல் கமிஷனை இந்தியாவுக்கு அனுப்பியது. அதுதான் சைமன் கமிஷன் எனப்படுவது. அந்தக் கமிஷனைக் காங்கிரஸ் பகிஷ்கரித்தது போலவே முஸ்லிம் லீகும் பகிஷ்கரித்தது. வெவ்வேறு காரணங்களுக்காகவல்ல; ஒரே காரணத்துக்காக.

இவ்வாறு பெரிய லக்ஷியத்தில் ஒற்றுமை காணப்பட்டதாயினும், அதில் ஒரு பெரிய விசித்திரம் இருந்து வந்தது. அதாவது இந்தியாவின் அரசியல் மாற வேண்டும், பிரிட்டனின் ஆதிக்கம் முடியவேண்டும், என்று காங்கிரஸ் கோரும்போது, லீகும் அந்த கோரிக்கையில் சேர்ந்துகொள்ளும். மாறுதல் வேண்டுமென்று கோருவதில் காங்கிரஸுடன் ஒன்றுபடும். ஆனால் மாறுதல் வரும்போலத் தோன்றும்போது, லீக் அந்த மாறுதலுக்கு நிபந்தனையும் முட்டுக்கட்டையும் போட்டு மாறுதல் ஏற்படுவதற்கு இடையூறான சர்ச்சைகளைக் கிளப்பும்.

இதில்தான் மர்மம் இருக்கிறது. முஸ்லிம்களை விட ஹிந்துக்களுக்கு தேசிய ஐக்கியத்தில் அதிக அக்கரை இருக்கிறது. ஆகையால் அந்த லக்ஷியத்தை பெறுவதற்காக தாம் என்ன கேட்டாலும், ஹிந்துக்கள் இணங்கியே தீரவேண்டும் என்ற மனப்பான்மையுடன் லீக் வேலை செய்ய ஆரம்பித்தது. மாறுதல் ஏற்படவிருக்கும் சந்தர்ப்பங்களி லெல்லாம் காங்கிரஸும், லீகும் பரஸ்பரம் நேர் எதிரான கொள்கைகளை வற்புறுத்துவது வழக்கம். காங்கிரஸ் எப்போதும் (1) பலமான மத்ய சர்க்காரையும் (2) கூட்டுத் தேர்தல் தொகுதியையும் விரும்பும். லீக் எப்போதும் (1) வலிமையற்ற மத்ய சர்க்காரும், அதிகமான மாகாண சுயாட்சியும் (2) தனித் தொகுதியும் அவசியம் என்று வற்புறுத்துவது வழக்கம். இதில் ஏதோ ஒருவிதத்தில் சமரசம் ஏற்படும்போலத் தோன்றும் சமயத்தில், பிரிட்டிஷ் ராஜதந்திரம் நாஜூக்காக ஏதேனும் ஒரு கட்சிக்கு ஊக்கமளித்து அந்தக் கட்சியின் சமரச மனப்பான்மையைக் கெடுக்கும்.

1927-லும் 1928-லும் நடந்தது இதுதான். 1927-ல் லீக், காங்கிரஸ் இரண்டும் சைமன் கமிஷனைப் பகிஷ்கரித்தன. எல்லாக் கட்சிகளும் பண்டித மோதிலால் நேருவின் அக்ராசனத்தின் கீழ் கூடி ஆலோசித்து ஒரு அரசியலை நிர்ணயித்து அதை பிரிட்டனிடம் தேசத்தின் கோரிக்கையாக வற்புறுத்தலாமென்று முடிவு கட்டின. உடனே பிரிட்டிஷ் அதிகாரிகள் முஸ்லிம்களிடையே பணக்கார வகுப்பினரான பஞ்சாப் ஜமீந்தார்களையும், ஆகாகான் போன்றவர்களையும் தட்டிக் கொடுத்து "அகில இந்திய முஸ்லிம் மகாநாடு" என்ற ஒரு ஸ்தாபனத்தை அமைக்க ஊக்க மளித்தனர். அதன் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும் என்ற அபிப்பிராயம் முஸ்லிம்களிடையே பரவியது. உடனே, சிறிது காலம் காங்கிரஸின் சர்வகட்சி மகாநாட்டில் கலந்துகொண்டு நேரு கமிட்டி சிபார்சை ஆதரித்து வந்த முஸ்லிம் லீக், கடைசித் தருவாயில் (1928-ம் வருஷம் டிசம்பர் கடைசி வாரத்தில்) 3 கோரிக்கைகளைப் போட்டு அவை நிராகரிக்கப்பட்டதற்

காக, சர்வகட்சி மகாநாட்டை விட்டு வெளியேறி ஜனுப் ஜின்னுவின் தலைமையில் "14 அம்சம் கொண்ட கோரிக்கையை" வெளியிட்டது.

## கூட்டுத்தொகுதியை லீக் கைவிட்ட வரலாறு

சர்வகட்சி மகாநாட்டை விட்டு வெளியேறுமுன் நேரு கமிட்டி அறிக்கைபற்றி ஜனுப் ஜின்னு என்ன கோரினுர் என்பது குறிப்பிடத் தக்கது.

(1) மத்ய சர்க்காரின் சட்டசபையில் மூன்றில் ஒரு பங்கு ஸ்தானங்கள் முஸ்லிம்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும்.

(2) மாகாண சட்டசபைகளுக்கு நேரு கமிட்டியார் சர்வஜன வோட்டு இருக்க வேண்டுமென்று சிபார்சு செய்திருப்பது காரியாம்சத்தில் அமுலுக்கு வரவில்லையாயின், எல்லா வகுப்புகளுக்கும் ஜனத்தொகை விதாசாரப்படியே பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும்.

(3) மத்ய சர்க்காருக்கென்றோ, மாகாண சர்க்காருக்கென்றோ நிர்ணயமாக ஒதுக்கப்படாத எந்த விஷயமும் எந்த அதிகாரமும் மாகாண சர்க்காரிடமே இருக்க வேண்டும்.

இந்த மூன்று விஷயங்களில்தான் ஜனுப் ஜின்னு கோரிக்கைக்கும் நேரு அறிக்கைக்கும் அபிப்ராயபேதம். நேரு கமிட்டியார் கூட்டுத் தொகுதியையே சிபார்சு செய்திருந்தார்கள் என்பதும், அதை ஜனுப் ஜின்னுவின் லீக் நிராகரிக்கவில்லை யென்பதும் குறிப்பிடத்தக்கது. அது எப்படியிருந்தாலும் 1928-ல் ஜின்னு கோரிய அந்த மூன்று விஷயங்களுக்கு சர்வகட்சி மகாநாடு இணங்கியிருந்தால் இன்று நிலைமை வேறு விதமாக இருக்காதா? என்று சிலர் கேட்கலாம். இருக்காது என்பதுதான் பதில். ஏனென்றால் பிரிட்டிஷ் சர்க்கார் முஸ்லிம் லீக் முஸ்லிம்களின் உண்மையான பிரதிநிதி அல்லவென்றும், ஆகாகான் முதலியவர்களே உண்மையான பிரதிநிதியென்றும் சொல்லி, அந்த "அகில இந்திய முஸ்லிம் மகாநாட்டினரை" தட்டிக் கொடுத்து, ஜனுப் ஜின்னு கோரி

யதைவிட அதிகமான வகுப்புவாத கோரிக்கைகளைத் தயாரிக்கச் சொல்லி, அந்த கோரிக்கைகளை அமலுக்குக் கொண்டுவர முன்வந்திருப்பார்கள். இவ்வாறு நாம் கூறுவது விதண்டாவாதம் என்று சிலருக்கு தோன்றலாம். ஆகையால் பின்னர் 1932-ம் வருஷத்தில் நடந்த ஒரு சம்பவத்தை இங்கு ஞாபகப்படுத்துவது அவசியம்.

## பிரிட்டனின் விபரீதக் கொள்கை

1931-ல் லண்டனில் நடந்த வட்டமேஜை மகாநாட்டில் சட்டசபைகளில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம்பற்றி ஒற்றுமை ஏற்படாததால் 1932 ஆகஸ்டில் பிரிட்டிஷ் பிரதம மந்திரி ராம்ஸே மாக்டொனல்ட் ஒரு "தீர்ப்பு" அளித்தார். ஆனால் அவர் மத்திய சர்க்காரின் சட்டசபை பற்றி தீர்ப்பு அளிக்கவில்லை; அந்த விஷயத்தை அவர் ஒத்திப்போட்டிருந்தார். இதை இந்தியர்களே முடிவு செய்துகொள்வதுதான் கௌரவம் என்று உணர்ந்து, மௌலானா ஷவுகத் அலியும், பண்டித மாளவியாவும் கலந்து பேசி, ஒரு சர்வ கட்சி ஐக்கிய மகாநாட்டைக் கூட்டினர். வகுப்பு வீதாசாரம், வகுப்பு ஒற்றுமை பற்றி விவாதம் நடந்தது. அபிப்ராய பேதத்துக்கு இடமான பல பிரச்னைகள் பற்றி சமரச முடிவு காணப்பட்டது. மத்திய சர்க்காரில் முஸ்லிம்களுக்கு 100-க்கு 32 ஸ்தானங்கள் ஒதுக்குவதென்றும், தேர்தலை கூட்டுத் தொகுதி மூலமே நடத்துவதென்றும் தீர்மானித்தனர். கூட்டுத் தொகுதியில் அபேட்சகராக நிற்பவர்கள், தம் வகுப்புக்கு பிரதிநிதியாக இருக்கவேண்டுமென்பதற்காக, ஒவ்வொரு அபேக்ஷகரும் தம் வகுப்பினரின் வோட்டுக்களில் 100-க்கு 30 வோட்டுக்களாவது வாங்கி யிருக்க வேண்டுமென்று ஒரு நிபந்தனையும் சேர்த்தார்கள். (உதாரணமாக, ஒரு தொகுதியில் 5,000 ஹிந்து வோட்டும் 3,000 முஸ்லிம் வோட்டும் இருந்தால், அதில் அபேக்ஷகராக நிற்கும் முஸ்லிம் எப்படியாவது 4000 வோட்டு வாங்கினால் மட்டும் போதாது. அந்த 4,000 வோட்டில் 900 வோட்டாவது முஸ்லிம் வோட்டாக இருக்கவேண்டும்.) இவ்வாறு

பொதுத் தொகுதியின் நன்மை, தனித் தொகுதியால் ஏற்படும் பாதுகாப்பு இரண்டையும் ஒன்று படுத்தும் ஒரு திட்டத்துடன் மத்ய சட்ட சபையில் 100க்கு 32 ஸ்தானங்கள் ஒதுக்குவதென்று தீர்மானித்தாய் விட்டது. ஐரோப்பிய பிரதிநிதித்துவம் நிமித்தமாக வங்காளத்தில் ஹிந்து முஸ்லிம் ஸ்தானங்கள் குறைக்கப் படுவதை தடுக்க என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தனர். ஐரோப்பியரின் அபிப்ராயத்தை தெரிந்துகொள்ள மாளவியாஜி கல்கத்தா போய்க்கொண் டிருந்தார். இப்படியொரு சமரச முயற்சி நடக்கிறது என்பது பிரிட்டனுக்குத் தெரிந்திருந்தும், திடீரென்று லண்டனில் இந்தியா மந்திரி சர் சாமுவேல் ஹோர் ஒரு அறிக்கை வெளியிட்டு "மத்ய சர்க்காரில் முஸ்லிம் களுக்கு 100க்கு $33\frac{1}{3}$ ஸ்தானம் கொடுக்க பிரிட் டன் தீர்மானித்துவிட்டது" என்று அறிவித்தார். அதாவது சமரசத்துக்கு முஸ்லிம்கள் இணங்கியதற்கு அதிகமாகவே அவர்களுக்கு ஸ்தானம் கொடுத்தார். ஹிந்துக்களிடம் சமரம் பேசி நீங்கள் பெறுவதை விட, அதிகமாக பிரிட்டன் தரத்தயார் என்று அவர் அறிவித்த தாக அர்த்தம். பிறகு ஏன் முஸ்லிம்கள் சமரசம் பேசப் போகிறார்கள்! அதோடு அந்த ஒற்றுமை மகா நாட்டில் ஏற்பட்ட கூட்டுத் தொகுதி ஐக்கியமும் சிதைந்தது.

## ஜின்னாவின் 14-அம்ச திட்டம்

அந்தக் காலத்தில் முஸ்லிம்களிடையே லீகுக்கு இருந்த செல்வாக்கைவிட தேசிய முஸ்லிம்களுக்கே அதிக செல்வாக்கு இருந்தது. ஆயினும், காங்கிரஸுக்கு முட் டுக்கட்டை போடும் வேலையை லீக் நடத்திக்கொண் டிருந்தது என்பதை உத்தேசித்து, பிரிட்டிஷ் சர்க்கார் லீகின் கோரிக்கையையே முஸ்லிம்களின் கோரிக்கையாக மதித்தது. 1928 வருஷம் முதல் 1934 வருஷம் வரை, ஜனாப் ஜின்னா 1928 வருஷம் வெளியிட்ட 14 அம்ச கோரிக்கைதான், லீகின் கோரிக்கையாக இருந்தது. ஆகை யால் அந்தக் கோரிக்கையின் சாராம்சத்தை இங்கு குறிப் பிடுவது அவசியம்.

(1) பிற்கால இந்திய அரசியல், சமஷ்டி முறையிலேயே இருக்கவேண்டும் (2) எல்லா மாகாணங்களுக்கும் சுயாட்சி ஒரே அளவில் இருக்கவேண்டும் (3) சட்டசபைகளில் மைனாரிட்டிக்கு செல்வாக்குள்ள அளவு பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டும்: மெஜாரிட்டியை மைனாரிட்டியாக்கிவிடக் கூடாது. (அதாவது பஞ்சாப் போன்ற இடங்களில் ஹிந்து, சீக்கிய மைனாரிட்டிகளுக்கு அதிகப் பிரதிநிதித்துவம் கொடுக்கும்போது, முஸ்லிம் மெஜாரிட்டி மைனாரிட்டியாய்விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.) (4) மத்ய சட்டசபைகளில் முஸ்லிம்களுக்கு மூன்றில் ஒரு பங்கு ஸ்தானம் (5) தனித்தொகுதி முறையே இருக்கவேண்டும். சம்பந்தப்பட்ட வகுப்பு இஷ்டப்பட்டால் கூட்டுத் தொகுதிக்கு இணங்கலாம். (6) மாகாண எல்லைகளை மாற்றியமைத்தால் பஞ்சாப், வங்காளம், வடமேற்கெல்லை இவற்றின் முஸ்லிம் மெஜாரிட்டி பாதிக்கப்படலாகாது. (7) மத சுதந்திரம், மதப் பிரசார சுதந்திரம் (8) ஒரு வகுப்பை பாதிக்கக்கூடிய சட்டம் வரும்போது அதற்கு அந்த வகுப்பைச் சேர்ந்த முக்கால்வாசி பிரதிநிதிகள் எதிர்த்தால், அதை சட்டமாக்கக்கூடாது. (9) பம்பாய் மாகாணத்தில் இருக்கும் ஸிந்து பிரதேசம் தனி மாகாணமாகவேண்டும் (10) வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலும், பலுச்சிஸ்தானத்திலும் மற்ற மாகாணங்களுக்குச் சமமான சுயாட்சி ஏற்படவேண்டும். (11) உத்யோகங்களில் முஸ்லிம்களுக்கு போதுமான பங்கு கொடுக்கப்படவேண்டும். (12) முஸ்லிம் கலாசாரம், முஸ்லிம் தர்ம ஸ்தாபனங்கள், இவற்றுக்கு பாதுகாப்பு (13) மத்ய சர்க்காரிலும், மாகாணங்களிலும் நிர்வாக சபையில் (மந்திரி சபையில்) மூன்றிலொரு பங்கு அங்கத்தினர் முஸ்லிம்களாக இருக்கவேண்டும் (14) சமஷ்டியில் சேர்ந்த எல்லா மாகாணங்களின் சம்மதத்தையும் பெறுமல் மத்ய சட்ட சபையின் அமைப்பில் மாறுதல் செய்யக்கூடாது.

இந்த 14ல் "மந்திரிசபைகளில் வீதாச்சாரம் வேண்டும்" என்ற 8-வது, 13-வது கோரிக்கைகள் தவிர, அநேகமாக எல்லாக் கோரிக்கைகளும் 1935 வருஷத்திய இந்திய அரசியல் சட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டன. அப்படியிருந்தும் அந்தச் சட்டம் நிறைவேறியவுடன் லீக்

அதை எதிர்த்தது. ஆனால் தேசியவாதிகள் சொல்லும் காரணத்தைச் சொல்லியே எதிர்த்தது. அந்த சட்டத்தி லுள்ள சமஷ்டியமைப்பில் சமஸ்தானங்களுக்கு சாதக மாக பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களின் உரிமைகளுக்கு பாதகம் ஏற்பட்டிருப்பதாகவும், தேசம் பூர்ணமான பொறுப்பாட்சி நோக்கி முன்னேற முடியாதபடி, அந்த சட்டத்தில் பல தடைகள் இருப்பதாகவும் சொல்லியே லீக் அதைக் கண்டித்தது. அதாவது முஸ்லிம்களின் வகுப்பு உரிமைகளுக்கு பாதகம் ஏற்பட்டதாகக் காரணம் சொல்லவில்லை. ஆனால் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு லீக் செய்த கிளர்ச்சி முழுதும் "முஸ்லிம் உரிமைக்கு அபாயம்" என்ற கோஷத்தின் மீதே நடந்தது.

## 1937-ல் லீகின் தோல்வி

புதிய அரசியல் சட்டப்படி 1937ல் மாகாண சட்ட சபைக்கு தேர்தல் நடந்தபோது, முஸ்லிம்களுக்கு உண்மை யில் தனியான அரசியல் கோரிக்கைகளோ குறைகளோ எதுவுமிருந்ததாகவே தெரியவில்லை. அந்த சமயத்தில் பெருவாரியான முஸ்லிம்கள் லீகில் சேராமலே இருந்த னர். சட்டசபைத் தேர்தலில் எல்லா ஸ்தானங்களுக்கும் போட்டி போடக்கூட லீக் முன்வரவில்லை. முஸ்லிம் மெஜாரிட்டி மாகாணங்களான பஞ்சாபிலும் வங்காளத்தி லும் லீக் இருந்த இடமே தெரியவில்லை. முஸ்லிம்களுக்கு தனித்தொகுதி யிருந்தும், பஞ்சாபில் ஒரே ஒரு ஸ்தானம் தான் லீகுக்கு கிடைத்தது. லீகில் சேராத முஸ்லிம் களுக்கு 83 ஸ்தானங்கள் கிடைத்தன. வங்காளத்தில் லீகுக்கு 40 ஸ்தானங்கள்; லீகில் சேராத முஸ்லிம்களுக்கு 77 ஸ்தானங்கள். முஸ்லிம் மைனாரிட்டி மாகாணங் களிலும், பம்பாய் ஒன்றில் தவிர, மற்றெல்லா மாகாணங் களிலும் லீக் முஸ்லிம்களை விட மற்ற முஸ்லிம்களே அதிக ஸ்தானங்களைக் கைப்பற்றினர்.

## "அட்டூழிய" புரளிகள்

இந்த நிலைமையிலிருந்து முஸ்லிம் வோட்டர்களின் பெரும்பாலோரது வோட்டைப் பெறும் நிலைமைக்கு லீக் எப்படி வந்தது என்பது இந்திய அரசியல் நிலைமையின்

விசித்திரங்களில் ஒன்ருகும். பிரிட்டனும், பிரான்ஸூம் ஜெர்மனிக்கு ஓடிவந்து, செக்கோஸ்லொவாகியாவை ஜெர்மனிக்கு வாங்கிக்கொடுக்கும்படியான நிலைமையை ஏற்படுத்த, 1937-39ல் ஹிட்லர் என்ன ராஜதந்திரத்தை அனுஷ்டித்தாரோ அதே முறையே கிட்டத்தட்ட அப்போதைக்கப்போது ஜனுப் ஜின்ஞு பின்பற்றி வந்தார்; இதுதான் முஸ்லிம் மனப்பான்மை இவ்வளவு பிரமாதமாக மாறியதற்குக் காரணம் என்று சிலர் சொல்ல முடியும்.

செக்கோஸ்லொவாகியாவில் உள்ள ஜெர்மன் மைஞூரிட்டிகள் மீது செக்கோஸ்லொவாகியர் பெரும் கொடுமைகள் புரிந்ததாக, ஹிட்லர் ஆர்பாட்டம் செய்தார். செக்கோஸ்லொவகியாவில் உள்ள ஜெர்மனியர் உண்மையில் ஒரு கொடுமைக்கும் உட்படுத்தப்படவில்லையாயினும், ஹிட்லரின் பிரசாரத்தை கேட்டு அவர்கள் மனதில் "உண்மையில் நாம் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிருேமோ"! என்ற ஒரு சந்தேகம் பிறந்தது! செக்கோஸ்லொவாகியாவிலுள்ள ஜெர்மனியர் ஆர்பாட்டம் செய்தனர். பிறகு அதை எடுத்துக் காட்டி ஹிட்லர் உலகத்தின்முன் ஆர்பாட்டம் செய்தார். பிரிட்டன் போன்ற வல்லரசுகள் கவனிக்க ஆரம்பித்தன. இப்படியாகப் படிப்படியாக செக்கோஸ்லொவாகியாவிலுள்ள ஜெர்மனியர் ஹிட்லரே தம்மைக் காப்பாற்ற வந்த மகான் என்று எண்ணினர். காங்கிரஸ் மந்திரிசபை ஏற்பட்டு 6 மாதத்துக்குள்ளாக "காங்கிரஸ் மந்திரிசபைகள் முஸ்லிம்கள் மீது புரிந்த கொடுமைகள்" பற்றி ஜனுப் ஜின்ஞு ஜாபிதா தயாரிக்க ஆரம்பித்தது, செக்கோஸ்லொவாகியா சம்பவங்களையே ஞாபகப்படுத்தியது. ஆனல் இவ்வாறு உவமை கூறுவது பொருந்துமா என்ற ஆராய்ச்சி இப்போது அவசியமில்லை.

காங்கிரஸ் மந்திரிசபைகள் ஏற்பட்டவுடனேயே, முஸ்லிம் லீக் "இஸ்லாத்துக்கு அபாயம்" என்ற கோஷத்தை கிளப்ப ஆரம்பித்துவிட்டது. எதைக் காரணமாகச் சொல்லி தேசியத்துக்கும் முஸ்லிம் உணர்ச்சிக்கு மிடையே

முரண்பாடு இருப்பதாகக் கூறலாம் என்பதிலேயே லீகர்கள் தம் முழு கவனத்தையும் செலுத்தினர். வந்தேமாதர கோஷம் ஹிந்து கோஷம்; மூவர்ணக் கொடி ஹிந்துக்கள் கொடி என்றெல்லாம் ஆக்ஷேபித்தனர். கல்வி ஆலயம் என்று ஒரு வார்த்தையை காங்கிரஸ் உபயோகித்தால் போதும், உடனே அதை ஆலய வழிபாட்டுக்கும், விக்ரக வழிபாட்டுக்கும் சம்பந்தப்படுத்தி லீகர்கள் ஆர்பாட்டம் செய்வார்கள். மைனாரிட்டிகளின் சார்பில் தம் விசேஷ அதிகாரங்களை மந்திரிகளுக்கு எதிராக உபயோகிப்பதில்லையென்று கவர்னர்கள் வாக்குறுதி கொடுத்து அந்த வாக்குறுதிப்படி நடந்ததால், காங்கிரஸ்காரர்கள் தங்கு தடையின்றி மைனாரிட்டிகளுக்குக் கொடுமை புரிவது சாத்யமாயிற்று என்று லீக் பிரசாரம் செய்தது.

இவ்வாறு காங்கிரஸ் மீது துவேஷத்தை வளர்ப்பதையே லீக் தனது முக்கிய வேலைத் திட்டமாகக் கொண்டது. இந்த துவேஷத்தை வளர்ப்பதில் அது வெற்றி பெறவும் செய்தது! இதன் மர்மமென்ன என்பதைத்தான் நாம் கவனிக்க வேண்டும்.

### இந்திய சுதந்திரத்தில் அசிரத்தை

பொதுவாக முஸ்லிம்களில் ஒரு பகுதியினருக்குத்தான் இந்திய தேசிய சுதந்திரத்தில் அக்கரை உண்டு. 1920—21-ல் முஸ்லிம்களில் பெருந் தொகையினர் காங்கிரஸுடன் ஒத்துழைத்து பல தியாகங்கள் செய்ய முன் வந்தனராயினும், அரபு நாடுகள் சம்பந்தமாக ஏற்பட்ட கிலாபத் பிரச்னைதான் அதற்குக் காரணம். கிலாபத் பிரச்னையை அரபு நாட்டினரே முக்யமாக மதிக்காமல் துருக்கியில் முஸ்லீம்களே கலீபாவை பீடத்திலிருந்து நீக்கினர். கிலாபத் பிரச்னையே அப்போது போய் விட்டது. உடனே முஸ்லிம் பொதுஜனங்கள் அரசியலில் அக்கரை இழந்தனர். கிலாபத் சம்பந்தமாகக் காங்கிரஸில் சேர்ந்தவர்களுள் கல்வியறிவுள்ளவர்களில் சிலர் மட்டும் தேசியத்தில் நிலைத்துநின்றனர்; மற்றவர்கள் வகுப்புவாதத்தில் ஈடுபட்டனர். இந்த வகுப்புவாதிகளின் மனப்பான்மையை பின்ருவமாறு வர்ணிக்கலாம் (1) சுயராஜ்யம்

என்பது முஸ்லீம் ஆட்சியாக இருக்காதென்றால், அந்த சுயராஜ்யம் வந்தாலும் சரிதான், வராவிட்டாலும் சரிதான் (2) சுயராஜ்யம் என்பது ஹிந்து ஆட்சியாகவே இருக்குமானால் அதை எதிர்த்தே தீரவேண்டும். ஹிந்து ஆட்சி ஏற்படுவதை தடுப்பதற்காக என்ன தியாகங்கள் வேண்டுமானாலும் செய்யலாம். (3) சுயராஜ்யம் என்பது முஸ்லிம் ஆட்சியாக இருக்குமானால் மட்டும் அதற்காக சிறிது தியாகம்செய்து பார்க்கலாம்! (4) "சுயராஜ்யத்தில் ஹிந்துக்களுக்கு மிகுந்த அக்கரை இருப்பதால், அவர்கள் முஸ்லிம் கோரிக்கையை நிராகரிக்கமுடியாது. நிராகரித்தால் நாம் முட்டுக்கட்டை போடுவோம்" என்பது சில முஸ்லிம்களின் மனப்பான்மை.

இந்த நான்கு அம்சமுள்ள மனப்பான்மையுடன் வேலை செய்யும் வகுப்புவாதிகளுக்கு எதிராக, தேசிய முஸ்லிம்கள் தம் ஜாதியிலுள்ள சாதாரண ஜனங்களின் ஆதரவைப் பெறுவது சிரம சாத்யமான விஷயமே. ஏனென்றால் சாதாரணமாக முஸ்லிம் பொதுமக்களுக்கு அரசியலில் உள்ள உணர்ச்சியைவிட, மத உணர்ச்சியே அதிகம். மதத்தின் பேரால் கோஷம் செய்பவர்களும், மதத்துக்கு அபாயம் என்று துவேஷத்தை கோஷமாகக் கொள்பவர்களும் முஸ்லிம் பொது ஜனங்களின் கவனத்தைக் கவர முடியும். இதுதான் லீகர்களின் வெற்றிக்கு முக்கியமான காரணம்.

இவ்வாறு துவேஷத்தை கிளப்ப வேண்டுமென்று முஸ்லிம் வகுப்புவாதிகள் நினைத்ததற்கு என்ன பிரமேயம் ஏற்பட்டது என்பதும் நாம் சிறிது ஆராய்ந்து பார்க்க வேண்டிய விஷயமாகும். அவ்வாறு ஆராய்ந்தால்தான் நமது பிற்காலத்து பிரச்னையைப்பற்றி நாம் சரியான முடிவுக்கு வரமுடியும். நியாயமான மனத்தாங்கலோ, நியாயமில்லாத மனத்தாங்கலோ, ஏதோ ஒரு மனத் தாங்கல் ஏற்பட்டதுதான் சில அரசியல் வாதிகள் துவேஷப் பிரசாரத்தில் இறங்கியதற்குக் காரணமாக இருக்க வேண்டும். அந்த மனத்தாங்கல் [illegible] எப்படி ஏற்பட்டது?

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1
44814

### முஸ்லிம்களின் மனக்குறை

இந்தியாவில் உள்ள 11 மாகாணங்களில் 4 மாகாணங்களில்தான் முஸ்லிம்கள் மெஜாரிட்டி. அந்த மெஜாரிட்டி மாகாணங்களில்கூட லீகுக்கு மெஜாரிட்டி கிடைக்கவில்லை. அந்த மாகாணங்களின் மந்திரி சபைகளில் முஸ்லிம்களுக்கு தாராளமாக இடமிருந்ததாயினும், லீகுக்கு பங்கு கிடைக்கவில்லை. அதுமட்டுமல்ல. முஸ்லிம் மெஜாரிட்டி மாகாணங்கள் நான்கு இருக்கின்றன ; ஆயினும், பஞ்சாப், வங்காளம் இரண்டிலும் முஸ்லிமல்லாதார் சிறு மைனாரிட்டிகளல்ல; பெரிய மைனாரிட்டிகள். ஆகையால் அந்த மாகாண மந்திரி சபைகளில் ஹிந்துக்களுக்கு கிட்டத்தட்ட பாதி ஸ்தானங்கள் கிடைத்தன. ஹிந்து மெஜாரிட்டி மாகாணங்களிலோவென்றால் அங்கு முஸ்லிம்கள் மிகச் சிறிய மைனாரிட்டி. ஆகையால் மந்திரிகளில் பெரும்பாலோர் ஹிந்துக்களாகவே இருந்தனர். மந்திரி சபையில் ஒன்றிரண்டு ஸ்தானங்கள்தாம் முஸ்லிம்களுக்கு கிடைத்தன. லீகுக்கு மந்திரி ஸ்தானமே இல்லை. இது தவிர்க்க முடியாத நிலைமையே. ஏனென்றால் முஸ்லிம்களின் ஜனத்தொகை அதிகமில்லை.

இந்த நிலைமையில் பொதுத்தொகுதி இருந்து முஸ்லிம்களுக்கு சில ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டு மற்ற ஸ்தானங்களுக்கும், முஸ்லிம்கள் அபேட்சகர்களாக நிற்கலாம் என்று இருந்தால், வகுப்பு வேற்றுமையில்லாமல் ஒரு பொதுவான வேலை திட்டத்துடன் முஸ்லிம்கள் தேர்தலுக்கு நின்றிருந்தால், முஸ்லிம்களுக்கு ஒருகால் அதிகமான ஸ்தானங்கள் கிடைத்திருக்கலாம். தனித்தொகுதி ஏற்படுத்தியதால், இதற்கு மார்க்கமில்லாது போயிற்று.

### கலப்பு மந்திரிசபை ஏற்படாததேன்?

ஒரு வேளை ஒவ்வொரு மாகாணத்திலும் மெஜாரிட்டி பெற்ற காங்கிரஸ் கட்சியானது, லீகர்களையும் மந்திரி சபையில் சேர்த்துக்கொண்டு கலப்பு மந்திரி சபையை ஏற்படுத்தி யிருந்தால் முஸ்லிம் லீகர்களின் மனக்குறை நீங்கி யிருக்கும். ஆனால் அப்போதிருந்த

மனப்பான்மையில் காங்கிரஸ் அதற்கு இணங்க முன்வரவில்லை. ஏனென்றால் காங்கிரஸ்காரர்கள் சட்டசபைக்கு போனவுடன், விவசாயிகள், தொழிலாளர்கள் முதலியவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு என்ன செய்ய வேண்டுமென ஏற்கனவே ஒரு வேலைத் திட்டம் போட்டிருந்தார்கள். அந்த வேலைத் திட்டம் ஜாதிமத வித்யாசமில்லாத வேலைத் திட்டம். அந்த வேலைத் திட்டத்தை திறமையாக நடத்தி வைத்து, ஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற கவலையே காங்கிரஸ்காரருக்கு மிகவும் முக்கியமாக இருந்தது. வேலைத் திட்டத்துக்கு இணங்காதவர்களை மந்திரி சபையில் வைத்துக்கொண்டால், எதையும் திறமையாகச் செய்ய முடியாது. இதனால்தான் காங்கிரஸ் அப்போது கூட்டு மந்திரி சபைக்கு (அல்லது கலப்பு மந்திரி சபைக்கு) இணங்கவில்லை. இந்த நிலைமையில் காங்கிரஸுடன் இணங்காவிடில், ஹிந்துக்களுடன் இணங்காவிடில், முஸ்லிம்களுக்கு அரசியல் ஆதிக்கத்தில் பங்கில்லாமல் போய்விடுகிறது என்பதை எடுத்துக்காட்டி, முஸ்லிம் லீகர்கள் இந்தியாவில் பார்லிமெண்டரி ஆட்சியே கூடாது என்று வாதிக்க ஆரம்பித்தனர்! உண்மையில் இந்த பிரச்னைக்கு பரிகாரம் பொதுத் தொகுதிதான். அதை விடுத்து இந்தியாவில் "பார்லிமெண்டரி ஆட்சி" யென்பது எப்போதும் ஹிந்து ஆட்சியாகவே இருக்கும் என்றனர். தனித்தொகுதி முஸ்லிம்களுக்கு நல்லதல்ல வென்பதுதான் உண்மை. அந்த உண்மையை ஒப்புக்கொண்டு தனித்தொகுதியைக் கைவிடுவதற்குப் பதிலாக, "தனி ராஜ்யம்" வேண்டும் என்ற கோரிக்கை கிளம்பியது.

### "தனி ராஜ்ய" கோரிக்கை

இந்தியாவில் ஹிந்துக்களே மெஜாரிட்டி; இந்தியா முழுவதுக்கும் ஒரு பொது சர்க்கார் இருந்தால், அது ஹிந்து ஆட்சியாகவே இருக்கும். முஸ்லிம் மெஜாரிட்டி மாகாணங்களைத் தனி ராஜ்யமாக்கி விட்டால், இந்தியாவின் ஒரு பகுதியாவது முஸ்லிம் ராஜ்டமாக இருக்கும்; அந்தப் பகுதியை இந்தியாவிலிருந்து வேறாக பிரித்து விட்

டால், இந்திய முஸ்லிம்களில் பெரும்பாலோர் முஸ்லிம் ராஜ்யத்திலேயே சுதந்திரமாக வாழும் நிலைமை ஏற்படும்; அது மைனாரிட்டி மாகாணங்களிலுள்ள முஸ்லிம்களின் அந்தஸ்தையும் உயர்த்தும்—என்பதுதான் தேசப் பிரிவினை வாதிகளின் வாதம். இவர்கள் ஒரே ஒரு விஷயத்தை மறந்து விடுகிறார்கள். முஸ்லிம் மெஜாரிட்டி பிரதேசம் என்று வர்ணிக்கும் பிரதேசத்தில், ஹிந்துக்கள் சிறிய மைனாரிட்டிகளல்ல. அங்கு ஜனத் தொகையில் சுமார் 40 சதவிகிதம் முஸ்லிமல்லாதார்தான். 100க்கு 40 பேர் என்பது எந்த சர்க்காரும் அலக்ஷியம் செய்ய முடியாத தொகை. ஹிந்து மெஜாரிட்டி மாகாணங்களில் உள்ள முஸ்லிம் மைனாரிட்டி யென்பது, சிறிய மைனாரிட்டி; ஜனத் தொகையில் 100க்கு 15 கூட இல்லை. ஆகையால் அந்த மாகாணங்களில் மைனாரிட்டிகளை அலக்ஷியம் செய்ய முடியும். ஆனால் பஞ்சாபிலும், வங்காளத்திலும் அப்படியல்ல. அங்கு ஹிந்துக்கள் மைனாரிட்டியானாலும் பெரிய மைனாரிட்டி; ஆகையால் அந்த மைனாரிட்டியை அலக்ஷியம் செய்து தனி முஸ்லிம் ராஜ்யமாக ஒரு வாரம் கூட நிர்வகிக்க முடியாது. ஆயினும் "தனி முஸ்லிம் ராஜ்யம்" "முஸ்லிம்களுக்கு தாயகம்" என்ற கோஷம் முஸ்லிம் மக்களின் மனதைக் கவர்ந்திருக்கிறது (அது காரிய சாத்யமல்ல வென்று கூறும் முஸ்லிம்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் இவர்களது பேச்சு பாமர முஸ்லிம் மக்கள் செவியில் ஏறுவதில்லை.)

## கிரிப்ஸ், ராஜாஜி ஊட்டின தைரியம்

1942-ல் கிரிப்ஸ் தூதுகோஷ்டி இந்த தனி ராஜ்யக் கோரிக்கையை வற்புறுத்த மாகாணங்களுக்கு உரிமையுண்டென்று கூறியதும், காங்கிரஸில் மிகவும் செல்வாக்குள்ள ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரியார் அதை ஒப்புக்கொண்டதும், லீகின் கோரிக்கை நியாயமானதே யென்று பல முஸ்லிம்கள் எண்ண இடமளித்தது. அதனால் தேசிய முஸ்லிம்களின் நிலைமை இன்னும் சங்கடமாயிற்று.

முஸ்லிம் ராஜ்யம் அல்லது பாகிஸ்தான் என்ற கோஷத்தை, 1939 வருஷத்திய ஐரோப்பிய யுத்தம் ஆரம்பித்த பிறகுதான் லீக் கடைப்பிடித்தது. லீகின் அரசியல் லக்ஷியம் இவ்வாறு மாற்றப்பட்ட வரலாறு சமீப கால நிகழ்ச்சியே யாதலின், அதிகமாக நாம் விவரிக்கத் தேவையில்லை.

### பிளவு விரிவடைந்த வரலாறு

(1) 1937-ல் காங்கிரஸ் மந்திரி சபைகள் பதவி யேற்று 8 மாதமாவதற்குள்ளேயே; காங்கிரஸைப்பற்றி லீகர்கள் "அட்டூழிய" புகார்களைக் கிளப்பினர். வகுப்பு விஷயங்களில் காங்கிரஸ்காரர்கள் மிகவும் ஜாக்ரதையுடன் நேர்மையாகவே ஆட்சி புரிந்தனர் என்று கவர்னர்கள் (காங்கிரஸ் மந்திரிகள் ராஜிநாமா செய்த பிறகு கூட) பாராட்டிப் பேசி யிருக்கிறார்கள். ஆயினும் லீக் அட்டூழியப் பிரசாரத்தை கைவிடவில்லை

அந்தப் புகார்கள் பற்றி சமஷ்டிக் கோர்ட் நீதிபதியைக்கொண்டு ஒரு விசாரணை நடத்திவைக்கலாமென்று காங்கிரஸ் அக்ராசனர், ஜனாப் ஜின்னாவுக்கு எழுதினார். அதை ஜனாப் ஜின்னா நிராகரித்தார்.

(2) காங்கிரஸுக்கும் லீகுக்கு மிடையேயுள்ள தகராறை காங்கிரஸ் தலைவரும், லீக் தலைவரும் சந்தித்துப் பேசி தீர்த்துக்கொள்ளலாமென்று சமரசம் பேச காங்கிரஸ் முயன்றது. காங்கிரஸானது தன்னை ஒரு ஹிந்து ஸ்தாபனமாக மதித்துக்கொள்ள வேண்டுமென்றும், முஸ்லிம் லீக் ஒன்றே முஸ்லிம்களின் ஏகப் பிரதிநிதியென்று ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும், அப்படியானால் மட்டுமே பேச்சு நடத்தமுடியும் என்றும் ஜனாப் ஜின்னா வற்புறுத்தினார்.

(3) யுத்தம் ஆரம்பித்தவுடன், இந்தியரைக் கலந்து கொள்ளாமல், பிரிட்டன் இந்நாட்டை ஒரு கோர யுத்தத்தில் மாட்டி விட்டது தவறு என்று கண்டித்து,

காங்கிரஸ் மந்திரிகள் ராஜிநாமா செய்தனர். "ஒழிந்த தய்யா காங்கிரஸ் ஆட்சி!" என்று ஜனுப் ஜின்ஞு "விடுதலே தினம்" கொண்டாடினுர்.

4) யுத்தம் ஆரம்பித்தவுடன், பிரிட்டன் யுத்த லக்ஷியங்களை தெளிவுபடுத்தி இந்தியாவில் அமுலுக்கு வரப்போகும் யுத்த லக்ஷியம் என்னவென்று அறிவிக்க வேண்டும் என காங்கிரஸ் கோரியது; அதை பிரிட்டன் நிராகரித்தது. லீகின் கோரிக்கைக்கு இணங்கி பிரிட்டன் 1935ம் வருஷத்து சட்டத்திலுள்ள சமஷ்டித் திட்டத்தை "நிறுத்தி வைத்தது". இந்தியாவிலுள்ள எல்லா முக்கியமான "இனங்களின்" ஆதரவையும் சம்மதத்தையும் பெருத எந்த அரசியல் பிரேரணையையும் பிரிட்டன் கொண்டு வராது என்றும் அறிவித்து லீகை திருப்தி செய்தது!

1940ல் மார்ச் மாதத்தில் முஸ்லிம் லீக் லாகூரில் கூடி பாகிஸ்தான் தீர்மானத்தை நிறைவேற்றியது. அடுத்த வருஷத்தில், "பாகிஸ்தான்" லீகின் அங்கத்தினர் கையெழுத்திட வேண்டிய "கொள்கை"யாக்கப்பட்டது.

(5) இதற்கிடையில் 1940ஞ் இறுதியில் காங்கிரஸ் "தனிப்பட்டோர் சத்யாக்ரஹத்தை" ஆரம்பித்தது. உடனே ஜனுப் ஜின்ஞு, இது பிரிட்டனை காங்கிரஸ் கோரிக்கைக்கு இணங்கும்படி செய்து முஸ்லிம்கள் தம் உரிமையை பெறமுடியாமல் தடுப்பதற்கு ஒரு சூழ்ச்சி என்று சொல்லி, பிரிட்டனுக்கு எச்சரிக்கை விடுத்தார். "காங்கிரஸுக்கு இணங்கிஞல் நாங்கள் எந்த வகையிலும் அதை எதிர்ப்போம்" என்று லீக் தீர்மானம் நிறைவேற்றியது.

(6) 1940ஞ் ஜனவரி மாதத்தில் வைசிராய் நிர்வாக சபையை விஸ்தரிக்கவும், ஒரு யுத்தக் கவுன்ஸிலே நியமிக்கவும் லீகுடன் பேச்சு நடத்தியபோது ஜனுப் ஜின்ஞு பின் வரும் கோரிக்கைகளே விடுத்தார்:—

(அ) பாகிஸ்தான் தீர்மானத்துக்கு முரணுக பிரிட்டன் எவ்வித அறிக்கையும் விடக்கூடாது. முஸ்லிம் இந்தியாவின் சம்மதமின்றி யாதொரு அரசியல் பிரேரணையையும் பிரிட்டன் அமுலுக்குக் கொண்டுவரக்கூடாது. (ஆ) தாற்காலிகமாக நிர்வாக சபையை விஸ்தரிக்க வேண்டும். அதில் காங்கிரஸ் சேர்ந்தால் ஹிந்துக்களுக்கு எத்தனை ஸ்தானமோ அத்தனை ஸ்தானங்களை முஸ்லிம்களுக்கும் தரவேண்டும். காங்கிரஸ் அதில் சேராவிட்டால் நிர்வாக சபையில் முஸ்லிம்களுக்கு மெஜாரிட்டி தர வேண்டும். அப்படிச் செய்தால் முஸ்லிம்கள் நிர்வாகத்தின் பொறுப்பை ஏற்றுக்கொள்வார்கள். (இ) முஸ்லிம் பிரதிநிதிகளை நியமிக்கும் உரிமை லீகுக்குத்தான் உண்டு, என்று ஜனுப் ஜின்னு வற்புறுத்தினுர்.

வைசிராய் நிர்வாக சபையை விஸ்தரித்தபோது, லீக் அதில் கலந்துகொள்ளாவிடினும், பிரிட்டன் லீகின் முதல் கோரிக்கையிலுள்ள கொள்கையை ஒப்புக்கொண்டது. இரண்டாவது கொள்கையை வைசிராய் காரியாம்சத்தில் நிறைவேற்றினுர். மூன்ருவது கோரிக்கையை மட்டும் ஒப்புக்கொள்ளவில்லை; மெம்பர்களை பொறுக்கும் உரிமை பிரிட்டிஷ் சர்க்காருக்குத்தான் என்று முடிவு செய்து விட்டார்.

(7) பிறகு ஸர் கிரிப்ஸ் வந்தார். அவரது பிரேரணையில் இந்தியா முழுவதுக்கும் ஒரு அரசியல் நிர்ணய சபை ஏற்படுத்தி அதில் ஒரு அகில இந்திய அரசியலைத் தயாரித்து, பின்னர் எந்த மாகாண சட்ட சபையேனும் 60 சதவிகித வோட்டுகளால் அந்த அரசியலை ஊர்ஜிதம் செய்ய மறுத்தால், சர்வஜன வோட்டெடுத்து அந்த மாகாணம் அகில இந்திய யூனியனிலிருந்து விலக உரிமை யுண்டு என்று கண்டிருந்தது. "விலக உரிமையுண்டு" என்று கிரிப்ஸ் கூறிய ஒரு வார்த்தையைமட்டும் ஏற்றுக்கொண்டு, இந்தியா முழுதுக்கும் பொதுவான ஒரே அரசியல் நிர்ணய சபை ஏற்படுவதை எதிர்த்து இத்திட்டத்தை லீக் நிராகரித்தது.

இடைக்கால சர்க்காரில் பொறுப்பாட்சி இல்லாத தாலும், முக்கியமான யுத்த ராணுவ இலாகா நிர்வாக சபைக்கு மாற்றப்படாததாலும் காங்கிரஸ் கிரிப்ஸ் பிரேரணையை நிராகரித்தது. "எந்த பகுதியையும் அதன் இஷ்டத்துக்கு விரோதமாக அகில இந்திய ஆட்சிக்கு உட்படுத்த காங்கிரஸ் விரும்பவில்லை; ஆனால் இந்தியாவை துண்டாடுவது எல்லோருக்கும் கெடுதி" என்று காங்கிரஸ் கூறியது.

(8) இவ்வாறு கிரிப்ஸ் திட்டம் நிராகரிக்கப்பட்ட பிறகு காங்கிரஸ் சட்டமறுப்பில் இறங்கியது; உடனே லீக் "காங்கிரஸானது லீகின் கோரிக்கையை உடைக்கவே இவ்வாறு செய்கிறது" என்று அறிக்கை வெளியிட்டது.

(9) 1944 செப்டம்பரில் ராஜாஜியின் திட்டத்தை அடிப்படையாய்க் கொண்டு ஜனாப் ஜின்னாவுடன் காந்திஜி பேச்சு நடத்தினார். "முஸ்லிம்கள் தனி தேசீய ஜாதி" என்ற கொள்கையையும், காங்கிரஸ் ஹிந்துக்கள் ஸ்தாபனம் என்ற ஹோதாவிலேயே பேசவேண்டும் என்பதையும் ஜின்னா வற்புறுத்திக்கொண்டிருந்தார்; தாம் கோரும் பாகிஸ்தானின் உருவம் என்ன என்ற விவரங்களைக் கூட வெளியிட ஜனாப் ஜின்னா மறுத்தார். பேச்சு முறிந்தது.

(10) 1945 ஜூன் மாதத்தில் வைசிராய் வேவல் யுத்தம் முடிந்தும் ஒரு இடைக்கால சர்க்காரை அமுலுக்கு கொண்டு வருவதற்கு பிரேரணைகள் வெளியிட்டார்.

நிர்வாக சபையில் ஜாதி ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சமமான ஸ்தானம் கொடுக்க அவர் முன்வந்தார். அதாவது ஜனாப் ஜின்னா அதுவரை கோரிவந்ததை வைசிராய் கொடுக்க முன்வந்தார். ஆனால், ஜனாப் ஜின்னா எல்லா முஸ்லிம்களையும் லீக்தான் நியமிக்க வேண்டும் என்று வற்புறுத்தியதால் அந்த பிரேரணைகள் கைவிடப்பட்டன.

(11) வேவலின் பிரேரணையை நிராகரித்தபோது ஜின்னா பத்திரிகை நிருபர்களிடம் அறிவித்த விவரங்கள் மிகவும் ஆச்சரியப்படத்தக்கவை. "ஹரிஜனங்கள், சீக்கியர், கிறிஸ்தவர் முதலிய மைனாரிட்டிகள், லீகின் முக்கியமான கோரிக்கைகள் விஷயத்தில் காங்கிரஸையே ஆதரிக்கும்" என்று ஜனாப் ஜின்னா கூறினார்.

நிர்வாகசபையில் முஸ்லிம்களே மெஜாரிட்டியாக இருக்கவேண்டுமென்று வற்புறுத்த ஆரம்பித்தார்

லீகைத் தவிர வேறு யாரும் பிரிவினையை ஒப்புக்கொள்ளவில்லையென்று ஜனாப் ஜின்னாவே ஒப்புக்கொண்டது குறிப்பிடத் தக்கதாகும்.

### மூன்று கட்டங்கள்

"பிரிக்கப்படும் இந்தியா" என்ற புத்தகத்தில் பாபு ராஜேந்திர பிரசாத் இந்த சம்பவங்களின் போக்கை மூன்று கட்டங்களாக பாகுபாடு செய்துள்ளார். (1) 1930 முதல் 1935 வரை லீக் சமஷ்டியை ஆதரித்து, எந்த மகாணத்திலும் மெஜாரிட்டியை மைனாரிட்டி யாக்க கூடாது என்ற கொள்கையை வற்புறுத்தியது. (2) இந்த கொள்கைப்படி 1935 அரசியல் தயாரிக்கப்பட்டதும் ஜனாப் ஜின்னா சமஷ்டியை எதிர்த்து தேசப்பிரிவினையை வற்புறுத்தினார். (3) மெஜாரிட்டியை மைனாரிட்டியாக்கக் கூடாது என்று வற்புறுத்துவதை விட்டு 1940-ல் மைனாரிட்டியை மெஜாரிட்டிக்கு சமமாக மதிக்க வேண்டுமென்று வற்புறுத்தினார்! இதற்கு இணங்கி பிரிட்டன் சமஷ்டியை கைவிட்டு காரியாம்சத்தில் மைனாரிட்டி-மெஜாரிட்டி சமத்துவத்தையும் ஒப்புக்கொண்டது. ஆனால் 1944-ல் ஜனாப் ஜின்னா சமத்துவம் மட்டும் போதாது என்று சொல்ல ஆரம்பித்தார். மைனாரிட்டியை மெஜாரிட்டியாக மதித்தால்தான் அவர் திருப்தியடைவார் போலும் என்ற நிலை ஏற்பட்டது.

முஸ்லிம் லீகின் ஒவ்வொரு கோரிக்கையையும் பிரிட்டன் ஏற்றுக்கொண்ட பிறகும், ஒவ்வொரு தடவையும் லீகின் கோரிக்கை அதற்குமேல் வளர்ந்துகொண்டே

போயிற்று. விவாதத்தின் மூலம் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்ற விருப்பம் லீகுக்கு இருப்பதாக காணப்படவில்லை. ஆகையால் இனிமேல் லீகுடன் பேச்சு நடத்துவது பயனற்ற காரியம் என்று காங்கிரஸ்காரர் முடிவு செய்யவேண்டியதாயிற்று.

இந்த முட்டுக்கட்டையான நிலைமைக்கு யார் ஜவாப்தாரி என்பதை ஆராய்ந்து பயனில்லை. இப்படிப்பட்ட நிலைமை இருந்தது என்பதைத்தான் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அடுத்த அத்தியாயத்தில்

இப்படிப்பட்ட ஒரு முட்டுக்கட்டையை நீடிக்கவிட்டு பிரிட்டன் தன் ஆட்சியை இன்னமும் நீடிக்கலாமே; ஏன் சமாசத்தில் பிரிட்டன் அக்கறை கொள்ள வேண்டும்; உண்மையிலேயே இந்த முட்டுக்கட்டை தீருவதில் அவர்களுக்கு அக்கறை இருக்குமா? என்று பலர் திகைக்கலாம். அதை அடுத்த அத்தியாயத்தில் கவனிப்போம்.

---

மூன்றாவது அத்தியாயம்

# பிரிட்டனின் தேவையும் இந்தியாவின் தேவையும்

இரண்டாவது உலக யுத்தத்துக்கு முன்னர் பிரிட்டனுக்கு எவ்வளவு பலமும் சர்வதேச செல்வாக்கும் இருந்ததோ, அதே பலமும் செல்வாக்கும் இப்போதும் இருக்குமாயின் இந்தியாவின் பலவீனத்தை பிரிட்டன் பயன்படுத்திக்கொண்டு இன்னும் பல காலம் தன் ஆட்சியை நீடிக்கமுடியும். ஆனால் அதற்கு வேண்டிய பலம் இப்போது பிரிட்டனிடம் இல்லை. யுத்தத்தின் முடிவில் பிரிட்டனின் பொருளாதாரபலம் மிகவும் குன்றிவிட்டது.

ஐரோப்பாவில் இதுவரை சரித்திரத்தில் காணாத அள வுக்கு, ஒரு பெரிய வல்லரசின் செல்வாக்கு அதிகரித்துவிட் டது. அதாவது ஜெர்மனியின் கிழக்குப் பகுதி உள்பட கிழக்கு ஐரோப்பா முழுவதும் ரஷியாவின் ஆதிக்கத்தில் வந்துவிட்டது. மீதமுள்ள ஐரோப்பிய நாடுகளிலும் ரஷியாவுக்குச் சாதகமான கம்யூனிஸ்ட் கட்சிகள் வளர்ந்து வருகின்றன. ஐரோப்பா மட்டுமல்லாமல், பாரசீகம் முதலிய மத்ய கிழக்கு நாடுகளிலும் ரஷியா கவனம் செலுத்துகிறது. பாரசீகத்தில் ரஷியா அனுஷ்டிக்கும் கொள்கை நிமித்தமாக, பாரசீக வளைகுடா வரையில் உள்ள பகுதி ரஷியாவின் செல்வாக்குக்கு உட்பட்ட பிரதேசமாகிவிடும். கிழக்கே வடக்குச் சீனு, மஞ்சூரியா ஆகிய இடங்களிலும் ரஷியாவுக்கு பலம் ஏற்பட்டு வருகிறது. இவ்வளவுக்கும் மேலாக சமீபத்தில் ஏற் படுத்தப்பட்ட "ஐக்கிய நாடுகள் சங்கம்" என்ற ஸ்தா பனத்தின் மூலமாக ரஷியா, பிரிட்டன்மீது அடிக்கடி குற்றம் சாட்டி, அதன் (பிரிட்டன்) கவுரவத்தை சீர் குலைக்க முடியும்.

## ராஜ தந்திரத் தேவைகள்

ரஷியாவின் விஸ்தரிப்புக் கொள்கை நிமித்தமாக, யுத்தம் ஏற்படுமாயின், பிரிட்டனிடம் போதிய ஆள் பலம் கூடக் கிடையாது. பிரிட்டனின் வெளிநாட்டுக் கொள்கை யானது, இப்போது அமெரிக்காவின் நட்பையே எதிர் பார்க்கவேண்டி யிருக்கிறது. இந்தியாவைப் பற்றி இப் போது உலகில் பல நாடுகள் ஓரளவு தெரிந்துகொண் டிருக்கின்றன. மிகவும் நாகரிக முதிர்ச்சியுள்ளதும், 40 கோடிப் பேர் வாழ்வதுமான இந்நாடு, அடிமையாக இருப்பது இயற்கைக்கு முரணானது என்ற உணர்ச்சி பொதுவாக எல்லா நாடுகளிலும் இருக்கிறது. இந்தி யாவை அடிமையாக வைத்திருப்பது, பிரிட்டன் மீது அமெரிக்கருக்கு இயற்கையாக இருக்கக்கூடிய அனு தாபத்தை ஓரளவு பாதிக்கிறது.

இந்தியா அதன் ஆதிக்கத்தில் இருப்பதால் தான் பிரிட்டன் ஓர் வல்லரசாக விளங்குகிறது. ஆனால் இந்தியாவை பிரிட்டன் அடிமையாக வைத்துக்கொண்டிருப்பது பிரிட்டன்மீது பல நாடுகளுக்கு வெறுப்பும் பொருமையும் ஏற்பட காரணமாய் இருக்கிறது!

### பிரிட்டனின் தேசிய கவுரவம்

பிரிட்டிஷ் அமெரிக்கக் கூட்டுறவில் இரண்டு நாடுகளிலுமுள்ள ராஜீயவாதிகளுக்கு மிகவும் பற்றுதல் இருக்கிறதாயினும், சமீபத்தில் நடந்த யுத்தத்தின் விளைவாக அமெரிக்கர் விஷயமாக பிரிட்டிஷ் சோல்ஜர்களின் மனோபாவம் சிறிது மாறியிருக்கிறது. அமெரிக்க சோல்ஜர்களுக்கும், பிரிட்டிஷ் சோல்ஜர்களுக்குமிடையே பரஸ்பரம் கவுரவமான உணர்ச்சி இல்லை. "அமெரிக்க ஆயுதங்களின் திறமையால்தான் பிரிட்டன் சண்டைபோட முடிந்தது: அமெரிக்கா இல்லாவிடில் பிரிட்டன் மாண்டு மடிந்து போயிருக்கும். அமெரிக்காதான் உயர்ந்தது. பிரிட்டன் நம் தயவில் இருக்கிறது" என்ற எண்ணத்தில் அமெரிக்க சோல்ஜர்கள் சற்று அலக்ஷிய புத்தியுடனேயே பிரிட்டிஷ் சோல்ஜர்களிடம் நடந்துகொண்டனர். இது பிரிட்டிஷ் சோல்ஜர்களின் மனதைப் புண்படுத்தியிருக்கிறது. "அமெரிக்கர்கள் மிகவும் ஜம்பமடிக்துக்கொள்கிறவர்கள். அவர்களுக்கு கண்ணிய புத்தியில்லை. மனிதனுக்கு மனிதன் ஒப்பிட்டால், பிரிட்டிஷார் தான் உயர்ந்தவர்கள்" என்று பிரிட்டிஷ் சோல்ஜர்கள் நினைக்கிறார்கள்.

அமெரிக்காவின் தயவை நாடி நின்று பெரிய வல்லரசாக வெளிச்சம் போடுவதைவிட, நமது சக்திக்கேற்ற அளவில் சிறுகக் கட்டிப் பெருக வாழ்வோம் என்ற மனப்பான்மை இந்த யுத்தத்தில் கலந்துகொண்ட பல பிரிட்டிஷ் சோல்ஜர்களிடையே இருக்கிறது. இந்த உணர்ச்சிகள் ராஜதந்திரத்தில் குறுக்கிட்டுவிடா என்றாலும், இவற்றை ராஜதந்திரிகள் அலக்ஷியம் செய்வதற்கில்லை.

### யுத்த பலம் பற்றிய தேவைகள்

அடுத்த யுத்தத்தில் பிரிட்டன் அமெரிக்காவின் உதவியை நாடினால், அமெரிக்கா தன் சுயநலத்தை உத்தேசித்து பிரிட்டனுக்கு உதவி செய்வது நிச்சயம். ஆனால் யுத்த காலத்திலும் அதற்குப் பிறகும்கூட பிரிட்டன் அமெரிக்காவின் "கையாள்" மாதிரியே நடக்கவேண்டியிருக்கும். அடுத்த யுத்தத்தில் இந்தியா சேராதென்றால், பிரிட்டன் அமெரிக்காவின் குடியேற்ற நாடு (காலனி) போன்ற நிலைமைக்கு தன்னை இறக்கிக்கொள்ளவேண்டியிருக்கும். இந்தியாவில் ஆதிக்கம், அல்லது இந்தியாவின் நட்பு இரண்டிலேதேனும் ஒன்று இருந்தாலொழிய இந்தியாவுக்கு கிழக்கே பிரிட்டன் தன் உரிமைகளைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது. இந்தியாவில் ஆதிக்கம் இருந்ததால்தான், மலேயா, பர்மா முதலிய நாடுகளிலிருந்து பிரிட்டன் ஜப்பானைத் துரத்த முடிந்தது. ஆகையால் இந்தியாவுக்கும் பிரிட்டனுக்குமிடையேயுள்ள உறவு பிரிட்டனின் வெளிநாட்டுக் கொள்கையையும், சர்வதேச உறவையும் உருவகப்படுத்துவதில் மிகவும் முக்கியமான விஷயமாகும்.

### பொருளாதார தேவைகள்

பிரிட்டன் மீண்டும் பழைய பலத்துடன் விளங்கவேண்டுமானால், அதன் கைத்தொழில்கள் புத்துயிர் பெற வேண்டும். பிரிட்டிஷ் தொழிற்சாலைகளில் ஏராளமான பொருள்கள் தயாராகி, அவை ஏராளமாக ஏற்றுமதியானால் மட்டுமே, அமெரிக்காவிடம் வாங்கும் கடனை பிரிட்டன் திருப்பிக்கொடுத்து தலைநிமிர முடியும். ஆகையால் பிரிட்டனின் ஏற்றுமதி மார்க்கெட் காப்பாற்றப்பட வேண்டும். அதன் ஏற்றுமதி மார்க்கெட்டில் முக்கியமானது இந்தியா. இந்திய மார்க்கெட்டை இழந்தால், பிரிட்டன் வேறு மார்க்கெட்டுகளையும் இழக்க நேரிடும்*

* வேறு மார்க்கெட்டுகளையும் இழக்கும் என்பது எவ்வாறு என்று சிலர் சந்தேகிக்கலாம். இயந்திரம் மூலம் உற்

(இதன் தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

இந்தியாவிலுள்ள மார்க்கெட்டை பிரிட்டன் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமானால், அதற்கு இந்தியாவின் நட்பு அவசியம். பிரிட்டனுக்கு அமெரிக்கா கடன் கொடுத்து உதவுகிறதாயினும், கைத்தொழிலில் அது பிரிட்டனுடன் போட்டி போடத்தான் செய்யும். ஆகையால் இந்தியாவில் நெருக்கடி ஏற்பட்டு பகிஷ்காரம் முதலிய இயக்கங்கள் தலையெடுத்தால், அந்த சமயத்தில் அமெரிக்கப் பொருள்கள் இந்தியாவில் நுழைந்துவிடும். பிறகு பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் சமாதானம் ஏற்பட்டபின்னர் கூட, இழந்த மார்க்கெட்டைக் கைப்பற்றுவதில் கஷ்டங்கள் உண்டு. பிரிட்டன் தன் பொருளாதாரத்துக்கு கைத்தொழிலை மட்டுமல்லாமல் வர்த்தகத்தையும் நம்பியிருக்கிறது. அதாவது அந்நிய நாடுகளிலிருந்து தனக்குத் தேவையானதை மட்டும் இறக்குமதி செய்யாமல் மற்ற நாடுகளுக்கு வேண்டியதையும் இறக்குமதி செய்து அந்தந்த நாடுகளுக்கு விற்கிறது. உதாரணமாக ஆட்டுத்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

பத்திசெய்யும்போது, ஒரு சாமானில் தினசரி 100 டஜன் தயாரித்தால் டஜன் ஒன்றுக்கு உற்பத்திச் செலவு 100 ரூபாய் என்று வைத்துக்கொள்வோம். இந்திய மார்க்கெட்டை இழப்பதின் மூலம் தினசரி 80 டஜன்தான் உற்பத்திசெய்வது என்ற நிலைமை ஏற்பட்டால், டஜன் ஒன்றுக்கு உற்பத்தி செலவு 100 ரூபாயாக இல்லாமல், ஒரு வேளை 105 ரூபாயாக உயர்ந்துவிடும்.

அதிகமாக விற்றால்தான் அதிகமாக தயார் செய்யமுடியும். அதிகமாகத் தயார் செய்தால்தான், விலை மலிவாக இருக்கும். விலை மலிவாக இருந்தால் இன்னும் அதிகமாக விற்க முடியும்.

அது போலவே ஒரு இடத்தில் விற்பனை குறைந்தால், தொழிற்சாலையில் உற்பத்தியை குறைக்க வேண்டியிருக்கும். அப்போது உற்பத்திச் செலவு அதிகரிக்கும். விலையை உயர்த்தவேண்டியிருக்கும். விலை உயரும்போது விற்பனை குறையும்; மேலும் உற்பத்தியை குறைக்கவேண்டியிருக்கும். அப்போது விலை இன்னமும் அதிகமாகும்; மற்ற மார்க்கெட்டுகளிலும் விற்பனை குறையும்.

தோல், மாட்டுத்தோல் முதலியவற்றை பிரிட்டன் இந்தியாவில் கொள்முதல் செய்து, அமெரிக்காவுக்கு விற்கிறது. அதேபோல இந்தியாவுக்கு வரும் பல அமெரிக்க பொருள்கள் பிரிட்டிஷ் வர்த்தகர்கள் மூலம் இந்தியாவுக்கு வருகின்றன. இந்த வர்த்தகத் தரகும், இன்ஷியூரன்ஸ் கமிஷனும், பாங்கி கமிஷனும், கப்பல் கட்டண வருமானமும் பிரிட்டனின் பொருளாதாரத்துக்கு முக்கியமானவை. வர்த்தகத்தில் தரகர்களாயிருப்பதால்தான் கப்பல், பாங்கி, இன்ஷியூரன்ஸ் முதலிய தொழில்களில் பிரிட்டன் முன்னணியில் நிற்க முடிந்தது. இந்தியாவுடன் வர்த்தகம் இல்லையென்றால், கிழக்கு நாடுகள் யாவற்றிலும் பிரிட்டனின் வர்த்தக வசதி குறையும்.

## பிரிட்டனிலுள்ள பொதுஜன உணர்ச்சி

பிரிட்டனில் உள்நாட்டிலுள்ள அரசியலுணர்ச்சியும் சமீப காலத்தில் மிகவும் மாறுதல் அடைந்திருக்கிறது. கோடிக்கான மக்களை அடிமையாக வைத்திருப்பது என்ற கொள்கையில் பிரிட்டிஷ் பொது மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர் இயக்கத்தின் ஆரம்பம் முதலே ஜனநாயகம் பற்றிய சில கொள்கைகள் வற்புறுத்தப்பட்டிருக்கின்றன. யுத்தத்துக்காக நடந்த பிரசாரத்திலும் சுதந்திரம், ஜனநாயகம் முதலிய கோஷங்கள் அதிகமாக உபயோகிக்கப்பட்டன. சில கோஷங்களை அடிக்கடி கோஷிக்கும்போது, படிப்படியாக அவற்றில் நம்பிக்கை ஏற்படுவது வழக்கம். ஆகையால் பிரிட்டனில் 30 வயதுக்கு கீழ்பட்ட இளைஞர்களின் மனோபாவம் உலகிலுள்ள சுதந்திர இயக்கங்களிடம் ஆதரவு கொண்டிருக்கிறது. மற்ற நாடுகளை ஒடுக்குவதற்காக பிரிட்டிஷ் சோல்ஜர்களை அங்கு அனுப்புவது பிரிட்டனில் பலருக்குப் பிடிக்கவில்லை.

## நிலைமை நீடித்தால்

ஆகவே சர்வ தேச நிலைமையை உத்தேசித்தும் பொருளாதாரத் தேவைகளை உத்தேசித்தும் இந்தியாவில் ஆதிக்கம் அல்லது இந்தியாவின் நட்பு பிரிட்டனுக்கு அவசியம்.

இனி ஆதிக்கத்தை நீடிப்பது எளிதல்ல என்பதை முதல் அத்யாயத்தில் குறிப்பிட்டோம். இந்தியா தன் உள்நாட்டு வேற்றுமைகளை தீர்த்துக்கொள்வதில் எவ்வளவு சிரமம் இருந்தாலும், அன்னிய ஆட்சியை அசாத்தியமாகச் செய்ய கூடிய சக்தி இந்தியருக்கு இருக்கிறது. இனி பிரிட்டிஷ் ஆதிக்கம் நீடித்தால் இந்தியாவில் பொதுவுடைமைக் கட்சி பலமடையும். (தற்காலம் பிரிட்டிஷ்—இந்திய சமரசம் வேண்டாமென்று கம்யூனிஸ்ட் கட்சியினர் நினைப்பதற்கு இதுவும் ஓர் காரணமாகும்) பிரிட்டிஷ் ஆட்சி நீடிப்பதை விட, வேறு எந்த நிலைமை ஏற்பட்டாலும் நல்லது என்று நினைப்போரின் தொகை அதிகரித்து விட்டது. தொழிலாளர் இயக்கத்தினர் அரசியலுக்காக ஸ்டிரைக் செய்வதென்பது சகஜமாகிவிட்டது. வேலையில்லாதாரின் தொகை அதிகமாக இருப்பதால், நகரப் பிரதேசங்களில் கலவரத்தை கிளப்புவது மிகவும் சுலபமாகிவிட்டது. தேசபக்தியும், விவேகமுமுள்ளவர்கள் கூட இனி பிரிட்டிஷ் ஆட்சி நீடிப்பதைவிட வேறெந்த நிலைமை ஏற்பட்டாலும் பரவாயில்லை என்று நினைக்க வாரம்பித்து விட்டனர். கம்யூனிஸ்டுகள் ரஷியாவின் ஏஜெண்டுகளாக இருக்கிறார்கள் என்பதை உத்தேசித்து, தற்காலம் பலர் கம்யூனிஸ்டுகளிடம் ஆதரவு காட்டாமல் இருக்கின்றனர். இந்த நிலைமை மாறிவிடும். பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வாழ்வதைவிட, ரஷியாவின் ஒரு மாகாணமாக வாழ்வது மேல் என்ற உணர்ச்சியை எளிதில் தூண்ட முடியும். இந்த உணர்ச்சியை தூண்டுவதற்கும், பின்னர் பயன்படுத்திக் கொள்வதற்கும், ரஷியாவுக்குப் போதிய வசதிகள் இருக்கின்றன. சர்வதேச நெருக்கடி ஏற்பட்டு பிரிட்டன் சங்கடத்தில் சிக்கிக்கொண்டால் உடனே பிரிட்டனின் பகைவருடன் தான் இந்தியா சேரும். பொருளாதாரத் துறையிலும் இப்படியேதான். பிரிட்டிஷ் ஆட்சி நீடித்தால், வெகு சீக்கிரத்தில் இங்கு பிரிட்டிஷ் சாமான்களின் பகிஷ்காரம் ஆரம்பமாகிவிடும். இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் வர்த்தகர்களின் நிலைமை பரிதாபமாகிவிடும். அந்த நிலைமையைச் சமாளிப்பதற்கு இந்திய ராணுவத்தை நம்புவது கஷ்டம். பிரிட்டனிலும் பொது

ஜன அபிப்ராயம் மாறியிருக்கிறது. அன்னிய நாட்டை அடக்கி யாள்வதற்காக பிரிட்டிஷ் துருப்புகளை உபயோகிப்பதை பிரிட்டனில் ஏழை வகுப்பினர் விரும்பவில்லை.

இந்த நிலைமையில் இங்கு பிரிட்டிஷ் ஆட்சியை நீடிக்க விரும்புவது பிரிட்டனுக்கு நல்லதல்லவென்று பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் நினைக்கிருர்கள். எப்படியும் பிரிட்டிஷ் ஆட்சி வாபஸாக வேண்டியதே. இந்தியரால். துரத்தப்பட்டு ஓடுவதைவிட தாமாகவே இந்தியாவை விடுதலை செய்துவிட்டால்—அதையும் கம்யூனிஸ்ட் கட்சி பலமடைவதற்கு முன் செய்துவிட்டால்—இந்தியாவின் நட்பைக் காப்பாற்றிக் கொள்ளமுடியும் என்று பிரிட்டிஷார் நினைப்பது சகஜமே.

சமாதான முறையில் தமது ஆட்சியை வாபஸ் வாங்கிக் கொண்டால்தான் வர்த்தகம், யுத்தபலம் வெளி நாட்டுக் கொள்கை, ஆகியவற்றில் இந்தியாவின் நட்பை பெறமுடியும். பிரிட்டிஷ் மந்திரிசபை இந்தியாவுக்கு ஒரு தூதை அனுப்பியதற்கு இந்த உணர்ச்சிதான் காரணம்.

### சமரசத்திற்கு சரியான சந்தர்ப்பம்

இந்தியாவின் தேசியத்தில் எவ்விதமான பலஹீனமான அம்சமும் இல்லையென்ருல், இந்தியர்கள் தாமாகவே ஒரு சர்வகட்சி மகாநாட்டை கூட்டி ஒரு இடைக்கால சர்க்காரை (போட்டி சர்க்காரை) நியமித்துக்கொண்டு, பிரிட்டிஷ் சர்க்காருக்கு நோட்டீஸ் கொடுத்துவிட்டு ஒரு அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலுக்கு ஏற்பாடு செய்திருக்கும். அவ்வாறு ஏற்படும் இடைக்கால சர்க்காருடன் ஒப்பந்தம் செய்துகொண்டு பிரிட்டன் வெளியேறி இருக்கும். பிறகுதான் அரசியல் நிர்ணய சபை கூடும். இப்போது கூட்டப்படும் அரசியல் நிர்ணய சபையோ, சுதந்திரம் ஏற்பட்ட பிறகு கூடாமல் அன்னிய ஆட்சியின் ஆதரவிலேயே கூடுகிறது. இங்குள்ள தேசியத்தில் பலவீன அம்சங்கள் பல இருப்பதால்தான் இவ்வாறு நடக்கிறது.

இப்போது கூட்டும் அரசியல் நிர்ணய சபையானது பிரிட்டனுக்கும், இந்தியாவுக்குமிடையே பிற்காலத்தில் அமலிலிருக்க வேண்டிய ஒரு உடன்படிக்கையையும் தயாரிக்கும். அந்த ஒப்பந்தத்தின்படியே பிரிட்டன் அதிகாரத்தை இந்தியாவிடம் ஒப்படைக்கும். அதாவது அரசியலை நிர்ணயிப்பது மட்டுமல்லாமல், ஒரு உடன்படிக்கை பற்றியும் பேரம் செய்யவேண்டியிருக்கும். இந்தியா பூர்ண சுதந்திரமடைந்தபிறகு இந்த பேரம் நடந்தால்தான் நமக்கு நல்லது. அப்படியிருந்தும், இப்போதே உடன்படிக்கைபற்றி பேரம் செய்யவேண்டுமென பிரிட்டன் கோருவதற்கு, நாம் ஏன் இணங்குகிறோம் என்று சிலர் திகைக்கலாம்.

## இந்தியாவின் அவசரத் தேவைகள்

இந்தியாவின் உள்நாட்டு அரசியலமைப்புப் பிரச்னையை உடனடியாகத் தீர்த்துக்கொண்டு உள்நாட்டில் சமரசம் ஏற்படுத்துவது நமக்கு அத்தியாவசியமாய் விட்டது நாமாக ஒரு இடைக்கால சர்க்காரை ஏற்படுத்திக் கொள்வதற்கு வேண்டிய ஒற்றுமை இங்கு இல்லை. உடனடியாக பிரச்னை தீராவிடில், உள்நாட்டில் பிளவு இன்னும் அதிகரிக்குமே தவிர, குறையும் என்ற நம்பிக்கைக்கு இடமில்லை. தேசத்தில் வறுமையும், கஷ்டமும் அதிகமாக இருக்கிறது. தேசபக்தியும், இந்தியாவின் பெருமையில் பற்றுதலும், தேசிய சுயமரியாதையுமுள்ளவர்கள் சர்க்காரை நிர்வகித்து வறுமைப் பிரச்னையைத் தீர்க்காவிட்டால், நாட்டில் கலவரமும், பொறுப்பற்ற இயக்கங்களும் பரவி, இன்னும் நெடுங்காலத்துக்கு இந்தியாவின் செல்வ உற்பத்தி பாதிக்கப்படும். வறுமை அதிகரிக்கும். ரஷியாவைப்போல இங்கும் பொதுவுடமையை ஏற்படுத்தி விடலாம் என்று கம்யூனிஸ்ட் கட்சியார் கிளர்ச்சி செய்வார்கள். அது சாத்யமாகவும் இருக்கலாம். பொதுவுடமை ஏற்பட்டபிறகு நாட்டில் பொருளுற்பத்தி அதிகரித்து வாழ்கை நிலையை உயர்த்தலாம் என்று கம்யூனிஸ்ட்டுகள் சொல்வார்கள். அதுவும்

உண்மையாக இருக்கலாம். ஆனால் ரஷியாவின் அனுபவம் என்ன? பொதுவுடமை ஏற்பட்டு சுமார் 7 வருஷ காலம்வரை அந்நாடு கொடியதோர் பஞ்சத்துக்கு ஆளாக வேண்டியிருந்தது. அதற்குப் பிறகும் சுமார் 5 வருஷ காலத்துக்கு அந்நாட்டிலுள்ள வாழ்க்கைத் தரம் மற்ற பல ஐரோப்பிய நாடுகளைவிட, படுமோசமாகவே இருந்தது. பிறகுதான் நிலைமை நிதானப்பட்டது. இந்தியாவிலும் பொதுவுடமை மூலம்தான் சுபிக்ஷம் ஏற்படுமென்று நினைப்பவர்கள் சுமார் 15 வருஷ காலத்துக்கு இந்நாட்டிலுள்ள பல ஏழை மக்கள் மடிவதைக்காண தயாராயிருக்க வேண்டும். உண்மையில் இது அவசியமில்லாத துயரமே. இன்று முற்போக்கு மனப்பான்மையும், நியாய உணர்ச்சியும், பொருளாதார சமத்துவத்தில் நம்பிக்கையுமுள்ளவர்கள் சர்க்காரை நடத்தும் நிலைமை ஏற்பட முடியுமானால், தொழிலபிவிருத்திக்கு ஒரு சரியான திட்டம் போட்டு தேசத்தில் எல்லோருக்கும் வேலையும், பிழைப்பும் கொடுக்கமுடியும். ரஷியாவின் செல்வத்தின் உண்மையான காரணம் உழைப்பின் அளவு பெருகியிருப்பதுதான். இந்நாட்டிலும் கம்யூனிஸ்ட் பலாத்காரப் புரட்சி எதுவுமில்லாமல், அமைதியான புரட்சி மூலம், உழைப்பை பெருக்கி செல்வத்தை பெருக்க முடியும். இதில் தாமதம் ஏற்படுத்துவது அபாயம். ஆகையால் அரசியல் பிரச்னையை ஏதேனும் ஒரு வகையில் சமரசமாகத் தீர்த்து, ஆக்க வேலைகளில் கவனம் செலுத்துவது அவசியம் மட்டுமல்லாமல், அவசரமும் கூட என்ற உணர்ச்சி இந்தியர்களுக்கு இருக்கிறது.

இவ்வாறாக அரசியல் தகராறுகள் தீருவதில் பிரிட்டிஷார், இந்தியர் ஆகிய இரு சாராருக்கும் இப்போது அக்கரை யிருப்பதுதான் சமரசப் பேச்சுக்களுக்கு ஆதரவாயிற்று.

## அடுத்த அத்தியாயத்தில்

சமரசம் வேண்டுமென்ற உணர்ச்சி எல்லோருக்கும் இருந்தும், இந்தியாவில் காங்கிரஸுக்கும் லீகுக்கும் எந்த அடிப்படை பிரச்னையிலும் ஒற்றுமை இருக்க

வில்லை யென்பதை இரண்டாவது அத்தியாயத்தில் சொல்லியிருக்கிறோம். இந்த சிக்கலைத் தீர்த்து இந்தியாவை ஐக்கியமும் சுதந்திரமுமுள்ள நாடாக ஆக்கினாலொழிய, இந்தியாவின் நட்பு பிரிட்டனுக்கு இருக்காது. ஆகையால் சிக்கலைத் தீர்ப்பதில் மந்திரி கோஷ்டி தீவிரமாக முயன்றது. இதற்கு அவர்கள் கையாண்ட முறையை அடுத்த அத்தியாயத்தில் கவனிப்போம்.

---

## நான்காவது அத்தியாயம்

# சிக்கலைத் தீர்க்கும் முயற்சி

இந்தியா ஒன்று இரண்டா என்று சர்ச்சை செய்யும் அளவுக்கு கட்சிப் பிளவுகள் விரிவடைந்ததற்குக் காரணம் சுயாட்சியை ஒரே தடவையாக அமலுக்குக்கொண்டு வராமல் படிப்படியாக அமலுக்குக் கொண்டுவந்ததுதான். 1935 வருஷத்திய அரசியல் சட்டத்தை இயற்றுவதற்காக வட்ட மேஜை மகாநாடு கூடியபோது சட்ட சபையில் வகுப்பு வீதாசாரம் எவ்வாறு இருக்க வேண்டுமென்ற விஷயத்தில் மட்டுந்தான் இந்தியர்களிடையே அபிப்ராய பேத மிருந்தது. அது பற்றி பிரிட்டிஷ் பிரதம மந்திரி ராம்ஸே மாக்டொனால்ட் ஒரு "தீர்ப்பு" அளித்தார். அந்தத் தீர்ப்பு லீகை திருப்தி செய்தது. காங்கிரஸோ அதை "ஏற்றுக்கொள்ளவுமில்லை; நிராகரிக்கவுமில்லை" யென்று தீர்மானித்தது. அதாவது காங்கிரஸ் அதை எதிர்க்கவில்லை. அதோடு இந்தியப் பிரச்னை தீர்ந்ததாக மதிக்கப்பட்டு இந்தியாவுக்கு முழு சுயாட்சி கொடுத்திருக்க வேண்டும். அவ்வாறு பிரிட்டன் செய்திருந்தால் இந்தியாவில் இவ்வளவு சிக்கல் ஏற்பட்டிருக்காது.

### பழைய கொள்கையின் விபரீதம்

யுத்தம் ஆரம்பித்த பிறகு முஸ்லிம் லீக் முட்டுக் கட்டை கொள்கையைக் கடைப்பிடித்தது. காங்கிரஸ்

மந்திரி சபை மீது லீக் தாறுமாறாக குற்றம் சாட்டிய போது, வைஸ்ராய் தம் மனதிலுள்ளதை வெளியிட்டு அந்தக் குற்றச் சாட்டுகள் யாவும் ஆதாரமற்றவை யென்று உண்மையை பகிரங்கமாக வெளியிட்டிருக்க வேண்டும். அவ்வாறு அவர் செய்யவில்லை. அவர் இவ்வாறு மௌனம் சாதித்ததை இந்தியா ஒருபொழுதும் மறக்க முடியாது. அந்த மௌனம்தான் காங்கிரஸுக்கும் லீகுக்குமிடையே பிளவு விரிவடைந்ததற்குக் காரணம்.

பிறகு முஸ்லிம்கள் சம்மதமளிக்காத எந்த சுயராஜ்ய அரசியலையும் பிரிட்டன் அமலுக்குக் கொண்டுவராது என்று வைஸ்ராயும் இந்தியா மந்திரியும் அறிவித்தனர். முஸ்லிம் லீக்தான் முஸ்லிம்களின் பிரதிநிதி என்று மறைமுகமாக பிரிட்டிஷ் சர்க்கார் அத்தாட்சிப் பத்திரமளித்தது. இது முஸ்லிம் லீகின் முட்டுக்கட்டை மனப்பான்மையை அதிகரித்தது. தாம் சம்மதித்தால்தான் நாட்டுக்கு சுயராஜ்யம் உண்டு என்று தெரிந்தவுடன் ஜனாப் ஜின்னா தாம் எதை வேண்டுமானாலும் கோரலாம் என்று எண்ணினார். இந்தியர்கள் ஒன்றுபட்டு ஏகமனதாகக் கோரினால்தான் எதையும் அமலுக்குக் கொண்டு வருவோம் என்று பிரிட்டன் கூறியதால் ஒவ்வொரு கட்சியும் சமரசத்துக்கு அசாத்யமான விலையைக் கேட்க ஆரம்பித்தது.

ராணுவத்தில் முஸ்லிம்கள் ஏராளமாக இருந்ததால் முஸ்லிம் லீகுக்கு எதிராக எதுவும் செய்ய பிரிட்டன் துணியவில்லை. ஒற்றுமை இல்லையேல் அதிகாரத்தை மாற்றுவதில்லை என்று பிரிட்டன் கூறியதுதான் ஒற்றுமைக்கு பெரிய இடையூறாக இருந்தது. இந்த உண்மை பிரிட்டனுக்குத் தெரியாததல்ல. யுத்தம் முடியும்வரை இந்தியாவில் எவ்வித சுயாட்சியும் ஏற்படக்கூடாது என்று பிரிட்டிஷ் கன்ஸர்வேட்டிவ் கட்சியினர் விரும்பினர். ஆகையால் வேண்டுமென்றே இந்தக் கொள்கையைக் கடைப்பிடித்தனர்.

## நேர்மையான கொள்கை

1946-ம் வருஷத்தில் பிரிட்டன், இனி இந்தியாவை அடிமையாக வைத்துக் கொள்வதில் நன்மையை விட கெடுதியே அதிகம் என்பதை உணர்ந்ததும், "ஒற்றுமையில்லையேல் சுயராஜ்யமில்லை" என்ற சித்தாந்தத்தைக் கைவிட்டது.

அந்த சித்தாந்தத்தை கைவிட்டுவிட்டுத் தான் பிரிட்டிஷ் மந்திரி சபை ஒரு தூது கோஷ்டியை இந்தியாவுக்கு அனுப்பியது. பெரும்பாலான மக்களின் எண்ணம் ஈடேற முடியாமல் முட்டுக்கட்டை போட மைனுரிட்டிக்கு உரிமை கிடையாது என்ற கருத்தில் பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஆட்லி பார்லிமெண்டில் பேசினுர்.

இந்த அறிவிப்பின் அர்த்தமென்ன? (1) இந்தியாவின் பிற்கால அரசியலை இந்தியரே தயாரித்துக் கொள்ளலாம் (2) உங்களுக்குள்ளே ஒற்றுமை ஏற்படவில்லையானுல் அதோடு எல்லாம் முடிந்தது என்பதில்லை. (3) நாங்கள் வருகிறேரும். இருவரும் (காங்கிரஸும், லீகும்) உங்கள் கோரிக்கைகளை, உங்கள் அபிலாஷைகளை, உங்கள் கவலைகளை, நீங்கள் கோரும் பாதுகாப்புகளை சொல்லுங்கள். (4) உங்களுக்குள்ளே சமரசமேற்படாவிடில் அல்லது ஏதாவது ஒரு கட்சியார் நேர்மையற்ற கோரிக்கைகளை வெளியிட்டாலும் அதில் உண்மையும், நேர்மையுமுள்ள கவலைகள் இன்னவையென்பதை நாங்கள் புரிந்து கொள்ள முடியும். (5) அதை புரிந்துகொண்டு நாங்கள் சில அடிப்படைக் கொள்கைகளை அறிவிக்கிறேரும். (6) அவற்றில் நீங்கள் விரும்பும் மாறுதல்கள் என்னவென்பதை அறிவியுங்கள். (7) ஒவ்வொருவரும் கோரும் மாறுதல்களையும் சீர்திருத்தங்களையும் கவனித்து நாங்கள் ஒரு தீர்ப்புச் சொல்லுகிறேரும். இதுதான் ஆட்லி கூறியதின் அர்த்தம்.

மே மாதம் 16-ந் தேதியன்று மந்திரி தூது கோஷ்டியினர் அறிக்கை வெளியிடுமுன்னர் இந்த நேர்மையான முறையையே பின்பற்றினுர்கள். முதலில் தூது கோஷ்டி

யினர் டில்லியில் சுமார் 3 வாரங்கள் காங்கிரஸ் காரியக் கமிட்டியினருடனும் லீக் காரியக்கமிட்டியின ருடனும் தனித்தனியாக ஆலோசனைகளும் விவாதங் களும் நடத்தினர். ஒற்றுமை ஏற்படவில்லை. பிறகு அவர்கள், சில அடிப்படைகள் மீது விவாதிக்க சிம்லாவில் ஒரு கலப்பு மகாநாட்டுக்கு இரு கட்சி களையும் அழைத்தனர். ஒரு வாரம் சர்ச்சை நடந்தது. ஒற்றுமை ஏற்படவில்லை. காங்கிரஸ் தன் ஆக்ஷேபங்களை அறிவித்தது. லீகும் தன் ஆக்ஷேபங்களை அறிவித்தது. பிறகு லீக் சில மாற்றுப் பிரேரணைகளை வெளி யிட்டது. அந்த பிரேரணைகளுக்குள்ள ஆக்ஷேபங்களை அறிவித்து, காங்கிரஸ் தனது பிரேரணைகளையும் அறிவித் தது. அப்பால் தூதுகோஷ்டி தன் தீர்ப்பை அறிவித்தது.

### தீர்ப்பின் தன்மை

இந்த தீர்ப்பு லீகின் பிரிவினை கோரிக்கைக்கும், காங் கிரஸின் "அகண்ட இந்தியா" (பிரிக்கப்படாத ஒரே இந்தியா) கோரிக்கைக்கும் சமரசமாகும்.

இந்தத் தீர்ப்பு நியாயமான தீர்ப்பா என்று கவ னிப்பதில் பயனில்லை. இரண்டு கட்சிக்கும் திருப்தி யளிக்கக் கூடிய பொது பிரேரணைகளைத் தயாரிப்பதும் சாத்தியமல்ல. ஆகையால் காங்கிரஸ் கோரிக்கையின் சில அம்சங்களையும், லீக் கோரிக்கைகளில் சிலவற்றையும் சேர்த்து ஈரொட்டாக மழுப்பி, ஒரு பிரேரணையை வெளி யிட்டால்தான் இருகட்சிகளும் அதை நிராகரிக்கத் தயங்கும். இருகட்சிகளும் எளிதில் நிராகரிக்கத் துணிய மாட்டா என்ற நிலைமையில் அதாவது "விழுங்குவதா? துப்புவதா?" என்று நிச்சயிக்க முடியாமலிருந்து பிறகு "ஏற்றுத் தொலைப்போம்" என்று ஏற்றுக் கொள்ளக் கூடியதாக ஒரு பிரேரணையை வெளியிட வேண்டும். அது தான் அன்றிருந்த நிலைமையில் சாத்யம். அதை அவர்கள் செய்தார்கள்.

அவர்கள் அறிவித்த பிரேரணையில் அரசியல் நிர்ணய சபையில் முட்டுக்கட்டை ஏற்படுவதாக இருக்கலாம்.

ஆனால் இப்போதைக்கு பிரிட்டிஷ் தூதுகோஷ்டிமீது யாரும் குற்றம்சொல்ல முடியாதபடி மிகவும் சாதுர்ய மாக தமது பிரேரணைகளை வெளியிட்டார்கள்.

அடுத்த அத்தியாயத்தில்

மே 16-ந் தேதியன்று பிரிட்டிஷ் மந்திரிசபை தூது கோஷ்டியினர் வெளியிட்ட பிரேரணையில் இந்தியா வின் பிற்கால அரசியலை நிர்ணயிப்பதற்கான அரசியல் நிர்ணய சபை எவ்வாறு நிர்ணயிக்கப்படவேண்டும், என்பதை அறிவித்ததோடு நில்லாமல் அந்த அரசியல் எந்த அடிப்படையைக் கொண்டு நிர்ணயிக்கப்பட வேண்டுமென்றும் சொல்லி யிருக்கிறார்கள்.

அவர்கள் அறிவித்துள்ள அந்த அடிப்படைக் கொள் கைகளின் தன்மையை புரிந்துகொள்ள வேண்டு மானால், தற்காலம் அமலில் உள்ள அரசியலமைப் பைப் பற்றி சில விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். இதுவே அடுத்த அத்தியாயத்தின் நோக்கம்.

---

## ஐந்தாவது அத்தியாயம்

# இப்போதுள்ள அரசியலமைப்பு

இப்போதுள்ள அரசியலமைப்பு '1935-ம் வருஷத்து அரசி யல் சட்டத்தின்படி' ஏற்பட்டது. அந்த சட்டத்தி லுள்ள அரசியலின் அம்சங்களாவன :—

(1) அகில இந்திய சமஷ்டி. (அ) சுதேச மன்னர்கள் ஆளுகையில் உள்ள சமஸ்தானங்களும் "பிரிட்டிஷ் இந்திய" மாகாணங்களும் சேர்ந்த ஒரு அகில இந்திய சமஷ்டி (ஆ) அந்த சமஷ்டி சர்க்காரில் ராணுவம் வெளி நாட்டு உறவு, நிதிநிர்வாகம் (செலாவணி, நாணயம், கடன்விஷயம் முதலியன)ஆகிய மூன்றும் கவர்னர் ஜெனர லுக்கு பொறுப்பான மூன்று மெம்பர்களிடம் இருக்கும். (இ) மற்ற இலாகாக்கள் யாவும் சமஷ்டி சட்டசபைக்குப் பொறுப்பான மந்திரிகளிடம் (ஈ) மந்திரிகளின் ஆளுகை யில் விடப்பட்ட விஷயங்களில் அவர்கள் மைனாரிட்டி

களுக்கு பாதகமாகவோ, பிரிட்டிஷ் வர்த்தக உரிமைகளுக்கு பாதகமாகவோ, சர்க்கார் நாணய நிலைமைக்கும், பொதுவாக தேசத்தின் அமைதிக்கும் சாந்திக்கும் பாதகமாகவோ எதுவும் செய்துவிடாமல், தடுக்க வைஸ்ராயிடம் அதிகாரம்.

(2) மாகாண சர்க்கார்கள் :—குறிப்பிட்ட விஷயங்களில் பூர்ண அதிகாரமும், கடன் வாங்கும் உரிமையுமுள்ள மாகாண சர்க்கார்கள். அவற்றில் எல்லா விஷயங்களும் சட்ட சபைக்கு பொறுப்பான மந்திரிகளிடமே விடப்படும். மைனாரிட்டி நலன்களுக்காகவும், பொது ஜன அமைதிக்கும் மத்ய சர்க்காரின் அதிகாரத்துக்கும் பாதகமாக மந்திரிகள் எதுவும் செய்து விடாமல் தடுப்பதற்கும், கவர்னருக்கு விசேஷதிகாரம்.

(3) சமஸ்தானங்கள் :—சமஷ்டி சர்க்காரிடம் ஒப்படைக்காத எல்லா விஷயங்களையும் இஷ்டம் போல நிர்வகிக்க உரிமையுள்ள சமஸ்தானங்கள். இவற்றின் மீது வைஸ்ராய்க்கு (பிரிட்டிஷ் மன்னரின் பிரதிநிதி என்ற ஹோதாவில்) ஆதிபத்ய அதிகாரம்.

இந்த அரசியலமைப்பில் அகில இந்திய சமஷ்டி என்ற அம்சம் அமலுக்கு வரவில்லை. இந்தியாவிலுள்ள சமஸ்தானங்களில் சுமார் பாதியாவது சமஷ்டியில் சேர்ந்தால்தான் சமஷ்டி அமலுக்கு வரும் என்று சொல்லியிருந்தார்கள். 1939 வருஷ இறுதிவரை அவ்வாறு பாதி சமஸ்தானங்கள் தம் "விருப்பத்தை" அறிவிக்கவில்லை. யுத்தம் வந்தவுடன் சட்டத்தின் சமஷ்டிப் பகுதி கைவிடப்பட்டது.

ஆகையால் இப்போதுள்ள அகில இந்திய சர்க்காரில் சமஸ்தானங்களுக்கு எவ்வித சம்பந்தமுமில்லை. சமஸ்தானங்களுக்கு சம்பந்தமெல்லாம் வைஸ்ராயுடன்தான். மத்ய சர்க்காரில் பொறுப் பாட்சியும் இல்லை. மத்ய சட்ட சபையில் ஒரு பகுதிதான் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது. வைசிராயின் நிர்வாக சபை, சட்ட சபையின் வோட்டை லக்ஷியம் செய்யாமலே அதிகாரத்தை உபயோகிக்கலாம்.

சமஸ்தானங்கள், பிரிட்டிஷ் இந்தியா என்று இந்தியாவில் இரண்டு வகையான பிரதேசங்களிருப்பினும் இந்தியா முழுவதிலுமுள்ள எல்லா சர்க்கார்களும் ஒத்துழைத்தாலொழிய, விஷயங்களை நிர்வகிக்கவே முடியாது. ஆகையால், பிரிட்டிஷ் இந்திய சர்க்காரின் தலைவரான வைஸ்ராய் தன்னிடமுள்ள ஆதிபத்திய அதிகாரத்தின் மூலமும், அந்த அதிகாரத்தால் ஏற்படும் செல்வாக்கின் மூலமும் சமஸ்தானங்களை பிரிட்டிஷ் இந்திய சர்க்காருக்கு அனுசரணையாக நடக்கும்படி செய்ய முடியும். சமஸ்தானங்களின் உள்நாட்டு விஷயங்களில் பிரிட்டிஷ் சர்க்கார் தலையிடாதென்றும், சமஸ்தானாதிபதிகள் தம் "ராஜ்யத்தின்" உள்நாட்டு நிர்வாக விஷயத்தில் பூர்ண சுதந்திரமுள்ளவர்கள் என்றும், உடன் படிக்கைகளில் இருந்தனவாயினும் "ஆதிபத்திய அதிகாரம்" இதற்கெல்லாம் உட்பட்டதல்ல! ஆயினும் சமஸ்தானங்கள் தாமாக இஷ்டப்பட்டால்தான் அகில இந்திய சர்க்காரில் அவற்றைச் சேர்க்க முடியும் என்று ஒரு ஏட்டுச் சுரக்காய் வாதம் உண்டு. சமஸ்தானங்கள் பிரிட்டிஷ் மன்னருக்கு கட்டுப்பட்டவைகளே ஒழிய, பிரிட்டிஷ்—இந்திய சர்க்காருக்கு கட்டுப்பட்டதல்லவென்றும், பிரிட்டிஷ் மன்னர் சமஸ்தானங்களின் ராஜாங்க உரிமையை வேறு ஒருவருக்கு பங்கிட்டுக் கொடுக்கும்படி சொல்ல முடியாதென்றும் சமஸ்தானங்களின் சார்பில் சட்ட நிபுணர்கள் வாதிப்பதுண்டு. ஆனால் காரியாம்சத்தில் சமஸ்தானங்கள் பிரிட்டிஷ் சர்க்காருக்கு உட்பட்டவையே.

## அடுத்த அத்தியாயத்தில்

பிரிட்டிஷ் மந்திரி தூது கோஷ்டியினர் மே 16-ந் தேதியன்று வெளியிட்ட அறிக்கையின் முழு விவரம் புத்தகத்தின் இறுதியில் தரப்பட்டிருக்கிறது. தமது பிரேரணைகளுக்குக் காரணம் கூறி அவர்கள் பாகிஸ்தான் பிரச்னையையும், சமஸ்தானங்கள் பிரச்னையையும் விவாதித்திருக்கிறார்கள். அதன் சாராம்சத்தை மட்டும் அடுத்த அத்தியாயத்தில் தருகிறோம்.

---

## ஆருவது அத்தியாயம்

# தூதுகோஷ்டியின் திட்டம்

மே 16ந் தேதியன்று தூது கோஷ்டியினர் வெளியிட்ட அறிக்கையின் சாராம்சத்தை, சட்ட சம்பிரதாயம் பற்றிய சொற்றொடர்களை நீக்கி, பின்வருமாறு வர்ணிக்கலாம்.

**பிரிவினைக் கோரிக்கைக்கு மாற்று.**

இந்தியா பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இருந்தால், அது இந்தியாவுக்கும் நல்லது; பிரிட்டனுக்கும் நல்லது; அது சுதந்திரத்துக்கு முரணல்ல.

ஆனால் சாம்ராஜ்யத்தில் இருக்கவேண்டாமென்று இந்தியா தீர்மானித்தால், அதைப்பற்றி பிரிட்டனுக்கு ஆக்ஷேபணையில்லை.

இந்தியர் பிற்கால அரசியலுக்கு ஒரு திட்டம் தயாரித்துக் கொண்டபிறகு, பிரிட்டன் அதிகாரத்தை மாற்றிக் கொடுக்கும்.

அந்த அரசியல் திட்டத்தில் இந்தியாவை பாகிஸ்தான் என்றும், ஹிந்துஸ்தானம் என்றும் இரண்டு தனி ராஜ்யங்களாகப் பிரிக்கவேண்டும் என்று சிலர் கோருகிறார்கள். அவ்வாறு தேசத்தை இரண்டு தனி ராஜ்யங்களாக பிரிப்பது யாருக்கும் நல்லதல்ல; காரிய சாத்யமுமல்ல. மைனாரிட்டி பிரச்னைக்கும் பரிகாரமல்ல. பாகிஸ்தான் அவசியமுமல்ல. பாகிஸ்தான் கோரிக்கையால் என்ன நன்மையை சாதித்துக்கொள்ள விரும்புகிறார்களோ அதை நாங்கள் கூறும் பிரேரணை மூலம் ஏற்படும் ஒரு அரசியலில் சாதித்துக்கொள்ள முடியும்.

**அரசியல் நிர்ணயசபை பிரேரணைகள்.**

முதலில் இந்தியாவில் உள்ள மாகாண சட்டசபைகளில் (அசெம்பிளிகள்) முஸ்லிம் மெம்பர்கள் சில முஸ்லிம்

பிரதிநிதிகளையும், மற்ற மெம்பர்கள் முஸ்லிமல்லாத பிரதிநிதிகளையும், ஒரு அரசியல் நிர்ணய சபைக்காகப் பொறுக்க வேண்டும். இவர்களது தொகை மாகாணத்திலுள்ள ஜனத்தொகை வீதாசாரப்படி இருக்கும்.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் முஸ்லிம் பிரதிநிதிகளும் இதர பிரதிநிதிகளும் டில்லியில் கூடியதும், மைனாரிட்டி உரிமைகள் பற்றி யோசனை கூற ஒரு ஆலோசனைக் கமிட்டியையும், இந்திய அரசியல் நிர்ணய சபையின் அக்ராசனரையும் தெரிந்தெடுத்துவிட்டு மூன்று பிரிவாகப் பிரிவார்கள்.

ஐக்யமாகாணம், மத்யமாகாணம், பீஹார், பம்பாய், ஒரிஸ்ஸா, சென்னை மாகாணப் பிரதிநிதிகள் "ஏ" பிரிவு.

பஞ்சாப், வடமேற்கு எல்லை, சிந்து மாகாணங்களும், பலுச்சிஸ்தான் பிரதிநிதியும் சேர்ந்து "பி" பிரிவு.

வங்காளம், அஸ்ஸாம் பிரதிநிதிகள் "ஸி" பிரிவு.

அரசியல் நிர்ணய சபையின் ஏ, பி, ஸி பிரிவுகள் பின்வரும் காரியங்களைச் செய்யும்:—

(அ) ஒவ்வொரு பிரிவும் அதிலுள்ள மாகாண சர்க்கார்களின் அரசியலமைப்பை நிர்ணயிக்கும் (ஆ) அந்தப் பிரிவிலுள்ள மாகாணங்கள் தம்மிடையே சில விஷயங்களைப் பொதுவாக நிர்ணயிக்கும் பொருட்டு, ஒரு தொகுதி வட்ட சர்க்கார் வேண்டுமா என்பதை முடிவு செய்யும் (இ) தொகுதிவட்ட சர்க்கார் ஒன்று வேண்டியதே என்று அரசியல் நிர்ணய சபையின் அந்தந்த பிரிவு நிச்சயித்தால், தொகுதிவட்ட சர்க்காரின் அரசியலமைப்பை அரசியல் நிர்ணய சபையின் அந்த பிரிவு நிர்ணயிக்கும்.

## அகில இந்திய அரசியல்

தொகுதிவட்ட அரசியலும், மாகாண அரசியலும் தயாரிக்கப்பட்ட பின்னர், அரசியல் நிர்ணய சபையின் மூன்று பிரிவுகளும் (ஏ, பி, ஸி, பிரிவுகள்) ஓரே அரசியல் நிர்ணய சபையாகக்கூடும். அப்போது சமஸ்தானங்களின்

பிரதிநிதிகளும் அதில் கலந்துகொள்வார்கள். இந்த பெரிய அரசியல் நிர்ணய சபை அகில இந்திய அரசியலை நிர்ணயிக்கும்.

புது அரசியலின் அடிப்படை பற்றி நாங்கள் சில சிபார்சுகள் செய்திருக்கிறோம். அரசியல் நிர்ணய சபையில் அவையே "அசல்" பிரேரணையாக இருக்கும். அவற்றை மாற்ற முடியாதென்பதில்லை. ஆனால் மாற்றுவதற்கு ஒரு நிபந்தனையுண்டு. அதாவது எங்கள் பிரேரணையை மாற்றும் திருத்தப் பிரேரணைகள் வந்தால் முஸ்லிம் அங்கத்தினரில் பெரும்பாலோரும், முஸ்லிம் அல்லாத அங்கத்தினரில் பெரும்பாலோரும் சம்மதித்தால்தான், திருத்தப் பிரேரணைகளை நிறைவேற்றலாம். வகுப்புப் பிரச்னைக்கு சம்பந்தமுள்ள பிரேரணைகள் விஷயத்திலும் இதே போல நிபந்தனையுண்டு.

## அடிப்படை அரசியல் பிரேரணைகள்

(1) இந்தியா முழுவதுக்கும் பொதுவான ஒரு சர்க்கார் இருக்கும். அதற்கு இந்திய யூனியன் என்று பெயர். பிரிட்டிஷ் இந்திய மாகாணங்கள் மட்டுமல்லாமல் சமஸ்தானங்களும் இதில் சேர்ந்திருக்கும்.

(2) தேச பாதுகாப்பு, வெளி நாட்டு உறவு, போக்கு வரவு சாதனங்கள் ஆகிய மூன்று விஷயங்கள் மட்டுமே அகில இந்திய விஷயமாக மதிக்கப்படும். அவற்றைத் தான் யூனியன் சர்க்கார் நிர்வகிக்கலாம்.

(3) மற்ற எல்லா அதிகாரங்களும் மாகாணங்களுக்குத்தான்.

(4) சமஸ்தானங்கள் சம்பந்தப்பட்டமட்டில், அவை "யூனிய"னுக்கு விட்டுக் கொடுக்கும் விஷயங்கள் தவிர மற்ற யாவற்றிலும் அவற்றுக்கு பூர்ண உரிமை உண்டு.

(5) மாகாணங்கள் தம்மிடையே தொகுதிவட்ட சர்க்காரை அமைத்துக்கொள்ள உரிமையுண்டு.

(6) யூனியன் சட்ட சபையில் வகுப்பு உரிமை சம்பந்தமான பிரச்னைகள் வந்தால், சட்டசபையின் ஹிந்து அங்கத்தினரில் பெரும்பாலோரும், முஸ்லிம் அங்கத்தினரில் பெரும்பாலோரும் ஆதரித்தால்தான், பிரேரணை நிறைவேறும். சட்டசபையின் பொதுவான மெஜாரிட்டி மட்டும் போதாது.

## நிர்ணயித்த அரசியலை மாற்றும் உரிமை

அரசியலமைப்புச் சட்டம் தயாரான பிறகு, புதுத் தேர்தல்கள் நடந்த பின்னர் எந்த மாகாண சட்ட சபையும் தீர்மானம் செய்து தொகுதி வட்டத்திலிருந்து விலக உரிமையுண்டு. ஆனால் அதற்கு ஒரு முறை யுண்டு. அரசியலமைப்பு அமலுக்கு வந்த 2 வருஷத்துக்குள்ளாக மாகாண சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றி தொகுதி வட்டத்திலிருந்து விலகலாம்.

அரசியல் திட்டம் அமுலுக்கு வந்தபின் 10-வது வருஷத்தில் அல்லது 20-வது வருஷத்தில் அல்லது 30-வது வருஷத்தில் (அதாவது பத்து வருஷத்துக்கு ஒரு தடவை) ஏதேனும் ஒரு மாகாண சட்ட சபை தீர்மானம் நிறைவேற்றி தொகுதி வட்ட சர்க்காரின் அமைப்பையும், யூனியன் சர்க்காரின் அமைப்பையும் புனராலோசனை செய்யும்படி கோர உரிமை இருக்க வேண்டும்.

## பிரிட்டிஷ்—இந்திய உடன்படிக்கை

இந்திய யூனியன் அரசியல் நிர்ணய சபைக்கும், பிரிட்டிஷ் சர்க்காருக்குமிடையே அதிகார மாறுதல் நிமித்தமாக ஒரு உடன்படிக்கை ஏற்படுத்தவும் பேரம் நடப்பது அவசியமாகும்.

புது அரசியலின் எல்லா அங்கங்களையும் பற்றி சிபார்சு செய்வது எங்கள் நோக்கமல்ல; அரசியலைத் தயாரிப்பதற்குள்ள ஒரு ஸ்தாபனத்தையும், விவாதத்துக்கு அடிப்படையாகக் கொள்ளவேண்டிய சில பொதுக்

கொள்கைகளேயும், நடைமுறையையும் சிபார்சு செய்வது தான் எங்கள் நோக்கம் என்று தூதுகோஷ்டி சொல்லு கிறது.

இவர்களின் சிபார்சுகளின் அர்த்தம் என்ன என்பதை விளக்க ஆரம்பிக்குமுன் ஒரு விஷயத்தை எடுத்துக் காட்டுகிறோம்.

இவர்கள் வெளியிட்ட பிரேரணைகளில் சில அம்சங்களைப் பற்றி இன்னும் சில விவரங்களை சொல்லியிருக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்யாததால் அவர்கள் சொல்லுவது என்ன என்பதுபற்றி ஒவ்வொரு கக்ஷியும் ஒவ்வொரு விதமாகச் சொல்ல இடமளித்தது.

அவர்கள் சொல்லாமல் விடுபட்டுப்போன விஷயங்கள் பின்வருமாறு:—

அரசியல் நிர்ணய சபையின் ஏ, பி, ஸி பிரிவுகள் கூடி அந்தந்த பிரிவிலுள்ள மாகாணங்களிடையே தொகுதி வட்ட சர்க்கார் வேண்டுமா என்று முடிவு செய்யவேண்டும் என்று கூறுகிறார்கள். இது பற்றி ஏதேனும் ஒரு மாகாணத்து பிரதிநிதிகள் எதிர்த்தாலும் அந்த மாகாணத்துக்கும் சேர்த்து தொகுதி வட்ட அரசியல் நிர்ணயிக்கப்படுமா?

அந்த மாகாணத்தை சேர்க்கவேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றி அந்த மாகாணத்திலுள்ள ஹிந்து முஸ்லிம் மெஜாரிட்டிகளிடம் சம்மதம் கேளாமல் மற்ற மாகாணங்களின் வோட்டு மூலம் நிர்ணயிப்பது முறையா?

இதுபற்றி தூதுகோஷ்டி ஒன்றும் சொல்லாததால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக வியாக்யாணம் செய்ய இடமேற்பட்டது.

(2) ஆலோசனைக் கமிட்டியின் அந்தஸ்து என்ன? அதன் ஆலோசனைகளை நிராகரிக்கவோ மாற்றவோ அரசியல் நிர்ணய சபைக்கு உரிமை உண்டா? இல்லையா?

(3) பிரிட்டிஷ்-இந்திய உடன்படிக்கைபற்றி பேரம் செய்யும்போது பிரிட்டன் மைனாரிட்டி உரிமைகளைப் பற்றியும் பேரம் செய்யுமா?

(4) அகில இந்திய யூனியனில் சேரமாட்டோம் என்று மறுக்க எந்த சமஸ்தானத்துக்கும் உரிமை உண்டா?

இவைபற்றி தூதுகோஷ்டியினர் வெளியிட்ட அறிக்கையில், மேலேயுள்ளவற்றுள் முதல் கேள்விக்கு அளித்துள்ள பதில் ஒரு மாகாணம் எதிர்த்தாலும் அதற்கும் சேர்த்து தொகுதி வட்ட அரசியல் நிர்ணயிக்கப்படும் என்று தொனிக்கின்றது. இரண்டாவது கேள்வியிலுள்ள சந்தேகம் இன்னும் தெளிவுபட்டாகவில்லை. இந்தியா—பிரி டிஷ் ஒப்பந்த பேரத்தில் மைனாரிட்டி பிரச்னை பற்றியும் பேரம் நடக்கும் என்று தூதுகோஷ்டியினர் பின்னர் வெளியிட்ட அறிக்கையில் தொனித்தது. நாலாவது சந்தேகத்துக்கு தெளிவான பதில் கிடைக்கவில்லை. ஆனால் எல்லா சமஸ்தானங்களும் யூனியனில் சேரத்தான் வேண்டும் என்று அவர்களது விளக்கத்தில் தொனிக்கிறது.

## அடுத்த அத்தியாயத்தில்

தூதுகோஷ்டியின் பிரேரணைகளை இரண்டு பிரிவாக கவனிக்கவேண்டும். (1) புது அரசியலின் அடிப்படை (2) அரசியல் நிர்ணய சபையின் அமைப்பும் நடைமுறையும்.

புது அரசியலின் அடிப்படைக் கோள்கைகளை புரிந்துகொள்ளும்பொருட்டு, ஒவ்வொரு அம்சத்தையும் தனித்தனியாக ஆராய்கிறோம். அதன் நியாய அநியாயத்தை ஆராய்வதல்ல அந்த அத்தியாயத்தின் நோக்கம். பிரேரணைகள் என்ன சொல்கின்றன என்ற நுட்பத்தை விளக்குவதுதான் அந்த ஆராய்ச்சியின் நோக்கம்.

## ஏழாவது அத்தியாயம்.

# அகில இந்திய யூனியனும் மாகாணங்களும்

பிரிட்டிஷ் தூதுகோஷ்டியின் திட்டத்தின்படி இந்தியாவில் மூன்று விதமான சர்க்கார்கள் இருக்கும் (1) இந்தியா முழுவதுக்கும் பொதுவாக (அதாவது சமஸ்தானங்களையும் சேர்த்து) ஒரு அகில இந்திய "யூனியன் சர்க்கார்" (2) மாகாண சர்க்கார்களும் சமஸ்தான சர்க்கார்களும் (3) மாகாணங்கள் விரும்பினால் மூன்று "தொகுதி வட்ட" சர்க்கார்கள்.

தொகுதி வட்டங்கள் விஷயம் நிச்சயமல்ல. ஆகையால் தொகுதி வட்ட சர்க்கார்களின் உரிமை, மாகாண சர்க்கார்களின் உரிமை இரண்டுமே மாகாண சர்க்கார்களிடம் இருப்பதாக வைத்துக் கொள்வோம்.

## "யூனிய"னும் மாகாணங்களும்

அந்த நிலைமையில் அகில "இந்திய யூனியன்" சர்க்காரின் உரிமைக்கும் மாகாண சர்க்கார்களின் உரிமைக்கும் உள்ள சம்பந்தம் என்ன என்பதை மட்டும் இங்கு கவனிப்போம்.

புதிய அரசியலின் அடிப்படைக் கொள்கைகள் எவை என்பதை தூதுகோஷ்டியினர் 15-ஆவது பாராவில் சொல்லியிருக்கிறார்கள். அதில் 6 ஷரத்துகள் இருக்கின்றன. முதல் ஷரத்தும் 3-ஆவது ஷரத்தும் முறையே யூனியனின் உரிமையையும் மாகாணங்களின் உரிமையையும் நிர்ணயிக்கின்றன.

முதல் ஷரத்தின் கருத்து:—இந்தியா முழுவதுக்குமாக ஒரு யூனியன் சர்க்கார் இருக்கும். "பிரிட்டிஷ் இந்தியா" மட்டுமல்ல, சமஸ்தானங்களும் அந்த யூனியன் சர்க்காரில் இருக்கும். அந்த சர்க்காரானது (1) வெளிநாட்டுறவு, (2) பாதுகாப்பு, (3) போக்குவரவு சாதனங்கள் ஆகிய மூன்று விஷயங்களை நிர்வகிக்கும். இதற்காக வேண்டிய நிதி வசதிக்கான அதிகாரமும் அதனிடம் இருக்கும்.

மூன்றாவது ஷரத்தின் கருத்து:—அகில இந்திய யூனியனிடம் விடப்படாத எல்லா விஷயங்களும், மிச்சமுள்ள எல்லா அதிகாரங்களும் மாகாண சர்க்காரிடமே இருக்கும்.

இந்த இரண்டு ஷரத்துகளும் மிகவும் முக்கியமானவை. எப்படியோ இந்தியா முழுவதுக்கும் பொதுவான ஒரு மத்ய சர்க்கார் இருக்கும் என்பது லீகின் கோரிக்கைக்கும் தேசீய வாதிகளின் கோரிக்கைக்கும் ஒரு சமரசமாகும்.

அகில இந்திய சர்க்காரே கூடாது என்பதும், சில பகுதிகள் இந்திய சர்க்காரிட மிருந்து துண்டிக்கப்பட்டு தனி ராஜ்யங்களாக தனி ராணுவத்துடனும் தனி வெளி நாட்டு உறவுடனும் விளங்கவேண்டும் என்பதும் லீகின் கோரிக்கை. அந்த கோரிக்கையை தூதுகோஷ்டி அசாத்யமான விஷயம் என்று முடிவு செய்தது.


அதே போல தேசீய வாதிகளின் கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

தற்காலம் 1935ம் வருஷத்திய அரசியல் சட்டத்தின் படி பெருவாரியான "விஷயங்கள்"* இந்தியா முழுதுக்கும் பொதுவாக நிர்வகிக்கப்படுகின்றன. உதாரணமாக நாணயச் செலாவணி, பாங்கி, வர்த்தகம், ஏற்றுமதி இறக்குமதி வரிகள், கம்பெனி அமைப்பு ஒழுங்குகள், பெரிய கைத்தொழில்கள் முதலியன எல்லாம் அகில

---

*ஒரு சர்க்கார் எந்த காரியங்கள் சம்பந்தமாக சட்டமியற்றலாம், எந்த காரியங்கள் சம்பந்தமாக உத்தரவு போடலாம், என்ன வரிகள் விதிக்கலாம் என்பதை குறிப்பிடும்போது "விஷயங்கள்" என்ற வார்த்தையை உபயோகிப்பது வழக்கம்.

அதாவது ரயில்கள், ராணுவம், ஏற்றுமதி வரி ஆகியவற்றைப் பற்றி மத்ய சர்க்கார் சட்டமியற்றலாம் என்று சொல்வதற்கு பதிலாக ரயில்கள், ராணுவம், ஏற்றுமதி வரி ஆகியவை மத்திய சர்க்காரின் "விஷயங்கள்" என்று சொல்வது வழக்கம்.




இந்தியப் பொது நிர்வாகத்திலேயே இருந்து வருகின்றன. இது போன்ற அதிகாரங்கள் புது அரசியலிலும் இந்தியா முழுதுக்கும் பொதுவாக இருக்க வேண்டும் என்பது தேசிய வாதிகளின் விருப்பம். இதை தூதுகோஷ்டி நிராகரித்திருக்கிறது. 1935 ம் வருஷத்து அரசியல் சட்டத்தில் சுமார் 50 இனங்கள் அகில இந்தியப் பொறுப்பில் விடப்பட்டன. புதிய திட்டத்தில் அப்படியல்ல. வெளிநாட்டுறவு, பாதுகாப்பு, போக்குவரத்து சாதனங்கள் ஆகிய மூன்று இனங்களுக்கு சம்மந்தமானது தவிர, மற்றெல்லா விஷயங்களும் மாகாணங்களுக்கே.

ஆகையால் இந்த திட்டத்தில் மாகாணங்கள் "அநேகமாக" சுதந்தர நாடுகளாகவே ஆக்கப்படுகின்றன என்று சொல்லலாம்.*

சமஷ்டித் திட்டத்துடன் ஒப்பிட்டால்

1935-ம் வருஷச் சட்டத்தில் காணப்படும் (ஆனால் அமுலுக்கு வராமல் போன) சமஷ்டித் திட்டத்துடன் ஒப்பிட்டால், இந்த உண்மை நன்கு புலனாகும். அந்த சமஷ்டித் திட்டத்தில் சமஷ்டி சர்க்காருக்கு எவ்வளவு பொறுப்பாட்சி கொடுக்கப் பட்டதோ, அதே அளவு சுயாட்சி புதிய திட்டத்தில் மாகாணங்களுக்கு கொடுக்கப் படுகிறது.

இவ்வாறு கருதுவதற்கு என்ன காரணம்? என்று சிலர் கேட்கலாம்.

1935-ம் வருஷத்து சமஷ்டித் திட்டத்தில் (1) பாதுகாப்பு (2) வெளி நாட்டு உறவு ஆகிய இரண்டும் மந்திரிகளிடம் விடப்படாமல் வைசிராயிடமே விடப்பட்டன. ரயில் நிர்வாகம் விஷயமாகவும் சட்டசபையின் அதிகாரத்தை மிகவும் கட்டுப்படுத்தி "சமஷ்டி ரயில்வே அதிகார ஸ்தாபனம்" என்ற ஒரு ஸ்தாபனத்தை அமைத்து, அதன் அங்கத்தினர்களை நியமிக்கும் அதிகாரத்தை வைசிராயிடம் ஒப்படைத்தார்கள்.

1935ஆ சட்டத்தில் இவ்வாறு சமஷ்டி மந்திரி சபையின் ஆளுகையிலிருந்து ஒதுக்கப்பட்ட விஷயங்கள் மட்டுமே இப்போது யூனியன் சர்க்காருக்கு இருக்கின்றன. அந்த சட்டத்தில் சமஷ்டி மந்திரி சபையிடம் ஒப்படைக்கப்பட்ட விஷயங்கள் யாவும், இப்போது மாகாண சர்க்கார்களுக்கு விடப்படுகின்றன. அதாவது சமஷ்டித் திட்டத்தில் இந்திய சர்க்காருக்கு எவ்வளவு சுதந்திரம் இருந்ததோ, அதே அளவு சுதந்திரம் புதிய திட்டத்தில் மாகாணங்களுக்கு கிடைக்கிறது.

---

* மாகாணங்கள் தம் உரிமைகளை தொகுதிவட்ட சர்க்காருக்கு விட்டுக்கொடுக்கவேண்டி யிருக்கும். இது 11-வது அத்தியாயத்தில் ஆராயப்படும்.

வைசிராயிடம் விடப்பட்டிருந்த விஷயங்கள் மட்டுமே புது திட்டத்தில் இந்திய யூனியனிடம் விடப்படுகின்றன. அகில இந்திய மந்திரிகளிடம் விடப்பட்டதெல்லாம் இப்போது மாகாணங்களுக்கு மாற்றப்பட்டு விட்டன.

எல்லா மாகாணங்களுக்கும் இவ்வாறு சுதந்திரம் கிடைப்பதால், முஸ்லிம் மெஜாரிட்டி மாகாணங்கள் 1935-ம் வருஷ சட்டத்திலுள்ள அகில இந்திய சர்க்காருக்கு சமமான சுதந்திர நாடுகளாக ஆகிவிட்டன.

"சுதந்திர முஸ்லிம் தாயகங்கள் வேண்டும்" என்ற லீக் கோரிக்கையை இது காரியாம்சத்தில் பூர்த்தி செய்கிறது. இந்த லீக் லக்ஷியத்துக்கு பாதகமில்லாத முறையிலேயே "யூனியன் சர்க்காரின்" அமைப்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

---

எட்டாவது அத்தியாயம்

# யூனியன் சர்க்காரிடம் விடப்படும் விஷயங்கள்

தேசம் முழுவதுக்கும் பொதுவான சர்க்காரை "மத்ய சர்க்கார்" என்று சொல்வது வழக்கம். ஆனால் ஒவ்வொரு தேசத்தின் விஸ்தீரணம், நிலப்பரப்பின் அமைப்பு, ஜாதிய அமைப்பு முதலியவற்றுக்கு தக்கபடி இந்த மத்ய சர்க்கார் பலவிதமாக அமைக்கப்படும்.

உதாரணமாக, இங்கிலாந்தை எடுத்துக்கொண்டால் அந்நாட்டில் மத்ய சர்க்காரைத் தவிர வேறு சர்க்காரே கிடையாது. ஆகையால் எல்லா அதிகாரங்களும் மத்ய சர்க்காருக்குத்தான். எல்லா அதிகாரமும் பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு பொறுப்பான மந்திரி சபையிடம்தான். இம்மாதிரி இருந்தால், ஆங்கிலத்தில் "யூனிட்டரி" சர்க்கார் (ஒருமை சர்க்கார்) என்பார்கள்*. அடுத்த

---

* Unitary என்ற வார்த்தைக்கு "ஒருமை அரசியல்" "ஒருமை சர்க்கார்" "ஒருமை அரசியல் முறை" என்ற சொற்களை இப்புத்தகத்தில் உபயோகிக்கிறோம். இதுபற்றிய விவரங்கள் 16-வது அத்தியாயத்தில்.

படியாக "யு. எஸ். ஏ." என்று சொல்லப்படும் வட அமெரிக்காவை எடுத்துக்கொள்வோம். யு. எஸ். ஏ. என்ற வார்த்தைக்கே "அமெரிக்காவின் ஐக்கிய நாடுகள் சர்க்கார்" என்று அர்த்தம். அதாவது அங்கு 48 "நாடுகள்" (மாகாணங்கள்) 48 தனி சர்க்கார்களுடன் இயங்குகின்றன. அத்தனைக்கும் பொதுவாக ஒரு "ஐக்கிய நாடுகள் சர்க்கார்" இருக்கிறது. 48 மாகாண சர்க்கார்களும், ஒரு பொது சர்க்காரும், அங்கு இருக்கின்றன. அந்த பொது சர்க்காரை "சமஷ்டி சர்க்கார்" என்று சொல்வார்கள். இந்த 48 மாகாணங்களும் எல்லா விஷயங்களிலும் சமஷ்டி சர்க்காருக்கு "உட்பட்டவை" என்று கருத முடியாது. அவ்வாறு கருதினால், சமஷ்டி சர்க்காருக்குத்தான் எல்லா அதிகாரமும் என்று ஏற்பட்டுவிடும். அப்போது அது யூனிட்டரி சர்க்காராக ஆகிவிடும். அமெரிக்காவின் மத்ய சர்க்கார் 'யூனிட்டரி' சர்க்கார் அல்ல, சமஷ்டி சர்க்கார்தான்.

இந்தியா பெரிய தேசமாகையால் (அமெரிக்காவை விட 3 மடங்கு ஜனத்தொகையுள்ள தேசமாகையால்) இங்கும் சமஷ்டி முறையே சரியானது என்று கருதப்படுகிறது.

### "விஷயங்கள்" பிரிவினை

சமஷ்டி சர்க்கார் இருக்குமிடத்தில், சமஷ்டி சர்க்காருக்கும் மாகாண சர்க்காருக்குமிடையே மோதல் ஏற்படாமலிருப்பதற்காக, "விஷயங்களை" தெளிவாக வரையறுத்துவிடுவது வழக்கம். சில "விஷயங்களை" மாகாணத்துக்கு என்று நிச்சயித்துவிடுவார்கள்; அப்போது மீதமுள்ள "விஷயங்கள்" மத்ய சர்க்காருக்கு என்று ஏற்பட்டுவிடும். அல்லது சில விஷயங்களை மத்ய சர்க்காருக்கு என்று நிச்சயித்து விடுவார்கள்; மத்ய விஷயங்கள் தவிர, மற்றவையெல்லாம் மாகாணங்களுக்கு என்று ஏற்பட்டுவிடும். மாகாண விஷயங்களில் மத்ய சர்க்கார் ஒன்றும் செய்ய முடியாது. மத்ய 'விஷயங்களில்' மாகாணம் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் "பொது விஷ

யங்கள் " என்று ஒரு ஜாப்தா வைத்துக்கொண்டு, மாகாணங்களுக்காக மத்ய சர்க்கார் சட்டங்கள் இயற்றலாம். எப்படியானாலும் "மாகாண விஷயங்கள்" "மத்ய விஷயங்கள்" என்று தெளிவான பாகுபாடு இருக்கும். இந்தியாவில் 1935ம் வருஷத்து சட்டத்தில் "மாகாண விஷயங்கள்" "மத்ய விஷயங்கள்" "பொது விஷயங்கள்" என்று மூன்று ஜாப்தா போட்டார்கள். இப்போது பிரிட்டிஷ் தூதுகோஷ்டியின் திட்டத்தில் 'மத்ய விஷயங்கள்' என்று 3-இனங்களை சொல்லிவிட்டு, மற்றயாவும் "மாகாண விஷயங்கள்" என்று சிபார்சு செய்கிறார்கள்.

(1) வெளிநாட்டு உறவு, (2) பாதுகாப்பு (தரைப்படை கடற்படை, விமானப்படை) (3) போக்குவரவு (ரயில் தபால், தந்தி விமானப் போக்குவரவு, கப்பல் போக்குவரவு ஆகியவை), இந்த "மூன்று விஷயங்கள்" மத்ய சர்க்காரிடம் விடப்படுவதாக சொல்லப்பட்டாலும், உண்மையில் இம்மூன்றும் ஒரே ஒரு "விஷயத்தின்" அம்சங்களே. ஏனென்றால் "வெளிநாட்டு உறவு" என்பது யுத்தம், சமாதானம், முதலியவற்றைப் பற்றிய விஷயம். பாதுகாப்பு பலம் அல்லது யுத்தபலம் இருந்தாலொழிய, வெளிநாட்டு உறவை ஒழுங்குபடுத்த கருவியே இல்லையென்று அர்த்தம். ஆகையால் 'வெளிநாட்டு உறவு' என்பதும் "பாதுகாப்பு" என்பதும் ஒன்றோடொன்று தொடர்புள்ளவை. ரயில் முதலிய போக்குவரவு சாதனங்கள் மீது ஆதிக்கம் இல்லாவிடில் ராணுவம் இடம் விட்டு இடம் பெயர்வதே முடியாது போய்விடும். "போக்குவரவு" என்பது "பாதுகாப்"பின் அத்தியாவசியமான அம்சம். ஆகவே இந்த மூன்று "விஷயங்களையும்" ஒரே விஷயமாகச் சொல்லிவிடலாம். இந்த ஒரு விஷயம்தான் மத்ய சர்க்காரிடம் விடப்படுகிறது. மீதமெல்லாம் மாகாணங்களுக்கு; அதாவது யுத்தம் செய்யும் வசதியைத் தவிர மற்றவையெல்லாம் மாகாணங்களிடமே விடப்படுகின்றன.

### யோசிக்கவேண்டிய பிரச்னே

ஆனல் இவ்வளவு அதிகாரமும் மாகாணங்களிடமே இருப்பது மாகாணங்களுக்கு நல்லதா? மத்ய சர்க்காரிடம் இன்னும் சில விஷயங்களை ஒப்படைப்பது மாகாணங்களுக்கு நல்லதல்லவா? மாகாண சுதந்திரத்தைக் காப்பாற்றவேண்டியதுதான்; ஆனல் இன்னும் சில விஷயங்களை இந்தியா முழுவதுக்கும் பொதுவாக நிர்வகிப்பது மாகாணங்களுக்கு நல்லதல்லவா?

இதுதான் மத்திய சர்க்கார் சம்பந்தமாக, லீகின் கருத்துக்கும், காங்கிரஸின் கருத்துக்குமிடையேயுள்ள முரண்பாடு. "வெளிநாட்டு உறவு" என்பதை மத்ய "விஷயமாக" ஆக்கிவிட்டால், அந்த விஷயத்தைப் பாதிக்கக்கூடிய வேறு சில "விஷயங்களையும்" மத்ய சர்க்காரிடம் வைப்பதுதான் நல்லது. இந்தக் கொள்கையை மனதில் வைத்துக்கொண்டு கவனித்தால், "வெளிநாட்டு வர்த்தக உறவு" என்பதை "மத்ய விஷயமாக" சேர்ப்பது அவசியம் என்பது புலனுகும். வெளிநாடுகளுடன் அரசியல் சம்பந்தமாக ஒப்பந்தங்கள் செய்யும்போது, வர்த்தக உறவைப் பற்றியும் பேச்சு நடப்பது வழக்கம். உதாரணமாக பாரசீகத்துக்கும் ரஷியாவுக்குமிடையே, சமீபத்தில் ஏற்பட்ட அரசியல் உடன்பாட்டுடன் எண்ணெய்ச் சலுகைபற்றிய ஒரு ஒப்பந்தமும் சேர்க்கப்பட்டது. அதுபோலவே, பரஸ்பரம் ஏற்றுமதி இறக்குமதி வரிகள் பற்றியும் பேச்சு நடக்கும். வெளிநாட்டு உறவுகளில் வர்த்தகத்தையும் அரசியலையும் பிரிக்க முடியாது. பல தேசங்களிடையே ஏற்படும் யுத்தத்துக்கு வர்த்தகப் போட்டியே காரணம்; ஏற்றுமதி, இறக்குமதி வரிகள் நிமித்தமாகவே இந்த வர்த்தகப் போட்டி அமுலுக்கு வருகிறது. ஆகையால் வெளிநாட்டு உறவை நிர்வகிக்கும் சர்க்காரே வெளிநாட்டு வர்த்தகம் பற்றிய வரிக் கொள்கையையும் நிர்வகிப்பது அவசியம். அன்னிய நாட்டுப் பொருள்களுக்கு ஒரு மாகாணத்தில்மட்டும் வரி விதிப்பது, மற்ருெரு மாகாணத்தில் வரி விதிப்பதில்லை என்ற நிலைமை உலகில் எந்த நாட்டிலும் இல்லாத புதுமை

யாகவே இருக்கும். ஏற்றுமதி இறக்குமதி வரி விதிப்பு விஷயம் மத்ய சர்க்காரிடம் இல்லாவிட்டால், இந்த புது மையான நிலைமைதான் ஏற்படும்.

ஏற்றுமதி இறக்குமதி வரிகளும், உள்நாட்டு சுங்க வரிகளும் விதிக்கும் உரிமை மாகாணங்களிடம் விடப்பட்டால், மாகாணத்துக்கு மாகாணம் விரோதம் ஏற்படும்.

உதாரணமாக,பஞ்சாப் கோதுமைக்கு பம்பாயில் வரி விதித்தால், பம்பாய்க்காரர்கள் ஆஸ்டிரேலிய கோது மையை வாங்கத் தலைப்பட்டால், பஞ்சாபின் பொரு ளாதாரம் சீர்கெட்டுப்போகும். அது போலவே பம்பா யிலும் சென்னையிலும் உற்பத்தியாகும் ஜவுளிமீது பஞ்சா பிலும், வங்காளத்திலும் வரிபோட்டு, அவர்கள் பிரிட்டிஷ் ஜவுளிக்கு சலுகை காட்டினால், பம்பாயின் பொருளாதா ரம் என்ன ஆகும்? மற்றொரு சங்கடமும் இருக்கிறது. பஞ்சாப் வட்டத்தில் மட்டும் வெளியிடத்து சர்க்கரைக்கு வரி போடுவதாக வைத்துக்கொள்வோம். ஐக்கிய மாகா ணத்திலிருந்தும் பம்பாய் மார்க்கமாகவும் எல்லையை கடந்து சர்க்கரையை திருட்டுத்தனமாக வியாபாரிகள் கொண்டு வருவார்கள். இதை காப்பாற்ற பஞ்சாப் வட் டத்துக்கும் ஹிந்துஸ்தான் வட்டத்துக்குமிடையே 1500 மைல் தூரத்துக்கும் சுங்க போலீஸ் வைக்கவேண்டியிருக் கும்! காரைக்கால், புதுச்சேரி பிரதேசத்துக்கும், தஞ்சை தென்னாற்காடு ஜில்லாக்களுக்கும் மத்தியில், இந்த சிறிய இடத்தில்கூட, சுங்கப் பாதுகாப்புக்காக $1\frac{3}{4}$லட்சம் ரூபாய் செலவாகிறது. மேற்கு பாகிஸ்தானுக்கும், ஹிந்துஸ் தானுக்குமிடையே சுங்கப் போலீஸுக்கு எவ்வளவு பணம் வீணாகும் என்பதை இதிலிருந்து ஊகிக்கலாம். சுங்க வரிமூலம் கிடைக்கும் வருமானம் முழுதும், சுங்கத் திருடர்களை தடுப்பதில் விரயமாகிவிடும்! இதையெல் லாம் உத்தேசிக்குமிடத்து, இந்தியாவில் மாகாணங்களுக் கிடையே பரஸ்பரம் சுங்க வரி இல்லாமல் இந்தியா முழு வதுக்கும் ஒரே மாதிரியாக இறக்குமதி, ஏற்றுமதி வரிகள் இருப்பது அவசியம்.

நாணயச் செலாவணி விஷயமும் அப்படித்தான். அதனுல்தான் ஏற்றுமதி இறக்குமதி வரியும், நாணயச் செலாவணியும் மத்ய "விஷயமாக" சேர்க்கப்படவேண்டும் என்று தேசியவாதிகள் வற்புறுத்துகின்றனர்.

இது மாகாண சுதந்திரம் பற்றிய கொள்கைக்கும், "பாகிஸ்தான்" கொள்கைக்கும் கூட முரண்பட்டதல்லவென்று ஆசிரியர் கூப்லண்ட் கூட சொல்கிருர்.

## கூப்லண்ட் கருத்து

"கூப்லண்ட் கூட" என்று சொல்வதேன் என சிலர் கேட்கலாம். இந்தியப் பிரச்னை பற்றி தீவிரமாக ஆராய்ந்து எழுதியுள்ள ஆசிரியர் கூப்லண்ட், பாகிஸ்தான் வாதத்தை ஏற்றுக்கொண்டு ஒரு திட்டத்தை சிபார்சு செய்திருக்கிருர். பாகிஸ்தான் கோரிக்கைக்கு அவரைவிட நன்ருக வக்காலத்து வாங்கி எழுதி இருப்பவர் வேறு யாருமில்லை. அதனுல்தான் கூப்லண்ட் "கூட" என்று சொல்லுகிறேம். "முஸ்லிம்கள் ஒரு மைஞரிட்டி வகுப்பு அல்ல: அவர்கள் ஒரு தேசிய ஜாதி" என்பது ஜனுப் ஜின்னுவின் சித்தாந்தம்- இந்த சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டு சமரசம் பேசினுல்தான் பயன்படும் என்பது கூப்லண்டின் கருத்து. ஆகையால் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் "தனி தேசிய ஜாதிகள்" என்ற சித்தாந்தத்தை ஒப்புக்கொண்டுதான் அவர் தம் திட்டத்தை சிபார்சு செய்கிருர்.

அவர் கூறும் யோசனையின் சாராம்சம் என்னவென்பதை சுருக்கமாக சொல்லிவிடலாம்,—

> இந்தியாவை நான்கு தொகுதி வட்டங்களாக நாலு "பிரதேசங்களாக" (Regions) பிரிக்கவேண்டும். (1) சிந்துநதிப் பிரதேசம். (2) கங்கைநதிப் பிரதேசம். (3) கங்கை டெல்டா பிரதேசம். (4) தக்ஷிண பீடபூமி பிரதேசம் என்று அவர் அழைக்கிருர்.

மாகாணங்களாக கவனித்தால், இந்த பிரிவினையில் ஏற்படும் நான்கு பிரதேசங்கள் :—(1) பஞ்சாப், சிந்து, வட

மேற்கெல்லை, பலுசிஸ்தான், ராஜபுதன சமஸ்தானங்கள். (2) ஐக்கிய மாகாணம், பீகார், மத்ய இந்திய சமஸ்தானங்கள். (3) வங்காளம், அஸ்ஸாம், ஒரிஸ்ஸா, (4) மத்ய மாகாணம், பம்பாய், சென்னை, ஹைதராபாத், மைசூர், திருவாங்கூர்.

இதில் 1-ம் 3-ம் முஸ்லிம் மெஜாரிட்டி பிரதேசங்களாகவும் 2-ம், 4-ம் ஹிந்து மெஜாரிட்டி பிரதேசங்களாகவும் இருக்கும்.

இவ்வாறு பிரதேசங்களாக பிரித்துவிட்டு அவற்றுக்கு பொதுவாக ஒரு மத்ய சர்க்காரை எவ்வாறு ஏற்படுத்தலாமென்பதுபற்றி ஆசிரியர் கூப்லண்ட் சர்ச்சை செய்கிறார்.

இந்த மத்ய சர்க்கார், "வலிமையுள்ள மத்ய சர்க்காராக" இருக்க வேண்டுமா அல்லது "வலிமைக் குறைவான மத்ய சர்க்காராக" இருக்க வேண்டுமா என்றும் கூப்லண்ட் சர்ச்சை செய்கிறார்.

பாகிஸ்தானை அடிப்படையாய் கொண்ட (அதாவது முஸ்லீம்கள் தனி தேசீய ஜாதி என்று உணர்ச்சியை அடிப்படையாய்க் கொண்ட) பிரிவினையையும் ஏற்படுத்தி, அதே சமயத்தில் அகில இந்தியாவும் ஒரே தேசமாக ஆளப்படுவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டுமானால், "வலிமைக் குறைவான" மத்ய சர்க்கார்தான் சாத்தியம் என்பது அவரது முடிவு.

அவ்வாறு "வலிமையற்ற"தாகவேனும் ஒரு மத்ய சர்க்காரை ஏற்படுத்துவதானால், அதனிடம் குறைந்த பக்ஷமாக என்ன என்ன அதிகாரங்கள் இருக்க வேண்டும்? இந்தக் கேள்விக்கு அவர் அளிக்கும் பதிலை இங்கு தருகிறோம் :—

> வெளிநாட்டிலிருந்து பார்ப்பவர்களுக்கு இந்தியா ஒரே தேசம் என்று தோன்றுவதற்கு என்ன அறிகுறிகள் வேண்டுமோ, அவையாவது மத்ய சர்க்காரிடம் இருக்க வேண்டும்.

அதாவது " இந்தியாவுக்கும் வெளிநாடுகளுக்குமுள்ள உறவு பற்றிய எல்லா விஷயங்களும் " மத்ய சர்க்காரிடம் இருக்க வேண்டும். அவையாவன :—(1) வெளிநாட்டுறவும் பாதுகாப்பும் (2) வெளிநாட்டு வர்த்தகம் அல்லது ஏற்றுமதி இறக்குமதி வரிக் கொள்கை (3) செலாவணி.

கூப்லண்டின் "மத்ய" ஜாப்தாவில் ஏற்றுமதி இறக்குமதி வரிக் கொள்கையும் செலாவணியும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இவ்விரண்டும் பிரிட்டிஷ் தூது கோஷ்டியின் சிபார்சில் இல்லாதது வருந்தத் தக்கதே. ஆனால் அரசியல் நிர்ணய சபையில் முஸ்லிம்களில் 100-க்கு 51 பேர் சம்மதித்தால் இவற்றை சேர்க்க முடியும். அவ்வாறு அவர்களது மனதை திருப்புவதற்கு முயற்சி நடக்க வேண்டும்.

ரயில்வே விஷயம்

ரயில்வே போக்குவரவு வசதிகள்பற்றி கூப்லண்டின் அபிப்பிராயம் சற்று மாறுபட்டிருக்கிறது.

> ரயில்கள், தபால் தந்தி முதலியவை யுத்த காலத்தில் மட்டும் பூர்ணமாக மத்ய சர்க்காரில் வருவதற்கு ஏற்பாடு செய்தால் போதும். ஆனால் சாதாரண காலத்திலும் அவற்றை மாகாணங்களிடம் விடமுடியாது; 4 பிரதேச சர்க்கார்கள் கையில் விடலாம்; அப்படி விட்டால் பிரதேச சர்க்கார்களிடையே ஒரு ஆலோசனை போர்ட் ஏற்படுத்தலாம்; ரயில்வேக்கள் பற்றி மத்ய சர்க்கார் "பிரதேச சர்க்கார்களுக்கு" சிபார்சுகள் அனுப்பி பொதுக் கொள்கை அனுஷ்டானத்திலிருக்கும்படி செய்யலாம் என்பது ஆசிரியர் கூப்லண்டின் கருத்து.

ஜனுப் ஜின்னு வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் "பாதுகாப்புக்கு அவசியமான அளவுக்கு மட்டுமே ரயில்களை மத்ய சர்க்கார் விஷயமாக மதிக்கவேண்டும்" என்று கோருவதாக தெரிகிறது.

இவர் ஸ்ரீ. கூப்லண்டின் வாதத்தை தமக்கு ஆதாரமாகக்கருதலாம்.

ஆனால் ஸ்ரீ. கூப்லண்ட் கூட எப்படியும் சாதாரண காலத்திலும் ரயில்கள் பற்றி இந்தியா முழுவதுக்கும் பொதுவான கொள்கை இருப்பதன் அவசியத்தை மறுக்க வில்லை. ஆகையால் ரயில்வேயை மத்ய விஷயமாக வைப்பதுதான் சரியான முறை. இவ்விஷயத்தில் மந்திரி கோஷ்டியினர் சரியான முறையையே பின்பற்றி யிருக்கிறார்கள்.

---


ஒன்பதாவது அத்தியாயம்

# அகில இந்திய ஆட்சியும் சமஸ்தானங்களும்

இந்திய அரசியல் பிரச்னையிலுள்ள பல சிக்கல்களில் சமஸ்தான பிரச்னையும் ஒன்று. மேனாடுகளில் இது போன்ற பிரச்னைக்கே இடமில்லை. வட ஆப்ரிக்காவி லுள்ள சில குடியேற்ற நாடுகளிலும் இந்தோ-சீனா போன்ற இடங்களிலும் மலாய்நாட்டிலும் தான் இந்த பிரச்னைக்கு உதாரணம் உண்டு.

அதாவது ஒரு தேசத்தை மற்றொரு நாடு யுத்தத்தின் மூலமாக பூர்ணமாக ஜெயித்து தன் ஆட்சியை ஏற்ப டுத்திய இடங்களில், இந்த பிரச்னை கிடையாது. அவ்வா றின்றி தேசத்தின் சில பகுதிகளை மட்டும் தமது ஆட்சி யில் கொண்டு வந்து, மீதமுள்ள இடங்களில் ஆங்காங் குள்ள சிற்றரசுகளை பயமுறுத்தல் மூலம் தம் செல்வாக் குக்கு உட்படுத்தி வைக்கும் ஏற்பாட்டில்தான் இந்த பிரச்னை ஏற்படுகிறது.

இந்தியாவில் சில பகுதிகளை மட்டும்தான் அதாவது சுமார் பாதிக்கு மேற்பட்ட பிரதேசத்தைத்தான் பிரிட்டன் தன் நேர்முகமான ஆட்சியில் கொண்டு வந்தது. மீதமுள்ள இடத்தில் சிற்றரசுகளை பொம்மை மன்னர் களாக்கி, அவர்கள் மூலம் பிரிட்டன் தன் விருப்பத்தை




இந்தப் படத்தில் கருப்பாக காட்டப்பட்டிருக்கும் பிரதேசங்கள் யாவும் சமஸ்தானங்கள்.

(1) காஷ்மீர் (2) பலுச்சிஸ்தான் சமஸ்தானங்கள் (3) பஞ்சாப் சமஸ்தானங்கள் (4) ராஜபுதன சமஸ்தானங்கள் (5) குஜராத், கத்தியவார் சமஸ்தானங்கள் (6) மத்ய இந்திய சமஸ்தானங்கள் (7) அஸ்ஸாம் சமஸ்தானங்கள் (8) ஹைதராபாத் சமஸ்தானம் (9) மைசூர் (10) கொச்சி, திருவிதாங்கூர்.

இவற்றை மட்டும் கொண்டதாக ஒரு தனி சர்க்காரை அமைத்தால் அது எவ்வளவு அசம்பாவிதமாக இருக்கும் என்பதை இதில் காணலாம்.

சமஸ்தானங்களும், இந்தியாவின் மீதமுள்ள இந்தியாவும் ஒரே சர்க்காராக இல்லாமல் எந்தப் பகுதியும் நிர்வாகம் நடத்த முடியாது.

நிறைவேற்றி வந்தது. அதனால் இந்தியாவானது "பிரிட்டிஷ் இந்தியா" "இந்திய இந்தியா" என்று இரண்டு தினுசாக பிரிக்கப்பட்டது!

சில சமஸ்தானங்கள் நான்கு பக்கங்களிலும் வெவ்வேறு பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களால் சூழப்பட்டிருக்கின்றன. சில சமஸ்தானங்கள் ஏதேனும் ஒரு பிரிட்டிஷ் இந்திய மாகாணத்தின் நடுமத்தியில் இருக்கின்றன. பல சமஸ்தானங்கள் மிகவும் சிறியவை; பிரிட்டிஷ் இந்தியா தாலூக்காக்களைவிட சிறியவை. ஆனால் பெயரளவில் அவை "சுதந்திர ராஜ்யங்கள்"; காரியம்சத்தில் அவை வைசிராயின் கட்டளைக்கு மாறாக எதுவும் செய்யாத நிலைமைக்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு "சுதேசமன்னர்களை" பொம்மைகளாக ஆக்கினது சரியா இல்லையா என்பதைப் பற்றி இப்போது சர்ச்சை செய்வதில் பயனில்லை.

சமஸ்தானங்கள் விஷயத்தில் பிரிட்டன் வேறு விதமாக நடந்திருந்தால் என்ன ஏற்பட்டிருக்கும்?

ராணுவத்தைக் கொண்டு சமஸ்தானங்கள், யாவற்றையும் பிரிட்டன் கைப்பற்றி இந்தியா முழுவதும் பிரிட்டிஷ் இந்தியாதான் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கும்; அல்லது சமஸ்தானங்கள் தம் தம் பக்கத்திலுள்ள பிரிட்டிஷ் இந்திய பிரதேசங்களை தம் நாட்டுடன் சேர்த்துக் கொண்டிருக்கலாம்.

சுமார் 100 வருஷங்களுக்கு முன் வரையில் இப்படித்தான் மாறி மாறி நடந்து கொண்டிருந்தது. 1857-க்குப் பிறகுதான் நிலைமை ஸ்திரமடைந்தது. பிரிட்டிஷ் இந்தியா, சமஸ்தானங்களை ஆக்கிரமிக்காது; சமஸ்தானங்களும் பிரிட்டிஷ் இந்தியாவை ஆக்கிரமிக்காது என்ற நிலைமை ஏற்பட்டது.

ஆனால் ஒரு சமஸ்தானம் மற்றொரு சமஸ்தானத்தை ஆக்கிரமிக்கக்கூடுமே! பல சமஸ்தானங்கள் ஒன்றாகச்

சேர்ந்தால், பிரிட்டிஷ் இந்தியாவை ஆக்கிரமித்துவிட முடியுமே! அந்த நிலைமையை அனுமதிக்க பிரிட்டனுக்கு மனம் வருமா? வராது. ஆகையால் பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் சமஸ்தானங்களுக்குமிடையே யுள்ள ஏற்பாடு பின்வரும் 3 அம்சங்கள் கொண்டதாக அமைந்தது:—

(1) பிரிட்டிஷ் இந்தியா, சமஸ்தானங்களை ஆக்ரமிக்கக்கூடாது.

(2) சமஸ்தானங்கள் பிரிட்டிஷ் இந்தியாவை ஆக்கிரமிக்கக்கூடாது.

(3) ஒரு சமஸ்தானம் மற்றொரு சமஸ்தானத்தை ஆக்கிரமிப்பின் மூலமோ உடன்படிக்கை மூலமோ தன்னுடன் சேர்த்துக்கொள்ளக் கூடாது.

இந்த மூன்றாவது அம்சம் மிகவும் முக்கியமானது. பிரிட்டிஷ் இந்தியா என்பது ஒரே சர்க்காரின் கீழ் இருப்பது போல, சமஸ்தானங்கள் தம்மிடையே ஒற்றுமை ஏற்படுத்திக்கொண்டு சமஸ்தான இந்தியாவும் தனியாக ஒரு சர்க்காரின் கீழ் ஒன்றுபட்டு பிரிட்டிஷ் இந்தியாவுக்கு போட்டியாக நிற்பது முடியாது போயிற்று.

இந்த நிலைமை ஏற்பட்ட பிறகு பிரிட்டிஷ் இந்திய சர்க்கார், சமஸ்தானங்கள் மீது பலவிதத்திலும் ஆதிக்கம் செலுத்துவது அவசியமாயிற்று. இதைப்பற்றி யாரும் குற்றம் சொல்லமுடியாது.

ஏனென்றால் பிரிட்டிஷ் இந்தியாவின் நிர்வாகம் சரியாக நடக்க வேண்டுமானால் இந்த தேசம் முழுவதும் ஒரே சர்க்காரின் ஆதிக்கத்திலிருந்தால்தான் முடியும். அதாவது கைத்தொழில் தபால் தந்தி, ரயில், சுங்கம் முதலியவற்றில் பிரிட்டிஷ் இந்தியாவின் கொள்கையை சமஸ்தானங்களிலும் அனுஷ்டித்தாலொழிய, இந்த விஷயங்களை நிர்வகிக்கவே முடியாது.

இந்தியாவில் ஒரே ஒரு சர்க்கார்தான் பூர்ண சுதந்திரமுள்ளதாக இருக்கமுடியும். இரண்டு மூன்று பூர்ண சுதந்திர சர்க்கார்கள் என்பது இந்தியாவில் சாத்திய

மல்ல. (1) இந்தியாவில் ஏழு எட்டு ராஜ்யங்கள் இருந்தால், அத்தனை ராஜ்யங்களும் எதேனும் ஒரே ஆட்சியின் ஆதிக்கத்தில்தான் இருந்தாகவேண்டும். (2) ஒரே ஆட்சியின் ஆதிக்கத்தில் இல்லை யென்றால், அவை ஒரே ஆட்சியின் பங்காளிகளாக (பாகஸ்தர்களாக) இருக்க இணங்க வேண்டும்.

இந்த இரண்டு முறைகளில் இப்போது அமுலிலிருப்பது 1-வது முறை. அதாவது பிரிட்டிஷ் இந்தியாவும் சமஸ்தானங்களும், பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் இருக்கின்றன. பிரிட்டிஷ் ஆட்சி நீங்கிய பிறகு என்ன செய்வது? (1) சமஸ்தானங்களை இந்தியாவின் மற்றப் பகுதியின் (பிரிட்டிஷ் இந்தியாவின்) ஆதிக்கத்தில் கொண்டுவர வேண்டும். அல்லது (2) பிரிட்டிஷ் இந்தியாவும் சமஸ்தானங்களும் பங்கு கொள்ளும்படியான ஒரு சமஷ்டி சர்க்காரை ஏற்படுத்தவேண்டும். இந்த இரண்டாவது முறை இனிமேல் அமுலுக்கு வரவேண்டுமென்று பிரிட்டிஷ் மந்திரி கோஷ்டி சிபார்சு செய்திருக்கிறது.

பிரிட்டிஷ் இந்தியாவைவிட்டு மட்டுமல்லாமல், சமஸ்தானங்களிலிருந்தும் பிரிட்டிஷ் ஆதிக்கம் வெளியேற உத்தேசிக்கிறது என்று தூதுகோஷ்டியினர் அறிவித்து விட்டார்கள்.

இப்போது சமஸ்தானங்களில் நடக்கும் ஆட்சி, நேர்முகமான பிரிட்டிஷ் ஆட்சியல்ல. அங்கு நடப்பது பிரிட்டிஷ் "ஆதிபத்திய ஆதிகாரத்தின்" ஆட்சி. சமஸ்தான ஆட்சியில் சமஸ்தான பிரஜைகளுக்கு பூர்ண பொறுப்பாட்சி உரிமை கொடுத்துவிட்டால், "ஆதிபத்ய அதிகாரம்" என்பதே தேவை யில்லை!

சுதந்திர இந்திய சமஷ்டியில் பல மாகாணங்கள் இருப்பதுபோலவே சமஸ்தானங்களும் சமஷ்டியில் "மாகாணங்களாக" இருக்கமுடியும். அவ்வாறு செய்வதன் மூலம் அவை மத்திய சர்க்காரிலுள்ள ஜனநாயகத்தில் பங்குகொள்ள முடியும்.

## பத்தாவது அத்தியாயம்

# சமஸ்தானங்கள் 'விட்டுக் கொடுக்கும்' விஷயங்கள்

இந்தியாவில் ஒரே ஒரு சர்க்கார்தான் பூரண ராஜாங்க கௌரவமுள்ள சர்க்காராக இருக்கமுடியும். பல பிரதேச சர்க்கார்கள் இருக்கலாம். ஆனால் பூர்ண ராஜாங்க கௌரவமுள்ளதாக ஒரே ஒரு சர்க்கார்தான் இருக்க முடியும். இதுதான் சரித்திரத்தின் அனுபவம்.

இந்த உண்மையை பிரிட்டிஷ் திட்டம் ஒப்புக்கொண்டிருப்பது வரவேற்கத்தக்க விஷயம்.

1942-ல் கிரிப்ஸ் திட்டமும் இந்தக்கொள்கையை ஒப்புக்கொள்ளத்தான் செய்தது. ஆனால் சமஸ்தானங்கள் விரும்பினால், தனியாக பிரிட்டனுடன் உறவு ஏற்படுத்திக் கொண்டு, அகில இந்திய யூனியனில் நேரடியாக "ஐக்கியப் படாமல்" ஒதுங்கி நிற்க, கிரிப்ஸ் திட்டத்தில் உரிமையளிக்கப்பட்டது.

இப்போதுள்ள திட்டத்தில் அவ்வாறு பிரிந்து நிற்கும் உரிமையைபற்றிப் பிரஸ்தாபிக்கவில்லை.

ஆனால் மாகாணங்கள் பற்றி எவ்வளவு தெளிவான பாஷையில் எழுதியிருக்கிறார்களோ, அதேமாதிரி சமஸ்தானங்களைப் பற்றி தெளிவாகச் சொல்லவில்லை.

"அகில இந்திய யூனியன்" சர்க்காரிலே இருக்கும் விஷயங்கள் தவிர "மீதமுள்ள எல்லாம்" மாகாணங்களில் இருக்கும் என்று 3-வது ஷரத்து கூறுகிறது. ஆனால் சமஸ்தானங்களைப் பற்றிச் சொல்லும் 4-வது பாராவின் வாசகம் இதே வாசகமாக இல்லை. தாமாக யூனியன் சர்க்காருக்கு 'விட்டுக் கொடுக்காத' எல்லா விஷயங்களையும் சமஸ்தானங்கள் வைத்துக்கொள்ளும் என்று 4-வது ஷரத்து கூறுகிறது.

இவ்வாறு வாசகத்தில் மாறுதல் இருப்பது "ராஜ தந்திர சம்பிரதாயத்தை" உத்தேசித்தா அல்லது காரியாம்சத்தில் வித்தியாசமா என்பது தெளிவாகவில்லை.

எப்படியும் "யூனியன்" சர்க்காருக்கு ஒதுக்கப்பட்டுள்ள மூன்று விஷயங்களையுமாவது சமஸ்தானங்கள் "விட்டுக்கொடுக்க வேண்டியதே"; இல்லாவிடில் அவை யூனியனில் சேருவதில் அர்த்தமே கிடையாது.

ஆகையால் அந்த மூன்று விஷயங்களும் (வெளிநாட்டுறவு, பாதுகாப்பு, போக்குவரவு) சமஸ்தானங்களைப் பற்றியவரையிலும்கூட யூனியன் சர்க்காரிடமே இருக்கும் என்றுதான் நாம் வியாக்கியானம் செய்யவேண்டும்.

அப்படியானால் மாகாணங்களின் "அதிகாரத்துக்கும்" சமஸ்தானங்களின் அதிகாரத்துக்கும் என்ன வித்தியாசம் இருக்கும் என்ற கேள்வி ஏற்படுகிறது.

### சமஸ்தானங்களும் மாகாணங்களும்

உதாரணமாக அரசியல் நிர்ணய சபையில் முஸ்லிம்களில் பெரும்பாலோரும் ஹிந்துக்களில் பெரும்பாலோரும் வெளிநாட்டு வர்த்தகம், நாணயச் செலாவணி என்ற இரண்டையும்கூட யூனியன் சர்க்காரிடம் விட்டுவிட சம்மதிப்பதாக வைத்துக்கொள்வோம். அப்போது சமஸ்தானங்கள் அந்த இரண்டையும் யூனியனிடம் விட்டுவிட மறுக்க முடியுமா? மறுக்க முடியும் என்றே தோன்றுகிறது. ஆனால் மறுக்கக் கூடாதென்று நாம் வற்புறுத்த வேண்டும்; மறுக்கமாட்டா என்று நாம் நம்பலாம்.

யூனியன் சட்டசபையில் சமஸ்தானங்களின் பிரதிநிதிகளும் இருப்பார்கள். வெளிநாட்டு வர்த்தகம், சுங்கம், செலாவணி முதலியவற்றை சமஸ்தானங்கள் யூனியன் சர்க்காருக்கு விடவில்லையானால், சமஸ்தான பிரதிநிதிகள் யூனியன் பார்லிமென்டில் அந்த விஷயங்கள் பற்றி வோட்டுச் செய்வது எவ்வாறு பொருத்தமாகும்? யூனியன் நிர்வாக சபையிலுள்ள சமஸ்தான பிரதிநிதிகள்

நிர்வாக சபையில் இந்த விஷயம் வரும்போது கலந்து கொள்வதா இல்லையா? இப்படி பலவாறான தர்ம சங்கடங்கள் ஏற்படும்.

இந்த சங்கடத்தை தவிர்ப்பதற்கு என்ன வழி? தூது கோஷ்டியினர் இதைப் பற்றி தம் அறிக்கையில் சர்ச்சை செய்யவில்லை.

ஆனால் சில உடன்படிக்கைகள் மூலம் யூனியன் சர்க்காருக்கும் சமஸ்தானங்களுக்கும் "செலாவணி, சுங்கம்" இரண்டையும் பற்றி சில இணைப்புகள் ஏற்படுத்தலாம். இப்போதுள்ள அரசியல் நிலைமை இதுதான்.

உதாரணமாக, வெளிநாட்டு சுங்கம் விதிக்கும் உரிமை இப்போது மத்ய சர்க்காருக்குத்தான் இருக்கிறது. இந்த சர்க்கார் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு மட்டும்தான் சட்டம் இயற்ற முடியும். ஆனால் மத்ய சர்க்கார் விதிக்கும் சுங்கங்களை சமஸ்தானங்களும் விதிக்கும்படி வைசிராய் (பிரிட்டிஷ் சர்க்காரின் ஆதிபத்ய அதிகாரத்தின் மூலம்) செய்ய முடிகிறது. தீப்பெட்டிக்கு பிரிட்டிஷ் இந்தியாவில் வரி போட்டால், சமஸ்தானங்களும் அந்த வரியை விதிக்கும்படி வைசிராய் செய்யமுடிகிறது. மேற்கு கடற்கரையோரமாகவுள்ள சில கத்தியாவாட் பிரதேச சமஸ்தானங்கள் பிரிட்டிஷ் இந்திய விகிதப்படி சுங்கம் விதித்து, வரியில் ஒரு பகுதியைத் தாமே வைத்துக்கொள்ள அனுமதிக்கப் படுகிறார்கள். இவ்வாறு வைசிராயின் செல்வாக்கு மூலம் அமலிலிருந்து வரும் "ஏற்பாடுகளை" "உடன்படிக்கைகளாக" மாற்ற முடியும்.

மத்ய சர்க்காரிடம் மாகாணங்கள் ஒப்படைக்கத் தயாராயிருக்கும் எல்லா விஷயங்களையும் சமஸ்தானங்களும் மத்ய சர்க்காரிடம் ஒப்படைப்பதுதான் சரியான முறையாக இருக்கும். அதற்கு அவை தயாராயில்லையென்றால், அந்த எல்லா விஷயங்களையும் பற்றி உடன்படிக்கை ஏற்படுவது அவசியம்.

பதினொன்றாவது அத்தியாயம்

# தொகுதி வட்ட சர்க்கார்கள்

நாது கோஷ்டியாரின் திட்டத்தில் மிகவும் புதுமையான அம்சம், தொகுதி வட்ட சர்க்கார்கள் பற்றிய சிபார்சுகளே. சமஷ்டிகள் யாவற்றிலும் அரசுரிமையின் அம்சங்கள் சமஷ்டி சர்க்காரிடமும், அதைச் சேர்ந்துள்ள மாகாணங்களிடமும் பங்கிடப்பட்டிருக்கும். சில மாகாணங்கள் மட்டும் கலந்து கொள்வதாக மற்றொரு சர்க்காரை அமைப்பதென்பது ஒரு புதுமையே.

உதாரணமாக, அமெரிக்காவை எடுத்துக் கொள்வோம். அங்கு "அமெரிக்க ஐக்கிய நாடுகள் சர்க்கார்" என ஒரு மத்ய சர்க்கார் இருக்கிறது, அதன் எல்லைக்குள் 48 "நாடுகள்" அல்லது மாகாணங்கள் இருக்கின்றன. இந்த 48 மாகாணங்களில், சில மாகாணங்கள் மட்டும் சேர்ந்து தம்மிடையே ஒரு சர்க்காரை அமைத்துக் கொள்வதென்ற ஏற்பாடு அங்கு இல்லை. அதாவது மத்ய சர்க்கார், மாகாண சர்க்கார் என்ற இரண்டு வகை சர்க்கார்கள் தான் உண்டு. மாகாண சர்க்காருக்கும் மத்ய சர்க்காருக்கும் நடுவில் ஒரு "கோஷ்டி சர்க்கார்" கிடையாது. மாகாணங்கள் என்னென்ன காரியங்கள் செய்யக்கூடாது என்பதை அமெரிக்க அரசியலமைப்பில் சொல்லியிருக்கிறார்கள். "எந்த மாகாணமும் உடன்படிக்கைகள் செய்து கொள்ளவோ கோஷ்டிகள் (சம்மேளனங்கள்) அமைத்துக் கொள்ளவோ" கூடாது என்று அரசியலமைப்பு சட்டத்தில் தடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தியாவில் இப்படி ஒரு புதுமையான ஏற்பாடு இருப்பதற்கு நாது கோஷ்டியினர் யோசனை சொல்லியிருக்கிறார்கள்.

ஏன் இங்கு இப்படி ஒரு புதுமையான ஏற்பாட்டை புகுத்துகிறார்கள் என்று சிலர் திகைக்கலாம். முஸ்லிம் லீகர்களின் தனி ராஜ்யக் கோரிக்கையை ஓரளவு திருப்தி செய்யவே இவ்வாறு செய்கிறார்கள்.

### பாகிஸ்தானுக்கு பதிலாக

வட மேற்கு இந்தியாவில் வட மேற்கு எல்லைப்புற மாகாணம், பஞ்சாப், சிந்து, பலுச்சிஸ்தான் ஆகிய நான்கு மாகாணங்களிலும், ஹிந்துக்களை விட முஸ்லிம்கள் அதிகம். இந்த மாகாணங்களிடையே ஒரு ஐக்கியத்தை ஏற்படுத்தினுல், முஸ்லிம்களே மெஜாரிட்டியாக உள்ள ஒரு பொது சர்க்காரை அங்கு ஏற்படுத்த முடியும் என்று சுமார் 15 வருஷங்களுக்கு முன் சில பஞ்சாபி முஸ்லிம்கள் நினைத்தார்கள். வட மேற்கு இந்தியாவிலுள்ள அந்த முஸ்லிம் பிரதேசத்துக்கு பாகிஸ்தான் என்று ஒரு பொதுப் பெயர் கொடுக்கலாமென்று அவர்கள் நினைத்தார்கள். இந்தப்புதிய கருத்துப் பற்றி பிரசாரம் நடந்தது. பிறகு வட கிழக்கே வங்காள மாகாணத்தில் முஸ்லிம்கள் மெஜாரிட்டியாக இருப்பதால் அதையும் முஸ்லிம் மாகாணமாக மதித்து, மேற்கே உள்ள பாகிஸ்தானுடன் ஒரு சமஷ்டியில் சேர்க்கலாமே என்ற உணர்ச்சி தலையெடுத்தது. பின்னர் முஸ்லிம் மாகாணங்களுக்கும், "ஹிந்து மாகாணங்களுக்கு மிடையே" ஒரு சம்பந்தமும் வேண்டாம் என்றும், முஸ்லிம் மாகாணங்களை ஹிந்து இந்தியாவிலிருந்து பிரித்து, தனி ராஜ்யமாக ஆக்கி விடலாமென்றும் யோசித்தனர். இவ்வாறு வங்காளத்தை ஹிந்து இந்தியாவிலிருந்து துண்டித்து விடுவதானுல், அதற்கு கிழக்கே உள்ள அஸ்ஸாம் மாகாணம் (ஹிந்துக்கள் மெஜாரிட்டியாகவுள்ள மாகாணம்) இந்தியாவுடன் தொடர்பற்றுப் போய் விடும். தனி ராஜ்யமாக இருப்பதற்கு போதிய ஜனத் தொகையும் இதர வசதிகளும் அஸ்ஸாமுக்கு இல்லை. என்ன செய்வது? அதையும் வங்காளத்துடன் சேர்த்துவிட்டால் மொத்த ஜனத் தொகையில் முஸ்லிம்களுக்கு மெஜாரிட்டி இருக்கும். ஆகையால் அவ்வாறு செய்து விடலாமென்று பாகிஸ்தான் வாதிகள் கோர ஆரம்பித்தனர்!

அவர்களது திட்டத்தின்படி பார்த்தால் (1) வட மேற்கு எல்லை மாகாணம், பஞ்சாப், பலுச்சிஸ்தான், ஸிந்து, வங்காளம், அஸ்ஸாம் ஆகிய 6 மாகாணங்களும்

இஸ்லாமிய ராஜ்யம் அல்லது பாகிஸ்தான் சமஷ்டியாக இருக்கும். அந்த சமஷ்டியில் மேற்கு பாகிஸ்தான், கிழக்கு பாகிஸ்தான் என்ற இரண்டு உறுப்புகள் இருக்கும். மேற்கு பாகிஸ்தானில் நான்கு மாகாணங்கள்; அந்த நான்கு மாகாணங்களுக்கும் தனித்தனி சர்க்கார் இருக்கும். அதே போல வங்காளமும் அஸ்ஸாமும் சேர்ந்து கிழக்கு பாகிஸ்தான். அந்த இரண்டு மாகாணங்களுக்கும் தனி சர்க்கார் இருக்கும். ஆனால் மேற்கு பாகிஸ்தான் மாகாணங்களுக்கும், கிழக்கு பாகிஸ்தான் மாகாணங்களுக்கும் பொதுவாக ஒரு "பாகிஸ்தான் சமஷ்டி" இருக்கவேண்டும். அந்த சமஷ்டி சர்க்காருக்கு தனி ராணுவம், வெளி நாட்டு உறவு, முதலிய பூர்ண சுதந்திர ராஜாங்க அந்தஸ்து இருக்கவேண்டும். இது லீகின் லக்ஷியம்.

லீகின் இந்த லக்ஷியத்தில் (1) பூர்ண ராஜாங்க கௌரவம் என்ற அம்சத்தையும் (2) கிழக்கு பாகிஸ்தானையும், மேற்கு பாகிஸ்தானையும் ஒரு சமஷ்டியாக இணைக்க வேண்டும், என்ற அம்சத்தையும் நீக்கிவிட்டு, தொடர்ச்சியாக உள்ள முஸ்லிம் மாகாணங்கள் தம்மிடையே ஒரு பொது சர்க்காரை அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற உணர்ச்சியை திருப்தி செய்ய, பிரிட்டிஷ் கோஷ்டியார் முயன்றிருக்கிறார்கள். லீகர்கள் கோரியதை அவர்களுக்குக் கொடுக்காவிட்டாலும், வெற்றி பெற்று விட்டதாகச் சொல்லிக்கொள்ள லீகர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும்: புதிய திட்டத்தில் பாகிஸ்தான் இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள வசதியளித்தால், உண்மையில் அவர்கள் கோரியது முழுதும் அதில் இல்லாவிட்டால் கூட, அவர்கள் அதை ஏற்றுக் கொள்வார்கள் என்று தூது கோஷ்டி நினைத்தது. ராஜ தந்திர பேரங்களில் இப்படியெல்லாம் நடப்பது சகஜம் என்பதையும் சில சமயங்களில் "வெற்றிகரமான வாபஸ்" முறையை அனுஷ்டிக்கவேண்டுமென்பதையும், ஜனாப் ஜின்னா அறியாதவரல்ல. ஆகையால் அவர் "பாகிஸ்தான்! பாகிஸ்தான்!" என்று பொதுவாகச் சொல்லிக் கொண்டிருந்தாரே யொழிய, வரையறையாக இன்னதுதான் பாகிஸ்

தான் என்று இது வரை சொன்னதில்லை. லீக் மகாநாட்டில் நியமிக்கப்பட்ட ஒரு கமிட்டியார் ஒரு திட்டத்தை தயாரித்தபோது கூட "இது லீகின் அங்கீகாரம் பெற்ற திட்டமென யாரும் கருத வேண்டாம்" என்று அவர் எச்சரிக்கை செய்திருந்தார். ஆகையால் வட மேற்கிலுள்ள முஸ்லிம் மாகாணங்கள் ஒருதொகுதியாக இணைக்கப்பட்டு, அதுபோலவே வட கிழக்கிலும் ஒரு தொகுதி அமைக்கப் பட்டால் தாம் கோரிய இரண்டு பாகிஸ்தானும் கிடைத்து விட்டதாகச் சொல்லிக்கொண்டு அந்த ஏற்பாட்டை ஜனுப் ஜின்னு ஏற்றுக் கொள்ளக் கூடும் என்று தூது கோஷ்டியினருக்குத் தோன்றியது. ஆகையால் தொகுதி வட்டப் பிரேரணையை "பாகிஸ்தான்" லக்ஷியத்துக்கு ஒரு மாற்றுப் பிரேரணையாக தூதுகோஷ்டியினர் தயாரித் திருக்கிறுர்கள்.

### இதிலுள்ள அநீதி

இதில் ஒரே ஒரு சிக்கலும் அநீதியும் இருக்கிறது. அதாவது ஜின்னு வட மேற்கு பாகிஸ்தானில் சேர்க்க விரும்பும் எல்லைப்புற மாகாணத்தினர், பாகிஸ்தான் லக்ஷியத்தை விரும்பவில்லை. அது போலவே வட கிழக்கில் உள்ள அஸ்ஸாம், முஸ்லிம் மெஜாரிட்டிமாகாணமே அல்ல. ஆகையால் வட மேற்கு எல்லைப்புற மாகாணத்தையும் அஸ்ஸாமையும் அந்த தொகுதி வட்டங்களில் இணைக்க எவ்வித நியாயமும் இல்லை. நியாயம் இல்லையென்பது தூது கோஷ்டியினருக்குத் தெரியும். ஆனுல் நியாயத்தை மட்டும் கவனித்து, இந்த இரண்டு மாகாணங்களையும் முஸ்லிம் தொகுதி வட்டத்துக்கு புறம்பானவை யென்று ஒதுக்கினுல், ஜனுப்ஜின்னு தாம் வெற்றியடைந்ததாகச் சொல்லிக் கொள்ள முடியாது. தம்மால் கிளப்பி விடப்பட்ட ஜனங்களைத் திருப்தி செய்ய அவரால் முடியாது போய்விடும். ஆகையால் அவர் தூதின் திட்டம் முழுவதையுமே நிராகரித்து விடுவார். "திட்டம் நியாயமாக இருந்தால் மட்டும் போதாது; அதை ஜின்னு நிராகரிக்க முடியாமலும் இருக்கவேண்டும்" என்று தூது கோஷ்டியினர் கருதினர். எது சாத்தியம் என்பதையறிந்து, அதற்காக முயற்சிப்பது

தான் ராஜ தந்திரம். எது நியாயம் என்று மட்டும் கவனித்தால் போதாது: எது சாத்தியம் என்றும் கவனிக்க வேண்டும். உடன்பாடு ஏற்படுவதற்கு வழியில்லாமல் "நியாயம், நியாயம்" என்று வற்புறுத்திக் கொண்டிருப்பது பயன் படாது என்று தூது கோஷ்டியினர் நினைத்தனர்.

## கட்டாயம் இல்லை


ஆகையால் வட மேற்கு இந்தியாவில் முஸ்லிம் மெஜாரிட்டியுள்ள 4 மாகாணங்களை ஒரு தொகுதியாகவும், வட கிழக்கு இந்தியாவில் வங்காளம், அஸ்ஸாம் மாகாணங்களை ஒரு தொகுதியாகவும், தொகுதி வட்ட சட்ட சபை, நிர்வாக சபை முதலிய அங்கங்களுடன் சிருஷ்டிக்கலாமென தமது திட்டத்தில் "ஆசை காட்டி" சிபார்சு செய்திருக்கிறார்கள். இவ்வாறு தொகுதி வட்டங்கள் "ஏற்படலாம்"என்று சொல்லியிருக்கிறார்களே ஒழிய, ஏற்பட்டே தீர வேண்டும் என்று சொல்லவில்லை. ஏற்படலாமா, வேண்டாமா என்று முடிவு செய்யும் பொறுப்பை அரசியல் நிர்ணய சபையிடம் விட்டிருக்கிறார்கள். இந்த சிபார்சிலுள்ள குறைகளைப்பற்றி ஆராயுமுன் தூது கோஷ்டியினர் என்ன வாசகத்தில் இந்த சிபார்சை அமைத்திருக்கிறார்கள் என்பதை கவனிப்போம்.

> " மாகாணங்கள் தம்மிடையே தொகுதி வட்டங்கள் அமைத்துக்கொள்ள சுதந்திர முண்டு. தொகுதி வட்டங்களுக்கு சட்ட சபைகளும் நிர்வாக சபைகளும் இருக்கலாம். எந்த மாகாண விஷயங்களை பொதுவில் நிர்வகிப்பதென்று தொகுதி வட்டங்கள் நிச்சயித்துக் கொள்ளலாம்" என்று அரசியல் திட்டத்தின் அடிப்படைபற்றிய 15-வது பாராவில் சொல்லுகிறார்கள்

எந்த மாகாணம் வேண்டுமானாலும் வெறெந்த மாகாணத்துடனும் தொகுதியாகச் சேருவதா? தொகுதி வட்டம் வேண்டுமா வேண்டாமா என்பதை யார் நிச்சயம் செய்வது? எந்த விஷயங்களை பொதுவாக நிர்வகிப்பதென்பதை யார் நிச்சயம் செய்வது! இந்தக்

கேள்விகளுக்கு 19-வது பாராவில் (அரசியல் நிர்ணய சபை பற்றிய பாராவில்) 4, 5, வது ஷரத்தில் சொல்கிறார்கள்.) அந்தப் பாராவை அப்படியே மொழி பெயர்க்காமல் அதன் கருத்தை மட்டும் தருகிறோம்.

## “ஏ” தொகுதி வட்டம்.




(1) ஐக்கிய மாகாணம், (2) பிஹார், (3) மத்திய மாகாணம். (4) ஒரிஸ்ஸா, (5) சென்னை மாகாணம், (6) பம்பாய் மாகாணம்.

இவற்றை ஹிந்துஸ்தான் தொகுதி வட்டம் என்பார்கள். பிரதான தொகுதிவட்டம் என்றும் சொல்லலாம். இதில் ஹிந்துக்களே மெஜாரிட்டி. தூதுகோஷ்டியின் கருத்துப் படி இதற்கு “ஏ” தொகுதிவட்டம் என்று பெயர் வைக்கலாம்.

அரசியல் நிர்ணய சபையில் மாகாணப் பிரதிநிதிகள் எல்லோரும் சேர்ந்து ஒரு சபைத் தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள். மைனாரிட்டி உரிமைகள் சம்பந்தமாக ஒரு ஆலோசனை போர்டும் நியமிக்கப்படும்.

பிறகு அந்த பிரதிநிதிகள் ஏ, பி, ஸி என்று மூன்று பிரிவாகப் பிரிவார்கள்.

இந்தப் பிரிவில் உள்ள பிரதிநிதிகள் அதிலுள்ள ஒவ்வொரு மாகாணத்துக்கும் வேண்டிய அரசியலமைப்பை நிர்ணயிப்பார்கள்

அதிலுள்ள மாகாணங்களுக்கு ஒரு தொகுதி வட்ட சர்க்கார் வேண்டுமா வேண்டாமா என்பதை நிச்சயிப்பார்கள்.

தொகுதி வட்டம் வேண்டியதுதான் என்று முடிவு செய்தால், மாகாணங்களுக்குரிய எந்த விஷயங்களைத் தொகுதி வட்ட சர்க்காரிடம் விட வேண்டும் என்பதை நிர்ணயிப்பார்கள்.

தொகுதி வட்ட சர்க்காரின் அரசியல் நிர்ணயிக்கப்பட்ட பிறகு, அந்த தொகுதி வட்டத்தை விட்டு பிரிந்து போகவேண்டுமென்று தீர்மானிக்க ஒவ்வொரு மாகாணத்துக்கும் உரிமை உண்டு. அவ்வாறு பிரிந்து போவதாயின் பின்வரும் முறையை அனுஷ்டிக்கவேண்டும்:—

புது அரசியல் ஏற்பாடு அமலுக்கு வந்த பிறகு, எந்த மாகாணமும் அது உள்ள தொகுதி வட்டத்திலிருந்து பிரிந்து வெளியேறுவதாகத் தீர்மானிக்கலாம். புது அரசியலின்படி பொதுத் தேர்தல் நடந்து, அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட சபையில் அதைத் தீர்மானம் செய்ய வேண்டும்.


என்று தூது கோஷ்டி கூறுகிறது. ஏ, பி, ஸி. பிரிவு எவையென்பது 19-வது பாராவின் முதல் ஷரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

(1) சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணம், பிஹார் மத்ய மாகாணம், ஒரிஸ்ஸா, இவை கொண்ட பிரிவுக்கு 'ஏ' பிரிவு என்று பெயர்.

(2) பஞ்சாப், வட மேற்கு எல்லை, சிந்து மூன்று மாகாணங்களும் 'பி' பிரிவு. பலுச்சிஸ்தான் பிரதேசத்து பிரதிநிதியும் இந்தப் "பிரிவி"லேயே இருப்பார்.

(3) வாங்காளமும், அஸ்ஸாமும் "ஸி" பிரிவு

## "பி", "ஸி" தொகுதி வட்டங்கள்.




படத்தில் கருப்பாக காட்டப்பட்டிருக்கும் இடத்தையே லீகர்கள் முஸ்லிம் இந்தியா என்று சொல்கிறார்கள்.

(1) பலுச்சிஸ்தான், (2) சிந்து, (3) பஞ்சாப், (4) வட மேற்கு எல்லை மாகாணம். இவை நான்கும் "பி" தொகுதி வட்டம், (5) வங்காளம், (6) அஸ்ஸாம் இவ் விரண்டும் "ஸி" தொகுதி வட்டம்.

கருப்பாக காட்டப்பட்டிருக்கும் பிரதேசத்திலேயே சில வெள்ளையான இடங்களும் இருக்கின்றன. அவை சமஸ்தானங்கள்.

பாகிஸ்தான், ஹிந்துஸ்தான் என்ற வார்த்தைகளை அது கோஷ்டியினர் உபயோகிக்கவில்லை யாயினும், நாம் இந்த ஏ, பி, ஸி, பிரிவுகளை முறையே ஹிந்துஸ்தான் தொகுதி வட்ட பிரிவு, மேற்கு பாகிஸ்தான் தொகுதி வட்ட பிரிவு, கிழக்கு பாகிஸ்தான் தொகுதி வட்ட பிரிவு என்று சொல்லாம். அல்லது "பி" பிரிவை பஞ்சாப் தொகுதிவட்ட பிரிவு என்றும், 'ஸி' பிரிவை வங்காள தொகுதி வட்ட பிரிவு என்றும் சொல்லலாம்.

இப்போது இந்த ஷரத்துக்களின் கருத்தை கவனிப்போம். அஸ்ஸாமும், வட. மேற்கு எல்லைப்புற மாகாணமும் தம்மை இஸ்லாமிய தொகுதி வட்டத்தில் ஐக்கியப் படுத்திக்கொள்ள விரும்பவில்லை யென்று வைத்துக் கொள்வோம். அரசியல் நிர்ணய சபையில் அவற்றின் நிலைமை யென்ன?

## அஸ்ஸாம் மாகாணத்தின் நிலைமை

மாகாணங்கள் தொகுதி வட்டங்களை ஏற்படுத்திக் கொள்ள சுதந்திரமுண்டு என்று சொல்கிறார்கள். "ஏற்படுத்திக்கொள்ள சுதந்திரமுண்டு" என்று சொன்னால், ஏற்படுத்திக் கொள்ளாதிருக்கவும் சுதந்திரமுண்டு என்று ஏற்படுகிறது. அரசியல் நிர்ணய சபையின் அந்தந்தப் பிரிவுகளில் போய் உட்கார்ந்த பிறகு "ஓர் தொகுதி வட்டம் வேண்டுமா வேண்டாமா என்று தீர்மானித்துக் கொள்ள" உரிமை இருக்கிறது. தீர்மானிக்கும் உரிமை யாருக்கு? எல்லாப் பிரதிநிதிகளும் சேர்ந்து தீர்மானிப்பார்களா? அல்லது ஒவ்வொரு மாகாணப் பிரதிநிதிகளும் தம்மிடையே வோட்டெடுத்துத் தீர்மானிப்பதா? உதாரணமாக அஸ்ஸாம் மாகாணத்தை எடுத்துக்கொள்வோம். அதில் வங்காளப் பிரதிநிதிகள் 60 பேர், அஸ்ஸாம் பிரதிநிதிகள் பத்து பேர்; இந்த 70 பேரிடம் வோட்டெடுத்தால் அஸ்ஸாமின் 10 பிரதிநிதிகளும் எதிர்த்தால் கூட,

அஸ்ஸாமின் மீது தொகுதி வட்ட ஏற்பாட்டை புகுத்த முடியும். இது நியாயமல்ல. தவிரவும் இவ்வாறு ஏற்பாடு செய்வது 15-வது பாராவில் மாகாணங்கள் தொகுதியாக சேர "சுதந்திரமுண்டு" என்று உரிமையை மாகாணங்களிடம் விட்டதற்கு முரணுகும். ஆகையால் அரசியல் நிர்ணய சபையில் ஒரு மாகாணம் தொகுதி வட்டத்தில் சேர்க்கப்படவேண்டுமா இல்லையா என்பதை அந்த மாகாணத்துப் பிரதிநிதிகளின் தீர்மானத்துக்கே விட வேண்டும் என்று காங்கிரஸ் கோருகிறது.

தொகுதி வட்டம் வேண்டாமென்ருல், பின்னர் பிரிந்து போவதற்கு தூதுகோஷ்டி இடமளித்திருக்கிறதே என்று சிலர் சமாதானம் கூறலாம். அது நியாயம் போலவும் தோன்றலாம். இதில் ஓர் சங்கடம் இருக்கிறது.

ஏனென்ருல் மாகாணங்களின் அரசியலை அமைக்கும் உரிமையை, அந்தந்த மாகாணத்துப் பிரதிநிதிகளிடம் விடாமல் தொகுதி வட்டத்திலுள்ள எல்லா பிரதிநிதிகளிடமும் அவ்வுரிமையை கொடுத்திருக்கிருர்கள். அதாவது, அஸ்ஸாமின் அரசியல் அஸ்ஸாம்காரரால் நிர்ணயிக்கப்படாமல் வங்காளிகளும் அஸ்ஸாம்காரரும் சேர்ந்து நிர்ணயிக்கப் படுவதாக இருக்கிறது. அதில் வங்காளிகள் வோட்டு 60, அஸ்ஸாம்காரர்வோட்டு 10 தான். அதாவது அஸ்ஸாம் பிரதிநிதிகளை லக்ஷியம் செய்யாமல் வங்காள பிரதிநிதிகள் அஸ்ஸாமின் அரசியலை நிர்ணயித்து அஸ்ஸாம் சட்டசபையில் முஸ்லிம்களுக்கும், வங்காளிகள் அதிகமாக வசிக்கும் ஸில்ஹெட் ஜில்லாவுக்கும் மலைப் பிரதேசத்துக்குமே அதிகமான ஸ்தானங்களை ஒதுக்கி பிற்காலத்து அஸ்ஸாம் சட்ட சபையில் பாகிஸ்தான் வாதிகளுக்கே மெஜாரிட்டி இருக்கும்படி செய்து விட முடியும்.

ஆகையால் 19 வது பாராவில் தூதுகோஷ்டியார் ஏற்படுத்தியுள்ள நடைமுறை 15 வது பாராவில் மாகாணத்துக்கு கொடுத்த அபிப்பிராய சுதந்திரத்துக்கு முரணுணதேயாகும்.

சிந்துவின் நிலைமை

அரசியல் நிர்ணயிக்கப்பட்ட பிறகு எந்த மாகாணமும் சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றி பிரிந்து போகலாம் என்று 19-வது பாராவின் 8-வது ஷரத்து கூறுகிறது. பிறகு பிரிந்துபோகலாம் என்று சொல்வதினாலே, அரசியலமைப்பு ஏற்படுவதற்கு முன்னர் அதாவது அரசியல் நிர்ணயசபையின் ஆரம்பத்திலேயே ஒதுங்கி நிற்க உரிமை இல்லையென்று சிலர் வாதிக்கலாம். அது சரியான வாதமாகாது. அரசியல் நிர்ணயிக்கும் முன்னரும் விலகலாம்; பின்னாலும் விலகலாம். உதாரணமாக, ஸிந்து மாகாணத்தை எடுத்துக் கொள்வோம். பொதுப்படையாக பேசுமிடத்து அந்த மாகாணம் பஞ்சாப் தொகுதி வட்டத்தில் சேரவே விரும்பும். ஆனால் அந்த தொகுதி வட்டத்தில் பஞ்சாபின் ஆதிக்கம் மிதமிஞ்சிப்போய் தம்முடைய நிலைமை மோசமாகிவிடுமென்று ஸிந்து மாகாணத்தினர் பயப்படலாம். அந்த பயத்தை நீக்கும்படியான வகையில் தொகுதிவட்டத்தின் அரசியல் அமைக்கப் படுமானால், அந்த மாகாணம் அரசியலமைப்பின் இறுதியில் தொகுதி வட்டத்திலேயே இருக்கும். தயாரிக்கப்பட்ட அரசியலமைப்பு அதற்கு பிடிக்கவில்லையானால், அதற்கு வெளியேற உரிமையுண்டு. அதாவது ஸிந்து மாகாணம் ஆரம்பத்தில் தொகுதிவட்ட அரசியல் நிர்ணயத்தில் கலந்து கொள்ளவும், பின்னர் வெளியேறவும் உரிமையுண்டு.

ஆகவே (1) ஆரம்பத்திலேயே விலகிவிட சுதந்திரமுண்டு (2) அவ்வாறு விலகாமல் அரசியல் நிர்ணயத்தில் கலந்து கொண்டு இறுதியில் விலகவும் சுதந்திரமுண்டு.— என்பதுதான் தூதுகோஷ்டியின் அறிக்கைக்கு நியாயமான வியாக்கியானமாகும்.

அஸ்ஸாம் போன்ற மாகாணம் முதல் வழியை கடைப்பிடிக்கலாம். ஸிந்து போன்ற மாகாணம் இரண்டாவது வழியைக் கடைப்பிடிக்கலாம்.

தொகுதி வட்டம் வேண்டுமா வேண்டாமா என்பது பற்றி ஒவ்வொரு மாகாணத்தின் பிரதிநிதிகளும் தனித் தனியாக வோட்டுச் செய்ய உரிமை கொடுத்து அந்தந்த மாகாணப் பிரதிநிதிகளின் இஷ்டப்படியே முடிவு செய்ய வேண்டும்.

இதுதான் தூதுகோஷ்டியின் அறிக்கைக்கு நியாய மான வியாக்கியானம் என்று காங்கிரஸ் கூறுகிறது. இந்த வியாக்யானம் சரியல்லவென்று இப்போது தூது கோஷ்டி சொல்லுகிறது. ஆனால் இதைப்பற்றி வியாக் கியானம் செய்ய தூதுகோஷ்டிக்கு உரிமையில்லை. சட்டம் இயற்றப்பட்ட பிறகு, அதைப்பற்றி வியாக் கியானம் செய்ய நீதிமன்றத்துக்குத்தான் உரிமையுண்டே ஒழிய, சட்டசபைக்கு அந்த உரிமை கிடையாது. அது போல தூதுகோஷ்டியின் அறிக்கைக்கு வியாக்கியானம் செய்ய கோர்ட்டுக்குத்தான் உரிமையென்றும், இதை கோர்ட்டில்வாதிக்க தயாரென்றும் காங்கிரஸ் கோரினால் அது முற்றிலும் நியாயமான கோரிக்கையேயாகும்.

## தொகுதிவட்டம் எதற்காக?

இந்த சர்ச்சை ஒருபுறமிருக்க, இந்த தொகுதிவட்ட ஏற்பாடு அவசியமா என்பதையும் கவனிக்கவேண்டும். மத்திய சர்க்காரிடம் இன்னும் பல "விஷயங்களை" விட்டு விட்டால், தொகுதிவட்டங்கள் அமைக்க அவசியமில்லை. அவ்வாறின்றி பெரும்பாலான "விஷயங்களை" மாகாணங் களிடம் விடும்போது, அந்தந்த பிரதேசத்தில் சில விஷயங்களை பொதுவாக நிர்வகிப்பதற்கு ஏதேனும் ஒரு ஸ்தாபனம் அவசியம்தான். ஆனால் அந்த ஸ்தாபனம் ஒரு சர்க்காராக இருக்க வேண்டுமென்பதில்லை. மத்திய சர்க்காரிலேயே (அதாவது அகில இந்திய யூனியன் சர்க் காரிலேயே) ஒவ்வொரு பிரதேசத்துக்கும் நீர்ப்பாசனம், ஆற்று வெள்ளக் கட்டுப்பாடு முதலிய விஷயங்களை பல மாகாணத்துக்கு பொதுவாக நிர்வகிப்பதற்கு அந்த பிர தேசத்துப் பிரதிநிதிகள் கொண்ட ஆலோசனை போர்டுகள் நியமிக்கலாம்.

ஆயினும் முஸ்லிம் லீகின் உணர்ச்சியை திருப்தி செய்வதற்காக, தூதுகோஷ்டி இந்த ஏற்பாட்டை சிபார்சு செய்திருக்கிறது. லீகின் "ராஜாங்க சுதந்திரமுள்ள பாகிஸ்தான்" கோரிக்கைக்கும், காங்கிரஸ் வாதிகள் கோரும் பிரிவினையில்லாத "அகண்ட ஹிந்துஸ்தான்" கோரிக்கைக்குமிடையே ஒரு சமரச ஏற்பாடாக இதை நாம் மதிக்க வேண்டும்.

இந்த தொகுதிவட்ட ஏற்பாட்டை 1944-ல் ராஜாஜி வெளியிட்ட திட்டத்துடனும், ஆசிரியர் கூப்லண்ட் தயாரித்த திட்டத்துடனும், ஒப்பிட்டால் இந்த பிரேரணையின் நன்மை தீமைகளை உணர முடியும்.

## தொகுதிவட்டமும் ராஜாஜி திட்டமும்

லீகின் பாகிஸ்தான் கோரிக்கைக்கும், தூதுகோஷ்டியின் "தொகுதிவட்ட" ஏற்பாட்டுக்கும் முக்கியமான வித்யாசம், அந்த தொகுதிவட்டங்கள் பூர்ண அதிகாரமுள்ள அரசாங்கங்களல்ல என்பதே.

ராஜாஜியின் திட்டம் பூர்ண சுதந்திரமுள்ள முஸ்லிம் அரசாங்கம் ஏற்படலாம் என்று சம்மதித்தது. ஆனால் அஸ்ஸாம் மாகாணத்தையோ, பஞ்சாபின் கிழக்கு ஜில்லாக்களையோ, வங்காளத்தின் மேற்கு ஜில்லாக்களையோ, பாகிஸ்தானில் சேர்க்க அவரது திட்டத்தின்படி இடம் கிடையாது. அதாவது ராஜாங்க கௌரவமுள்ள பாகிஸ்தானுக்கு அந்த திட்டத்தில் இடமுண்டு; ஆனால் அந்த பாகிஸ்தானின் விஸ்தீர்ணம் ஜனாப் ஜின்னா விரும்புவதைவிட மிகக் குறைவாக இருக்கும்.

ஆகவே, தூதுகோஷ்டியின் திட்டத்துக்கும் ராஜாஜியின் திட்டத்துக்குமுள்ள வித்யாசத்தை பின்வருமாறு குறிப்பிடலாம்:—இந்தியா முழுதுக்கும் ஒரு பொது சர்க்கார் வேண்டும் என்ற கொள்கையை காப்பாற்றி பாகிஸ்தான் விஸ்தீர்ணத்தை அதிகமாக்குகிறது தூதுகோஷ்டியின் திட்டம். ராஜாஜி திட்டமோ பாகிஸ்தான் பிரதேசத்தின் விஸ்தீர்ணத்தை குறைத்து, பொதுசர்க்கார் கொள்கையை தியாகம் செய்தது.

வங்காளத்தில் மேற்குப் பக்கமாக 8 ஜில்லாக்களும் வடக்குக் கோடியில் இரண்டு ஜில்லாக்களும் கல்கத்தா நகரமும், ராஜாஜியின் திட்டப்படி பாகிஸ்தானில் இருக்காது. அஸ்ஸாமில் ஸில்ஹெட் ஜில்லா தவிர மற்றவை பாகிஸ்தானுக்கு போகாது. பஞ்சாபில் கிழக்கிலும், வடகிழக்கிலும் உள்ள 12 ஜில்லாக்கள் பாகிஸ்தானில் சேர்க்கப்படாமல் ஹிந்துஸ்தானில் இருக்கும். ஏனென்றால் இவையெல்லாம் ஹிந்துக்கள் மெஜாரிட்டியாக உள்ள இடங்கள். ராஜாஜி திட்டப்படி கிழக்கு பாகிஸ்தான் ஜனத்தொகை சுமார் 441 லக்ஷம் (306 லக்ஷம் முஸ்லிம்; 135 லக்ஷம் முஸ்லிமல்லாதார்) தூதுகோஷ்டியின் திட்டப்படி கிழக்குத் தொகுதிவட்டத்தில் ஜனத்தொகை 705 லக்ஷம் (364½ லக்ஷம் முஸ்லிம்கள்; 340 லக்ஷம் ஹிந்துக்கள்) அதாவது ராஜாஜி திட்டப்படி 205 லக்ஷம் ஹிந்துக்கள் இஸ்லாமிய ஆட்சியிலிருந்து நீக்கப் படுகிறார்கள். அது போலவே மேற்கு பாகிஸ்தானில் ராஜாஜி திட்டப்படி ஜனத்தொகை 250 லக்ஷம். (188 லக்ஷம் முஸ்லிம்கள்; சுமார் 61 லக்ஷம் ஹிந்துக்கள்). தூதுகோஷ்டி திட்டப்படி வடமேற்கு தொகுதிவட்டத்தில் ஜனத்தொகை சுமார் 365 லக்ஷம் (அதில் முஸ்லிம்கள் 227 லக்ஷம்; ஹிந்துக்கள் 138 லக்ஷம்). மொத்தத்தில் இரண்டு பாகிஸ்தானையும் சேர்த்துக் கணக்கிட்டால் ராஜாஜி திட்டப்படி 281 முஸ்லிமல்லாதார் "இஸ்லாமிய ஆட்சியினின்று காப்பாற்றப்பட்டதாக" ஏற்படும்.

ராஜாஜி திட்டப்படி பாகிஸ்தான் சமஷ்டியின் ஜனத்தொகை 691 லக்ஷம். ஆனால் தூதுகோஷ்டியின் திட்டப்படி வடமேற்கு வடகிழக்கு தொகுதிவட்டங்களின் ஜனத்தொகை மொத்தம் 1070 லக்ஷம் பேர்.

இவ்வாறு ஜனத்தொகை கணக்குப் பார்த்தால், தூது திட்டத்தைவிட ராஜாஜி திட்டமே மேல் என்று தோன்றும்.

ஆனால் ராஜாஜி திட்டத்தில் பாகிஸ்தானுக்கு பூர்ண ராஜாங்க சுதந்திர அதிகாரமுண்டு. தூது திட்டத்தில் அது இல்லை. தூது திட்டத்தின்படி வெளி நாட்டார் சம்பந்தப்பட்டமட்டில் "இந்தியா ஒரே தேசம்" என்ற நிலைமை இருக்கும். ராணுவமும் ஒரே ராணுவமாக இருக்கும்.

ராஜாஜி திட்டத்தில் பாகிஸ்தான் பிரதேசத்துக்கும், "ஹிந்துஸ்தான்" பிரதேசத்துக்கும் பொதுவான ஒரு மத்ய சர்க்கார் இல்லை. ஆனால் அவரது பிரேரணைகளில் பின்வரும் வாசகம் இருக்கிறது :—

> "தேசப் பிரிவினை ஏற்படுமாயின் (அதாவது தனி ராஜ்யங்கள் ஏற்படுத்த வேண்டியதே என்று ஏற்பட்டு விட்டால்) யுத்தப் பாதுகாப்பு, போக்கு வரத்து வசதிகள் வர்த்தகம் முதலிய இதர விஷயங்கள் பற்றி பரஸ்பரம், ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்படும்."

தூது திட்டப்படி யூனியன் சர்க்காரிடம் ஒப்படைக்கும் பாதுகாப்பு, போக்குவரவு வசதிகள்,இவைபற்றி ராஜாஜி திட்டத்தில் பாகிஸ்தானுக்கும் ஹிந்துஸ்தானுக்கும் உடன்படிக்கை இருக்கும். அதோடு வர்த்தகம்பற்றியும் ஒப்பந்தம் இருக்கும்.

ஆனால் உடன்படிக்கைகள் எந்த விதத்திலும் பொது சர்க்காருக்கு சமமாகாது. ஒரு சுதந்திர சர்க்காரும், மற்றொரு சுதந்திர சர்க்காரும் உடன்படிக்கை செய்து கொண்டால் அவ்வொப்பந்தத்தை ஒரு சர்க்கார் நிராகரித்தால் அல்லது ரத்து செய்தால், மற்றொரு சர்க்கார் எதுவும் செய்யமுடியாது. ரத்துக்கு இணங்க வேண்டும் அல்லது யுத்த மிரட்டல்களை உபயோகிக்கவேண்டியிருக்கும். ஆகையால் எந்த உடன்படிக்கையும் பொது சர்க்காருக்கு சமமாகாது. தூதுதிட்டம் பொது சர்க்காரை அடிப்படையாகக் கொண்டது.*

---

* ராஜாஜியின் திட்டத்தையும், பிரிட்டிஷ் தூதின் திட்டத்தையும் நாம் இவ்வாறு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஒரு

(இதன் தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

ராஜாஜி திட்டப்படி, பஞ்சாப் மாகாணத்தையும், வங்காள மாகாணத்தையும் இரண்டாகப் பிரிக்கவேண்டியிருக்கும். பஞ்சாப் மாகாணத்தை இரண்டாகப் பிரித்து, ஒரு பகுதியை பாகிஸ்தானிலும், மற்றொன்றை ஹிந்துஸ்தானிலும் சேர்த்தால் சீக்கியர்களில் ஒரு பகுதியினர் (சுமார் 18 லக்ஷம் பேர்) பாகிஸ்தானிலும் மற்றொரு பகுதியினர் (சுமார் 21 லக்ஷம் பேர்) பஞ்சாபிலும் இருப்பார்கள். இது தவிர 12 லக்ஷம் பேர் சீக்கிய சமஸ்தானங்களில் இருப்பார்கள்.


---

(முன் பக்கத் தொடர்ச்சி)

விஷயத்தை மறந்துவிடக்கூடாது. கொள்கையை ஒப்புக்கொள்வதன் மூலம், எப்படியாவது இடைக்கால அகில இந்திய சர்க்காரில் ஜனாப் ஜின்னாவும், காங்கிரஸூம் ஒத்துழைத்து வேலை செய்தால், அந்த ஒத்துழைப்பின் மூலம் பரஸ்பரம் சௌஜன்யம் ஏற்பட்டு ஜனாப் ஜின்னா பிரிவினையே அனாவசியமென்று கருதக்கூடும் என்ற நம்பிக்கையுடனேயே ராஜாஜி தமது திட்டத்தை தயாரித்திருப்பார். லீகும் காங்கிரஸூம் பரஸ்பரம் சௌஜன்யமாகப் பழகுவதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டால் பிரிட்டனின் மத்யஸ்தத்தை எதிர்பார்க்காமல் ஒரு சமரசம் ஏற்படக்கூடும் என்று எதிர்பார்த்தே காந்திஜி 1944-ல் அந்த பிரேரணைகளுடன் ஜனாப் ஜின்னாவை சந்திக்க முன் வந்தார்.

ஆது திட்டத்தின் கருத்தை புரிந்துகொள்வதற்காக நாம் ராஜாஜி பிரேரணையை ஒவ்வொரு அம்சமாக தனித்தனி பிரித்து ஒப்பிட்டுள்ளோம். ஆனால், அவரது பிரேரணைகளில் பல அம்சங்களையும் ஓரே சித்திரத்தின் உறுப்புகளாக கவனிக்க வேண்டுமேயல்லாது, தனித்தனியாக மதிப்பிடுவது பொருந்தாது; அதில் சில பகுதிகளை ஏற்றுக்கொண்டு வேறு சில பகுதிகளை தள்ளிவிடுவது முறையாகாது. உதாரணமாக பிரிவினை அம்சத்தை மட்டும் ஏற்றுக்கொண்டு, மாகாண எல்லையை மாற்றும் யோசனையை ஜனாப் ஜின்னா எதிர்த்தால் அது முறையாகாது. அவர் அவ்வாறு செய்ததால்தான் அப்போது சமரசம் ஏற்படவில்லை.

இவ்வாறு தம்மை சிதற வைத்துக்கொள்ள சீக்கியர் விரும்பவில்லை. ஆகையால் ராஜாஜியின் திட்டம் சீக்கியரின் உணர்ச்சியை மிகவும் புறக்கணிப்பதாகும். பஞ்சாப் பிரிக்கப்படாமல் இருந்தால், அதில் ஹிந்துக்களும் சீக்கியர்களுமாக ஜனத்தொகையில் 100-க்கு 43 பேர் இருப்பார்கள். இவ்வளவு பெரிய மைனாரிட்டியை பாகிஸ்தான்





முஸ்லிம்கள் அலக்ஷியம் செய்ய முடியாது. பஞ்சாபை ஹிந்து பஞ்சாப், முஸ்லிம் பஞ்சாப் என்று பிரித்து விட்டால், முஸ்லிம் பஞ்சாபில் ஹிந்துக்கள் தொகை 100-க்கு 27 பேராக குறைந்துவிடும். அப்போது ஹிந்து மைனாரிட்டியை ஒரு வேளை முஸ்லிம்கள் அலக்ஷியமாக மதிக்கக்கூடும். ஆகையால் பஞ்சாபை இவ்விதம் பிரிப்பது பஞ்சாபி ஹிந்துக்களுக்கு பிடிக்காது.

சீக்கியர் விஷயத்தில் மற்றொரு விஷயமும் கவனிக்கத் தக்கதாகும். பஞ்சாப் இந்தியாவிலிருந்து பிரிக்கப்படாமல் "பஞ்சாபி" மாகாணமாக இருந்தால், சீக்கியருக்கு ஆக்ஷேபனை யில்லை. அவ்வாறின்றி அதை இஸ்லாமிய

ராஜ்யமாக ஆக்கினால், அவர்கள் சீக்கியர்களுக்கும் ஒரு தனி ராஜ்யம் வேண்டுமென்று கோருவது இயற்கையே. அவர்கள் இப்போது தூதுகோஷ்டியின் திட்டத்தையும் எதிர்ப்பது, வடமேற்கில் தொகுதிவட்டம் ஏற்படுத்தும் இஸ்லாமிய ராஜ்யமாகவே இருக்கும் என்ற கவலையால் தான்

வங்காளத்தின் நிலைமை

வங்காளத்தின் நிலைமையும் அப்படியே. ராஜாஜி திட்டப்படி ஹிந்து வங்காளம், முஸ்லிம் வங்காளம் என்று பிரிக்கும்போது, முஸ்லிம் வங்காளத்தின் ஜனத்தொகையில் 100-க்கு 27 பேர் தான் ஹிந்துக்கள். இவ்வாறு சிறிய



மைனாரிட்டியாக மாறுவதை வங்காள ஹிந்துக்கள் விரும்ப மாட்டார்கள். முஸ்லிம் ராஜ்யமாக இருந்தாலும் வங்காளத்தை பிளக்கக் கூடாதென்பதே அவர்களது உணர்ச்சி. அஸ்ஸாமில் உள்ள ஸில்ஹெட்டில் மைனாரிட்டியாக வாழும் வங்காளி ஹிந்துக்கள் இப்போது அஸ்ஸாமை வங்காளத்துடன் இணைக்கும் தொகுதிவட்ட ஏற்பாட்டை வரவேற்பதிலிருந்து வங்காளிகளின் மனப்பான்மையை நாம் உணரலாம். ராஜாஜியின் திட்டத்தை வங்காளிகள் விஷம்போல வெறுப்பார்கள்.

## கிரிப்ஸ் திட்டமும் தொகுதி வட்டமும்

தூதுகோஷ்டியின் திட்டம் போலவே, ஒரு அகில இந்திய யூனியன் இருக்க வேண்டுமென்றும், அதன் அரசியலை நிர்ணயிக்க ஒரு அரசியல் நிர்ணய சபை நியமிக்க வேண்டுமென்றும், கிரிப்ஸ் திட்டம் கூறியது. ஆனால் அந்த அரசியல் நிர்ணயிக்கப்பட்டபிறகு, எந்த மாகாணமேனும் அந்த அரசியல் தனக்குப் பிடிக்கவில்லையென்றால், வெளியேற உரிமை அளித்து, அதற்கு ஒரு நடைமுறையையும் லீகர்களுக்கு கிரிப்ஸ் அறிவித்தார்,


> "அகில இந்திய யூனியன் அரசியல் நிர்ணயிக்கப்பட்ட பிறகு அந்த அரசியலை மாகாண சட்டசபைகளின் வோட்டுக்கு சமர்ப்பிக்க வேண்டும். அதை ஆதரித்து 100-க்கு 60 பேர் வோட்டுச் செய்தால்தான் புது அரசியல் அமுலுக்கு வரும். சாதகமான வோட்டு 100-ல் 60-க்கு குறைவாக இருந்தால், அகில இந்திய யூனியனில் இருக்கவேண்டுமா, பிரிந்து போகவேண்டுமா என்று மாகாணத்தில் சர்வஜன வோட்டு எடுக்கப்படும். இந்த வோட்டில் பெரும்பாலான மக்கள் இந்திய யூனியனைவிட்டுப் பிரியவேண்டுமென்று தீர்மானித்தால், அந்த மாகாணம் யூனியனிலிருந்து பிரிக்கப்படும்" என்பது கிரிப்ஸ் திட்ட ஏற்பாடு.

இந்த திட்டத்தின்கீழ் ஒரு மாகாண சட்டசபையில் 100-க்கு 41 பேர் அகில இந்திய யூனியனை எதிர்த்தால் போதும்; உடனே சர்வஜன வோட்டு அவசியமாகிவிடும். அந்த சர்வஜன வோட்டில் ஹிந்துக்களும் கலந்துகொண்

டால், தமக்கு மெஜாரிட்டியிருக்காதென்று ஜின்னு பயந்தார். ஆனால் அந்தத் திட்டத்தின்படி பஞ்சாபும், சிந்துவும் ஒரு வேளை அகில இந்திய யூனியனிலிருந்து பிரிந்துபோயிருக்க முடியும். அவ்வாறு கவனிக்கும்போது பிரிட்டிஷ் தூதுகோஷ்டியின் திட்டம் சிறந்ததே. ஏனென்ருல் யூனியனிலிருந்து பிரிந்துபோக இதில் உரிமை கொடுக்கப்படவில்லை.

## கூப்லண்ட் திட்டமும், தொகுதி வட்டமும்

ஆசிரியர் கூப்லண்ட், இந்தியா முழுவதையும் பொருளாதார வசதிகளை முன்னிட்டு, 4 தொகுதி வட்டங்களாகப் பிரிக்க ஒரு திட்டம் சிபார்சு செய்திருக்கிருர். அதில்இரண்டு தொகுதி வட்டங்கள் முஸ்லிம் மெஜாரிட்டி



உள்ளனவாகவும், மற்ற இரண்டு தொகுதிகள் ஹிந்து மெஜாரிட்டியுள்ளனவாகவும் இருக்கும். (1) ஸிந்து நதிதீர தொகுதி வட்டம் (2) கங்கா நதி தொகுதி வட்டம் (3) கங்கை-பிரம்மபுத்ரா டெல்டா தொகுதி வட்டம் (4) தக்ஷிண தொகுதி வட்டம் என்று நான்கு பிரிவாக இந்தியாவைப் பிரிக்கலாம் என்பது அவரது யோசனை. 1-வது தொகுதியும் 3-வது தொகுதியும் முஸ்லிம் மெஜாரிட்டி பகுதிகள்; 2-ம், -4ம் ஹிந்து மெஜாரிட்டி பகுதிகள்.

இதற்கும், இப்போது ஸாதுகோஷ்டி சிபார்சு செய்வதற்கும் கொள்கையில் அதிக வித்யாசமில்லை. ஹிந்துஸ்தான் தொகுதி வட்டம் அல்லது "ஏ" தொகுதி வட்டமாக ஸாதுகோஷ்டி குறிப்பிடும் பிரதேசத்தை கூப்லண்ட் இரண்டாகப் பிரிக்கிறார். அவரது திட்டத்துக்கு "பிரதேசத்திட்டம்" என்று அவர் பெயர் கொடுக்கிறார். ஒவ்வொரு பிரதேச தொகுதி வட்டத்திலும் ஆங்காங்கு உள்ள சமஸ்தானங்களைச் சேர்க்கவேண்டுமென்பது, அவரது யோசனை. ஆனால் ஸாதுகோஷ்டியின் திட்டத்தில் சமஸ்தானங்கள் தொகுதி வட்டங்களிலோ, மாகாணங்களிலோ இணைக்கப்படாமல், அகில இந்திய யூனியனுடன் இணைக்கப்படுகின்றன.

கூப்லண்டும் ஒரு அகில இந்திய யூனியன் வேண்டியதே என்று சிபார்சு செய்கிறார். அந்த அகில இந்திய யூனியனுக்கு அவர் பாதுகாப்பு, வெளி நாட்டுறவு இவற்றை மட்டுமல்லாமல், வெளி நாட்டு வர்த்தகம், செலவணி இரண்டையும் சேர்க்கிறார். இவ்விஷயத்தில் அவரது திட்டம் ஸாதுகோஷ்டியின் திட்டத்தைவிட சிறந்ததே.

ஆனால் அவர் அகில இந்திய யூனியனை பிரதேச சர்க்கார்களின் ஏஜெண்டாகவே மதித்து சட்டசபை, நிர்வாக சபை இரண்டிலும், ஒவ்வொரு பிரதேசத்துக்கும் சமமாக பிரதிநிதித்வம் கொடுக்கவேண்டும் என்கிறார். அதாவது மொத்தம் 1347½ லக்ஷம் ஜனத்தொகையுள்ள முஸ்லிம் தொகுதி வட்டங்களுக்கு எத்தனை பிரதிநிதிகளோ அத்தனைதான் 2533 லக்ஷம் ஜனத்தொகையுள்ள ஹிந்து பிரதேசங்களுக்கும் உண்டாம்.

அகில இந்திய யூனியனுக்கு சட்டசபையே அவசிய மிருக்காது என்று அவர் சொல்கிறார். இந்த விஷயத்தில் அவர் சிபார்சு செய்யும் மத்ய சர்க்கார் தூதுகோஷ்டி சிபார்சு செய்யும் மத்ய சர்க்காரைவிட பலவீனமானது. அவர் சிபார்சு செய்யும் திட்டத்தை சமஷ்டி என்று மதிக்க முடியாது; "சம்மேளனம்" என்றே மதிக்க வேண்டும்.*

### அடுத்த அத்தியாயத்தில்

ஏற்கனவே விவரித்ததுபோக இன்னும் சில முக்கிய விஷயங்களும் தூதுத்திட்டத்தில் இருக்கின்றன. அவற்றை அடுத்த அத்தியாயத்தில் தருகிறோம். சட்டசபையில் வகுப்பு பிரச்னை, மத்ய சர்க்காரின் பொக்கிஷ வசதி, முதலிய விஷயங்கள் பற்றி தூது கோஷ்டியின் சிபார்சுகளை அந்த அத்தியாயத்தில் தருகிறோம்.

---

## பன்னிரண்டாவது அத்தியாயம்

# மத்ய சர்க்காரில் வகுப்புப் பிரச்னை

புதிய அரசியலமைப்புக்காகத் தூது கோஷ்டியார் சில "அடிப்படை அம்சங்களை" சிபார்சு செய்ததற்கே முக்கிய காரணம் வகுப்புப் பிரச்னைதான். இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில், ஹிந்துக்கள் பெரிய மெஜாரிட்டி; ஆகையால் இந்தியா முழுவதற்கும் பொதுவான சர்க்கார் ஒன்று இருக்கும்போது, அதில் ஹிந்து மெஜாரிட்டியின் ஆதிக்கமே இருக்கும்; அது தவிர்க்க முடியாத விஷயம் என்பதுதான் முஸ்லிம் லீக் தனி ராஜ்யமும் பிரிவினையும் கோரியதற்கு முக்கிய காரணம். ஆகையால் பிரிவினைக்கு அவசியமில்லாதபடி மதம், கலாச்சாரம் இவற்றில் எவ்வகையிலும் குறுக்கிடுவதற்கு இடமளிக்கக்கூடிய 'விஷயங்கள்' யாவற்றையும் மாகாண சர்க்கார்

---

* "சமஷ்டி"க்கும் "சம்மேளன"த்துக்கும் உள்ள வித்யாசத்தை 16-வது அத்தியாயத்தில் காணலாம்.

களிடம் விட்டு விட்டு, மதம், கலாச்சாரம் இவற்றுடன் சிறிதும் சம்பந்தப்படாத ராணுவம், வெளிநாட்டுறவு, போக்குவரவு சாதனங்கள் மூன்றும் மட்டுமே மத்ய சர்க்காரில் இருக்கும்படி தூதுகோஷ்டியார் சிபார்சு செய்தார்கள்.

அப்படி யிருந்தும் மத்ய சட்டசபையில் வகுப்புப் பிரச்னைகளை எவ்வாறு முடிவு செய்யவேண்டும் என்பது பற்றி தூதுகோஷ்டி திட்டத்தில் பின்வரும் கருத்துள்ள ஒரு ஷரத்து இருக்கிறது :

> அகில இந்திய யூனியனுக்கு நிர்வாக சபையும், சட்டசபையும் இருக்கும். அதில் பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகளும் சமஸ்தானப் பிரதிநிதிகளும் இருப்பார்கள்.
>
> யூனியன் சட்டசபையில் பெரிய வகுப்புப் பிரச்னையுடன் சம்பந்தமுள்ள பிரேரணை ஏதேனும் வந்தால், ஹிந்து அங்கத்தினர்களில் மெஜாரிட்டியும், முஸ்லிம் அங்கத்தினர்களில் மெஜாரிட்டியும், சபை முழுதின் மெஜாரிட்டியும் சம்மதிக்கும் முறையில்தான் அதை முடிவு செய்யவேண்டும்.

இவ்வாறு தூது திட்டத்தில் (15-வது பாரா 2-வது ஷரத்தில்) சொல்லி யிருக்கிறார்கள். மத்ய சர்க்காரின் விஷய ஜாபிதாவை எவ்வளவு தூரம் குறைக்க முடியுமோ அவ்வளவு தூரம் குறைத்த பிறகு, சட்டசபையில் வகுப்புப் பிரச்னைகளுக்கென்று தனி ஏற்பாடு எதற்கு என்று சிலர் ஆச்சரியப்படலாம். ஆனால் இவ்வாறு ஒரு ஷரத்தைச் சேர்த்ததற்கு ஒரு காரணம் உண்டு. அதாவது யூனியன் சர்க்காருக்கு சட்டசபையே வேண்டியதில்லை என்று ஜனாப் ஜின்னா சொல்லிவந்தார். சட்டசபை ஒன்று அவசியம் இருந்தே தீரவேண்டும் என்று காங்கிரஸ் வற்புறுத்தியது. சட்டசபை வேண்டியதுதான் என்று தூதுகோஷ்டியும் நினைத்தது. ஆகையால், சட்டசபை ஒன்று இருக்கவேண்டும் என்பதை லீக் ஒப்புக்கொள்ளும் பொருட்டே வகுப்புப் பிரச்னைக்குச் சட்டசபையிலும் பாதுகாப்பு இருக்கட்டும் என்று தூதுகோஷ்டி சிபார்சு செய்திருக்கிறது.

முஸ்லிம்களை திருப்தி செய்ய

சட்டசபையில் இந்தியாவின் ஜனத்தொகை விதாசாரப்படி பிரதிநிதித்துவம் கொடுத்தால் 75-சத விகிதம் ஹிந்துக்களே இருப்பார்கள், ஹிந்துக்கள் எதை வேண்டுமானாலும் சட்டமாக இயற்ற முடியும் என்பதுதான் முஸ்லிம் வகுப்புவாதிகள் சட்டசபையே வேண்டாம் என்று சொல்வதின் மர்மம். முஸ்லிம் வகுப்பு உரிமைகள் சம்பந்தப்பட்ட பிரச்னைகளை முஸ்லிம் பிரதிநிதிகளில் பாதிப்பேருடைய சம்மதத்துடன்தான் தீர்க்க முடியும் என்று செய்துவிட்டால், "சட்டசபையில் ஹிந்துக்கள் ஏராளமாக இருக்கிறார்களே!" என்று முஸ்லிம்கள் பயப்பட இடம் கிடையாது. உதாரணமாக, சட்டசபையில் மொத்தம் 400 மெம்பர்கள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அப்போது முஸ்லிம்கள் சுமார் 100 பேர் இருக்கலாம். இந்த 100 பேரில் 51 பேர்கள் ஒரு பிரேரணையை நிராகரித்தால், அந்தப் பிரேரணை தீர்மானமாக நிறைவேற முடியாது. அதாவது 400 பேர் கொண்ட சட்டசபையில் 350 பேர் ஒரு பிரேரணையை ஆதரித்தால்கூட, அந்த 350 வோட்டில் 51 வோட்டாவது முஸ்லிம் வோட்டாக இல்லாவிடில் பிரேரணை தோற்றதாகவே அர்த்தம். சட்டசபையில் மொத்தம் 30 முஸ்லிம்கள் தான் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அப்போதும் அவர்களில் 16 பேர் ஒரு பிரேரணையை நிராகரித்தால், பிரேரணை நிறைவேற முடியாது. ஆகையால் சட்டசபையில் முஸ்லிம்களைவிட ஹிந்துக்கள் அதிகமாக இருப்பார்களே என்றும், தமது அபிப்பிராயம் நிராகரிக்கப்படுமே என்றும், முஸ்லிம்கள் பயப்பட இடம் கிடையாது. சட்டசபை பற்றி முஸ்லிம்களுக்குள்ள பயத்தை நீக்குவதற்காகவே வகுப்புப் பிரச்னைகளுக்குப் போதுமான பாதுகாப்பளிக்கும் ஷரத்தைச் 'சட்டசபை வேண்டும்' என்று சொல்லும் ஷரத்துடனே சேர்த்திருக்கிறார்கள். இவ்வாறு பாதுகாப்பு இருப்பதால் முஸ்லிம்கள் மத்திய சட்டசபையில் ஜனத்தொகை விதாச்சாரத்துக்கதிகமாக பிரதிநிதித்துவம் கோரமாட்டார்கள் என்று தேசியவாதிகள் எதிர்பார்க்க உரிமையுண்டு.

ஆனல், இதில் வேறொரு சங்கடம் ஏற்படும். நிர்வாக சபையின் பிரேரணை ஒன்றை வகுப்புப் பிரச்னைக்கு சம்பந்தமுள்ளதாக மதித்து முஸ்லிம் அங்கத்தினர்களில் பாதிப்பேர் எதிர்ப்பதாக வைத்துக் கொள்வோம். அப்போது என்ன செய்வது? முஸ்லிம் களின் ஆதரவைப் பெறும் முறையில் அந்தப் பிரேரணை யைத் திருத்த நிர்வாக சபை முயற்சிக்கும். அவ்வாறு திருத்தப்பட்ட பிரேரணையால் ஹிந்துக்கள் பாதிக்கப் பட்டால் என்ன செய்வது என்று ஹிந்துக்கள் கேட்கக் கூடுமல்லவா? ஆகையால் அத்தகைய பிரேரணைகளை நிறைவேற்றுவதற்கு, ஹிந்து அங்கத்தினர்களில் பெரும் பான்மையோரது ஆதரவும் அவசியம் என்று தூது கோஷ்டியினர் ஏற்பாடு செய்தனர்.

இதனால் ஏற்படக்கூடிய நிலைமை என்ன?

## முட்டுக்கட்டைக்கு இடமாகலாம்

வகுப்புப் பிரச்னைக்கு சம்பந்தமுள்ள விஷயம் எது வாயினும், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து சமரசமாகவே முடிவு செய்யப்படும். இது விரும்பத்தக்க விஷயமே. ஆனல் இதில் ஒரு பெரிய சிக்கல் இருக்கிறது. ஏதேனும் ஒரு வகுப்பினர் பிடிவாதம் செய்தால், பிரேரணையையே கைவிடும்படி ஏற்படும். அதாவது நிர்வாகத்தை நடத்துவதற்கு அவசியமான சட்டங்களை இயற்றுவது கஷ்டமாகி, நிர்வாகம் திக்கு முக்காடி, முற்போக்குக்குத் தடை ஏற்படும்.

மற்றொரு சங்கடமும் உண்டு; அதுதான் முக்கியமான சங்கடம். ஒரு பிரேரணையில் 'பெரிய வகுப் புப் பிரச்னை' இருக்கிறதா, இல்லையா என்பதை எப்படி முடிவு செய்வது? அரசியலமைப்புச் சட்டம்பற்றிய தக ராறுகளை முடிவு செய்யும் உரிமை ஒரு பெடரல் கோர்ட் டுக்கு இருக்கும். ஒவ்வொரு பிரேரணை வரும்போதும், அதை பெடரல் கோர்ட்டுக்கு அனுப்பி, அதில் வகுப்புப் பிரச்னை இருக்கிறதா இல்லையா என்று அபிப்ராயம் கேட்பதென்றல், இதற்கென்று தனியாக ஒரு கோர்ட்டு நியமிக்க வேண்டியதுதான்!

ஆகையால் தூதுகோஷ்டியின் இந்த சிபார்சை நிராகரிப்பதற்கு அரசியல் நிர்ணய சபையில் கூடும் ஹிந்துக்களும், முஸ்லிம்களும் சம்மதிக்க வேண்டியது அவசியம்.

மைனாரிட்டி வகுப்பினரில் பெரும்பான்மையோரின் சம்மதமின்றி மெஜாரிட்டியார் எதுவும் செய்ய முடியாது என்பது முட்டுக்கட்டைக்கே ஊக்கமளிக்கும். ஆனால் மைனாரிட்டி வகுப்பினரின் எதிர்ப்பை அறவே அலட்சியம் செய்யலாமா? கூடாது. மைனாரிட்டிகளை முற்றிலும் அலட்சியம் செய்து மத்ய சட்ட சபையில் சட்டம் இயற்றாமல் இருப்பதற்கு ஏதேனும் ஓர் ஏற்பாடு அவசியம் என்று பலர் கருதலாம்.

## ஜின்னாவின் பழைய கோரிக்கை

இவ்விஷயத்தில் 1928-ம்வருஷத்தில் முஸ்லிம் லீகே நிறைவேற்றியுள்ள ஜின்னாவின் 14-அம்ச கோரிக்கையில் கண்டுள்ள முறையைப் பின்பற்றலாம்.

> "வகுப்புப் பிரச்னை சம்பந்தமுள்ள ஒரு பிரேரணையை எந்த வகுப்பினரிலும் 100–க்கு 75–பேர் எதிர்த்தால், அதைப் பிரேரிக்கக் கூடாது" என்று அத்தீர்மானத்தில் கோரியுள்ளார்கள்.

ஒரு வகுப்பினரில் 100-க்கு 75 பேர் எதிர்க்கிறார்கள் என்றிருந்தால்தான் சபையின் மெஜாரிட்டியை நிராகரிக்கலாம் என்பதே இதன் கருத்து. இது நியாயமான முறையாக இருக்கலாம். ஆனால், இதைப்பற்றிக்கூட ஆசிரியர் கூப்லன்ட் அபிப்பிராயம் எழுதுகையில், "ஒரு பிரேரணை வகுப்புப் பிரச்னையுடன் சம்பந்தமுள்ளதா, இல்லையா என்பதை நிர்ணயிப்பது எளிதல்ல; தவிரவும் இந்த முறை சட்டசபையின் வேலைக்குப் பெரிய முட்டுக் கட்டையாகவும் ஆகிவிடும்" என்று கூறுகிறார். கூப் லன்ட் இவ்வாறு வர்ணிக்கும் பிரேரணையைவிட தூது கோஷ்டியின் பிரேரணை சட்டசபை வேலைக்கு அதிக இடையூறாக இருக்கும். தூதுகோஷ்டியின் இந்தச்

சிபார்சு அரசியலமைப்புச் சட்டத்தில் ஏறிவிடாமல் தடுப்பதற்கு முயற்சி செய்வது எவ்வளவு அவசியம் என்பது இதிலிருந்து நன்கு புலனாகும்.

அரசியல் நிர்ணய சபையின் வேலை முறை பற்றிய பாராவில் மைனாரிட்டி உரிமையை முடிவு செய்ய ஓர் ஏற்பாடு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி அரசியல் நிர்ணய சபைக்கு யோசனைகூற ஆலோசனைக் கமிட்டி ஒன்று அமைக்கப்படும். மைனாரிட்டிகளின் பாதுகாப்புக்காக என்ன ஷரத்துக்களை அரசியலமைப்பில் சேர்க்கவேண்டும் என்பதையும், அந்தப் பாதுகாப்பு உரிமைகளை யூனியன் சர்க்காரில் ஒப்படைக்க வேண்டுமா, மாகாண சர்க்கார்களிடம் ஒப்படைக்க வேண்டுமா, அல்லது தொகுதிவட்ட சர்க்கார்களிடம் ஒப்படைக்க வேண்டுமா என்பதையும் பற்றி அரசியல் நிர்ணய சபைக்கு அந்தக் கமிட்டி யோசனை கூறும். அக்கமிட்டியே மைனாரிட்டிகளின் பாதுகாப்புக்குத் தேவையான ஷரத்துக்களைச் சிபார்சு செய்யும். ஆகையால் தூதுகோஷ்டியின் 15-வது பாராவில் இந்த ஷரத்தை சேர்த்தது அனாவசியமே.

மத்ய சர்க்காருக்குச் சட்டசபையே கூடாது என்று கூறும் லீகர்களின் 'கவலை'யை நீக்கி அவர்களது சம்மதத்தைப் பெறுவதற்காகவே இந்த ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது.

## மத்ய சர்க்காரின் பொக்கிஷம்

மத்ய சர்க்காரிடம்—அதாவது அகில இந்திய யூனியனிடம்— விடப்படும் மூன்று விஷயங்களையும் நிர்வகிப்பதற்கான பண வசதிக்கு என்ன செய்வது என்பது முக்கியமான பிரச்னையாகும்.

இது பற்றித் தூதுகோஷ்டியின் திட்டத்தில், 15-வது பாராவின் முதல் ஷரத்தில், மிகப் பொதுப்படையான வாசகத்தை உபயோகித்திருக்கிறார்கள். "அந்த மூன்று விஷயங்களுக்காகவும் வேண்டிய நிதி வசதியை எழுப்புவதற்கு யூனியன் சர்க்காருக்கு அதிகாரம் இருக்கவேண்டும்" என்று அதில் சொல்லுகிறார்கள்.

ஆனால், தூதுகோஷ்டியின் பிரேரணைக்கும், லீக் வற்புறுத்திய கொள்கைக்கும் வித்தியாசம் உண்டு. கொள்கைபற்றி அடிப்படையிலேயே உள்ள ஒரு வேற்றுமையே அந்த வித்யாசத்திற்குக் காரணம். அகில இந்திய யூனியனின் அமைப்பு, சகல ராஜாங்க கௌரவங்களும் அதிகாரங்களும் பொருந்தியதாக இருக்கவேண்டும் என்பது தூதுகோஷ்டியின் நோக்கம். அகில இந்திய யூனியன் என்பதே விரும்பத்தகாத ஓர் அனர்த்தம் என்பது லீகின் மனப்பான்மை. அகில இந்திய யூனியன் எளிதில் சிதறிப் போகக்கூடியதாக இருக்கவேண்டும்; இந்தியா முழுதுக்கும் ஒரு பொது சர்க்கார் இருக்கிறது என்ற உணர்ச்சியே ஜனங்களின் வாழ்க்கையில் தெரியக் கூடாது என்பது லீகின் மனப்பான்மை. ஆகையால் யூனியன் சர்க்கார் அதுவாக வரி விதிக்கக்கூடிய நிலைமை கூடாதென்றும், தொகுதி வட்டங்கள் தரும் சந்தாத் தொகையை நம்பியே யூனியன் சர்க்கார் வாழ வேண்டுமென்றும் லீக் விரும்பியது. லீக் வற்புறுத்திய நிதிக் கொள்கை "சம்மேளன" அரசியலுக்குக் கூட போதுமானதல்ல. மாகாணங்களிலிருந்து வசூலிக்கும் அந்தத் தொகையை நம்பி எந்த மத்ய சர்க்காரும் தன் பொறுப்பை நிறைவேற்ற முடியாது. இவ்வாறு வரி விதிப்பு உரிமையைக் கட்டுப்படுத்த தூதுகோஷ்டி சம்மதிக்காததை நாம் வரவேற்க வேண்டியதே. இந்தப் பிரச்னை பற்றி இங்கு இதற்குமேல் ஒன்றும் சொல்லத் தேவையில்லை.

## அரசியலமைப்பை மாற்றும் உரிமை

அரசியலமைப்பின் அடிப்படைகள் என்று தூதுகோஷ்டியினர் சிபார்சு செய்யும் 15-வது பாராவில் உள்ள ஷரத்துக்களில், நாம் கவனிக்கவேண்டிய ஷரத்து இன்னும் ஒன்று இருக்கிறது. அதுதான் இப்போது ஏற்படும் அரசியலை பின்னர் மாற்றுவதற்குள்ள வசதி. திட்டத்தில் அது 6-வது ஷரத்தாக அமைக்கப்பட்டிருக்கிறது.

அரசியல் திட்டம் அமலுக்குவந்து 10 வருஷம் கழிந்த பிறகும், அப்பால் ஒவ்வொரு 10 வருஷத்துக்கு ஒரு தடவையும், எந்த மாகாணமும் அரசியலமைப்பின் ஷரத்துக்களை மாற்ற வேண்டுமென்று கோர உரிமை உண்டு. இவ்வாறு மாகாணங்களுக்கு உரிமை யளிக்கும்படியான ஒரு ஷரத்து யூனியன் அரசியலமைப்பிலும், தொகுதிவட்ட அரசியலமைப்பிலும் இருக்கவேண்டும் என்று தூது கோஷ்டி சிபார்சு செய்திருக்கிறது.

பல மாகாணங்களுக்குப் பொதுவான பல விஷயங்களைப் பொதுவில் நிர்வகிப்பதற்காகத் தொகுதிவட்ட சர்க்காரிடம் மாகாணங்கள் தம் அதிகாரத்தை ஒப்படைத்திருக்கின்றன. இவற்றில் மாறுதல் செய்யும்படி கோருவதற்கு, இதன் மூலம் மாகாணங்களுக்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. இது போலவே யூனியன் சர்க்காருக்கும் தமக்கும் உள்ள சம்பந்தத்தில் மாறுதல் செய்யும்படி கோருவதற்கும் மாகாணங்களுக்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது.

## தொகுதி வட்டங்களிடம் இல்லை

ஆனால் யூனியன் அரசியலில் மாறுதல் செய்ய வேண்டும் என்று கோருவதற்குத் தொகுதி வட்ட சர்க்காருக்கு உரிமை உண்டா என்று சிலர் திகைக்கலாம். அவ்வாறு உரிமை கொடுக்கவில்லை ; கொடுக்காதது தான் நியாயம். ஏனென்றால் தொகுதிவட்ட சர்க்கார் என்பது உண்மையில் மாகாணங்களின் சிருஷ்டியே. தூதுகோஷ்டியின் திட்டத்தில் அதிகாரத்தின் உறைவிடங்களாக மதிக்கப்படுபவை யூனியனும், மாகாணங்களுமே. தொகுதிவட்டம் ஒவ்வொன்றையும் மாகாணங்களின் ஒரு கூட்டுறவு சங்கமாக மட்டுமே மதிக்கமுடியும்.

யூனியன் அரசியலமைப்பிலும், தொகுதிவட்ட அரசியலமைப்பிலும் "மாறுதல் செய்யும்படி கோர எந்த மாகாணத்துக்கும் உரிமையுண்டு" என்று மட்டுமே தூது கோஷ்டி சொல்லுகிறது. இந்த மாறுதல்கள் பற்றி எவ்வாறு விவாதிப்பது, எவ்வாறு முடிவு செய்வது என்பது பற்றித் தூதுகோஷ்டி எதுவும் சொல்லவில்லை.

மாறுதல் கோருவதற்கு மாகாண சட்டசபையில் சாதாரண மெஜாரிட்டி—அதாவது 100-க்கு 51 பேர்—ஆதரித்தால் போதும் என்று தூது கோஷ்டி சொல்லுகிறது. ஒரு பெரிய தேசத்தின் அரசியலமைப்பில் மாறுதல் செய்வது சுலபமான காரியமல்ல. ஆகையால் ஒரு தனி மாகாணத்தின் சட்ட சபையிலுள்ள ஒரு பகுதியினரின் கோரிக்கை காரணமாக, இந்தியா முழுவதின் அரசியலமைப்பைப் புனராலோசனை செய்யும்படி தூது கோஷ்டி சிபார்சு செய்வது சற்று ஆச்சரியமாகவே இருக்கிறது.

அரசியலமைப்பை அலட்சிய புத்தியுடன் மாற்றிவிடாமல் இருப்பதற்காக மற்ற தேசங்களில் எத்தனையோ அணைகளும் தடுப்புக்களும் அமைத்திருக்கிறார்கள். எந்த தேசத்திலும் அரசியலைக் காலத்தின் தேவைக்குத் தக்கபடி மாற்றுவதற்குச் சில ஏற்பாடுகள் அவசியம்தான். ஆனால் அரசியலமைப்புச் சட்டம் சாதாரணச் சட்டம்போலல்ல. சாதாரணச் சட்டத்தைப்போல அரசியலமைப்பை மாற்றுவது அவ்வளவு சுலபமாக இருக்கக்கூடாது என்பதைத் தான் நாம் இங்கு வற்புறுத்துகிறோம்.

ஆனால் இந்த ஷரத்தில் தூதுகோஷ்டியினர் தெளிவாக இல்லாத பாஷையை உபயோகித்து மழுப்பியிருக்கிறார்கள். வேண்டுமென்றேதான் இவ்வாறு மழுப்பியிருக்கிறார்கள். உதாரணமாக "அரசியலமைப்பின் ஷரத்துக்களை", "புனராலோசனை செய்ய" என்ற வார்த்தைகளை உபயோகிக்கிறார்கள். அரசியலமைப்பின் அடிப்படையை பாதிக்காத மாறுதல்களைத்தான் இது குறிக்கும் என்று சிலர் வாதிக்கலாம். வேறு சிலர் ஒருமாகாணம் அகில இந்திய யூனியனை விட்டுப்பிரிந்து போக வேண்டுமென்று கோருவதற்கு இந்த ஷரத்துப்படி உரிமை உண்டு என்று வாதிப்பார்கள். இந்த உரிமை இந்த ஷரத்தில் இல்லையென்று வேறு சிலர் வாதிக்கமுடியும். ஏனென்றால் பிரிந்துபோகும் உரிமையென்பது மிகவும் பெரிய விஷயம். தெளிவாகச் சொல்லப்பட்டாலொழிய இந்த உரிமை

இருப்பதாக "ஊகிப்பது" அபாயமாகும். இவ்வாறு சில மாகாணங்கள் ஊகித்ததுதான் 1861-ஆம் ஆண்டில் அமெரிக்காவில் பெரிய யுத்தத்துக்கு இடமாயிற்று. அதோடு அந்த ஊகம் அங்கு கைவிடப்பட்டது!

தொகுதி வட்டத்திலிருந்து பிரிவதென்றால் அது வேறு விஷயம். ஏனென்றால் ஒரு மாகாணம் தொகுதி வட்டத்திலிருந்து பிரிந்தாலும், யூனியன் சர்க்கார் மூலம் மற்ற மாகாணங்களுடன் அதற்கு தொடர்பு இருக்கும். யூனியனிலிருந்து பிரிந்தால் பிறகு தொடர்பே கிடையாது. ஏனென்றால் "வெளிநாட்டுறவு" என்பது யூனியனில்தான் இருக்கமுடியும். யூனியனிலுள்ள மாகாணங்கள் தனியாகப் பிரிந்து போகும் மாகாணத்துடன் உறவுகொள்ள முடியாது.

யூனியன் சம்பந்தப்பட்டமட்டில் மாகாணங்கள் அகில இந்திய யூனியனின் அடிப்படைக்கு முரணில்லாத மாறுதல்களையே கோரலாம். பிரிந்துபோகும் உரிமை என்பது மாகாணங்கள் தொகுதி வட்டத்திலிருந்து பிரியும் விஷயத்தில்தான் செல்லுபடியுள்ளதாகும். யூனியலிருந்து பிரிவது எளிதாக இருக்கக்கூடாது. இதுதான் தூதுகோஷ்டியின் அந்தரங்கக் கருத்தாகும். இதை தெளிவுபடுத்தாமல் அவர்கள் ஈரொட்டான பாஷையில் "சிபார்சு" செய்திருப்பது வருந்தத் தக்கதே.

ஒரு தனி மாகாணம் யூனியனிலிருந்து பிரிந்துபோக உரிமையளித்தால், அது எவ்விதத்திலும் பொருந்தாது.

## அடுத்த அத்தியாயத்தில்

தூது கோஷ்டியின் இறுதித் தீர்ப்புக்குமுன் காங்கிரஸும் லீகும் கோரியதென்ன என்பது அடுத்த அத்தியாயத்தில் சொல்லப்படுகிறது.

---

## பதின்மூன்றாவது அத்தியாயம்.

# ஸிம்லா பேரங்களும் இறுதித் தீர்ப்பும்

தூது கோஷ்டியின் இறுதியான தீர்ப்பு வெளியாவதற்கு முன்னர், காங்கிரஸ்—லீக்—தூது கோஷ்டி ஆகிய மூன்று கட்சியினரும் ஸிம்லாவில் பேச்சு நடத்தினர். அந்தப் பேச்சின் ஆரம்பத்தில் தூது கோஷ்டியினர் பொதுப்படையாக சில கொள்கைகளை அறிவித்தனர். பிறகு விவரங்களுடன் சில பிரேரணைகள்பற்றி காங்கிரஸிடமும் லீகிடமும், அபிப்ராயம் கோரினர். அப்பால் லீக் சில கோரிக்கைகளை இறுதிக் கோரிக்கைகளாக வெளியிட்டது. இதற்கப்புறம் காங்கிரஸ் மாற்றுப் பிரேரணைகளைச் சமர்ப்பித்து லீகின் பிரேரணைகள் பற்றி தனக்குள்ள ஆக்ஷேபங்களைத் தெரிவித்தது. அப்போது ஒவ்வொரு கட்சியும் கூறியதை தூது கோஷ்டியினரின் இறுதித் தீர்ப்புடன் ஒப்பிட்டால், தீர்ப்பின் ஷரத்துகளை புரிந்துகொள்ள மிகவும் உதவியாக இருக்கும்.

### அகில இந்திய யூனியன்

காங்கிரஸ் பிரேரணைகள் அகில இந்திய யூனியனைப் பற்றித்தான் முதலில் பிரஸ்தாபித்திருக்கின்றன. லீகின் பிரேரணையோ, பாகிஸ்தான் சமஷ்டியையே பிரதானமாக வற்புறுத்தியது. அகில இந்திய யூனியனுக்கு மறைமுகமாகத்தான் அது இடமளித்திருக்கிறது.

தூதுகோஷ்டியினர் காங்கிரஸின் மனப்பான்மையையே ஆதரித்திருக்கிறார்கள்.

### யூனியன் "விஷயங்கள்"

முதலில் தூது கோஷ்டியினர் பாதுகாப்பு, வெளிநாட்டுறவு போக்கு வரவு வசதிகள், ஆகிய மூன்றையும்தான் "யூனியன் விஷயங்களாக" பிரேரித்தனர். பிறகு

"ஜீவாதாரமான பிரஜா உரிமைகள்" என்பதையும் தூது கோஷ்டியார் யூனியன் விஷய ஜாபிதாவில் சேர்த்துக் கொண்டார்கள்.

வர்த்தக சுங்க வரிகள், செலாவணி, பொருளாதாரத் திட்டம் ஆகியவற்றையும், இவற்றுக்கு நெருங்கிய சம்பந்தமுள்ளதாகக் காணப்படும் இதர விஷயங்களையும், யூனியன் விஷயமாக மதிக்கவேண்டுமென்று காங்கிரஸ் கட்சியினர் கோரினர்.

"போக்குவரத்து வசதிகள்" என்ற வாசகத்தை "தற்பாதுகாப்புக்கு அவசியமாகக்கூடிய போக்குவரத்து வசதிகள்" என்று வரையறுக்க லீகர்கள் விரும்பினார்கள்.

தூதுகோஷ்டியின் தீர்ப்பில் அவர்கள் முதலில் சொன்ன 3 விஷயங்களையே யூனியன் ஜாப்தாவில் வைத்தனர்.

## யூனியன் பொக்கிஷம்

யூனியன் சர்க்காரின் ஆதிக்கத்தில் உள்ள "விஷயங்களுக்காக தேவையாகக்கூடிய பணத்தை பெறுவதற்குள்ள அதிகாரங்கள்" இருக்கும் என்று தூதுகோஷ்டியார் தம் பிரேரணைகளில் கூறினர்.

யூனியனுக்கு வேண்டிய பணத்துக்கு என்ன வசதி செய்வதென்பதை இரண்டு அரசியல் நிர்ணய சபைகளும் கூடி யோசிக்கும்; ஆனால், எப்படியும் நேர்முகமான வரி விதிக்க யூனியன் சர்க்காருக்கு உரிமை இருக்கக் கூடாது என்று லீக் கூறியது.

தன் உரிமையிலேயே வரி வருமானத்துக்கு ஏற்பாடு செய்ய, யூனியனுக்கு நிபந்தனையற்ற உரிமை வேண்டும் என்று காங்கிரஸ் கோரியது.

தூதுகோஷ்டியின் இறுதித் தீர்ப்பில் "பணம் பெறுவதற்கு" (power to obtain the finances) என்ற வாசகத்துக்கு பதிலாக "பணத்தை எழுப்புவதற்கு" (to raise the finances) என்ற வாசகத்தை உபயோகித்

திருக்கிறது. வரி விதிப்பது, கடன் பத்திரங்கள் வெளியிடுவது முதலிய எல்லா உரிமைகளும் இந்த வாசகத்தில் இருப்பதாகவே நாம் கருதவேண்டும்.

### யூனியன் சட்டசபை

யூனியன் சர்க்காருக்கு சட்ட சபை வேண்டும் என்று தூதுகோஷ்டி முதலிலேயே கூறியது.

சட்டசபை ஒன்று வேண்டுமா வேண்டாமா என்பதை அரசியல் நிர்ணய சபையில் விவாதிக்க உரிமை வேண்டும், சட்ட சபை இருந்தாலும் இருக்கலாம் இல்லாமலும் போகலாம் என்பது லீகின் மனப்பான்மை.

சட்டசபை இருக்க வேண்டுமென்று தூதுகோஷ்டி "தீர்ப்பு" கூறியிருக்கிறது.

### யூனியன் சட்டசபையில் பிரதிநிதித்துவம்

யூனியன் சட்டசபையில் ஹிந்து மெஜாரிட்டி மாகாணங்கள் யாவற்றுக்கும் சேர்ந்து எத்தனை பிரதிநிதிகளோ அத்தனை பிரதிநிதிகள் முஸ்லிம் மெஜாரிட்டி மாகாணங்கள் யாவற்றுக்கும் சேர்ந்து இருக்கவேண்டும் என்று தூதுகோஷ்டி முதலில் கூறியது.

இந்த சமப் பிரதிநிதித்துவ பிரேரணையை காங்கிரஸ் பலமாக ஆக்ஷேபித்தது.

தூதுகோஷ்டி இறுதியில் இந்தப் பிரதிநிதித்துவத்தைப்பற்றி எதுவும் சொல்லவில்லை.

### யூனியன் சட்டசபையில் "வகுப்புப் பிரச்னை"

முதலில் இதைப்பற்றி தூதுகோஷ்டி எதுவும் சொல்லவில்லை.

"வகுப்புப் பிரச்னைக்கு சம்பந்தமுள்ள எந்த பிரேரணை வந்தாலும், சட்டசபையில் முக்கால்பாகத்தினர் ஆதரித்தால்தான் நிறைவேற்றலாம்" என்று லீக் கோரியது.

"இது அனாவசியம். மைனாரிட்டிக்கு போதிய பாதுகாப்புகள் அளிக்க வேறு ஏற்பாடுகள் செய்த பிறகு இது அவசியமில்லை. பிற்போக்கு சக்திக்கு ஊக்க மளிப்பதைத் தவிர, வகுப்பு உரிமை எதற்கும் இது அவசியமில்லை. இந்த ஏற்பாடு சட்ட சபையின் வேலைக்கு முட்டுக்கட்டையாகும்" என்று காங்கிரஸ் ஆக்ஷேபித்தது.

"சட்ட சபையில் முக்கால் பாகத்தினர் ஆதரித்தால் தான்" என்று லீக் கூறியதற்கு பதிலாக "ஹிந்துக்களிலும் முஸ்லிம்களிலும் பாதிப்பேர் ஆதரித்தால்தான்" வகுப்புப் பிரச்னைக்கு சம்பந்தமுள்ள பிரேரணைகளை நிறைவேற்றலாம், என்று தூதுகோஷ்டி முடிவு செய்தது.

### யூனியனும் சமஸ்தானங்களும்

யூனியனில் சமஸ்தானங்களும் இருக்குமென்று தூதுகோஷ்டியினர் ஆரம்ப முதலே சொல்லி யிருக்கிறார்கள். லீகின் இறுதிப் பிரேரணையில் இது பற்றி பிரஸ்தாபமே இல்லை.

### தொகுதி வட்டங்கள்

ஹிந்து மெஜாரிட்டி மாகாணங்களுக்காக ஒரு தொகுதி வட்டமும் முஸ்லிம் மெஜாரிட்டி மாகாணங்களுக்காக ஒரு தொகுதி வட்டமும் இருக்கலாம் என்று தூதுகோஷ்டியினர் எழுதின அழைப்புக் கடிதத்தில் கூறியிருந்தனர்.

இரண்டு நாள் விவாதம் நடந்த பிறகு, தூதுகோஷ்டி தயாரித்த பிரேரணையில் இவ்வாறு பிரித்து குறிப்பிட்டு பேசாமல் பொதுவாக "மாகாணங்கள் தொகுதி வட்டங்களாக சேரலாம்" என்று கூறியது. அந்தப் பிரேரணையில் "தொகுதி வட்டம் ஏதேனும் ஏற்பட்டால்" என்ற வாசகமும் இருக்கிறது. ஆகையால் தொகுதி வட்டங்கள் ஏற்பட்டுத்தான் தீரவேண்டுமென்பதில்லை.

வடமேற்கு இந்தியாவிலுள்ள பஞ்சாப், ஸிந்து, பலுச்சிஸ்தானம், வடமேற்கு எல்லை மாகாணம் முதலிய மாகாணங்கள், வடகிழக்கு இந்தியாவிலுள்ள வங்காளம், அஸ்ஸாம் முதலிய மாகாணங்கள் ஆகிய 6 மாகாணங்களும் ஒரே கோஷ்டியாகப் பாவிக்கப்பட வேண்டுமென்றும் (பாகிஸ்தான் சமஷ்டியாக) பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள மற்ற பாகங்கள் சேர்ந்து ஒரு தொகுதி வட்டமாக பாவிக்கப்பட வேண்டுமென்றும் லீக் கூறியது.

காங்கிரஸானது தூதுகோஷ்டி வெளியிட்ட இரண்டாவது பிரேரணையை அதாவது "மாகாணங்கள் தொகுதி வட்டமாக சேரலாம்" என்பதையே ஆதரித்தது.

தூதுகோஷ்டி தன் இறுதித் தீர்ப்பில் "மாகாணங்கள் தம்மிடையே தொகுதி வட்டங்கள் அமைத்துக் கொள்ள உரிமை உண்டு" என்று கூறியது கிட்டத்தட்ட காங்கிரஸ் கருத்தையே ஊர்ஜிதம் செய்தது.

தூதுகோஷ்டியின் இறுதித் திட்டத்தில் வடமேற்கு இந்தியா, வட கிழக்கு இந்தியா, மீதமுள்ள இந்தியா என்று மூன்று தொகுதி வட்டங்கள் உண்டு.

அதாவது வடமேற்கு பாகிஸ்தான், வடகிழக்கு பாகிஸ்தான் இரண்டும் சேர்ந்து ஒரே சமஷ்டியாக இருக்கவேண்டுமென்ற லீகின் விருப்பம் ஈடேறவில்லை.

### அரசியலை மாற்றும் உரிமை

பத்து வருஷத்துக்கு பிறகு அரசியலமைப்பின் ஷரத்துக்களை புனராலோசனை செய்யும்படி கோர, மாகாண சட்டசபையின் மெஜாரிட்டிக்கு உரிமை இருக்கும் என்று தூதுகோஷ்டி தம் பிரேரணையில் கூறியது.

இவ்விஷயத்தில் காங்கிரஸ் எதுவும் தெளிவாகச் சொல்லாமல், "அரசியலை பூர்ணமாக புனராலோசனை செய்ய உரிமை இருக்க வேண்டியதுதான். பிரிந்து போகும் உரிமையையும் அதில் ஊகிக்கக் கூடியதே. ஆயினும் அந்த உரிமையை வியக்தமாக பிரஸ்தாபிப்பதை

தவிர்க்க வேண்டும். ஏனென்றால் பிரிந்து போகலாம் என்ற எண்ணம் உதிப்பதற்கு ஊக்கமளிப்பது விரும்பத் தக்கதல்ல" என்று மட்டும் கூறியது.

ஆனால் யூனியனை விட்டுப் பிரிந்துபோக ஜின்னா உரிமை கோரினார்.

யூனியனை விட்டுப் பிரிந்துபோக உரிமை உண்டென்று தூதுகோஷ்டி வியக்தமாக சொல்லவில்லை.

### அடுத்த அத்தியாயத்தில்

இனிவரும் அத்தியாயங்களை புத்தகத்தின் இரண்டாம் பாகமாகவே மதிக்கலாம். முதல் பாகத்தில் தூதுத் திட்டங்கள், பிரேரணைகளை கவனித்தோம். அந்த பிரேரணைகளின்படி ஏற்படும் அரசியல் நிர்ணய சபை முன்னுள்ள பிரச்னைகளின் தன்மையை அறிவதற்கு இரண்டாம் பாகம் உதவியாக இருக்கும்.

அடுத்த அத்தியாயத்தை இதுவரை படித்த அத்தியாயங்களுக்கு முடிவுரையாகவும், பின்னால் வரப்போகும் அத்தியாயங்களின் முகவுரையாகவும் கருதுவது பொருந்தும்.

---

## பதினைந்காவது அத்தியாயம்

# இந்திய அரசியல் நிர்ணய சபையில் சில புதுமைகள்

பிரிட்டிஷ் மந்திரி தூது கோஷ்டி இங்கு வந்து இந்தியாவின் பிற்கால அரசியல் சம்பந்தமாக தீர்ப்பு அளிக்க வேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை எவ்வாறு ஏற்பட்டது என்பதையும், அந்த தீர்ப்பின் கருத்து என்ன என்பதையும் முன் அத்தியாயங்களில் ஆராய்ந்தோம்.

அந்த தீர்ப்பின்மூலம் இந்தியாவின் அரசியல் நிர்ணயிக்கப்பட்டுவிடவில்லை. அந்த வேலை இனிமேல்தான் நடக்கவேண்டும்; அதற்காகவே அரசியல் நிர்ணய சபை கூட்டப்படுகிறது.

அப்படியானல் தூது கோஷ்டி சாதித்திருப்பதுதான் என்ன என்று சிலர் கேட்கலாம். அந்த கேள்விக்கு என்ன பதில் என்பதை இங்கு ஆராய்வோம். காங்கிரஸுக்கும் லீகுக்கும் இடையே பேச்சு நடக்கவே மார்க்கமில்லாத ஒரு நிலைமை ஏற்பட்டிருந்தது. இந்த இரண்டு ஸ்தாபனங்களையும் ஒதுக்கிவிட்டு, இந்திய பிரச்னையை தீர்ப்பது என்பதும் அசாத்தியம். ஏனென்றல் சமீபத்தில் நடந்த தேர்தல்களில் முஸ்லிம்களின் வோட்டை பெருவாரியாக முஸ்லிம் லீகே பெற்றது. ஹிந்துக்களின் வோட்டை பெருவாரியாக பெற்றது காங்கிரஸ். இவ்விரண்டுக்கும் இடையேயுள்ள பிளவு சில்லரை விஷயங்களைப் பற்றியதல்ல. அடிப்படை விஷயங்களிலேயே இரு சாராரும் பரஸ்பரம் நேர் எதிரான கொள்கைகளை வற்புறுத்தினார்கள்.

இந்தியாவை இரண்டாகப் பிரித்து, ஒரு பகுதியை முஸ்லிம் இந்தியா என்றும், மற்றொரு பகுதியை ஹிந்து இந்தியா என்றும் பிரிக்க வேண்டும் என லீக் கோரியது. முஸ்லிம் இந்தியாவில் (அல்லது பாகிஸ்தானில்) ஹிந்துக்களுக்கு "மைனரிட்டி உரிமைகள்" வழங்கப்படும். ஹிந்து இந்தியாவில் (ஹிந்துஸ்தானில்) முஸ்லிம்களுக்கு "மைனரிட்டி உரிமைகள்" வழங்கப்படும். ஹிந்து இந்தியாவிற்கும், முஸ்லிம் இந்தியாவிற்கும் பொதுவான ஒரு சர்க்கார் இருக்கக்கூடாது. பிரிட்டனும் பிரான்ஸும்போல, அமெரிக்காவும் கானடாவும்போல, ஹிந்துஸ்தானும் பாகிஸ்தானும் தனித் தனி நாடுகளாக இருக்க வேண்டும்; இவ்வாறு இந்தியாவைப் பிரிப்பது பிரிட்டனின் கடமை. இந்த விஷயம் முடிவான பிறகு, ஹிந்துஸ்தான் தனக்கு வேண்டிய அரசியலை தயாரித்துக் கொள்ளட்டும். பாகிஸ்தான் தனக்கு வேண்டிய அரசியலை தயாரித்துக்கொள்ளும். இந்தியா முழுவதுக்கும் ஒரு பொது அரசியல் என்பதே கூடாதாகையால், இந்தியா முழுவதுக்கும் பொதுவான ஒரு அரசியல் நிர்ணய சபை ஏற்படுத்துவது எவ்விதத்திலும் பொருந்தாத விஷயம். இதுதான் லீகின் கக்ஷி!

பாகிஸ்தானின் ஜனத் தொகை முழுவதும் முஸ்லிம்களாகவும், ஹிந்துஸ்தான் ஜனத் தொகை முழுவதும் முஸ்லிம் அல்லாதாராகவும் இருந்தால், காங்கிரஸ் இதற்கு இணங்கியிருக்கும். பாகிஸ்தானில் ஹிந்துக்கள் இருப்பார்கள்; ஹிந்துஸ்தானில் முஸ்லிம்கள் இருப்பார்கள். ஹிந்துஸ்தானில் உள்ள முஸ்லிம்களுக்கும், பாகிஸ்தானில் உள்ள முஸ்லிம்களுக்கும் மதம் நிமித்தமாக பரஸ்பரம் அநுதாபம் உண்டு. அதுபோலவே ஹிந்துஸ்தானில் உள்ள ஹிந்துக்களுக்கும், பாகிஸ்தானில் உள்ள ஹிந்துக்களுக்கும் பரஸ்பரம் அநுதாபம் உண்டு. ஆகையால் முஸ்லிம்களின் அக்கரை இந்தியா முழுவதிலும் வியாபிக்கிறது; ஹிந்துக்களின் அக்கரையும் இந்தியா முழுவதிலும் வியாபிக்கிறது. ஆகையால் இந்தியாவானது ஹிந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய இரு சமுகத்தினருக்கும் பொதுவான ஒரே இந்தியாவாகத்தான் இருக்க வேண்டுமென்று காங்கிரஸ் கோரியது.

பரஸ்பரம் ஒன்றுக்கொன்று முரண்பட்ட இந்த இரண்டு கோரிக்கைகளுக்கு இடையே மத்தியஸ்தமாக ஒரு தீர்ப்பை அளித்து, இரு தரப்பினரும் ஒரே அரசியல் நிர்ணய சபையில் கூடும்படி தூண்டியதுதான் பிரிட்டிஷ் தூதுகோஷ்டி செய்த காரியம்.

இந்தியாவின் ஒரு பகுதியை முஸ்லீம்களின் தாயகமாக ஆக்கவேண்டும் என்ற லீகின் கோரிக்கையை, இந்தியா முழுவதற்கும் ஒரு பொது சர்க்கார் வேண்டுமென்ற காங்கிரஸ் கோரிக்கையுடன் இணைத்து தூதுகோஷ்டி தீர்ப்பு அளித்திருக்கிறது.

இந்த அடிப்படையை லீகும் காங்கிரஸும் ஒப்புக்கொண்டிருக்கின்றன. அகில இந்திய அரசியலை ஹிந்து மெஜாரிட்டியின் இஷ்டப்படி நிர்ணயித்து விடக்கூடாது என்பதற்காக அரசியல் நிர்ணயசபையின் நடை முறைக்கு ஓர் நிபந்தனையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். வகுப்புப் பிரச்னைக்கு சம்பந்தமுள்ள எந்த பிரேரணையையும், முஸ்

லீம் அங்கத்தினர்களின் பெரும்பாலோரது சம்மதத்தைப் பெறுமல், அந்த அரசியல் நிர்ணய சபை நிறைவேற்ற முடியாது.

இந்த நிபந்தனையை அரசியல் நிர்ணயசபையில் முஸ்லீம்கள் அகாரணமாக வற்புறுத்திஞல் முட்டுக்கட்டைதான் நீடிக்கும்.

அவ்வாறு முட்டுக்கட்டை மனப்பான்மையுடன் முஸ்லீம் லீக் நடந்து கொள்ளாவிட்டால் இந்த அரசியல் நிர்ணய சபையை உண்மையிலேயே பரிபூர்ண சுதந்திரத்தின் அருணோதய ஒளியாகவே நாம் கருதலாம்.

இந்த நம்பிக்கையுடன் பின்வரும் அத்தியாயங்களில் அரசியல் நிர்ணயசபை முன்னுள்ள பிரச்னைகளின் தன்மையை ஆராய்வோம்.

> தூதுகோஷ்டியின் திட்டப்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள கொள்கைகளில் மூலாதாரமான அம்சங்கள் மூன்று. (1) இந்தியா முழுவதற்கும் பொதுவான ஓர் சமஷ்டி சர்க்கார் இருக்கவேண்டும். (2) முஸ்லீம்களுக்கு மெஜாரிட்டி இருப்பதாக சில "தொகுதி வட்டங்கள்" ஏற்படுத்த தடை என்பதுவும் கிடையாது. (3) வகுப்பு பிரச்னைக்கு சம்பந்தமுள்ள விஷயங்களில் சட்ட சபையில் அந்தந்த வகுப்புக்களின் சம்மதத்தைப் பெற முயற்சிக்க வேண்டும்.

புது அரசியலைப் பற்றி வேறு எந்த கொள்கையையும் தூதுகோஷ்டியினர் சொல்லி விடவில்லை. இந்தியாவில் முடிமன்னர் ஆட்சிதான் வேண்டுமென்று தீர்மானிப்பதற்குக்கூட, அரசியல் நிர்ணயசபைக்கு அதிகாரமுண்டு.

பூர்ண சுயேச்சையா, டொமினியன் அந்தஸ்தா என்பதை நிர்ணயிக்கவும், அரசியல் நிர்ணயசபைக்கு அதிகாரமுண்டு.

பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, இவற்றில் இருப்பது போன்ற நிர்வாக முறை வேண்டுமா அல்லது அமெரிக்காவில் இருப்பது போன்ற நிர்வாக முறை

வேண்டுமா அல்லது ஸ்விட்ஜர்லாந்தில் இருப்பது போன்ற நிர்வாக அமைப்பு வேண்டுமா என்பதையும் அரசியல் நிர்ணய சபையே முடிவு செய்யலாம்.

மத்திய சர்க்காரில் ஒரு சட்டசபை வேண்டுமா, இரண்டு சட்டசபை வேண்டுமா, அவற்றின் அமைப்பு எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதையும் அரசியல் நிர்ணய சபையே தீர்மானித்துக் கொள்ளலாம்.

அரசியல் நிர்ணயிக்கப்பட்ட பிறகு, அதை மாற்ற வேண்டுமென்று தோன்றினால், அதற்கு என்ன நடைமுறையை பின்பற்ற வேண்டும் என்பதையும் அந்த சபையே நிர்ணயித்துக் கொள்ளலாம்.

தனித் தொகுதியா, பொதுத் தொகுதியா என்பதும் அங்குதான் நிர்ணயிக்கப்படும்.

தூது கோஷ்டி குறிப்பிட்டுள்ள மூன்று விஷயங்கள் தவிர (பாதுகாப்பு, வெளி நாட்டு உறவு, போக்குவரத்து வசதிகள் இவைகள் தவிர) மற்ற விஷயங்களையும் (உதாரணமாக வெளி நாட்டு வர்த்தகம், நாணய செலாவணி, போன்றவற்றையும்) மத்திய சர்க்காரில் சேர்க்காலாமா என்பதும் அங்குதான் முடிவாகும்.

ஆகையால் இந்தியாவின் பிற்கால அரசியல் வாழ்வு முழுதையும் நிர்ணயிக்கும் ஓர் மகத்தான பொறுப்பு இந்த அரசியல் நிர்ணய சபைக்கு இருக்கிறது.

மற்ற தேசங்களில் ஏற்பட்ட அரசியல் நிர்ணய சபைகளையும், அவை ஏற்பட்ட சந்தர்ப்பங்களையும், அவற்றில் தயாரிக்கப்பட்ட அரசியல் அமைப்புக்களையும் பரிசீலனை செய்வது பயன் உள்ள ஆராய்ச்சியாக இருக்கும்.

ஆனால் இந்திய அரசியல் நிர்ணய சபை பல விதங்களில் மிகவும் புதுமை வாய்ந்ததாகும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

இதுவரை உலகில் எந்த இடத்திலும், எந்த அரசியல் நிர்ணய சபையும் 40 கோடி மக்களுக்கான ஒரு அரசியலை தயாரித்ததில்லை. முதல் முதலாக அரசியல் நிர்ணய சபை

கூடினது அமெரிக்காவில்தான். இப்போது அமெரிக்காவின் விஸ்தீர்ணம் இந்தியாவைப்போல் சுமார் இரண்டு மடங்கு இருப்பினும், அரசியல் நிர்ணய சபை கூடின 1787-ல் அந்த சர்க்காரின் விஸ்தீர்ணம் இந்தியாவில் ஐந்தில் ஒரு பங்குதான். அப்போது அங்கு இருந்த ஜனத்தொகையோ, தற்கால இந்தியாவின் ஜனத்தொகையில் நூறில் ஒரு பங்கு கூட இல்லை. அமெரிக்காவில் அரசியல் தயாரித்த காலத்தில், அந்த நாடு ஏற்பட்டு 200 வருஷங்கள் கூட ஆகவில்லை. ஆகையால் அவர்களது வாழ்வில் அப்பொழுது அதிகமான சிக்கல்கள் இல்லை. அந்த கண்டத்தின் நிலப்பரப்பின் பெரும் பகுதியும் அங்குள்ள இயற்கைச் செல்வமும், அங்குள்ள ஜனத்தொகையின் தேவையை விட, மிகவும் அதிகமாக இருந்தது. ஆகையினால் வகுப்பு போட்டிகளுக்கும், பொறாமைக்கும் இடமில்லை. குடியேறின பொழுதே ஆங்கிலேயர்கள் ஓரிடமும், டச்சுக்காரர்கள் ஓரிடமும், கத்தோலிக்கர்கள் ஓரிடத்திலும் ப்ராடஸ்டண்டுகள் ஓரிடத்திலும் தனித்தனியாக குடியேறியதால், பரஸ்பரம் மோதுதல் இல்லாமல் வாழ முடிந்தது. இவ்வாறு இருந்ததால், அவர்கள் ஓர் பொது அரசியலை நிர்ணயித்துக்கொள்வது அப்பொழுது சுலபமாக இருந்தது.

அந்த அரசியல் நிர்ணய சபை 1787-வருஷத்தில் கூடாமல் 1861 வருஷத்தில் கூடியிருந்தால், அதில் தயாரான அரசியலே வேறு தினுசாக இருந்திருக்கும்; . தெற்குப் பகுதியும் வடக்குப் பகுதியும் ஒரு பொது அரசியல் நிர்ணய சபையில் கூடியிருக்குமா என்பதே சந்தேகம். அந்த நாடு 1776 வருஷத்தில் சுதந்திரம் பெற்றிராமல், இன்று வரை ஓர் அன்னிய அதிகாரத்தில் இருந்து வந்திருந்தால், இன்று அவர்கள் ஓர் அரசியலை தயாரிக்க முடியுமா என்பதே சந்தேகம்.

உலகில் எந்த அரசியல் நிர்ணய சபையும், ஏற்கனவே பிறரால் நிர்ணயிக்கப்பட்ட சில கொள்கைகளுடனும் நிபந்தனைகளுடனும் கூடினதில்லை. ஒவ்வொரு அரசியல்

நிர்ணய சபையும், அதில் கலந்து கொள்பவர்கள் இடையே உள்ள பொது லக்ஷியங்களையே ஆதாரமாக வைத்துக் கொண்டு வேலை செய்திருக்கிறது.

இவ்வாறு பல விஷயங்களில் இந்திய அரசியல் நிர்ணய சபை மிகவும் புதுமை வாய்ந்தது. எந்த அரசியல் நிர்ணய சபையிலும், பிரதிநிதிகள் வகுப்புவாரியாகவும், தனித்தொகுதிகள் மூலமும் தேர்ந்தெடுக்கப்பட்டதில்லை.

உலகில் இதுவரை நடந்த அரசியல் நிர்ணய சபைகளில் அரசியலமைப்பு நிர்ணயித்த பிறகும், அதை மாகாணங்களில், சட்டசபைகளின் வோட்டுக்கோ, பொது ஜன வோட்டுக்கோ சமர்பித்து, அதில் அங்கீகாரம் பெற்ற பிறகுதான் அமுலுக்குக் கொண்டுவருவது வழக்கம். தூதுகோஷ்டி சிபார்சு செய்துள்ள திட்டத்தில் இப்படியில்லை. அரசியல் தயாரிக்கும் போதே ஒரு பிரிட்டிஷ் இந்திய உடன்படிக்கையும் தயாரிக்கப்பட வேண்டும். அந்த உடன்படிக்கை பிரிட்டனுக்கு திருப்தியளிக்கும் முறையில் தயாரிக்கப்பட்டு விட்டால், அரசியல் நிர்ணயசபை தயாரித்த அரசியல் உடனே அமலுக்கு வந்துவிடும்.

பிறநாட்டு அரசியல் நிர்ணய சபைகளில் கட்சி பிளவுகள் உண்டு. அபிப்பிராய பேதங்கள் உண்டு. ஆனால் இந்தியாவில் இருப்பதுபோல, இரண்டே கக்ஷிகள் தான் என்ற நிலைமை கிடையாது. ஐந்து ஆறு கக்ஷிகள் இருக்கும். ஆகையினால் இரண்டு மூன்று கக்ஷிகளாவது சமரஸ மனப்பான்மைக்கு உதவி செய்யக்கூடிய நிலைமையில் இருக்கும். இந்தியாவில் அவ்வாறு இல்லாமல், இரண்டே கக்ஷிகள் ; இரண்டும் பலமுள்ளவை.

*அடுத்த அத்தியாயத்தில்*

மேலே குறிப்பிட்ட இந்த அம்சங்கள் தவிர, மற்ற அம்சங்களில் இந்திய அரசியல் நிர்ணய சபையை மற்ற நாடுகளில் நடந்த அரசியல் நிர்ணய சபைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

பதினைந்தாவது அத்தியாயம்

# சில அரசியல் நிர்ணய சபைகள்

## (1) அமெரிக்கா

அமெரிக்காவில் முதல் முதலாக ஐரோப்பியர் குடியேறினது, 1607-வருஷத்தில்தான். அப்போது சுமார் 100 ஆங்கிலேயர்கள் வெர்ஜீனியா மாகாணத்தில் ஒரு குடியேற்றத்தை அமைத்தார்கள். பிறகு 1630-ல் ப்யூரிடன் என்ற வகுப்பைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள், இங்கிலாந்திலிருந்து வந்து ஒரு இடத்தில் குடியேறினார்கள். அந்த குடியேற்றத்திற்கு மெஸ்ஸாச்சுஸெட் என்று பெயர். சில வருஷங்களுக்குப் பிறகு, இதே குடியேற்றத்திற்கு இங்கிலாந்திலிருந்து சிலர் வந்தார்கள். புதிதாய் வந்தவர்களுக்கு மெஸ்ஸாச்சுஸெட்ஸிலிருந்த ப்யூரிட்டன்கள் பிடிக்கவில்லை. உடனே அவர்கள் அங்கிருந்து வெளியேறி வேறு மூன்று இடங்களில் போய் குடியேறினார்கள். அடுத்த ஐம்பது வருஷங்களில் இங்கிலாந்திலிருந்து ஒரு கத்தோலிக்கப் பிரபுவின் தலைமையில், சிலர் வந்து மேரிலாண்ட் என்ற குடியேற்றத்தை யேற்படுத்தினார்கள். இப்படியே இன்னும் இரண்டு மூன்று குடியேற்றங்கள் புதிது புதிதாய் ஏற்பட்டன. பென்ஸில்வேனியா குடியேற்றத்திலிருந்த சிலர், அந்த குடியேற்றத்தின் ஒரு பகுதியை தனி குடியேற்றமாகப் பிரித்தார்கள். இத்தனை குடியேற்றங்களும் பிரிட்டிஷ் குடியேற்றங்களே. இதற்கிடையில் டச்சுக்காரர்கள் இரண்டு குடியேற்றத்தை ஏற்படுத்தியிருந்தார்கள். 1664-ல் ஐரோப்பாவில் ஹாலந்துக்கும் இங்கிலாந்துக்கும் இடையே யுத்தம் நடந்தபொழுது, அமெரிக்காவில் ஹாலந்து குடியேற்றத்தை பிரிட்டிஷார் கைப்பற்றிக் கொண்டார்கள். இவ்வாறாக அமெரிக்காவில் பிரிட்டனுக்கு மொத்தம் 13 குடியேற்றங்கள் இருந்தன. ஒவ்வொன்றும் தனித்தனியாக பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்டிருந்தது. ஒவ்வொரு குடியேற்றத்துக்கும் பிரிட்டிஷார் ஒரு கவர்னரை நியமித்திருந்தார்கள்.

1765-க்கு பிறகு இந்த குடியேற்றங்களில் வசித்த ஜனங்களுக்கு பிரிட்டிஷ் ஆட்சி பிடிக்கவில்லை. மூவாயிரம் மைலுக்கப்பால் இருந்துகொண்டு, நம்மை கேளாமல் பிரிட்டன் வரி விதிப்பதற்கு உரிமை இல்லை என்று ஒரு கிளர்ச்சி ஆரம்பமாயிற்று. மெஸ்ஸாச்சுஸெட்ஸ்காரர்கள் இக் கிளர்ச்சியில் மிகவும் மும்மரமாக இருந்தார்கள். "சுதந்திரப் புதல்வர்கள்" என்று ஒரு சங்கத்தை அமைத்துக் கொண்டு அவர்கள் கிளர்ச்சி செய்தார்கள். தம்மைப் போலவே கிளர்ச்சி செய்யுமாறு மற்ற குடியேற்றங்களிலுள்ள ஜனத்தலைவர்களுக்கு கடிதங்கள் எழுதினார்கள். இதெல்லாம் அபாயமானதென்று பிரிட்டிஷ் சர்க்கார் உத்திரவுபோட்டு, அந்தக் கடிதங்களை வாபஸ் வாங்கும்படி கோரியது. தலைவர்கள் அதற்கு இணங்கவில்லை. கிளர்ச்சி அதிகரித்தது. பிரிட்டிஷ் கவர்னர் ராணுவத்தை வரவழைத்தார். இதைத் தொடர்ந்து மூன்று வருஷ காலம் அந்த மெஸ்ஸாச்சுஸெட்ஸ் குடியேற்றத்தில் இடைவிடாத கிளர்ச்சி நடந்தது. பிரிட்டிஷார் ஏராளமாக ஸோல்ஜர்களை அனுப்பி, அந்த குடியேற்றத்தின் சில சுய ஆட்சி உரிமைகளையும் ரத்து செய்தனர்.

உடனே எல்லா குடியேற்றங்களும் மெஸ்ஸாச்சுஸெட்ஸ் தலைவர்களுக்கு அனுதாபச் செய்தி அனுப்பி, பென்ஸில்வேனியா குடியேற்றதின் தலை நகராகிய பிலடெல்பியாவில் ஓர் மகாநாட்டை கூட்டினார்கள். பதிமூன்று குடியேற்றங்களும் பிரதிநிதிகளை யனுப்பி, ஓர் அரசியல் காரியத்திற்காக முதலில் கூடியது அப்போதுதான். 1774-ல் நடந்த அந்தக் கூட்டத்தில் பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிக்க வேண்டுமென்று அவர்கள் தீர்மானிக்கவில்லை. பிரிட்டனுடன் இணங்கி வாழவே விரும்புவதாகவும், ஆனால் அநியாயமான சட்டங்கள் ரத்துச் செய்யப்படாத வரையில் பிரிட்டனுடன் வர்த்தகம் செய்வதில்லை என்றும், ஓர் பகிஷ்கார இயக்கத்தை ஆரம்பித்தார்கள். 1775 ஏப்ரலில் ஓர் இடத்தில் பிரிட்டிஷ் படைகள் குடியேற்றக்காரர்கள் மீது சுட்டார்கள். சுதந்திரத்திற்காக இரத்தம் சிந்தப்பட்டு விட்டது!

ஆகையால் மே மாதத்தில் அமெரிக்க குடியேற்றங்கள் மகாநாடு கூடிற்று. இந்த மகாநாட்டிற்கு "காண்டிநெண்டல் காங்கிரஸ்" என்று பெயர். இந்த காங்கிரஸ் மகாசபை, பிரிட்டன் மீது போர் தொடுப்பதாக பிரகடனம் செய்து, ஜார்ஜ் வாஷிங்டனை அமெரிக்க ராணுவத்தின் தளகர்த்தராக நியமித்தது. பிரிட்டன் 20,000 பேர் கொண்ட பிரிட்டிஷ் படையை அனுப்பி, 'கலக'க்காரருடன் யுத்தம் செய்ய ஆரம்பித்தது. மறுபடியும் காங்கிரஸ் கூடி 1776 ஜுலை 4-ந் தேதியன்று சுதந்திரப் பிரகடனம் செய்தது.

இந்த யுத்தம், 1781-ல் தான் முடிந்தது. ஐந்து வருஷகாலம் 13 குடியேற்றங்களும் சேர்ந்து ஓர் பெரிய யுத்தத்தை நடத்தினது என்றாலும், அவை 13 தனி நாடுகளாகவே இருந்தன. அவற்றினிடையே பொதுவான சர்க்கார் எதுவுமில்லை. ஜனங்களும் தம்மை அமெரிக்க தேசத்தார் என்று சொல்லிக் கொள்வதில்லை. நேஷன் (தேசிய இனம்) என்ற வார்த்தையையே அவர்கள் அப்பொழுது உபயோகிக்கவில்லை. அந்த பதிமூன்று நாடுகளுக்கு இடையே அந்த பொது அம்சம் என்பது காங்கிரஸ் என்ற சங்கமும் ஒரு சேனைபதியும் தான். ஆனல் 1777 ல் அந்த காங்கிரஸினர் பதிமூன்று குடியேற்றங்களுக்கும் இடையே ஐக்கிய அமெரிக்க நாடுகள் என்று ஒரு சர்க்காரை ஏற்படுத்திக் கொள்ள ஒரு அரசியல் திட்டம் தயாரித்தார்கள்.* ஆனல் 1781-ல் தான் அது அமலுக்கு வந்தது.

அந்த அரசியலை ஒரு சங்கம் என்று சொல்லமுடியுமே தவிர, சர்க்கார் என்று சொல்ல முடியாது. இதே நிலைமை தான் ஆறு வருஷ காலம் நீடித்தது. ஆனல் போதிய அதிகாரத்துடன் ஒரு பொது சர்க்கார் ஏற்பட்டாலொழிய குடியேற்றங்கள் நன்ருக அபிவிருத்தி ஆக முடியாது என்று பலர் நினைக்க ஆரம்பித்தனர். ஆகையால் 1787-ல்

* இத் திட்டத்திற்கு கான்பெடரேஷன் என்று பெயர்.

பிப்ரவரியில் ஒரு தீர்மானம் நிறைவேற்றினார்கள். அதன் கருத்து பின் வருமாறு :—

> இப்பொழுதுள்ள கான்பெடரேஷன் (சம்மேளனம்) அமைப்பு போதிய நிர்வாக அதிகாரம் உள்ளதாக இல்லை. அமெரிக்க நாடுகளின் ஐக்கியத்தை காப்பாற்றுவதற்கு இந்த ஏற்பாடு போதாது. இதை மாற்றி யமைப்பதற்காக, மே மாதம் 2-வது திங்கட் கிழமை யன்று, பதிமூன்று நாடுகளிலிருந்தும், பிரதிநிதிகள் ஒரு மகாநாட்டில் கூட வேண்டும். ஒரு அரசியலை தயாரித்து அதை அவர்கள் காங்கிரஸினிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த தீர்மானத்தின்படி, ரோட் ஐலெண்ட் என்ற குடியேற்றத்தை தவிர, பாக்கி உள்ள 12 குடியேற்றங்களும் அந்த அரசியல் நிர்ணய சபைக்கு பிரதிநிதிகளை அனுப்பின. மொத்தம் பிரதிநிதிகள் 55 பேர். இவர்கள் நாலு மாத காலம் விவாதித்து, ஒரு திட்டம் தயாரித்தனர். அதில் கையெழுத்து செய்தவர்கள் 39 பேர்தான். இந்த திட்டம் ஒவ்வொரு மாகாண சட்ட சபைக்கும் அனுப்பப்பட்டது.

பதின்மூன்று மாகாணங்களுள் (States) எந்த மாகாணங்களில்* இந்த அரசியல்திட்டம் ஏற்றுக்கொள்ளப்படுகிறதோ, அந்த மாகாணங்களை மட்டும் சேர்த்துக்கொண்டு அரசியலை அமலுக்கு கொண்டுவரவேண்டுமென்று, அரசியல் நிர்ணயசபை தீர்மானித்தது. சில மாகாணங்கள் இவ்வரசியலை உடனே ஊர்ஜிதம் செய்தன. பல மாகாணங்கள் 1788-ல் தான் ஊர்ஜிதம் செய்தன. ஏற்கனவே நிச்சயித்திருந்தபடி 1789 மார்ச் மாதம் 4 தேதி புது அரசியல் அமலுக்கு வந்தது. அப்போது 11 மாகாணங்கள்

* சமஷ்டிகளும் சம்மேளனங்களும் ஏற்கனவே தனித்து நின்ற நாடுகளிடையேதான் ஏற்படும். ஆகையால் சமஷ்டி யமைப்பில் "மாகாணங்களை"க் குறிப்பிடும்போது Provinces என்று சொல்லாமல் States (ராஜ்யம் அல்லது நாடு) என்று சொல்வது வழக்கம். இந்த புத்தகத்தில் மாகாணங்கள் என்ற வார்த்தையையும், நாடுகள் என்ற வார்த்தையையும் சில இடங்களில் ஒரே அர்த்தத்தில்தான் உபயோகித்திருக்கிறோம்.

தான் அதை ஊர்ஜிதம் செய்திருந்தன. அரசியல் நிர்ணய சபையில் கலந்து கொள்ளாத ரோட் ஐலெண்டு மே மாதத்தில் சேர்ந்து கொண்டது. வடக்கு காரொலைனு என்ற மாகாணம் அரசியல் நிர்ணய சபையில் கலந்து கொண்டிருந்தும் கூட, அந்த மாகாணம் 1789 நவம்பரில்தான் சமஷ்டியில் சேர்ந்தது. சுதந்திர பிரகடனம் செய்த காலத்தில், வெர்மான்ட் என்ற தனி குடியேற்றம் அதில் சேரவில்லை. இந்த மாகாணம் 1791-ல் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் சேர்ந்து கொள்ள விரும்பியது; அப்படியே சேர்த்துக் கொள்ளப்பட்டது. இவ்வாருக அமெரிக்க சமஷ்டி பதிமூன்று நாடுகளுடன் ஆரம்பமாயிற்றென்ருலும், இரண்டு வருஷ காலத்திற்குள் அது பதினுன்கு நாடுகள் கொண்டதாக ஆகிவிட்டது. இந்த ஜனங்கள் மேற்கு நோக்கிப் போய் புதிய பிரதேசங்களில் குடியேறினர். அந்தப் பிரதேசங்களும் "நாடுகளாக" அமைக்கப்பட்டு சமஷ்டியில் சேர்ந்து கொண்டே வந்தன. இன்று அமெரிக்க சமஷ்டியில் 48 மாகாணங்கள் இருக்கின்றன.

ஒரு தேசத்தின் சரித்திரத்தை தெரிந்து கொண்டால்தான், அதன் அரசியல் ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் அமைந்ததின் காரணத்தை அறிந்து கொள்ளமுடியும். அமெரிக்காவின் சரித்திரத்தை நாம் சற்று விரிவாக கூறியிருப்பதின் நோக்கம் அதுதான். அமெரிக்காவின் அரசியல் நிர்ணய சம்பந்தமாக நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய விஷயங்கள் பின்வருமாறு:—

(1) சுதந்திர பிரகடனம் செய்வதற்காகத்தான் அந்த நாடுகள் ஒன்று கூடின. பிறகு தம்மிடையே ஒரு பொது ஏற்பாட்டிற்கு வந்தன. அந்த ஏற்பாடு ஒரு "சமஷ்டி"யல்ல; "சம்மேளன"மாகவே இருந்து (2) பின்னர் அவர்கள் சமஷ்டி அரசியலை நிர்ணயம் செய்தபொழுது, அதில் கலந்துகொண்ட மாகாணங்கள் யாவும் பூர்ண சுதந்திரமுள்ள தனித்தனி நாடுகளாக இருந்தன. (3) அந்த 13 நாடுகளில் ஒவ்வொன்றும் தம்முடைய ராஜாங்க உரிமையில் ஒரு பகுதியை மத்திய சர்க்காரிடம் ஒப்படைத்தன. (4) அரசியல் நிர்ணயிக்கப்பட்ட பிறகு ஒவ்வொரு மாகாணத்தி

லும் அரசியலமைப்புத் திட்டத்தை பொது ஜனங்களிடம் சமர்ப்பித்து, அந்த மாகாணங்களில் பெரும்பான்மையானவை அந்த திட்டத்தை ஊர்ஜிதம் செய்தபின்தான், அத்திட்டம் அமலுக்கு வந்தது. (5) எந்த மாகாணம் ஊர்ஜிதம் செய்ததோ அதுமட்டும்தான் சமஷ்டியில் சேர்க்கப்பட்டது. (6) அரசியல் நிர்ணய சபையில் கலந்து கொள்ளாத மாகாணமும்கூட அவ்வரசியலை ஒப்புக் கொண்டவுடன் சமஷ்டியில் சேர்த்துக் கொள்ளப் பட்டது.

## (2) ஆஸ்டிரேலியா

ஆஸ்திரேலியாவில் இப்பொழுதுள்ள அரசியல் கிட்டத்தட்ட அமெரிக்காவில் உள்ளதைப் போன்ற சமஷ்டியே. அதன் அரசியல் 1900 ல் நிர்ணயமாயிற்று. ஆனால் ஆஸ்திரேலியாவில் சமஷ்டியை ஏற்படுத்த வேண்டுமென்ற முயற்சி 1891 லேயே ஆரம்பமாயிற்று. அதாவது அரசியலை நிர்ணயிக்க 9 வருஷங்களாயின என்று சொல்லலாம்.

ஆஸ்திரேலியாவின் விஸ்தீரணம், இந்தியாவின் விஸ்தீரணத்தை விட அதிகம். ஆனால் அதன் ஜனத்தொகை, இப்பொழுதுகூட, இந்தியாவில் இருப்பதில் சுமார் 60 ல் ஒரு பாகம்தான்.

இப்பொழுதுள்ள அரசியல் அமலுக்கு வருவதற்கு முன்னர், அந்த தேசத்தில் 6 குடியேற்றங்களிருந்தன. ஒவ்வொன்றும் நேரடியாக பிரிட்டனுடன் தொடர்பு வைத்துக்கொண்டு, பொறுப்பாட்சியுடன் (அதாவது சட்ட சபைக்குப் பொறுப்பான மந்திரிகளின் நிர்வாகத்தில்) இருந்து வந்தது. இவ்வாறு ஒரே கண்டத்தில் ஒன்றுக்கொன்று சமீபத்தில் வாழும் நாடுகளிடையே பரஸ்பரம் ஒரு உறவும் இல்லாமல் இருப்பது சரியல்ல என்றும் அந்த 6 நாடுகளுக்கும் அல்லது மாகாணங்களுக்கும் பொதுவாக ஒரு கவர்னர் ஜெனரலை நியமிக்கலாமென்றும் சிலர் யோசனை கூறினர். இதற்கு ஆஸ்திரேலியாவில் பலமான எதிர்ப்பு இருந்தது. ஆகையால் அது ஒரே தேசமாக ஆக்கப்படவில்லை; 6 மாகாணங்

களுக்கும் பொதுவான ஒரு மத்திய சர்க்கார் அங்கே ஏற்படவில்லை. 1885-ல் பிரிட்டன் ஒரு சட்டம் இயற்றி "சமஷ்டி கவுன்ஸில்" (Federal Council) என்ற பெயருடன் ஒரு சபையை அமைத்தது. அந்த கவுன்ஸிலுக்கு எந்த குடியேற்றமும் தன் பிரதிநிதிகளை அனுப்பலாம். இந்த கவுன்ஸில் ஒரு ஆலோசனை சபையாக வேலை செய்ததே ஒழிய, அதிகாரம் எதுவும் கிடையாது. 2 மாகாணங்கள் அதில் சேரவே இல்லை. ஆகையால் அதற்கு எவ்வித செல்வாக்கும் இல்லாமல் போயிற்று.

ஆனால் அதே வருஷத்தில் ஒரு ராணுவ நிபுணர் ஆஸ்திரேலியா கண்டத்தின் எந்த பகுதியையும் வேறு நாட்டினர் படையெடுக்காமல் தடுப்பதற்கு என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டுமென்று, ஒரு யாதாஸ்தை தயாரித்து சமஷ்டி கவுன்ஸிலில் சமர்ப்பித்தார். அதை படித்த பிறகுதான் ஒரு சமஷ்டி சர்க்கார் வேண்டுமென்ற உணர்ச்சி தலையெடுத்தது. உடனே நியூஸௌத் வேல்ஸ் என்ற குடியேற்றத்தின் பிரதம மந்திரி ஆஸ்திரேலியா கண்டத்திலுள்ள மற்ற குடியேற்றங்களின் பிரதம மந்திரிகளுக்கு ஒரு சுற்றறிக்கையை அனுப்பி, அந்தக் கண்டத்தின் தற்காப்பிற்காகவேனும் ஒரு சமஷ்டி அவசியம் என்பதை வற்புறுத்தினர். அவருடைய சுற்றறிக்கையைப் படித்த பிறகு ஒவ்வொரு குடியேற்றமும் மெல்போர்ன் (Melbourne) நகருக்கு பிரதிநிதிகளை அனுப்பியது. ஆஸ்திரேலியாவிற்கு ஓர் சமஷ்டி அரசியல் தயாரிப்பதற்காக ஓர் அரசியல் நிர்ணயசபை கூட்டவேண்டுமென்று பிரதிநிதிகள் ஏகமனதாக தீர்மானித்தார்கள்.

அதன்படி 1891-ல் சிட்னி நகரத்தில், அரசியல் நிர்ணயசபை கூடியது. ஒரே மாதத்தில் ஓர் அரசியல் அமைப்பு தயாரிக்கப்பட்டது.

ஆனால் இந்த அரசியலை அந்தந்த குடியேற்றங்களிடம் சமர்ப்பித்தவுடன் யாருமே அதில் அக்கரை காட்டவில்லை. ஆகையால் சமஷ்டியில் பற்றுள்ள சிலர் அதற்காக 4 வருஷ காலம் பிரசாரம் செய்தனர். 1895-ல் நியூஸௌத்வேல்ஸ் பிரதம மந்திரி அந்த 6 குடியேற்றங்

களின் பிரதம மந்திரிகளையும் அழைத்து ஆலோசனைகள் நடத்தினர். மறுபடியும் ஓர் அரசியல் நிர்ணய சபையைக் கூட்டவேண்டுமென்றும் அது தயாரிக்கும் திட்டத்தை குடியேற்றங்களின் சட்ட சபைகளிடம் சமர்ப்பிப்பதற்கு பதிலாக ஜனங்களிடம் சமர்ப்பித்து, சர்வஜன வோட்டு எடுக்கவேண்டு மென்றும் தீர்மானிக்கப்பட்டது. அரசியல் நிர்ணயசபைக்கு ஒவ்வொரு குடியேற்றத்திலிருந்தும் 10 பிரதி நிதிகள் வர வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டது. க்வீன்ஸ்லெண்டு என்ற குடியேற்றம் இதில் கலந்து கொள்ளவில்லை.

1897–ல் இரண்டாவது அரசியல் நிர்ணய சபை கூடியது. அதில் ஒரு அரசியலை தயாரித்து, அபிப்பிராயம் தெரிவதற்காக அதை எல்லா குடியேற்றங்களின் சட்ட சபைகளுக்கும் அனுப்பினார்கள். அவற்றின் அபிப்பிராயம் தெரிந்த பிறகு சில மாறுதல்கள் செய்து, இறுதியாக ஒரு திட்டத்தை தயாரித்தார்கள். 3 மாகாணங்களின் ஜனங்கள் புதிய திட்டத்தை ஆதரித்தார்கள். ஆனால் நியூ ஸௌத்வேல்ஸ் குடியேற்றம் அதை ஊர்ஜிதம் செய்ய வில்லை. திட்டத்தில் மாறுதல்கள் செய்ய வேண்டுமென்று கோரியது.

அந்த விருப்பத்திற்கிணங்கி எல்லா குடியேற்றங் களின் பிரதம மந்திரிகளும் கலந்து கொண்ட ஓர் மகா நாடு கூட்டப்பட்டது. அரசியல் நிர்ணய சபையில் தயாரித்த திட்டத்தில், இந்த மகாநாடு சில அம்சங்களை ஏகமனதாக மாற்றியது. சமரசமாக மாறுதல் செய்த பின் இந்தப் புதிய திட்டம் மீண்டும் மாகாணங்களுக்கு அனுப்பப்பட்டு சர்வஜன வோட்டில் அங்கீகரிக்கப் பட்டது. பிறகு பிரிட்டிஷ் பார்லிமெண்ட் இந்த திட் டத்தை அப்படியே சட்டமாக்கியது.

இதில் நாம் கவனிக்கவேண்டிய அம்சங்கள் :—

(1) அமெரிக்காவைப் போலவே ஆஸ்திரேலியா விலும் இருந்த குடியேற்றங்கள் பரஸ்பரம் அரசியல் தொடர்பில்லாத நாடுகளாகவே இருந்தன. (2) எல்லா

மாகாணங்களும் சம்மதித்த பிறகுதான், சமஷ்டித் திட்டம் அமலுக்கு கொண்டு வரப்பட்டது. (3) "இது தான் இறுதி திட்டம்" "இதுதான் இறுதி திட்டம்" என்று சொல்லிவிட்டு மாகாணங்களின் சம்மதத்தைப் பெறுவதற்காக, இரண்டு தடவை அதை மாற்றவேண்டியிருந்தது.

## (3) ஸ்விட்ஜர்லந்து

இது ஐரோப்பாவில், பிரான்ஸ் ஜெர்மனி இத்தாலி என்ற 3 தேசங்களுக்கு கிடையே மலையும் மடுவும் நிறைந்த ஒரு சிறு தேசம். இதில் இப்பொழுது அமலில் இருப்பது ஒரு சமஷ்டி சர்க்காரே.

1848க்கு முன் அச்சிறு தேசம் பல மிகச் சிறிய ஜில்லாக்களாக இருந்தது. ஒவ்வொரு ஜில்லாவும், பூர்ண சுதந்திரமுள்ள குட்டி ராஜாங்கமாகவே இருந்து வந்தது. இவற்றிற்கு எல்லாவற்றிற்கும் பொதுவாக ஒரு "தேசீய மன்றம்" மட்டும் இருந்தது. ஜில்லாக்கள் எல்லாவற்றிற்கும் பொதுவான விவகாரங்களைப் பற்றி அதில் விவாதிப்பார்கள். எல்லோரும் ஒப்புக் கொண்டாலொழிய எந்த பிரேரணையும் நிறைவேறாது. நிறைவேறிய பிரேரணையையும் அந்த ஜில்லாக்கள் நடத்தி வைக்கும் என்ற உறுதி கிடையாது. இந்த தேசீயமன்றத்திற்கு நிர்வாக அதிகாரம் ஒன்றும் கிடையாது.

இந்த நிலைமையை மாற்றவேண்டுமென்று பல ஜில்லாக்களில் உள்ளவர்கள், கிளர்ச்சி செய்தார்கள். எல்லா ஜில்லாக்களுக்கும் பொதுவான ஒரு சர்க்காரை ஏற்படுத்த வேண்டுமென்பது, இவர்களது நோக்கம். இந்த யோசனையை எதிர்ப்பதற்காக சில ஜில்லாக்கள் தம்மிடையே தனியாக ஒரு கூட்டுறவை ஏற்படுத்திக் கொண்டு ஸ்விட்ஜர்லந்தின் தேசீய மன்றத்திலிருந்து தனியாகப் பிரியவும் அன்னிய தேசங்களின் உதவியை நாடவும் தலைப்பட்டன. உடனே மற்ற ஜில்லாக்கள் எல்லாம் சேர்ந்து, இந்த ஜில்லாக்கள் பேரில் போர் தொடுத்து வெற்றி பெற்றன.

இந்த வெற்றிக்குப் பிறகு, தேசீய மன்றம் ஒரு கமிட்டியை நியமித்து, அமெரிக்க சமஷ்டி முறையை பின்பற்றி ஓர் அரசியலை தயாரித்தது. அந்த அரசியல் ஒவ்வொரு ஜில்லாவின் சர்க்காருக்கும் ஆலோசனைக்காக அனுப்பப்பட்டு, அந்த ஆலோசனைகள் கிடைத்த பிறகு சில திருத்தங்கள் செய்து, மறுபடியும் ஜில்லா ஜில்லாவாக சர்வஜன வோட்டுக்கு விட்டதில், 15 ஜில்லாக்களில் அங்கீகரிக்கப்பட்டது. 6 ஜில்லாக்கள் இத்திட்டத்தை நிராகரித்தன. ஆனால் இந்த அரசியல் திட்டம் எல்லா ஜில்லாக்களுக்கும் பொதுவாகவே அமலுக்கு கொண்டு வரப்பட்டது.

## (4) கானடா *

வட அமெரிக்காவின் வடக்குப் பகுதிக்குக் கானடா என்று இப்போது பெயர் வழங்குகிறது. அதன் சர்க்காருக்கு "டொமினியன் ஆப் கானடா" (Dominion

* சமஷ்டி ஏற்படுமுன் கானடாவின் நிலைமையைப்பற்றி சிலவிஷயங்கள் குறிப்பிடத்தக்கன. 1760-க்கு முன் கியுபெக்-ஒண்டோரியோ பிரதேசங்கள் கானடா என்ற பெயருடன் பிரெஞ்சு குடியேற்றமாகவே இருந்தன. 1760ல் ஐரோப்பாவில் நடந்த யுத்தங்களின் விளைவாக, அமெரிக்கா கண்டத்திலுள்ள இந்த பிரதேசம் பிரிட்டனுக்குச் சொந்தமாயிற்று. அந்த நாட்டுக்கு ஒரு பிரிட்டிஷ் கவர்னர் நியமிக்கப்பட்டார். பிறகு பிரிட்டிஷார் அங்கு வந்து குடியேறினர். புதிதாக வந்த பிரிட்டிஷ் குடியேற்றக்காரர்கள் அந்த நாட்டில் தமக்குத்தான் அதிகாரம் என்ற தோரணையில் நடக்க ஆரம்பித்தனர். பிரிட்டிஷாருக்கும் பிரெஞ்சுக்காரருக்குமிடையே "இன" த் தகராறு மட்டுமல்லாமல், பாஷைத் தகராறும் இருந்தது. இதை உத்தேசித்து பிரிட்டன் கானடாவை இரண்டாகப் பிரித்தது. மேற்கு மாகாணத்தில் பிரிட்டிஷ் மெஜாரிட்டி; கிழக்கு மாகாணத்தில் பிரெஞ்சுக்காரர் மெஜாரிட்டி. கிழக்கு மாகாணத்திலும் பிரிட்டிஷ் பிரஜைகளுக்கே அதிக செல்வாக்கு இருந்தது. பிரிவினைக்குப் பிறகும் பிரச்னை தீரவில்லை. பிறகு 1840ல் பிரிட்டிஷார் இரண்டு மாகாணத்தையும் ஒன்றுபடுத்தினர். இதுவும் பயன்பட

(இதன் தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

of Canada) என்று பெயர். இப்போது அங்குள்ள அரசியல் ஆஸ்திரேலியா, தென்னுப்ரிக்கா முதலியவற்றின் அரசியலைப் போலவே, பிரிட்டிஷ் பார்லிமென்டினுல் சட்டமாக இயற்றப்பட்டதுதான். ஆனால் உண்மையில் அதை தயாரித்தது, கானடாவில் அதற்கென்று ஏற்படுத்திய ஒரு அரசியல் நிர்ணய சபைதான். அந்த அரசியல் நிர்ணய சபையில் 30 அங்கத்தினர்களே இருந்தார்கள்.

அரசியல் தயாரிக்கப்பட்ட காலத்தில், கானடா, பல வேறு தனிக் குடியேற்றங்களாக பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்தது. அப்போது கானடா என்பது ஒரு மாகாணத்தின் பெயராக இருந்தது. அந்த மாகாணத்தில் கியுபெக், ஒண்டோரியோ என்று இரண்டு பகுதிகள் இருந்தன. இவற்றுக்கு சமீபத்தில் வேறு பிரிட்டிஷ் குடியேற்றங்களும் இருந்தன.

1864 வருஷத்தில் நோவாஸ் கோஷியா, எட்வர்ட் ஐலன்ட், நியூப்ரன்ஸ்விக் என்ற மூன்று கடற்கரை மாகாணங்கள் சார்லட்டவுன் என்ற இடத்தில் ஒரு மகாநாட்டுக்குப் பிரதிநிதிகளை அனுப்பினுர்கள். அந்த மூன்று மாகாணங்களுக்குமாக "ஒரு யூனியன்" (சமஷ்டி) ஏற்படுத்த வேண்டுமென்பதுதான், அந்தக் கூட்டத்தின் நோக்கம். அந்த கூட்டத்துக்கு கியுபெக், ஒண்டோரியோ இரண்டும் சேர்ந்த கானடா மாகாணத்து சர்க்கார் ஒரு பிரதிநிதி கோஷ்டியை அனுப்பி, கடற்கரையோர மாகாணங்களுக்கு மட்டுமல்லாமல் கானடா மாகாணமும் சேர்ந்த ஒரு பெரிய சமஷ்டியை ஏற்படுத்தலாமென்று யோசனை கூறியது. அதன்படியே கடற்கரை மாகாணப்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. பிரிட்டிஷ் மெஜாரிட்டிக்கெதிராக இருந்த பிரெஞ்சு மைனுரிட்டி பெரிதாக இருந்ததால் மீண்டும் முட்டுக்கட்டையான நிலைமையே ஏற்பட்டது. மீண்டும் கானடாவை இரண்டாகப் பிரித்து சமஷ்டியில் இணைத்தது தான், கடைசியாக அரசியல் நிர்ணய சபையில் செய்த முடிவு.

பிரதிநிதிகளும், கானடா பிரதிநிதிகளும் "கியுபெக்" நகரில் கூடி, புது அரசியல் பற்றி 72 தீர்மானங்கள் நிறைவேற்றினர். இந்தத் தீர்மானங்களின் சாராம்சம்:—

(1) கானடா மாகாணத்தை, க்யுபெக், ஒன்டோரியோ என்று இரண்டு மாகாணங்களாகப் பிரித்து, இந்த இரண்டு மாகாணங்களையும், கடற்கரையோரத்தில் உள்ள மூன்று மாகாணங்களையும் சேர்த்து, ஐந்து மாகாணங்கள் கொண்ட ஒரு சமஷ்டியை ஏற்படுத்துவது. (2) ஒவ்வொரு மாகாணத்துக்கும் தனித்தனி சட்ட சபையும் நிர்வாக சபையும் இருக்கும். (3) இவை எல்லாவற்றுக்கும் பொதுவாக ஒரு சமஷ்டி சர்க்கார் இருக்கும். (4) இந்த சமஷ்டிப் பிரதேசத்துக்கு வெளியே இருந்த பிரிட்டிஷ் கொலம்பியா, வடமேற்கு பிரதேசம், வான்குவர் முதலியவற்றையும் பின்னர் சமஷ்டியில் சேர்த்துக் கொள்ளலாம். இவ்வாறு கியுபெக்கில் நிறைவேற்றிய 72 தீர்மானங்களை கானடா, நியூபிரன்ஸ்விக், நோவாஸ் கோஷியா முதலிய மாகாணங்களின் சட்ட சபைகளில் சமர்ப்பித்தனர். 72 தீர்மானங்களையும் திருத்தமின்றி ஏற்க வேண்டும் அல்லது நிராகரிக்கவேண்டும்; திருத்தங்கள் எதுவும் சிபார்சு செய்யமுடியாது, என்ற நிபந்தனையுடன் சட்டசபைகளில் பிரேரிக்கப் பட்டன. சில சட்ட சபைகள் உடனேயும், சில மாகாணங்கள் கடுமையான எதிர்ப்புக்குப் பிறகும், அந்தத் தீர்மானங்களை அங்கீகரித்தன.

பிறகு இந்த தீர்மானங்களுடன் சில பிரதிநிதிகள் லண்டனுக்குச் சென்று, பிரிட்டிஷ் சர்க்காரின் சட்ட நிபுணர்களுடன் கலந்து சட்டரீதியான பாஷையில் அதை அமைத்தனர். பிரிட்டிஷ் பார்லிமென்ட் அதில் மாறுதல் செய்யாமல் 1867 வருஷத்தில் அப்படியே சட்டமாக்கியது. பிறகு சமஷ்டி அமலுக்கு வந்தது. அப்போது பிரின்ஸ் எட்வர்ட் ஐலன்டு (தீவு) அதில் சேரவில்லை. 1871-ல் தான் அது சமஷ்டியில் சேர்ந்தது. பிறகு கானடாவின் மற்ற பிரதேசங்களும் தனி மாகாணங்களாக்கப்பட்டு சமஷ்டியில் சேர்த்துக்கொள்ளப்பட்டன.

## (5) தென்னுப்பிரிக்கா

தென்னுப்பிரிக்கா இப்போது 4 மாகாணங்களுள்ள "ஒருமை நாடாக" இருக்கிறது. அந்த மாகாணங்களின் சரித்திரமும், அவை ஒன்றுபட்ட வரலாறும் அதன் அரசியல் நிர்ணய சபையின் நடை முறையும் என்னவென்று பார்ப்போம். நான்கு மாகாணங்களில் "கேப்" குடியேற்றமும், "நட்டால்" குடியேற்றமும் பிரிட்டிஷ் நாடுகளாகவும், ஆரஞ்சு நதிக்கரை நாடும், டிரான்ஸ்வாலும் சுதந்திர டச்சு குடியேற்றங்களாகவும் இருந்தன. 1899-ல் இரண்டு டச்சு நாடுகளும் பிரிட்டிஷ் குடியேற்றங்கள்மீது போர் தொடுத்தன. போரில் அந்த டச்சு நாடுகள் முறியடிக்கப்பட்டு சரணடைந்தன. சரணடைந்த பின்னர், பிரிட்டன் அவற்றை பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் கொண்டுவந்தது. ஆனல் 1906 வருஷத்தில் அவற்றுக்கு பொறுப்பாட்சி கொடுக்கப் பட்டது.

இந்த 4 பிரிட்டிஷ் பொறுப்பாட்சி குடியேற்றங்களுக்குமிடையே, பொது சர்க்கார் எதுவுமிருக்கவில்லை. ஒவ்வொரு நாடும் தன் வர்த்தகத்தை பெருக்கிக்கொள்ள முயற்சித்தது. அவற்றிடையே பரஸ்பரம் சுங்க வரிப் போட்டி இருக்கக் கூடாதென்று ஒரு "சுங்க ஐக்கியம்" ஏற்பட்டது. அது ஸ்திரமாக நிற்கவில்லை. ரயில்கள் ஒவ்வொரு நாட்டிலும் சர்க்காருக்குச் சொந்தமாக இருந்தன. ஆகையால் வர்த்தகப் பொருள்களை ஏற்றிச் செல்வதில் அவை போட்டி போட்டு, கட்டணங்களைக் குறைத்து தம் நாட்டுப் பொருள்கள் வெளியிடத்தில் மலிவாக விற்பதற்கு ஏற்பாடுசெய்தன. இது நிமித்தமாகப் போட்டி அதிகரித்து சுங்க வரித் தகராறும் ஏற்பட்டது. டிரான்ஸ்வால் நாடு "வரியில்லா வர்த்தகம்" என்ற முறையை அனுஷ்டித்தது. ஆனல் நட்டாலும், கேப் குடியேற்றமும் காப்புவரி போட்டு, கைத் தொழிலை வளர்க்க ஆரம்பித்தன. இதனல் போட்டியும் பொருமையும் வளர்ந்தது.

அந்த 4 குடியேற்றங்களில் வெள்ளையர் தொகை குறைவு. கருப்பு மனிதர்கள் தொகை 100க்கு 75 பேர்! கருப்பு மனிதர் விஷயமாக ஒவ்வொரு குடியேற்றமும்

ஒவ்வொரு கொள்கையை அனுஷ்டித்தால் கருப்பர்கள் மிகவும் மோசமாக நடத்தப்படும் நாட்டில் அவர்களது அதிருப்தி அதிகரிக்கும். எல்லா இடத்திலும் ஒரே கொள்கையை அனுஷ்டிக்காவிடில் கருப்பர்களை அடக்கிவைக்க முடியாது!

இந்த நிலைமை நீடிக்கக் கூடாது என்று நினைத்து 4 குடியேற்றக்காரரும் பிரெடோரியாவில் ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தினர். தென்னாப்பிரிக்காவில் உள்ள குடியேற்றங்களின் சமஷ்டி ஒன்று ஏற்படுத்தும் பொருட்டு, ஒரு திட்டம் தயாரிக்க, ஒரு கன்வென்ஷன் (சபை) நியமிக்க வேண்டும் என்று அதில் தீர்மானிக்கப்பட்டது.

கேப் குடி யேற்றத்திலிருந்து 12 பிரதிநிதிகளும், டிரான்ஸ்வாலிலிருந்து 8 பேரும், ஆரஞ்சு நதி குடியேற்றத்திலிருந்து 5 பேரும், நட்டாலிலிருந்து 5 பேரும் அந்த அரசியல் நிர்ணய சபைக்குப் பிரதிநிதிகள் என்று நிச்சயிக்கப்பட்டது. அது மட்டு மல்ல; இந்தக் குடியேற்றங்களுக்கு வடக்கேயுள்ள ரொடீ�ஸியாவும் மூன்று பிரதிநிதிகள் அனுப்பட்டும் என்று அழைத்தார்கள். அதன்படி அந்த 5 குடியேற்றங்களிலிருந்தும் 33 பிரதிநிதிகள் 1908 வருஷம் அக்டோபரில் கூடி, 4 மாதம் பல கமிட்டிகளாக பிரிந்து ஆலோசனை, விவாதம் முதலியவை நடத்தி இறுதியில் ஒரு திட்டத்தை தயாரித்தனர்.

இந்தத் திட்டம் மாகாண சட்ட சபைகளின் சம்மதத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது. டிரான்ஸ்வால் சட்ட சபை ஒரே ஒரு திருத்தம் மட்டும் பிரேரித்தது. ஆரஞ்சு நதி குடியேற்றம் பல முக்கியமான திருத்தங்களை சிபார்சு செய்தது. கேப் குடியேற்றத்து சட்ட சபை இன்னும் தீவிரமான பல திருத்தங்களைப் பிரேரித்தது. நட்டால் எத்தனையோ திருத்தங்களைப் பிரேரித்து, அரசியல் நிர்ணய சபையில் தயாரித்த திட்டத்தை உருத் தெரியாமல் மாற்ற வேண்டும் என்றது. அரசியல் நிர்ணய சபையில் ஒப்புக்கொண்டு கையெழுத்துப் போட்ட ஒரு

வரே அங்கு திட்டத்தை எதிர்த்துப் பேசினர். அதுமட்டுமல்ல; மாறுதல்களைச் செய்தாலும் பிறகும் அதை நட்டாலில் சர்வஜன வோட்டுக்கு விட்டுப்பார்க்கவேண்டுமென்று நட்டால் கூறியது. ஆகவே அரசியல் நிர்ணயசபை மீண்டும் கூடி திருத்தங்களை விவாதித்து, அசல் திட்டத்தை மாற்றியது. அரசியல் நிர்ணய சபையில் கலந்து கொண்ட எல்லா பிரதிநிதிகளும் புதிய திட்டத்துக்கு சம்மதம் தெரிவித்து கையழுத்துப் போட்டனர். புதிய திட்டத்தை மூன்று குடியேற்றங்களின் சட்ட சபைகள் ஊர்ஜிதம் செய்தன. ஆனல் நட்டால் சட்ட சபையில் அந்தத் திட்டம் விவாதிக்கப்பட்ட போது, பலமான எதிர்ப்பு இருந்தது. பின்னர் அது சர்வஜன வோட்டுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அப்போது பத்திரிகைகள் யாவும் திட்டத்தை எதிர்த்தே எழுதின. ஆனலும் இறுதியில் திட்டம் நட்டாலிலும் அங்கீகரிக்கப்பட்டது.

பிறகு பிரிட்டிஷ் பார்லிமெண்டு இந்த திட்டத்தைச் சட்டமாக இயற்றியது. 4 தென்னப்பிரிக்கக் குடியேற்றங்களும் "தென்னுப்பிரிக்கா யூனியன்" என்ற "ஒருமை சர்க்காரின்" மாகாணங்களாக ஆயின.

டச்சுக்காரர் (ஹாலந்துக்காரர்)—ஆங்கிலேயர் பிளவு மிகவும் பிரமாதமாக இருந்து பரஸ்பரம் யுத்தம் செய்து கொண்டிருந்த குடியேற்றங்களிடையே "சமஷ்டி" தான் சாத்தியமே ஒழிய '.ஒருமை சர்க்கார்" சாத்யம் என்று யாரும் நினைத்திருக்க முடியாது. ஆனலும் அங்கு "ஒருமை சர்க்காரே" ஏற்பட்டது.

இதில் குறிப்பிடத்தக்க ஒரு அம்சம் உண்டு. தென்னுப்பிரிக்கா அரசியல் நிர்ணய சபையில் கலந்து கொண்டவர்களில் பலர் 1899-1902 வருஷத்தில் நடந்த யுத்தத்தின் போது, பரஸ்பரம் ஒருவரை யொருவர் எதிர்த்து ராணுவத்தில் பதவி வகித்துப் போர் புரிந்தவர்கள். 1902ஆம் ஆண்டுக்குப் பிறகும் ஒவ்வொரு மாகாணத்திலும் டச்சு—பிரிட்டிஷ் போட்டியும், வாதப் பிரதி வாதங்களும் கடுமையாக இருந்தன. இவர்கள் ஒரு பொது லக்ஷியத்தைக்

குறித்துப் பேசும்போது, விவாதங்கள் இரகசியமாக நடப்பதுதான் நல்லதென்று முடிவு செய்யப்பட்டது; ஆகையால் அரசியல் நிர்ணய சபையின் வேலை முழுவதும் ரகசியமாகவே நடந்தது.

## (6) செக்கோஸ்லோவாகியா

1914-18 வருஷத்திய மகா யுத்தத்துக்கு முன் பல நூற்றுண்டுகள் ஆஸ்டிரியா—ஹங்கேரி ஏகாதிபத்தியத்தில் அடிமைப்பட்டுக் கிடந்த பொஹிமியா, மொரேவியா, ஸ்லொவாகிய நாட்டினர், 1918 வருஷத்தில் ஆஸ்டிரியா தோற்கடிக்கப் பட்ட பிறகு, அந்த யுத்தத்தில் ஜெயித்த நாடுகளின் ஆதரவுடன் சுதந்தர பிரகடனம் செய்து கொண்டன. 1918 வருஷத்துக்கும் 1938 வருஷத்துக்குக்கு மிடையே மிகவும் நல்ல நிலைமையில் இருந்த இந்த நாட்டின் அரசியலமைப்பில், நாம் கவனிக்க வேண்டிய அம்சங்கள் சில உள. ஏனென்றால், செக்கோஸ்லொவாகியா என்பது செக், ஸ்லொவாகியர் என்ற இரண்டு பிரதான ஜாதியினர் வசித்த இரண்டு தனி நாடுகள். அவற்றுள் செக் நாடான பொஹிமியா—மொரேவியாவின் எல்லையோரத்து ஜில்லாக்களில் ஜெர்மனியர் மைனாரிட்டியாக இருந்தனர். ருதேனியா என்ற ஒரு சிறு நாடும், செக்கோஸ்லொவாகியாவுடன் ஐக்கியமாயிற்று. அந்த நாட்டினர் நாகரிகம், "தேசீய இனம்" ஆகிய இரண்டு விஷயத்திலும் செக், ஸ்லொவாகிய மக்களிலிருந்து மாறுபட்டவர்கள். செக்கோஸ்லொவாகியாவில் செக், ஸ்லொவாக்கியர், ருதேனியர் என்ற மூன்று "தேசிய இனங்கள்", மட்டுமல்லாமல் ஜெர்மன் மைனாரிட்டியும் இருந்தது.

1914 வருஷத்திய மகா யுத்தத்துக்கு முன், ஆஸ்டிரிய பார்லிமென்டில் பொஹீமியா, மோரேவியா பிரதேசங்களுக்கும் பிரதி நிதித்துவம் இருந்தது. ஆஸ்டிரியா தோற்றவுடன் அந்த பார்லிமென்டின் பொஹிமியா, மொரேவியா அங்கத்தினர்கள் தனியாகக் கூடி தம் பிரதேசங்களை சுதந்திர நாடாக்கி ,ஒரு அரசியலை நிர்ணயிப்ப

தென்று முடிவு செய்தனர். அவர்களே ஒரு அரசியல் நிர்ணய சபையாகக் கூடினர். ஸ்லொவாகியரும் தம் நாட்டை செக் நாட்டுடன் ஐக்கியப் படுத்திக் கொள்ள விரும்பினர். உடனே அரசியல் நிர்ணய சபைக்கு ஏற்பாடு செய்தனர். அரசியல் நிர்ணய சபைக்காக தேர்தல் எதுவும் நடத்தவில்லை. ஒவ்வொரு கட்சியும் பிரதிநிதிகளை நியமிக்குமாறு அழைத்தார்கள். பொஹிமியாவிலிருந்த ஜெர்மனியரும் பிரதிநிதிகளை அனுப்புமாறு கோரப்பட்டனர்; ஆனால் அவர்கள் அரசியல் நிர்ணய சபையை பகிஷ்கரித்தனர். பிறகு வல்லரசுகள் ஹங்கேரியுடன் செய்து கொண்ட உடன்படிக்கையில் ருதேனியாவை, ஹங்கேரியை விட்டுப் பிரித்தனர். அந்த பிரதேசத்துக்கு போதிய காப்பு அளித்து, செக்கோஸ்லொவாகியாவுடன் இணைக்குமாறு வல்லரசுகள் கோரின. ருதேனியர்களுக்கு என்ன பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்பது பற்றி செக்கோஸ்லொவாகியா பிரதிநிதிகளுக்கும் வல்லரசுகளுக்கும் ஒரு உடன்படிக்கை தயாரிக்கப்பட்டது.

செக்கோஸ்லொவாகியா அரசியல் நிர்ணய சபையில் 256 அங்கத்தினர்கள் இருந்தார்கள். பலவேறு ஜாதியும், இனங்களும் இருந்த அந்த பிரதேசத்துக்கு, மாகாண சுதந்திரமுள்ள சமஷ்டிதான் ஏற்படுமென்று பலர் எதிர்பார்த்திருப்பார்கள். ஆனால் அந்நாட்டுக்கு "ஒருமை அரசியலமைப்பே" தீர்மானிக்கப்பட்டது. இதற்கு முக்கியமான காரணம் ஒன்று உண்டு. அது நான்கு பக்கத்திலும் ராணுவ வலிமை பொருந்திய மக்களின் பிரதேசத்தால் சூழப்பட்டிருந்தது. பெரிய மலை முதலிய இயற்கை பாதுகாப்பு இல்லை. நான்கு பக்கமும் திறந்த எல்லையாக இருந்தது. ஆகையால் ஆக்கிரமிப்பை எதிர்த்து நிற்கும்படி "வலிமை வாய்ந்த" மத்திய சர்க்காரே வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

அந்த அரசியல் நிர்ணய சபை, அரசியலமைப்பை தீர்மானிக்கும் வேலையோடு, சட்டமியற்றும் சபையாகவும் வேலை செய்தது.

மைனாரிட்டிகள் சம்பந்தமாக வல்லரசுகளுடன் செய்துகொண்ட உடன்படிக்கையும் அரசியலமைப்பி லேயே சேர்க்கப்பட்டது.

ருதேனியா சம்பந்தப்பட்ட வரை, தனி ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அந்த பிரதேசத்தினர் செக்கோஸ் லொவாகியா சர்க்காரின் தயவை எதிர்பார்க்காமல், நேர் முகமாகவே தம் உரிமைகள் பற்றிய புகார்களை சர்வதேச சங்கத்தில் அறிவித்து நியாயம் கோரலாம் என்று அரசிய லமைப்பில் ஒரு ஷரத்தைச் சேர்த்தார்கள். ருதேனியா சம்பந்தமாக சர்வதேச சங்கத்தில் வேறெந்த நாட்டி னரும் புகார்களைக் கொண்டுவரலாம். இவ்வாறு ஒரு சர்க்காரின் ஆளுகையிலுள்ள பிரதேசம் சம்பந்தமாக அந்த சர்க்கார் மீது வெளி ஸ்தாபனத்தினர் புகார் செய்ய லாம் என்ற உரிமை, "ராஜாங்க அந்தஸ்து" பற்றிய கொள்கைக்கு முரணுகும். ஆயினும் இப்படியொரு ஷரத்து செக்கோஸ்லொவாகியா அரசியலமைப்பில் (ருதே னியா விஷயத்தில்) இருந்தது. செக்கோஸ்லொவாகியா அரசியலமைப்பு "ஒருமை அரசியலே" யாயினும், ருதே னியாவுக்கு மட்டும் சில தனி உரிமைகள் வழங்கப்பட்டன.

நாட்டின் எல்லைகள் வெளிநாட்டாருடன் செய்த உடன்படிக்கைகளின் மூலமே நிர்ணயிக்கப்பட்டதால் இவ்வாறு செய்வது அவசியமாயிற்று.

## (7) அயர்லாந்து குடியரசு

"அயர்லாந்து குடியரசு" என்பது அயர்லாந்து முழு வதையும் குறிக்காது. அயர்லாந்தின் முக்கால் பாகம் தான் தனிக் குடியரசாக இருக்கிறது. கால் பாகம் பிரிட் டிஷ் சாம்ராஜ்யத்தின் பகுதியாகவே இருக்கிறது. பிரிட் டிஷ் ஆட்சியை எதிர்த்து பலாத்காரப் புரட்சி நடத்தி சுதந்திரம் சம்பாதித்த நாடாகும் அயர்லாந்து. ஆயுத பலத்தால் பிரிட்டிஷ் ஆட்சியை அறவே ஒழிக்க அயர் லாந்தால் முடியவில்லை; ஆனால் அயர்லாந்தை அடக்கி ஆள்வது பிரிட்டனுக்கு சிரம சாத்தியமாக இருந்தது.

இந்த நிலைமையில் ஐரிஷ் பிரதிநிதிகளை பிரிட்டன் அழைத்து, ஒரு உடன்படிக்கை செய்து கொண்டது. இந்த உடன்படிக்கையின்படி அயர்லாந்தின் வடக்குப் பகுதி தனியாகப் பிரிக்கப்பட்டு பிரிட்டிஷ் சர்க்காரின் பகுதியாகவே வைத்துக்கொள்ளப்பட்டது. சுதந்திர அயர்லாந்தில் பிரிட்டனுக்கு சில துறைமுக வசதிகள் அளிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையும் அந்த உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டது. உடன்படிக்கையில் அயர்லாந்து கையெழுத்துச் செய்த பிறகுதான் பிரிட்டிஷ் ஆட்சி பூர்ணமாக வாபஸ் வாங்கப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சி வாபஸ் வாங்கப்பட்ட பிறகே, அங்கு அரசியல் நிர்ணய சபை கூடியது.

சரித்திர வரலாறு.

அயர்லாந்தின் சரித்திரம் மிகவும் கவனிக்கத் தக்கது. அந்த தேசம் நெடுநாளாக சுதந்திரத்துக்காகப் போராடிக் கொண்டிருந்தது. 1912 வருஷத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் அந்த உரிமையை ஒப்புக்கொண்டு, அயர்லாந்து முழுவதுக்குமாக ஒரு பார்லிமெண்டை ஏற்படுத்த மசோதாவொன்றைக் கொண்டுவந்தது. இந்த மசோதா பிரிட்டிஷ் பார்லிமென்டின் காமன்ஸ் சபையில் நிறைவேறியது. ஆனால் லார்ட்ஸ் சபைக்குப் போனவுடன் அந்த சபை மசோதாவை நிறைவேற்றவில்லை. அதுமட்டுமல்ல; வடக்கு அயர்லாந்தில் உள்ளவர்கள் (அல்ஸ்டர் ஜில்லாக்களில் உள்ளவர்கள்) அயர்லாந்துக்கு சுதந்திரம் கொடுக்கக்கூடாதென்று பலாத்காரத்தில் இறங்குவதற்கு தொண்டர்படை திரட்ட ஆரம்பித்தனர். அல்ஸ்டரில் உள்ளவர்கள், பிரிட்டனில் உள்ளவர்கள் போல பிராடஸ்டென்ட் மதத்தினர். பிரிட்டனுடன் நெருங்கிய தொடர்புள்ளவர்கள். அயர்லாந்து பிரிட்டிஷ் சர்க்காரின் பகுதியாகவே இருக்கவேண்டுமென்று கோரி அல்ஸ்டர்காரர்கள், ஐரிஷ் சுதந்திர இயக்கத்தை எதிர்த்தனர். உடனே தெற்கு அயர்லாந்தில் உள்ளவர்கள் "ஸின்பீன்" என்ற புதிய தேசிய சங்கத்தை ஸ்தாபித்து, அரசியல் போருக்கு ஆயத்தமாயினர். 1914 வருஷத்தில் ஐரோப்பிய யுத்தம்

ஆரம்பமாயிற்று. அதுதான் சரியான சந்தர்ப்பமென்று கருதி அயர்லாந்து மக்கள் பிரிட்டிஷ் அதிகாரிகளின் ஆட்சியை எதிர்த்து, பலாத்காரச் செயலில் இறங்கினர். கடுமையான அடக்கு முறைகளாலும் துப்பாக்கி பிரயோகத்தாலும் அந்தப் புரட்சி ஒடுக்கப்பட்டது. புரட்சிக்காரர்கள் முறியடிக்கப்பட்டனராயினும், அந்தப் புரட்சியை முறியடிப்பதில் பிரிட்டன் கையாண்ட கொடுமை வாய்ந்த முறைகளால் ஐரிஷ் மக்களுக்கு பிரிட்டிஷார் மீது அளவிட முடியாத வெறுப்பு ஏற்பட்டது.

## போட்டி சர்க்கார்

1918ம் வருஷத்தில் மகாயுத்தம் முடிந்த பிறகு பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு தேர்தல் நடந்தது. அப்போதிருந்த அரசியலில் அயர்லாந்து பிரிட்டிஷ் சர்க்காரின் ஒரு பகுதியாகவே இருந்ததால், அயர்லாந்துக்கும் அதில் பிரதிநிதித்துவம் இருந்தது. அந்தப் பொதுத் தேர்தலில், அல்ஸ்டர் ஜில்லாக்கள் தவிர, மற்ற எல்லா இடங்களிலும் ஸின்பீன் கட்சியே எல்லா ஸ்தானங்களையும் கைப்பற்றியது. அந்தக் கட்சியைச் சேர்ந்த 73 பேர் பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தமது பதவியை ஏற்றுக் கொள்ளக் கூடாதென்று, ஏற்கனவே கட்சியில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்டதும் இவர்கள் பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்குப் போவதற்கு பதிலாக, அயர்லாந்தின் தலைநகரான டப்ளின் நகரில் "அயர்" பார்லிமெண்டாகக் கூடி சுதந்திரப் பிரகடனம் செய்து, பிரிட்டிஷ் சர்க்காருக்கு எதிராக ஒரு போட்டி சர்க்காரை நியமித்தார்கள். ஆகவே அயர்லாந்தில் ஏககாலத்தில் இரண்டு சர்க்கார்கள் இருந்தன. ஒன்று அன்னிய சர்க்கார்; ஒன்று சுயாட்சி சர்க்கார்!

இந்த நிலைமையில் பிரிட்டிஷ் பார்லிமெண்டு ஒரு சட்டம் இயற்றியது. அந்த சட்டத்தின்படி (1) அயர்லாந்து இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பார்லிமெண்ட் ஏற்படுத்தப்படும்;

ஒன்று அல்ஸ்டர் என்று அழைக்கப்படும் வட அயர் லாந்துக்கு; மற்றொன்று மீதமுள்ள அயர்லாந்துக்கு. (2) இந்த இரண்டு பார்லிமெண்டுகளும் ஒவ்வொன்றி லிருந்தும் 20 பிரதிநிதிகளை யனுப்புவது என்ற முறையில், அயர்லாந்து முழுதுக்கும் பொதுவான ஒரு சமஷ்டி சபை ஏற்படுத்தப்படும். (3) இந்த இரண்டு பார்லிமெண்டுகளும் என்ன அதிகாரங்களை பொதுவில் நிர்வகிப்பதற்காக விட்டுக்கொடுக்கின்றனவோ, இந்த அதிகாரங்கள் மட்டுமே சமஷ்டி சபைக்கு உண்டு. (4) யுத்தத் தற்காப்பு வெளிநாட்டு உறவு இரண்டிலும் அதிகாரம் முழுவதும் பிரிட்டிஷ் சர்க்காருக்கே.

இவ்வாறு பிரிட்டிஷ் பார்லிமெண்டில் சட்டமியற் றியது அயர்லாந்திலுள்ள தேசிய வாதிகளின் கோபத் தையே தூண்டியது. அயர்லாந்தில் பிரிட்டிஷ் சர்க்காரை போட்டி சர்க்கார் எதிர்த்தது. பல இடங்களில் சுதந் திர அயர் படைகளுக்கும், பிரிட்டிஷ் படைகளுக்கு மிடையே திடீர் மோதல்கள் ஏற்பட்டு வந்தன. இந்த யுத்தம் சர்வ சகஜமாக நடந்து வந்தது. 1921 வருஷம் வரை இந்த நிலைமை நீடித்தது. வெற்றி தோல்வி யாருக்கு என்பதே தெரியவில்லை. ஆகையால் எப்படி யாவது ஒரு விதத்தில் இந்த நிலைமையை மாற்றிவிட வேண்டுமென்று இரு தரப்பினருக்கும் தோன்றியது. பிரிட்டிஷ் சர்க்கார் சமரசப் பேச்சை ஆரம்பித்தது.

சமரச உடன்படிக்கை

ஒரு சமாதான மகாநாடு கூடியது. பிரிட்டிஷ் சர்க் கார் பிரதிநிதிகளும், ஐரிஷ் சுயேச்சை சர்க்கார் பிரதிநிதி களும் சந்தித்துப் பேசினர். இறுதியில் ஒரு சமரசம் ஏற் பட்டு உடன்படிக்கை தயாரிக்கப்பட்டது. அதன்படி அல் ஸ்டர் பிரிட்டிஷ் முடியாட்சிக்கு விசுவாசமுள்ளதாக தனி யாக இருக்கலாமென்று அயர்லாந்தின் சுயேச்சைவாதிகள் சம்மதித்தனர். அயர்லாந்தின் சுதந்திர உரிமைக்கு பிரிட் டன் இணங்கியது. பிரிட்டனுக்கு அயர்லாந்தில் யுத்த வசதிகள், துறைமுகங்கள், ரேடியோ வசதிகள் முதலியன அளிக்க அயர்லாந்து ஒப்புக்கொண்டது.

## உடன்படிக்கைக்கு பிறகு அரசியல் நிர்ணயம்

இவ்வாறு சுதந்திரம் ஒப்புக்கொள்ளப்பட்டு, இரண்டு நாடுகளுக்குமிடையே உடன்படிக்கையும் தயாரிக்கப்பட்ட பிறகு சுதந்திர அயர்லாந்தின் அரசியலமைப்பை நிர்ணயிக்க ஒரு அரசியல் நிர்ணயசபை கூடியது. அநேகமாக எல்லோரும் கலந்துகொள்ளக்கூடிய பொதுஜன வோட்டு முறைமூலம் 130 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 130 பேர் கொண்ட இந்த அரசியல் நிர்ணய சபைதான் அயர்லாந்தின் அரசியலைத் தயாரித்தது. இந்த சபையைக் கூட்டிய தற்காலிக அயர்லாந்து சர்க்காரில் "ஒவ்வொருவரும் பிரிட்டிஷ் உடன்படிக்கையை ஒப்புக்கொள்வதாக பிரமாணம் செய்தே பதவி வகிக்க வேண்டும்" என்ற நிபந்தனையுடன் பிரிட்டன் இடைக்கால சர்க்காரை அங்கீகரித்தது. டிவேலரா கோஷ்டியினருக்கு இது பிடிக்கவில்லை. ஆகையால் அவர்கள் இடைக்கால சர்க்காரில் கலந்து கொள்ளவில்லை. அரசியல் நிர்ணய சபைக்கு டிவேலரா கட்சியினரும் பலர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆயினும் அந்த சபையின் நடவடிக்கைகளில் கலந்து கொள்ள, அந்தக் கட்சியினர் மறுத்துவிட்டனர்.

அப்பொழுது தயாரிக்கப்பட்ட அரசியலின்படி, ஆஸ்திரேலியா கானடா முதலியவற்றைப்போல, அயர்லாந்தும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அங்கத்தினர்தான். ஆனாலும் ஒரு வித்தியாசம் உண்டு. அந்த நாடுகளின் அரசியல் அந்த மக்களாலேயே நிர்ணயிக்கப்பட்ட போதிலும், பிரிட்டிஷ் பார்லிமெண்டின் சட்டத்தின்மூலமே அரசியலமைப்பு சட்டமாக்கப்பட்டது. அயர்லாந்தில் அப்படியல்ல.

அயர்லாந்தின் அரசியல் சட்டப்படி அந்த நாட்டிற்கு ஒரு கவர்னர் ஜெனரலை நியமிக்க, பிரிட்டனுக்கு உரிமை இருந்தது. ஆனால் சில வருஷங்களுக்குப் பின் டிவேலரா பிரதம மந்திரியாக பதவிக்கு வந்த பிறகு, அந்த உரிமையை ரத்து செய்தார்.

## இந்தியாவிலோ

மேலே பிரஸ்தாபித்த 7 நாடுகளில் அரசியல் நிர்ணய சபையின் அமைப்பு, பிரதிநிதிகள் பொறுக்கப்பட்ட முறை, அவர்கள் முன்னிருந்த பிரச்னைகள், ஆகிய ஒவ்வொரு விஷயத்திலும் வெவ்வேறு விதமாக இருந்திருப்பதைக் காணலாம். சிலவற்றில் மொத்தப் பிரதிநிதிகளின் தொகை 35க்கும் குறைவு. சில அரசியல் நிர்ணய சபைகள் சட்ட சபைகளால் பொறுக்கப்பட்டவை. இன்னும் சிலவற்றில் மாகாண சர்க்கார்களே பிரதிநிதிகளை நியமித்திருக்கிறார்கள். சிலவற்றில் அரசியல் நிர்ணய சபையே சட்ட சபையாக வேலை செய்திருக்கிறது. சில அரசியல் நிர்ணய சபைகள் பொதுஜன வோட்டின்மூலம் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தன. சில அரசியல் நிர்ணய சபைகள் அரசியலை நிர்ணயித்த பின்னர், மாகாண சட்ட சபைகளின் ஊர்ஜிதம் பெற்றே புது அரசியலமைப்புகள் அமலுக்கு வந்திருக்கின்றன. சிலவற்றில் அரசியல் நிர்ணய சபை செய்த முடிவே இறுதி முடிவாக இருந்தது. அவற்றில் முடிவான அரசியலமைப்புகளும் வெவ்வேறு விதமானவை.

ஆகையால் இந்தியாவில் ஏற்படும் அரசியல் நிர்ணய சபை பொதுஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லையென்று நாம் நினைக்க வேண்டியதில்லை. அதில் தயாரிக்கப்படும் அரசியல் சமஷ்டி முறையைப் பின்பற்றியதாகவே இருக்க வேண்டும் என்று தூதுகோஷ்டி திட்டத்தில் சிபார்சு செய்யப்பட்டிருப்பதையும் ஒரு பெரும் குறையாகச் சொல்ல முடியாது. உதரணமாக ஆஸ்திரேலியாவில் சமஷ்டிக்குத் திட்டம் தயாரிக்க வேண்டுமென்ற "பூர்வாங்க" நோக்கத்துடன்தான், அரசியல் நிர்ணய சபை முயற்சி ஆரம்பிக்கப்பட்டது. அமெரிக்காவிலும் அப்படித்தான். ஆகையால் முன்னதாகவே அரசியலின் சில அடிப்படைக் கொள்கைகள்பற்றி பூர்வாங்க ஷரத்துகள் இருப்பதும் ஒரு பெரிய குறையாகாது. உண்மையான குறை ஒன்றே ஒன்றுதான். அரசியல் நிர்ணய சபை கூடும்போது, ஒரு சுதந்திர சர்க்கார் பதவியிலில்லாமல் அன்னிய

ஆதிக்கம் இருந்துவருகிறதே, இதுதான் பெரிய குறை. ஒரு விதத்தில் இது ஒரு நிர்ப்பந்தமுமாகும். மற்ற நாடுகளில் அரசியல் நிர்ணய சபையில் ஒரு திட்டமும் உருவாகாமல் போனால், அதில் ஒரு விசேஷ சிரமமும் இல்லை. சுதந்திரம் அதனால் பாதிக்கப்படவில்லை. உதாரணமாக ஆஸ்திரேலியாவை எடுத்துக்கொள்வோம். அங்கு சமஷ்டி அரசியல் நிர்ணய வேலை 1891 வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஒரு திட்டமும் தயாரிக்கப்பட்டது; அந்த திட்டம் பல மாகாணங்களால் நிராகரிக்கப்பட்டது. ஆனாலும் அவ்வாறு திட்டம் உருவாகாமல் போனதின்மூலம் ஒரு நஷ்டமும் இல்லை. ஏனென்றால், ஏற்கனவேயே ஆஸ்திரேலியாவில் உள்ள எல்லா மாகாணங்களும் பூர்ண சுதந்திரத்துடன் இருந்து வந்தன. இந்தியாவிலோ அரசியலமைப்பு உருவான பின்னர்தான் உண்மையான சுதந்திரம் அமலுக்கு வரும். இதுவே மற்ற நாடுகளில் வேலை செய்த அரசியல் நிர்ணய சபைக்கும், இந்திய அரசியல் நிர்ணய சபைக்கும் உள்ள பெரிய வித்யாசம்.

### அடுத்த அத்தியாயத்தில்

அரசியல் நிர்ணய சபைகளின் அமைப்பு முதலியவற்றுக்கு உதாரணம் கூறும் பொருட்டு இந்த அத்தியாயத்தில் 7 தேசங்களைப்பற்றி பிரஸ்தாபித்தோம். இந்த தேசங்களை உதாரணமாக வைத்துக்கொண்டு அரசியலமைப்பின் பல தினுசுகளைக் கவனிப்போம்.

---

## பதினொருவது அத்தியாயம்

# அரசியலமைப்பில் பலவிதங்கள்

ஏராளமான விஸ்தீர்ணமும், பலவகையான இனங்களும் வாழும் தேசங்களின் அரசியலை, அவற்றின் மத்ய சர்க்காருக்கும், மாகாண சர்க்காருக்குமுள்ள உறவைப் பொறுத்து முக்கியமான இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவ்வாறு பிரித்தபிறகும், அந்த சர்க்காரின் நிர்வாக சபைக்கும் சட்டசபைகளுக்குமுள்ள உறவைப் பொறுத்து இரண்டு மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

உதாரணமாக, முன் அத்தியாயத்திலுள்ள 7 தேசங்களை எடுத்துக்கொள்வோம். மத்ய சர்க்காருக்கும், மாகாணங்களுக்குமுள்ள உறவைப் பொறுத்து பாகுபாடு செய்வதாயின் (1) அமெரிக்க ஐக்கிய நாடுகள் (2) கானடா (3) ஆஸ்டிரேலியா (4) ஸ்விட்ஜர்லாந்து ஆகிய நான்கும் சமஷ்டிகள். (1) தென் ஆப்பிரிக்கா, (2) அயர்லாந்து (3) செக்கோஸ்லொவாகியா ஆகிய மூன்றும் ஒருமை சர்க்கார்.

சமஷ்டி முறை

இவற்றுள் முதல் முதலாக சமஷ்டி என்ற இனத்தைக் கவனிப்போம். அமெரிக்க சர்க்காரை ஒரு சமஷ்டி என்று சொல்கிறோம். அங்கு தற்காலம் 48 மாகாணங்கள் இருக்கின்றன. சமஷ்டியில் அவற்றை மாகாணங்கள் (Province) என்று சொல்லாமல் "நாடுகள்"(States) என்றே சொல்வது வழக்கம். ஏனென்றால் மாகாணங்களிடம் விடப்படும் பல விஷயங்களின் நிர்வாகத்தில், மத்ய சர்க்கார் தலையிடவே முடியாது. அமெரிக்காவில் உள்ள 48 நாடுகளும், 48 தனி சர்க்கார்கள்; அவையெல்லாம் தாமாகச் சம்மதித்து, அமெரிக்க சமஷ்டியில் சேர்ந்திருப்பதாக மதிக்கவேண்டும். சில விஷயங்களை அந்த 48 நாடுகளுக்கும் பொதுவாக நிர்வகிப்பதுதான் ஒவ்வொரு "நாட்டுக்"கும் நல்லதென்று கருதி, அவ்வாறு செய்திருக்கிறார்கள். எந்த விஷயங்களை சமஷ்டி சர்க்காரிடம் வைக்கவேண்டும் என்பதுபற்றி, அரசியலமைப்பிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையில் இந்த அரசியமைப்பை ஒரு உடன்படிக்கையாகவே கருதலாம். அரசியலமைப்பின்மூலம் (1) மாகாண சர்க்காரில் (அதாவது 'ஸ்டேட்' சர்க்காரில்) உள்ள விஷயங்கள் (2) மத்திய சர்க்காரில் உள்ள விஷயங்கள் இரண்டும் தனித்தனியாகப் பிரிக்கப்படுகின்றன. இவ்வாறு "விஷயப் பிரிவினை" செய்வதுதான், சமஷ்டியமைப்பின் முக்கிய இலக்கணம்.

சில விஷயங்களில் மாகாண சர்க்காருக்குத்தான் அதிகாரம்; மத்ய சர்க்காருக்கு அதிகாரம் இல்லை. சில விஷயங்களில் மத்ய சர்க்காருக்குத்தான் அதிகாரம்.

மாகாண சர்க்காருக்கு அவ்விஷயங்களில் அதிகாரமில்லை, யென்றால் அந்த ஏற்பாட்டை சமஷ்டி என்று சொல்வார்கள்.

இந்த கொள்கைப்படி கானடா, ஆஸ்திரேலியா இரண்டும் சமஷ்டிதான். ஆனால் இரண்டு சமஷ்டிக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. கானடாவில் மாகாண உரிமைகள் யாவை என்பதைமட்டும் வரையறுத்துவிட்டு, மிச்சமுள்ள எல்லா அதிகாரங்களும் மத்ய சர்க்காருக்கே என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சர்க்காரின் அதிகாரத்திலுள்ள விஷயங்கள் யாவற்றையும்பற்றி, எவ்வளவு நுணுக்கமாகவும் பூர்ணமாகவும் ஜாபிதா தயாரித்தாலும், சில சந்தர்ப்பங்களில் ஜாபிதாவில் இல்லாத விஷயங்கள் தோன்றிவிடும். இதைத்தான் "மிச்ச அதிகாரம்" என்று சொல்வார்கள். அந்த அதிகாரங்களை யார் நிர்வகிப்பது? மாகாண சர்க்காரா? மத்திய சர்க்காரா? என்ற கேள்வி பிறக்கிறது. ஆஸ்திரேலியாவில் இந்த "மிச்ச அதிகாரத்தை" மாகாணங்களிடமே வைத்திருக்கிறார்கள். கானடாவில் இந்த மிச்ச அதிகாரத்தை மத்ய சர்க்காரில் வைத்திருக்கிறார்கள்.

அதாவது மத்ய சர்க்காரின் அதிகாரங்களும் மாகாண சர்க்காரின் அதிகாரங்களும் வரையறுக்கப்பட்டிருந்தபோதிலும் கானடாவில் மாகாணங்களின் அதிகாரத்துக்குத்தான் இறுதியாக எல்லை கட்டப்பட்டிருக்கிறது. மத்ய சர்க்காரின் அதிகாரத்துக்கு எல்லை கட்டப்படவில்லை. இந்தமாதிரி இருப்பதால், கானடாவின் மத்ய சர்க்கார் ஆஸ்திரேலியாவின் மத்ய சர்க்காரை விட "வலிமை வாய்ந்தது" என்பார்கள்.

ஆஸ்திரேலியாவின் சமஷ்டியையும், கானடாவின் சமஷ்டியையும் ஒப்பிட்டால், பின்வரும் வித்யாசங்கள் காணப்படுகின்றன.

(1) ஆஸ்திரேலியாவில் சமஷ்டி சர்க்காரின், (மத்ய சர்க்காரின்) அதிகாரங்களுக்கு இறுதியாக எல்லை கட்டி மாகாண சர்க்கார்களிடம் மிச்ச அதிகாரத்தை வைத்திருக்

கிருர்கள். கானடாவில் மாகாண சர்க்கார்களின் அதி காரத்துக்கு நிச்சயமாக எல்லை கட்டி சமஷ்டி சர்க்காரிடம் மிச்ச அதிகாரத்தை ஒப்படைத்திருக்கிருர்கள்.('ஸ்டேட்ஸ்' என்ற வார்த்தையே அங்கு கிடையாது; "ஒருமை சர்க் கார்களில்" இருப்பதுபோல "மாகாணம்" என்ற வார்த்தைதான் அங்கு உபயோகிக்கப்படுகிறது) (2) ஆஸ் திரேலியாவில் ஸ்டேட் சர்க்கார்களின் கவர்னர்களை நியமிப்பதில் சமஷ்டி சர்க்காருக்கு ஒரு உரிமையும் கிடை யாது. கானடாவில் மாகாண கவர்னர்களை சமஷ்டி சர்க் காரே நியமிக்கிறது. (3) ஆஸ்திரேலியாவில் "ஸ்டேட்" சட்டசபையின் சட்டத்தில் தலையிட சமஷ்டி சர்க்காருக்கு உரிமை கிடையாது. கானடாவில் மாகாண சட்டங்களை ரத்து செய்ய சமஷ்டி சர்க்காருக்கு உரிமையுண்டு.

கானடா, ஆஸ்திரேலியா இரண்டும் அமெரிக்காவின் சமஷ்டி முறையையே பின்பற்றினவாயினும், கானடாவில் மத்ய சாக்காரை பலமுள்ளதாக அமைத்ததின் காரணம் என்ன என்று சிலர் திகைக்கலாம். அமெரிக்காவில் மத்ய சர்க்காரின் அதிகாரத்துக்கு எல்லை கட்டி, மாகாணங் களுக்கு அதிகமான சுயாட்சி இருக்கும்படி செய்யப் பட்டது. அவ்வாறு மாகாணங்களுக்கு அதிக சுதந்திர மிருந்தால், 1861-ம் வருஷத்தில் சில மாகாணங்கள் தம் மிடையே ஒரு தனி "சம்மேளனத்தை" அமைத்துக் கொண்டு, மத்ய சர்க்காரை எதிர்த்து உள்நாட்டு யுத்த மும் செய்ய முடிந்தது. இதைப்போன்ற நிலைமை கானடா வில் ஏற்படக்கூடாதென்று பயந்ததுதான் அங்கு மாகாண சர்க்காரின் அதிகாரத்துக்கு எல்லை கட்டி ஞர்கள்.

ஒவ்வொரு தேசத்து அரசியலும் அது தயாரிக் கப்படும் காலத்திலுள்ள சந்தர்ப்பத்தை பொறுத்தது என்பதற்கு, இது ஒரு உதாரணமாகும். சமஷ்டி சர்க்காருக்கா, மாகாண சர்க்காருக்கா (ஸ்டேட் சர்க்காருக்கா) என்று தெளிவாக நிர்ணயிக்கப்படாத "மிச்ச அதிகாரங்கள்" கானடாவில் மத்ய சர்க்காரிடம் இருக்கின்றன; ஆஸ்திரேலியாவில் அவை மாகாண சர்க்

கார்களிடம் (ஸ்டேட் சர்க்காரிடம்) விடப்படுகின்றன. (இந்தியாவுக்கு பிரிட்டிஷ் தூதுகோஷ்டி சிபார்சு செய்யும் திட்டத்தில் இந்த "மிச்ச அதிகாரங்கள்" மாகாண சர்க்கார்களிடமும், சமஸ்தான சர்க்கார்களிடமும் விடப்படுகின்றன.)

உண்மையில் கானடாவில் உள்ள அரசியலை "பூர்ணமான சமஷ்டி" யென்று சொல்ல முடியாது. ஒருமை சர்க்காரின் தன்மையும் கலந்துள்ள ஒரு சமஷ்டியாகவே அதை மதிக்கவேண்டும். "ஒருமை சர்க்கார்" முறையில் ஏற்படும் மத்ய சர்க்காரானது, சமஷ்டி முறையில் ஏற்படும் மத்ய சர்க்காரைவிட "வலிமையுள்ளது".

நாம் எடுத்துக்கொண்ட அரசியல்களில் அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஸ்விட்ஜர்லாந்து, ஆஸ்திரேலியா, இம் மூன்றும் "சமஷ்டியின்" இலக்கணத்துக்கு முற்றிலும் பொருத்தமாக மதிக்கத் தக்கவை. ஆனால் இவற்றின் சமஷ்டி அரசியல் தயாரிக்கப்பட்டபோது இருந்ததை, ஒப்பிட்டால் இந்த மூன்றினிடையும்கூட சில வேற்றுமைகளை காணலாம். அதாவது 1791 வருஷத்தில் அமலுக்கு வந்த அமெரிக்க சமஷ்டி அரசியலமைப்பு 1848 வருஷத்தில் அமலுக்கு வந்த ஸ்விட்ஜர்லாந்து சமஷ்டி, 1902 வருஷத்தில் அமலுக்குவந்த ஆஸ்திரேலிய சமஷ்டி மூன்றையும் ஒப்பிட்டுப் பார்ப்போம். அமெரிக்க அரசியலில் மத்ய சர்க்காரில் விடப்பட்ட "விஷயங்களை" விட ஸ்விட்ஜர்லாந்தின் மத்ய சர்க்காரில் விடப்பட்ட "விஷயங்களும் அதிகாரமும்" மிகவும் குறைவு. மத்ய சர்க்காரிடம் அதிகமான விஷயங்களை ஒப்படைக்க ஸ்விட்ஜர்லாந்தின் பல ஜில்லாக்கள் அப்போது விரும்பவில்லை யென்பதுதான் அதற்குக் காரணம். ஆஸ்திரேலியாவில் சமஷ்டி ஏற்பட்டபோது அமெரிக்க சமஷ்டியில் மத்ய சர்க்காருக்கு ஒதுக்கினதை விட அதிகமான "விஷயங்களை" மத்ய சர்க்காரிடம் ஒப்படைத்தார்கள்.* ஆகவே அடிப்படையில் இம்

* மத்ய சர்க்காரிடம் (சமஷ்டி சர்க்காரிடம்) விடப்படும் விஷயங்கள் அதிகமாகவும், முக்கியமானவையாகவும் இருப்பதைப் பொறுத்தும் அதை "வலிமையுள்ளது" அல்லது "வலிமை குறைந்தது" என்று வர்ணிப்பதுண்டு.

மூன்று நாடுகளிலும் ஏற்பட்டது பூர்ண சமஷ்டியே யானாலும் ஒன்றைவிட மற்றொன்றில் மத்ய சர்க்காரின் விஷயங்கள் அதிகமாகவோ, குறைவாகவோ இருந்தன.

அமெரிக்காவில் 1789 ஞூ த்திய சமஷ்டி சர்க்காரில் அதிகாரங்கள் மிகவும் குறைவாக இருந்தன. ஆனால் 1861 வருஷத்தில் அமெரிக்காவில் சில மாகாணங்கள் (ஸ்டேட்டுகள்) சமஷ்டியை விட்டுப் பிரிய முயன்று, உள் நாட்டு யுத்தத்தில் இறங்கிய பின்னர், மத்ய சர்க்காரின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டன; வரிவிதிப்பு உரிமைகளும் விஸ்தரிக்கப்பட்டன. அதே போல ஸ்விட்ஜர் லாந்திலும் 1848 வருஷத்திய அரசியலை 1874 வருஷத்தில் திருத்தி மத்ய சர்க்காரின் விஷயங்களையும், அதிகாரங்களையும் அதிகப்படுத்தி, அரசியலமைப்பு முழுவதையுமே மாற்றியமைத்தார்கள் என்று சொல்லலாம். பிறகும் பல ஷரத்துகளை அடிக்கடி மாற்றியிருக்கிறார்கள். ஆகையால் இப்போது ஸ்விட்ஜர்லாந்திலிருக்கும் மத்ய சர்க்கார் அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலியவற்றிலுள்ளதைப் போலவே போதிய அதிகாரம் உள்ளதாக ஆகிவிட்டது.

"சம்மேளனம்"

அமெரிக்காவில் 1787 ஞூ த்துக்கு முன்பும், ஸ்விட்ஜர்லாந்தில் 1848 ஞூ த்துக்கு முன்பும் இருந்த அரசியல் முறையை "சம்மேளனம்" (Confederation) என்று சொல்வது வழக்கம். சமஷ்டி (Federation) அரசியலுக்கும், சம்மேளன அரசியலுக்கும் மிகுந்த வித்யாசம் உண்டு.

"சமஷ்டி"யென்பது பல நாடுகள் சேர்ந்த ஒரு தேசத்தின் பொது சர்க்கார். சம்மேளனம் என்பது பல சர்க்கார்கள் தம்மிடையே ஏற்படுத்திக்கொள்ளும் ஒரு பொது "ஸ்தாபனம்" அல்லது "சங்கம்". அதை ஒரு சர்க்கார் என்றே சொல்ல முடியாது. ஜனங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் அவர்கள் அந்தந்த "நாட்டின்" அல்லது "மாகாணத்தின்" பிரஜைகள் என்று தம்மைக் கருதிக் கொள்வார்களே யல்லது, அந்த சம்மேளனத்தின் பிரஜை

கள் என்று தம்மை மதித்துக் கொள்வதில்லை. சம்மேளனம் என்பது ஜனங்களின் பிரதிநிதியல்ல; சர்க்கார்களின் பிரதிநிதியே என்று சொல்லலாம். சம்மேளனத்துக்கு பூர்ண உரிமையுள்ளதாக ஒரு அதிகாரமும் கிடையாது. அதில் சேர்ந்துள்ள "நாடுகள்" அல்லது "மாகாணங்கள்" (ஸ்டேட்டுகள்) என்ன அதிகாரத்தை விட்டுக் கொடுக்கின்றனவோ, அவ்வளவு அதிகாரம் தான் சம்மேளனத்துக்கு இருக்கும். ஜெர்மனியில் 1815—1866-ம் வருஷம் வரை சம்மேளனங்கள் தான் இருந்தன. அதற்கு அவர்கள் "சர்க்கார்கள் சங்கம்" என்ற பெயரை உபயோகித்தார்கள். 1866-ம் வருஷத்துக்குப் பிறகு அங்கு சமஷ்டி ஏற்பட்டது. அதற்கு அவர்கள் "சங்க சர்க்கார்" என்று பெயர் வைத்தார்கள். ஸ்விட்ஜர்லாந்திலும் 1848-ம் வருஷத்துக்கு முன்னர் இருந்தது "சம்மேளனம்"; பின்னர் ஏற்பட்டது, சமஷ்டி.

சமஷ்டிக்கும், சம்மேளனத்துக்கும் என்ன வித்யாசம் என்பதை வேறொரு உதாரணத்தின் மூலம் விளக்கலாம். ஒரு ஊரில் 100 கைத்தறி நெசவுக்காரர்கள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அதிகாரிகளை சந்தித்துப் பேசவும் வேலை நேரம் முதலியவற்றில் அவ்வப்போது தாற்காலிகமாக சில ஒழுங்கு முறைகள் ஏற்படுத்தவும் அவர்கள் ஒரு சங்கம் அமைத்துக் கொள்வார்கள். அப்படிப்பட்ட ஒரு சங்கத்தை "சம்மேளனம்" என்பதற்கு உதாரணமாகச் சொல்லலாம். அவ்வாறின்றி அவை ஒன்றுபட்டு சேர்ந்து நூல் கொள்முதல், ஜவுளி விற்பனை முதலியவற்றை அந்த கூட்டுறவு சங்கத்தின் மூலமே நடத்தி லாப நஷ்டத்தை பகிர்ந்து கொள்ளக் கூடிய வகையில் ஒரு கூட்டுறவு சங்கமாக (கோவாப்பரேட்டிவ் சங்கமாக) பதிவு செய்து கொள்வதாக வைத்துக் கொள்வோம். முதலில் பிரஸ்தாபித்த சங்கத்துக்கும், இரண்டாவது பிரஸ்தாபித்த லாப நஷ்ட பொறுப்புள்ள கூட்டுறவு சங்கத்துக்கும் எவ்வளவு வித்யாசமோ, அவ்வளவு வித்யாசம் சம்மேளனத்துக்கும், சமஷ்டிக்குமிடையே உண்டு.

அமெரிக்காவில் 1776-ம் வருஷத்தில் 13 குடியேற்றங்களும், ஒரு "காங்கிரஸுக்கு" பிரதிநிதிகளையனுப்பி சுதந்திரப் பிரகடனம் செய்தபோது, அந்த நாடுகளிடையே ஒரு "சம்மேளனம்" கூட ஏற்படவில்லை. 1781 ஐூத்தில் அவர்கள் ஒரு சம்மேளனமாக சேர்ந்தார்கள். அந்த சம்மேளனத்துக்கு "அமெரிக்காவின் ஐக்கிய நாடுகள்" என்று பெயர் கொடுத்தார்கள். இப்போதும் அந்த பெயரே இருக்கிறதென்றாலும், இப்போதிருப்பது உண்மையான சமஷ்டி: 1781-ல் ஏற்பட்டது சமஷ்டியல்ல. அந்த சம்மேளனத்தின் அடிப்படைக் கொள்கையை குறிப்பிடும் ஷரத்துகளின் வாசகமே இதற்கு அத்தாட்சி; "ஒவ்வொரு நாடும் அதன் ராஜாங்க உரிமை, சுதந்திரம், சார்பற்ற நிலை ஆகியவற்றை தன்னிடமே வைத்துக் கொள்கிறது" என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

ஒரு அதிகாரி தன்னிடமுள்ள அதிகாரங்களில் சிலவற்றை தன் உதவி அதிகாரியிடம் விடுவது போல, தெளிவாக நிர்ணயித்து, அந்த நாடுகள் சம்மேளனத்தினிடம் அவ்வப்போது சில அதிகாரங்களுக்கு பொறுப்புக் கட்டி வைக்கும். அந்த அதிகாரங்களைத் தவிர மற்ற அதிகாரங்களெல்லாம் அந்தந்த நாட்டு (ஸ்டேட்) சர்க்காருக்கே. அந்த நாடுகள் "வெளியாரின் ஆக்கிரமிப்பிலிருந்து தம்மை காத்துக்கொள்ளும் ஒரு பொதுத் தேவைக்காகவும், பரஸ்பரம் க்ஷேமலாபங்களை காத்துக்கொள்வதற்காகவும் பரஸ்பரம் உதவி செய்துகொள்ளும் நேச பாவம் கொண்ட ஒரு உறுதியான கூட்டுறவில் கலந்து கொள்கின்றன" என்று அமெரிக்க சம்மேளன அமைப்பின் முன்னுரையிலேயே சொல்லப்படுகிறது.

சமஷ்டியாக இல்லாமல் வெறும் சம்மேளனமாக இருந்ததால், அமெரிக்க நாடுகளின் பொது வேலைக்கான காரியங்களைச் செய்வதற்கு வேண்டிய பண வசதியோ அதிகாரமோ அந்த சம்மேளனத்துக்கு இல்லாமல் போயிற்று. ஆகையால் சம்மேளனம் ஏற்பட்டு இரண்டு வருஷம் ஆவதற்குள்ளாகவே இந்த சம்மேளனத்தை

சமஷ்டியாக மாற்ற வேண்டும் என்று அமெரிக்காவில் பல அறிவாளிகள் உணர ஆரம்பித்தனர்.

ஸ்விட்ஜர்லாந்தில் 1848 ம் வருஷம் வரை சமஷ்டி ஏற்படாமல் சம்மேளனமே இருந்து வந்ததால் அதிலுள்ள சில கத்தோலிக்க ஜில்லாக்கள் தனியாகத் தம்மிடையே ஒரு கூட்டுறவை ஏற்படுத்திக்கொண்டு, அன்னிய நாட்டாரின் உதவியை நாட ஆரம்பித்தன. இது உள்நாட்டு யுத்தத்துக்கு இடமாயிற்றென்பதையும் பிறகு அங்கு "சமஷ்டி" ஏற்பட்டது என்பதையும், முந்தின அத்தியாயத்தில் சொல்லியிருக்கிறோம்.

இந்தியாவில் ஸிம்லா சம்பாஷணைகளின் போது, அகில இந்திய யூனியனுக்கு சட்ட சபையே வேண்டாம் என்று ஜனுப் ஜின்னு சொல்லி வந்ததும், அகில இந்திய சர்க்கார், மாகாணங்களில் நேர்முகமாக வரி விதிக்க உரிமை இருக்கக் கூடாது என்று சொல்லி வந்ததும் சமஷ்டி கொள்கைக்கு முரணாகும். அவர் கோரிக்கைக்கு தூது கோஷ்டி இணங்கி யிருந்தால் அகில இந்திய யூனியன் ஒரு சம்மேளனம் என்ற பெயருக்குத்தான் லாயக்காகும். அந்த சம்மேளனம் வெகு சீக்கிரத்தில் சிதறிப் போகும்; சிதறவில்லை யென்றால் அது சமஷ்டியாகவே மாறிவிடும்!

அமெரிக்காவில் 1787-ம் வருஷத்தில் தயாரித்த சமஷ்டித் திட்டம் சில விஷயங்களில் சம்மேளனம் போலவே அமைக்கப்பட்டது. பிறகு படிப்படியாக அங்கு சமஷ்டி அதிகாரத்தை விஸ்தரித்து "சம்மேளனம்" என்ற தன்மை அறவே ஒழிந்தது. 1861-ம் வருஷத்தில் உள்நாட்டு யுத்தம் ஏற்பட்ட பிறகு சமஷ்டி சட்ட சபையின் அதிகாரமும், நிர்வாக அதிகாரமும் இன்னும் அதிகரிக்கப்பட்டன. அதற்குப் பிறகு உலகில் ஏற்பட்ட எந்த அரசியலமைப்பிலும் சமஷ்டி சர்க்காரின் அதிகாரம் அதிகரிக்கப்பட்டதே யொழிய குறைக்கப் படவில்லை.

சம்மேளனம் என்பது இப்போது உலகில் எந்த நாட்டிலும் இல்லை.

ஒருமை சர்க்கார்

பரஸ்பரம் உறவு கொண்டு பொது சர்க்காரை அமைத்துக்கொள்ள விரும்பும் "நாடுகள்" தமது தனி நிலைமையையும் ஓரளவு காத்துக்கொள்ள விரும்பும் போது "சமஷ்டி" ஏற்படுகிறது. அந்த நாடுகள் பல விஷயங்களில் தம்மிடையே ஒற்றுமையை விரும்பினாலும், "இரண்டறக் கலக்க" விரும்புவதில்லை. ஆனால் அவை சமஷ்டியாகச் சேருகின்றன. "இரண்டறக் கலந்து" விடுவதே மேல் என்று கருதும்போது, அவை சமஷ்டியுடன் திருப்தியடையாமல் "ஒருமை அரசியலை" ஏற்படுத்திக் கொள்கின்றன. ஒருமை அரசியலுக்கும், சமஷ்டி அரசியலுக்குமுள்ள வித்தியாசத்தை "ஒருமை"க்கும், "ஒற்றுமை"க்குமுள்ள வித்யாசத்துடன் ஒப்பிடலாம்.

முன் அத்தியாயங்களில் எடுத்துக்கொண்ட 7 தேசங்களில் செக்கோஸ்லோவாகியா, அயர்லாந்து, தென்னாப்பிரிக்கா ஆகிய மூன்று தேசங்களில் இருப்பது ஒருமை சர்க்கார்.

"தம்மிடையே பொது சர்க்கார் அமைத்துக்கொள்ள விரும்பும் நாடுகள் நாகரிகம், இனம், மதம் முதலியவற்றில் ஒரே மாதிரியாக இருந்தால், ஒருமை சர்க்கார் ஏற்படும்; மதம், நாகரிகம், இனம் முதலியவற்றில் வேறுபட்டிருந்தால் சமஷ்டி தான் ஏற்படும்" என்று சிலர் ஊகிக்கக் கூடும். அது தவறான ஊகமாகும். ஆஸ்டிரேலியாவில் உள்ள 6 மாகாணங்களில் வசிப்பவர்கள் ஒரே நாகரிக முள்ளவர்கள்; ஒரே இனத்தவர்; ஒரே மதத்தினர். அவர்கள் எல்லோரும் இங்கிலாந்திலிருந்து வந்து குடியேறியவர்களே. அப்படியிருந்தும் அங்கு சமஷ்டிதான் ஏற்பட்டது. அயர்லாந்தில் வடக்கு பகுதியில் பிராடஸ்டன்டுகளும் தெற்கில் கத்தோலிக்கர்களும் இருந்தனர். அவர்கள் ஒரு சமஷ்டியை ஏற்படுத்திக் கொண்டிருக்க முடியும். ஆனால் அயர்லாந்து முழுதுக்கும் பொதுவான சர்க்காரே கூடாது என்று சிலர் சொல்லிவிட்டதால் அந்த தேசம் இரண்டாகப் பிளக்கப்பட்டு தெற்கு அயர்லாந்து தனிக் குடியரசாயிற்று. பிரிவி

னைக்குப் பிறகு சமஷ்டியே தேவையில்லை! ஆகையால் அயர்லாந்து குடியரசு ஒருமை அரசியலை பின்பற்றியதில் குறிப்பிடத்தக்கது எதுவுமில்லை. பல வேறு தனி ராஜ்யங்கள் இருந்த இடத்தில்தான் சமஷ்டியா, ஒருமை யரசியலா என்ற பிரச்னையே கிளம்ப இடமுண்டு. உதாரணமாகத் தென்னாப்பிரிக்காவை எடுத்துக் கொள்வோம். அங்கு 4 மாகாணங்களில் இரண்டு டச்சுக்காரர் நாடு; மற்றிரண்டு பிரிட்டிஷார் நாடு. இவ்விரண்டுக்கும் பரஸ்பரம் முரண்பாடும், சண்டையும் இருந்தது. அங்கு அவை சமஷ்டியை ஏற்படுத்திக்கொள்ளாமல், ஒருமையரசியலையே ஏற்படுத்திக் கொண்டது ஒரு புதுமையே. அந்த நாட்டின் அரசியலமைப்பைக் கவனித்தால் சமஷ்டிக்கும், ஒருமை யரசியலுக்குமுள்ள வித்தியாசங்களை நன்கு தெரிந்துகொள்ள முடியும்.*

தென்னாப்பிரிக்காவில் முக்கியமான எல்லா அதிகாரங்களும் பொது சர்க்காருக்குத்தான்; மாகாண சர்க்கார்களின் உரிமைகள் மிகவும் சொற்பம். அவையும் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கின்றன. வரையறுக்கப்பட்டுள்ள அந்த விஷயங்களில்கூட தென்னாப்பிரிக்க சர்க்கார் மாகாண சர்க்கார்களின் உரிமைகளில் குறுக்கிட முடியும். தென்னாப்பிரிக்க பார்லிமெண்டின் செனேட் சபையில் மாகாணங்களுக்கு சம பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும் சில பிரதிநிதிகளை தென்னாப்பிரிக்க சர்க்காரின் கவர்னர் ஜெனரலே (மந்திரி சபையே) நியமிக்க உரிமையுண்டு. மாகாணங்களின் பிரதம நிர்வாகியை நியமிக்கும் அதிகாரம் தென்னாப்பிரிக்க யூனியன் சர்க்காருக்கே. நேர்முகமாக வரிவிதிக்கவோ, கடன் வாங்கவோ மாகாண சட்டசபைகள் சட்டமியற்றினால் தென்னாப்ரிக்க கவர்னர் ஜெனரலின் அனுமதியுடன்தான் அவ்வ அமலுக்குவரும். கவர்னர் ஜெனரல் அனு

* "யூனியன்" என்ற பெயரை சமஷ்டிக்குத்தான் உபயோகிப்பது வழக்கம். தென்னாப்பிரிக்க சர்க்காருக்கு "தென்னாப்பிரிக்க யூனியன்" என்றே பெயரிட்டிருக்கிறார்கள் ஆனால் அது சமஷ்டியல்ல; ஒருமை சர்க்காரே.

மதித்தால்தான், மாகாணச் சட்டம் அமலுக்கு வரும். சில விஷயங்கள் மாகாணங்களுக்கு என்று ஒதுக்கப் பட்டிருப்பினும், அவற்றில் மத்ய சர்க்காருக்கு மேலதி காரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இவற்றை கவனிக்குமிடத்து ஒருமை சர்க்காரில் மாகாண சுதந்திரம் என்பது மத்ய சர்க்காரின் மேற் பார்வைக்கும் ஆதிக்கத்துக்கும் உட்பட்டதேயாகும்.

### அடுத்த அத்தியாயத்தில்

சமஷ்டியமைப்பு, ஒருமையரசியல் இந்த இரண்டில் சமஷ்டியமைப்பையே தூதுகோஷ்டி சிபார்சு செய் திருக்கிறது. சமஷ்டியமைப்பிலும் பல வகைகள் உண்டு. அதாவது அந்த அமைப்பின் உறுப்புகள் ஒவ்வோரு நாட்டிலும் ஒவ்வோரு வகையாக இருக்கும். இந்த விவரங்களை அடுத்த அத்தியாயத்தில் ஆராய் வோம்.

---

## பதினேழாவது அத்தியாயம்

# சமஷ்டி உறுப்புகளில் பல வகைகள்

பிரிட்டிஷ் இந்தியாவில் 1935-ம் வருஷம் வரையில், இருந் தது "ஒருமையரசு முறையே". அதாவது மாகாண சர்க்கார்கள் சில விஷயங்களைத்தாமே நிர்வகித்து வந்தா லும், எல்லா விஷயங்களிலும் மத்ய சர்க்காரின் ஆதிக்கத் துக்கும் மேற்பார்வைக்கும் உட்பட்டே அவை வேலை செய்து வந்தன. இவ்வாறு ஒருமை அரசியல் இருந்த இடத்தில், அந்த "ஒருமையை" மாற்றி மாகாணங்களை சுதந்திர "நாடுகளாக" ஆக்கி அவற்றை ஒரு சமஷ்டியில் இணைப்பதென்பது இதுவரை உலகில் சற்று அசாதாரண மான விஷயமாகவே இருந்து வந்திருக்கிறது. அப்படி இருந்தும் மத்ய சர்க்காரில் ஜன நாயகத்தையும் பொறுப் பாட்சியையும் ஏற்படுத்துவதானால், அது "சமஷ்டி" சர்க் காராகவே இருக்கவேண்டும் என்று லண்டனில் 1930–32

வருஷத்தில் இந்தியா சம்பந்தமாக நடந்த வட்ட மேஜை மகாநாட்டில் முடிவு செய்தனர். ஒருமையரசியலை சமஷ்டி யாக மாற்றும் இந்த யோசனையை வட்ட மேஜை மகா நாட்டில் கலந்துகொண்ட காங்கிரஸும் ஒப்புக்கொண் டது. அதுவரையில் காங்கிரஸின் தலைமையில் தயாரிக் கப்பட்ட அரசியல் திட்டங்கள் யாவற்றிலும் "ஒருமை முறையே" பின்பற்றப்பட்டது. அதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், அந்தக் காலத்தில் சமஸ் தானங்கள் அகில இந்திய நிர்வாகத்தில் கலந்துகொண்டு, அகில இந்திய ஆட்சியில் தம்மை நேர்முகமாக இணைத்துக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படவில்லை. சமஸ்தானங் களும் அகில இந்திய நிர்வாகத்தில் கலந்து கொள்வதாயின், ஒருமை சர்க்கார் என்பது சாத்யமல்ல. ஏனென்றால் சமஸ் தானாதிபதிகள் தமது "ராஜாங்க அந்தஸ்தை" தியாகம் செய்ய முன்வருவார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. சமஸ்தானங்கள் தம் "உள்நாட்டு ராஜாங்க உரி மையை" இழக்காமலே அகில இந்திய ஆட்சியில் சேரும்படி வசதியளிக்க வேண்டியதாயிற்று. அந்த முறை "சமஷ்டி"யில்தான் உண்டு. ஆகையால் சமஸ்தானங் களும் சேர்ந்த ஒரு பொது சர்க்கார் ஏற்படுத்தும்போது, அது சமஷ்டியாகவே இருக்கலாம் என்று எல்லோரும் ஒப் புக்கொண்டார்கள். சமீபகாலமாக முஸ்லிம் லீகும் "தனி ராஜ்ய" கோரிக்கையை வற்புறுத்துவதால், இந்நாட்டில் சமஷ்டியைத் தவிர வேறு முறை சாத்யமல்ல. இந்த சமஷ்டி மிகவும் பலவீனமான சமஷ்டியாக இருக்கக் கூடாது என்பதில்தான், இப்போது தேசீய வாதிகள் கவ னம் செலுத்த வேண்டும்.

எந்த அரசியல் முறையாக இருந்தாலும், அது ஜன நாயக முறையாக இருந்தால் அதில் முக்கியமான இரண்டு உறுப்புகள் உண்டு. அவையாவன:—(1) நிர்வாகம் (2) சட்டமியற்றும் சபை. நிர்வாக சபையானது சட்ட மியற்றும் சபையின் கருத்துக்களை நிறைவேற்றிவைப்ப தாக இருக்க வேண்டும். இவ்வாறு நிர்வாகத்துக்கும் சட்டசபைக்கும் தொடர்பு இருப்பதற்கு ஒவ்வொரு சமஷ்டியில் ஒவ்வொரு முறையை அனுஷ்டிப்பதுண்டு.

## நிர்வாக முறைகள்

"நிர்வாகம்" சம்பந்தமாக ஒருமைசர்க்காரும் சமஷ்டி சர்க்காரும் ஒரே முறையை பின்பற்ற முடியும். "சட்ட மியற்றும் சபை" சம்பந்தமாகத்தான் சமஷ்டிக்கும் ஒருமை யரசியலுக்கும் வித்யாசம் இருக்கும். நிர்வாகப் பொறுப்பு சம்பந்தமாக சர்க்காரின் அமைப்பை பல தினுசுகளாகப் பிரிக்கலாம்.

ஒன்று, சட்ட சபையின் வோட்டு மூலம் நிர்வாக சபையை பதவியை விட்டு நீக்கக் கூடிய முறை. மற்றொன்று, சட்டசபையின் வோட்டுமூலம் நிர்வாக சபையை மாற்ற முடியாது என்ற முறை. இவற்றை முறையே "பார்லிமெண்டரி நிர்வாகம்" என்றும், "நிரந்தர நிர்வாகம்" என்றும் சொல்வார்கள். பிரிட்டனில் இருப்பது பார்லிமெண்டரி நிர்வாகமுறை. அதையே ஆஸ்திரேலியாவின் சமஷ்டியமைப்பில் பின்பற்றுகிறார்கள்.

### பார்லிமெண்டரி நிர்வாகம்.

இந்த முறையின் முக்கிய அம்சம் என்னவென்று பார்ப்போம். சட்டசபைக்குப் பொதுத் தேர்தல் நடந்த பிறகு எந்தக் கட்சிக்கு சட்டசபையில் மெஜாரிட்டியிருக்கிறதோ, அந்தக் கட்சியின் தலைவர் பிரதம மந்திரியாக இருந்து தமது கட்சியில் சிலரைச் சேர்த்துக்கொண்டு ஒரு மந்திரி சபையை அமைப்பார். சட்டசபையில் எக் கட்சிக்கும் பூர்ண மெஜாரிட்டியில்லையானால், இரண்டு மூன்று கட்சிகள் தம்மிடையே சில விஷயங்களில் ஒற்றுமையை ஏற்படுத்திக்கொண்டு, மந்திரி சபையை அமைக்கலாம். எப்படியும் அந்த மந்திரிசபையானது பார்லிமெண்டின் (சட்டசபையின்) மெஜாரிட்டியினரது ஆதரவை பெற்றிருக்க வேண்டும். எந்தப் பிரச்னையிலேனும் மந்திரி சபை கொண்டுவரும் பிரேரணை சட்டசபையில் தோற்கடிக்கப்பட்டால், அந்த மந்திரிசபை ராஜிநாமா செய்து விடும்.

மந்திரி சபை ராஜிநாமா செய்தவுடன் வேறொரு கட்சியினர் அல்லது வேறொரு கலப்புக் கட்சியினர்

சட்டசபையின் மெஜாரிட்டியை பெறமுடியு மென்று நினைத்தால், வேறு ஒரு மந்திரி சபை ஏற்படும். இல்லா விடில் சட்டசபை கலைக்கப்பட்டு மறுபடியும் பொதுத் தேர்தல் நடைபெறும். புது மந்திரி சபை ஏற்படும். இவ்வாறு பார்லிமெண்டின் அபிப்பிராயம் மாறுவதைப் பொறுத்து மந்திரிசபையை மாற்றலாம், என்ற நிலைமை இருந்தால் அதை "பார்லிமெண்டரி நிர்வாக முறை" என்பார்கள்.

சட்ட சபையின் இஷ்டப்படிதான் நிர்வாகம் நடக்க வேண்டுமென்பது, ஜனநாயகத்தின் அடிப்படை. ஆனால் நிர்வாகப் பொறுப்பிலுள்ளவர்கள் என்ன நினைக்கிறார்களோ அதை சட்டசபை ஆதரிக்கவில்லையென்றால் என்ன செய்வது? (1) நிர்வாக சபை தன் அபிப்பிராயத்தைக் கைவிட்டு சட்டசபையின் கொள்கையை நிறைவேற்றவேண்டும் என்று ஏற்பாடு செய்யலாம். அல்லது (2) நிர்வாக சபை தன் பதவியை ராஜிநாமா செய்து, சட்டசபையின் மெஜாரிட்டியைப் பெறக் கூடியவர்களை பதவிக்கு அழைக்கலாம். இவ்விரண்டில் இரண்டாவது கூறியதுதான் பார்லிமெண்டரி பொறுப்பாட்சி எனப்படுவது. அதுதான் பிரிட்டனில் இருப்பது.*

---

* பிரான்ஸிலும் கிட்டத்தட்ட இதே முறைதான் இருந்து வந்தது. ஆனால் சில வித்தியாசங்கள் உண்டு. அங்கு, மந்திரி சபைக்கு ஆதரவு குறையும்போது பாரலிமெண்டை கலைப்பது அவ்வளவு சகஜமாக நடப்பதில்லை. பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இரண்டு அல்லது மூன்று கட்சிகள்தான் இருக்கும். ஏதேனும் ஒரு கட்சிக்கு நல்ல மெஜாரிட்டி இருக்கும்; பிரான்ஸில் அப்படியல்ல; 7 அல்லது 8 கோஷ்டிகள் இருக்கும். எந்த கோஷ்டிக்கும் தனிமெஜாரிட்டி இருப்பதில்லை. நாலைந்து கோஷ்டிகள் சேர்ந்துதான் மந்திரிசபையை அமைக்க வேண்டியிருக்கும். ஏதேனும் ஒரு கோஷ்டி தன் ஆதரவை வாபஸ் வாங்கினால் மந்திரி சபை கவிழ்ந்துவிடும். பிறகு வேறு கோஷ்டிகளை சேர்த்துக்கொண்டு புது மந்திரி சபை ஏற்படும்; பழைய மந்திரிகளில் பலர் புது மந்திரி

(இதன் தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

ஆஸ்திரேலிய சமஷ்டி சர்க்காரில் உள்ள முறையும் இதுதான்.

ஆனால் அமெரிக்காவில் இருப்பது அந்த முறையல்ல. அங்கு பார்லிமெண்டுக்கும் "நிர்வாகத்துக்கும்" அபிப்பிராயபேதம் ஏற்பட்டால் "நிர்வாகம்" ராஜிநாமா செய்யாமல் பார்லிமெண்டின் விருப்பத்தையே நிறைவேற்றி வைக்கும். இந்த முறைக்கு "நிரந்தர நிர்வாக" முறை என்று பெயர்.

## நிரந்தர நிர்வாகம்

அமெரிக்க ஜனநாயகத்தில் குடியரசுத் தலைவர் (ஜனாதிபதி) தம் இஷ்டப்படியே நிர்வாக சபையை அமைக்கிறார். குடியரசுத் தலைவர் பார்லிமெண்டால் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. ஜனங்களால் நேரில் தேர்ந்தெடுக்கப்படுகிறார். குடியரசுத் தலைவர் பார்லிமெண்டின் மெம்பராகக் கூட இருப்பதில்லை. அவர் நியமிக்கும் நிர்வாகத்தினரும் பார்லிமெண்டின் மெம்பர்களல்ல. அவர்கள் பார்லிமெண்டில் வந்து பேசக் கூடமுடியாது.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

சபையில் இருப்பார்கள். இவ்வாறு ஒரு வருஷத்தில் நாலைந்து தடவை மந்திரி சபை கவிழ்வது பிரான்ஸில் சர்வ சகஜமான விஷயம்.

பிரிட்டனில் ஒரு மந்திரி சபை கவிழ்ந்தால் அநேகமாக பார்லிமெண்ட் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தி விடுவார்கள். பார்லிமெண்ட் மெம்பர்கள் பலர் தேர்தல் செலவுக்கும் தொந்தரவுக்கும் பயப்படுவார்கள்; ஆகையால் அலக்ஷிய புத்தியுடன் மந்திரி சபையை எதிர்க்கத் துணிய மாட்டார்கள்.

அதாவது சட்டசபையை கலைத்து பொதுத் தேர்தல் நடத்தும்படி கோர, மந்திரி சபைக்கு அதிகாரமிருந்தால் தான் பார்லிமெண்டரி ஜனநாயகத்தில் மந்திரி சபைக்கு ஸ்திரத்தன்மை இருக்கும்.

பிரான்ஸில் சட்டசபையை கலைப்பது அவ்வளவு சகஜமாக நடப்பதில்லை.

ஜனங்களின் தலைவர் என்ற ஹோதாவில், அவரே சர்க்காரின் நிர்வாகி. நிர்வாக சபையினர் எல்லோரும் அவரால் நியமிக்கப்படும் "உத்யோகஸ்தர்கள்" என்று கருதப்படுவர். அவர்களை அவர் எப்போது வேண்டுமானுலும் நீக்கலாம். ஒரு தடவை குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், நான்கு வருஷத்துக்கு அவரைப் பதவியிலிருந்து நீக்கமுடியாது. அவர் அவ்வப்பொழுது பார்லிமெண்டுக்குச் சில கொள்கைகளை சிபார்சு செய்வார். அவர் சிபார்சு செய்த பிரேரணை நிறைவேருவிடில், அதற்காக அவர் ராஜிநாமா செய்யவேண்டியதில்லை. பார்லிமெண்ட் சில சட்டங்களை இயற்றுவதாக வைத்துக் கொள்வோம். அது அவருக்குப் பிடிக்கவில்லையென்ருல், அந்த சட்டத்துக்கு அவர் கையெழுத்துப் போட மறுக்கலாம். பிறகு அவரது சிபார்சை, பார்லிமெண்ட் நிராகரித்து, முதலில் நிறைவேற்றிய சட்டத்தையே வற்புறுத்த உரிமையுண்டு. அவ்வாறு வற்புறுத்துவதற்கு சாதாரண மெஜாரிட்டி போதாது. பெரிய மெஜாரிட்டி (மூன்றில் இரண்டு பங்கு பேர்) சட்டத்துக்குச் சாதகமாக வோட்டளித்தால் பிறகு குடியரசுத் தலைவர் அந்த சட்டத்துக்கு "சம்மதம்" அளித்துவிட வேண்டியதுதான். அதாவது தனக்கு பிடிக்காத சட்டத்தையும் அவர் அமல் நடத்தி வைக்க வேண்டியதே.

சட்ட சபையைக் கலைக்க நிர்வாகத் தலைவருக்கு உரிமை கிடையாது. அபிப்ராய பேதம் நிமித்தமாக நிர்வாகத் தலைவரை நீக்க சட்ட சபைக்கும் உரிமை கிடையாது.

இந்த முறையை "ஜனுதிபதி நிர்வாக முறை" என்பார்கள்.

ஆஸ்திரேலியாவில் இருப்பது, அமெரிக்காவில் இருப்பதைப் போல சமஷ்டி அரசியலே. ஆயினும் நிர்வாக முறையில் ஆஸ்திரேலியா அமெரிக்காவை பின்பற்ருமல் பிரிட்டிஷ் முறையையே பின்பற்றி யிருக்கிறது.

ஸ்விட்ஜர்லாந்திலுள்ள முறை

அமெரிக்காவில் உள்ள நிர்வாக அமைப்பை "நிரந்தர நிர்வாக முறை" என்று கூறினேம். ஸ்விட்ஜர்லாந்திலுள்ளதும் நிரந்தர நிர்வாக முறைதான். ஆனல் அமெரிக்காவில் உள்ள "நிரந்தர நிர்வாக" அமைப்புக்கும், ஸ்விட்ஜர்லாந்தில் உள்ள முறைக்கும் வித்தியாசம் உண்டு.

அமெரிக்காவில் நிர்வாகம் முழுதிற்கும் ஜனதிபதி ஒருவரே பொறுப்பாளி. ஸ்விட்ஜர்லாந்தில் அப்படியல்ல. அங்கு சம அந்தஸ்துள்ள 7 மந்திரிகள் கொண்ட ஒரு நிர்வாக சபை (நிர்வாக கௌன்ஸில்) இருக்கிறது. இந்த நிர்வாகக் கௌன்ஸில் ஜனங்களால் "நேரில்" தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. அந்த தேசத்தின் பார்லிமெண்டின் மேல்சபை, கீழ்சபை ஆகிய இரண்டு சபைகளின் மெம்பர்களும் சேர்ந்து, 7 பேரைப் பொறுக்கியெடுக்கிருர்கள். இவர்கள் 3 வருஷ காலம் பதவியிலிருப்பார்கள். மந்திரி சபைக்கு யார் தலைவராக இருக்க வேண்டுமென்பதையும் சட்டசபை தீர்மானித்து விடுகிறது. ஒருவர் ஒரு வருஷம் தான் தலைவராக இருக்கலாம்,

இந்த நிர்வாக சபையை சட்ட சபையின் வோட்டு மூலம் பதவியிலிருந்து நீக்க முடியாது. மந்திரிகள் சட்ட சபையில் ஆஜராக இருந்து பிரேரணைகள் சமர்ப்பிக்கலாம். ஆனல் வோட் செய்யமுடியாது. சட்டசபையில் நிறைவேறிய எந்த மசோதாவையும் நிர்வாகசபை அமல் நடத்தி வைக்கக் கடமைப் பட்டிருக்கிறது.

## சட்ட மன்றத்தின் அமைப்பு

நிர்வாக சபையின் அமைப்புக்கு அடுத்தபடியாக சட்ட சபைகளின் அமைப்பைக் கவனிப்பது அவசியம். அநேகமாக எல்லா பெரிய நாடுகளிலும் மத்ய சர்க்காரின் "சட்டமன்றம்" (சட்டமியற்றும் ஸ்தாபனம், அல்லது பார்லிமெண்ட்) இரண்டு சபைகள் உள்ளதாகவே இருக்கிறது. சமீபத்தில் பிரான்ஸில் கூடிய அரசியல் நிர்ணய

சபையினர், ஒரே ஒரு சட்டசபை போதுமென்று தீர் மானித்தனர். ஆனால் அந்த அரசியலமைப்பு ஊர்ஜித மாகாமல் அங்கு மறுபடியும் புதிதாக அரசியல் நிர்ணய சபை கூட்டப்பட்டிருக்கிறது. இறுதியில் அங்கு எவ் வாறு முடிவு செய்யப் போகிறார்கள் என்பது தெரிய வில்லை. யுத்தத்துக்கு முன் இருந்த நிலைமையை எடுத்துக் கொண்டால், அநேகமாக எல்லா நாடுகளிலும் சட்ட மன்றம் இரண்டு சட்ட சபைகள் கொண்டதாகவே இருந்து வந்திருக்கிறது. ஒன்றை "மேல்சபை" அல்லது "செனேட்" அல்லது "ராஜாங்க சபை" என்பார்கள். மற்றொன்றைக் "கீழ் சபை" அல்லது "பிரதிநிதி சபை" என்பார்கள்.

## "மேல் சபை"

சமஷ்டி சர்க்கார்களில் மட்டுமல்லாமல் ஒருமை சர்க்கார் முறையிலும், அநேகமாக எல்லா பெரிய நாடு களிலும் இரண்டு சபைகள் இருக்கின்றன. இங்கிலாந்து, பிரான்ஸ், தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் ஒருமை அரசியலே இருந்த போதிலும் அங்கும் இரண்டு சட்ட சபைகள் இருக்கின்றன. மேல் சபை ஒன்று எதற்கு என்பதுபற்றி நெடுங்காலமாகவே அரசியல் பண்டிதர்களிடையே சர்ச்சை இருந்து வந்திருக்கிறது. அதை இங்கு விவரிப்பது அவசியமில்லை. இது விஷயமாக அமெரிக்க சுதந்திரப் போரின் தளகர்த்தரான வாஷிங் டனுக்கும், மற்றொரு பெரிய அமெரிக்க ராஜதந்திரியான ஸ்ரீ ஜெவர்ஸனுக்கும் நடந்த ஒரு சம்பாஷணை படிப்பதற்கு மிகவும் ருசிகரமாக இருக்கும். அமெரிக்க அரசியலமைப் பில் இரண்டு சட்டசபைகள் இருப்பது ஸ்ரீ. ஜெவர்ஸனுக் குப் பிடிக்கவில்லை. ஒருநாள் காலை உணவு அருந்தும்போது இது விஷயமாக அவர் ஜெனரல் வாஷிங்டனுடன் சண்டை போட்டுக்கொண்டிருந்தார். அந்த சமயத்தில் இருவருக்கும் காப்பி வந்தது. ஸ்ரீ ஜெவர்ஸன் தம் கோப் பையில் இருந்த காப்பியை டவராவில் (ஸாஸரில்) ஊற்றினார்.

உடனே தளபதி வாஷிங்டன் "காப்பியை ஏன் அதில் ஊற்றுகிறீர்கள்"? என்று ஸ்ரீ. ஜெவர்ஸனை கேட்டாராம்.

"ஆர வைப்பதற்காக" என்று ஸ்ரீ. ஜெவர்ஸன் பதிலளித்தாராம்.

"மேல் சபையொன்று அமைப்பதின் நோக்கம் அது தான். இயற்றின சட்டத்தை செனேட் சபையில் விட்டு ஆர வைக்கிறோம்" என்றாராம் தளபதி வாஷிங்டன்.

"ஜனப் பிரதிநிதிகள் நல்லெண்ணம் கொண்டே தம்மையறியாமலேயே சில தவறான சட்டங்களை இயற்றி விடுவார்கள். அவர்களது தவறிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்காக சில சமயங்களில் ஒரு செனேட் சபை அவசியமாகிவிடும்" என்று மற்றொரு அரசியல் பண்டிதர் (ஸ்ரீ. ஹாமில்டன்) எழுதி யிருக்கிறார்.

"மேல் சபையின்" தன்மை

சமஷ்டி அரசியலில் இரண்டு சபைகள் இருப்பதினால், வேறொரு லக்ஷியமும் நிறைவேறும். ஒரு சபை ஜனங்களின் உணர்ச்சியை பிரதிபலிப்பதாகவும், மற்றொரு சபை மாகாணங்களின் உணர்ச்சியைப் பிரதிபலிப்பதாகவும் இருக்கும். மாகாணங்களின் பிரதிநிதித்துவத்துக்கு மேல் சபையை உபயோகிப்பது வழக்கம். சாதாரணமாக சமஷ்டியில், மாகாணங்கள் ஜனத்தொகையிலும், நிலப்பரப்பிலும் பெரியதாகவோ, சிறியதாகவோ இருப்பினும், ராஜாங்க அந்தஸ்தில் அவை சமத்துவமுள்ளதாகவே மதிக்கப்படுவது வழக்கம். இந்தக் கொள்கையை மேல்சபை பிரதிநிதித்துவ விஷயத்தில் அனுஷ்டித்துக் காட்டுவது வழக்கம். உதாரணமாக அமெரிக்காவை எடுத்துக்கொள்வோம். அந்த சமஷ்டியில் மத்ய சர்க்காரின் மேல் சபைக்கு "செனேட் சபை" என்று பெயர். அமெரிக்காவில் உள்ள ஒவ்வொரு மாகாணத்துக்கும் அந்த சபையில் இரண்டு பிரதிநிதிகள் இருக்கிறார்கள். நியூயார்க் மாகாணத்தின் ஜனத்தொகை

சுமார் 130 லக்ஷம்; நீவாடா என்ற மாகாணத்தின் ஜனத்தொகை ஒரு லக்ஷம் கூட இல்லை; ஆனாலும் அமெரிக்க செனேட்டில் நியூயார்க்குக்கும் இரண்டு பிரதிநிதிகள் தான்; நீவாடாவுக்கும் இரண்டு பிரதிநிதிகள் தான்!

கீழ் சபையில் மாகாணங்களின் ஜனத்தொகைக்குத் தக்கவாறு பிரதிநிதித்துவம் கொடுப்பது வழக்கம். மேல் சபையொன்று இல்லாவிடில், அமெரிக்காவின் கீழ் சபையில் நியூயார்க், பென்ஸில்வேனியா, இல்லினாய் முதலியவற்றைப் போல, அதிக ஜனத்தொகையுள்ள மாகாணங்களாக 12 மாகாணங்கள் சேர்ந்துகொண்டு மீதமுள்ள 36 மாகாணங்களின் விருப்பத்தையும் நிராகரித்து சட்டமியற்றிவிட முடியும். மேல் சபையில் எல்லா மாகாணங்களுக்கும் ஒரே தொகையில் பிரதிநிதித்துவமளித்து செனேட் சபைக்கும் கீழ் சபைக்கும் சமமான அதிகாரம் கொடுத்திருப்பதன்மூலம் மாகாண உரிமைகள் காப்பாற்றப்படுகின்றன.

இந்தியாவிலும் சமஷ்டியே ஏற்படப் போவதால், இந்த ஒரு நோக்கத்துடனாவது பலர் இரண்டு சட்ட சபைகள் வேண்டுமென்ற கொள்கையை வற்புறுத்துவார்கள். ஆகையால் பல தேசங்களில் இந்த இரண்டு சபைகளும் எவ்வாறு இருக்கின்றன என்பதை சிறிது கவனிப்பது அவசியம்.

இரண்டு சபைகள் உள்ள எல்லா நாடுகளிலும் கீழ் சபை "ஜனங்களின்" பிரதிநிதியாகவும், மேல் சபையானது "மாகாணங்களின்" பிரதிநிதியாகவும் இருப்பது வழக்கம். சில சமயங்களில் மேல் சபையானது "மாகாண ஜனங்களின்" பிரதிநிதியாக இல்லாமல் "மாகாண சட்ட சபைகளின்" பிரதிநிதியாக, அதாவது மாகாண சர்க்காரின் பிரதிநிதிபோல இருப்பதும் உண்டு. சமஷ்டி முறையில்லாமல் ஒருமை யரசியலாக இருந்தால், மேல் சபைகளின் நோக்கம் மாகாணங்களின் உரிமையைக் காப்பதை முக்கியமாகக் கொள்வதில்லை; கீழ்சபையின் விறுவிறுப்

யைச் சற்று நிதானப்படுத்துவதையே முக்கியநோக்கமாக கொண்டிருக்கும். ஆனால் இரண்டு சபைகள் இருக்கும் இடங்களிலெல்லாம் வரி விதிப்பு சம்பந்தமான சட்டங்களில் கீழ்சபைக்கே அதிகமான உரிமை அளிப்பது வழக்கம். மேல் சபையின் அமைப்பும் அதிகாரமும் சில தேசங்களில் எவ்வாறு இருக்கின்றன என்பதை இப்போது பார்ப்போம்.

அமெரிக்கா

அமெரிக்காவின் மேல் சபை பற்றி ஏற்கனவே சில விஷயங்கள் சொல்லியுள்ளோம். 1787-ம் வருஷம் அங்கு அரசியல் சட்டம் தயாரித்தபோது, "மேல் சபையை" (செனேட்டை) மாகாண சர்க்கார்களின் பிரதிநிதியாகவே வைத்தார்கள் என்று சொல்லலாம். ஏனென்றால் செனேட் மெம்பர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை சட்டசபையிடமே விடப்பட்டது. ஆனால் 1913-ம் வருஷத்தில் இதை மாற்றினார்கள். செனேட் மெம்பர்கள் அந்தந்த மாகாணத்திலுள்ள "வோட்டர்களாலேயே" அதாவது ஜனங்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று சட்டத்தைத் திருத்தினார்கள். ஆகையால் இப்போது அமெரிக்க செனேட் சட்ட சபை மாகாணங்களின் பிரதிநிதியாகவே இருப்பினும், மாகாண சர்க்காரின் பிரதிநிதியாக இல்லாமல் மாகாண ஜனங்களின் பிரதிநிதியாகவே இருந்து வருகிறது.

வரி விதிப்பு பற்றிய எல்லா மசோதாக்களும், முதலில் கீழ் சபையில்தான் விவாதிக்கப்படவேண்டும். ஆனால் அம் மசோதாக்களுக்கு திருத்தம் பிரேரிக்க மேல் சபைக்கு உரிமை உண்டு.

வெளிநாட்டு உறவு பற்றிய விஷயங்களில் கீழ் சபைக்கு அதிகாரமே கிடையாது. மேல் சபைக்கு மட்டும்தான் அதிகாரம். உடன்படிக்கைகளை ஊர்ஜிதம் செய்வது மேல் சபையின் ஏகபோக உரிமையாகும். இவ் விஷயத்தில் செனேட் சபையின் அதிகாரம் ஜனாதிபதியின்

உரிமையை மிகவும் கட்டுப்படுத்துவதாக இருக்கிறது. உதாரணமாக செனேட்டில் மூன்றில் இரண்டு பங்கு பேர் சம்மதித்தாலொழிய, வெளிநாட்டு உறவு சம்பந்தமான எவ்வித உடன்படிக்கையையும் அமெரிக்க சர்க்கார் செய்துகொள்ள முடியாது. இன்னொரு உதாரணத்தை கவனிப்போம். சமீபத்தில் ஸான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டில் நிர்ணயித்த ஐக்கிய நாடுகள் சங்கத்தின் சாஸனத்தின் மீது செனேட்டில் வோட்டெடுத்துத்தான் ஐக்கிய நாடுகள் சங்கத்தில் அமெரிக்கா சேர்ந்தது. அமெரிக்க செனேட்டில் உள்ள 96 மெம்பர்களும் ஆஜரானதாகவைத்துக்கொள்வோம். அந்த மெம்பர்களில் 64 பேர் வோட்டு செய்தால்தான் இதுபோன்ற பிரேரணை நிறைவேறும். 63 பேர் வோட்டு செய்தால்கூட பிரேரணை நிறைவேறாது. அதாவது மொத்த மெம்பர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் (64 பேர்) வோட்டு செய்தால்தான் பிரேரணையை நிறைவேற்ற முடியும்; ஒரு வோட்டு குறைந்தால் அந்த பிரேரணை நிறைவேறாது. 1920-ல் சர்வதேச சங்க அமைப்புக்கு ஜவாப்தாரியாக இருந்தவர் அப்போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஸ்ரீ வில்ஸன்தான். அப்படியிருந்தும் செனேட்டில் மெஜாரிட்டி ஆதரவு இல்லாததால் அமெரிக்கா அந்த சர்வதேச சங்கத்தில் சேரவில்லை.

உடன்படிக்கைகளை ஊர்ஜிதம் செய்வதில் மட்டுமல்லாமல், வெளி நாடுகளுக்கு ஸ்தானிகர்களை நியமிப்பதில் கூட செனேட்டின் சம்மதம் வேண்டும்.

கானடா

கானடாவின் மேல் சபையில் எல்லா மாகாணங்களுக்கும் சமப் பிரதிநிதித்துவம் இல்லை. மேல் சபை பிரதிநிதித்துவத்துக்காக கானடாவை 4 "டிவிஷன்களாக" (வட்டாரங்களாக) பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு வட்டாரத்துக்கும் 24 பிரதிநிதிகள். ஆனால் மாகாணங்களாக கணக்குப் பார்த்தால், மாகாணத்துக்கு மாகாணம் பிரதிநிதித்துவத்தில் வித்யாசம் உண்டு. உதாரணமாக கியுபெக் மாகாணத்துக்கு 24 பிரதிநிதிகள்; அல்பெர்ட்டா மாகா

ணத்துக்கு 6 பிரதிநிதிகள்; நோவாஸ்கோஷியாவுக்கு 10 பேர்; பிரின்ஸ் எட்வர்ட் தீவுக்கு 4 பேர். இந்த செனேட் மெம்பர்கள், தேர்தல் மூலம் பதவி பெறுபவர்களல்ல. கவர்னர் ஜெனரலே இவர்களை பொறுக்கி நியமிப்பார்.

ஒரு தடவை நியமிக்கப்பட்டவர், சாதாரணமாக ஆயுள் முழுவதும் பதவியிலிருக்கலாம். இந்த செனேட்டின் அதிகாரம் பிரிட்டனிலிருக்கும் லார்ட்ஸ் சபைக்குள்ள அதிகாரத்தைப் போன்றதுதான். அதாவது உருப்படியான அதிகாரம் ஒன்றுமில்லை.

## ஆஸ்திரேலியா

ஆஸ்திரேலியாவில் கீழ் சபைக்கு பிரதிநிதிகள் ஜனத்தொகைக்குத் தக்கபடி ஜனங்களால் நேரில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மேல் சபைக்கு பிரதிநிதிகள் ஜனத்தொகை வீதாசாரத்தின்படி அல்ல. எல்லா மாகாணங்களுக்கும் ஒரே தொகைதான். ஒவ்வொரு மாகாணத்துக்கும் 6 செனேட்டர்கள். இந்த 6 பேரும் அந்த மாகாணம் முழுவதையும் ஒரே தொகுதியாக வைத்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மாகாண சட்ட சபைக்கு வோட்டளிக்க உரிமையுள்ள எல்லோருக்கும் செனேட்டர் தேர்தலிலும் வோட்டளிக்க உரிமையுண்டு.

வரி விதிப்புப் பிரேரணைகள் மந்திரிகளால்தான் பிரேரிக்கப்படும். அவை கீழ் சபையில் தான் பிரேரிக்கப்படும்.

அவற்றை மாற்றவோ, நிராகரிக்கவோ மேல் சபைக்கு உரிமையுண்டு. அவ்வாறு மேல் சபை செய்த திருத்தங்களுடன் மசோதா கீழ்சபைக்கு வரும். கீழ்சபை அந்த திருத்தங்களை ஏற்றுக்கொள்ளாமல் பழையபடியே மீண்டும் நிறைவேற்றி, மேல் சபைக்கு அனுப்பும் போது மறுபடியும் மேல் சபை அதை அப்படியே ஏற்றுக்கொள்ள மறுக்குமானால், கவர்னர் ஜெனரல் இரண்டு சபைகளையும் கலைத்துப் பொதுத் தேர்தல்

நடத்தி சபைகளை மறுபடியும் கூட்டுவார். அப்போதும் அந்தப் பழைய பிரேரணை மீது இரண்டு சபையும் முரண் பட்டு நின்றால், இரண்டு சபையும் ஒரே சபையாகக் கூடி அந்தக் கலப்பு சபையின் மெஜாரிட்டிப்படி இறுதி யாக முடிவு செய்யப்படும். சாதாரணமாக செனேட் டர்கள் ஆறு வருஷ காலம்தான் பதவியில் இருக்க லாம். பிறகு அவர்களது ஸ்தானம் காலியாகிவிடும்.

ஸ்விட்ஜர்லாந்து

ஸ்விட்ஜர்லாந்தில் மேல் சபையில் எல்லா ஜில்லாக் களுக்கும் சமப் பிரதிநிதித்துவம்தான். கீழ் சபையில் ஜனத்தொகைப்படி பிரதிநிதித்துவம் இருக்கும். கீழ் சபை பிரதிநிதிகள் பொது ஜனத் தேர்தல் மூலமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மேல்சபை பிரதிநிதிகள் தேர்தல் விஷயமாக எந்த முறையையும் நிர்ணயித்துக் கொள்ள அந்தந்த ஜில்லாக்களுக்கு உரிமை கொடுக்கப் பட்டது.

கீழ் சபை, மேல் சபை இரண்டும் எல்லா விஷயங் களிலும் சம அதிகாரம் உள்ளவை.

ஸ்விட்ஜர்லாந்தின் அரசியலமைப்பில் இரண்டு சபை மெம்பர்களும் "கட்டளைப்படி வோட்டு செய்பவர்களாக இருக்கக் கூடாது" என்று ஒரு ஷரத்து இருக்கிறது. இந்த மாதிரி ஒரு ஷரத்தின் அவசியம் என்ன என்று சிலர் நினைக்கலாம். 1848-ம் வருஷத்திய அரசியலுக்கு முன் இருந்த "சம்மேளனத்தின்" மன்றத்தில் பிரதிநிதிகள் தம் தம் ஜில்லாக்களிலுள்ள சர்க்காரின் கட்டளைப் படியே வோட்டுச் செய்ய வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இருந்தது. 1848-ம் வருஷத்து அரசியலில் அந்த நிர்ப்பந் தத்தை நீக்கினார்கள்.

ஆசிரியர் கூப்லன்ட் இந்தியாவுக்கு சிபார்சு செய்த திட்டத்தில், மத்திய சட்ட சபையில் தொகுதிவட்டப் பிரதிநிதிகள் தம் தம் தொகுதியிலுள்ள சர்க்காரின்

ஏஜெண்டுகளாகவே வோட்டுச் செய்ய வேண்டுமென்று ஏற்பாடு செய்யலாமென ஒரு அபாயமான யோசனையை வெளியிட்டிருக்கிறார். அதாவது ஸ்விட்ஜர்லாந்தில் 1848-ல் கைவிடப்பட்ட முறையை ஆசிரியர் கூப்லன்ட் இந்தியாவுக்கு சிபார்சு செய்கிறார்! இது மிகவும் பலஹீன மான சம்மேளனத்துக்குக்கூட பொருந்தாது. இந்த முறையை இந்திய சமஷ்டியில் புகுத்த, யாரும் இணங்கக் கூடாது.

### தென்னாப்பிரிக்கா

முந்திய பாராக்களில் நாம் பார்த்த சில "மேல்சபை களில்", கனடாவைத் தவிர மற்ற தேசங்களில், மேல் சபை மெம்பர்கள் ஜனங்களால், நேரில் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். ஆனால் தென்னாப்பிரிக்காவின் செனேட் அமைப்பு பலவிதங்களில் குறிப்பிடத் தக்கது.

அங்கு செனேட் சபையில் மொத்தம் அங்கத்தினர்கள் 40 பேர். அதில் 8 பேரை கவர்னர் ஜெனரல் நியமிக் கிறார். இவர்கள் 10 வருஷகாலம் பதவி வகிக்கலாம். மீத முள்ள 32 ஸ்தானங்களும் தென்னாப்பிரிக்காவின் 4 மாகாணங்களிடையே சமமாக பங்கிடப்படுகின்றன. இந்த 32 பேரும் தேர்ந்தெடுக்கப்படுவது மாகாணத்தி லுள்ள பொது ஜனங்களின் நேர்முகமான வோட்டு மூல மல்ல. ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள மாகாண சட்ட சபை மெம்பர்களும், அந்த மாகாணத்தைச் சேர்ந்த மத்ய சட்டசபை மெம்பர்களும் சேர்ந்து 8 பேரை மேல் சபைக் குத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆகையால் இந்த மேல்சபை மெம்பர்கள் தம் மாகாணத்துக்கு மட்டுமல்லாமல் மத்ய பார்லிமெண்டின் "கீழ் சபைக்கும்" பிரதிநிதிகளாக இருக்கிறார்கள்.

ஆஸ்திரேலியாவில் இருப்பதுபோலவே தென்னாப் பிரிக்காவிலும், மேல்சபைக்கும் கீழ்சபைக்கும் முரண்பாடு ஏற்பட்டால் கவர்னர் ஜெனரல் ஒரே சமயத்தில் இரண்டு சபைகளையும் கலைத்து பொதுத்தேர்தல் நடத்துவார்.

## அயர்லாந்து.

அயர்லாந்தில் மேல்சபைக்கு 60 அங்கத்தினர்கள் உண்டு. அவர்களில் 11 பேரை பிரதம மந்திரியே நியமிப்பார். மீதமுள்ள 49 பேரில் 6 பேர் சர்வகலாசாலைகளால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். 43 பேர் கல்வியறிவு, கைத்தொழில், விவசாயம், தொழிலாளர்கள், முதலிய பல “வர்க்கத்தினருக்கு” பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.

மந்திரிசபை கொண்டுவரும் “அவசர மசோதாக்கள்” கீழ்சபையில் அங்கீகரிக்கப்பட்டு மேல்சபையில் அங்கீகாரம் கிடைக்கவில்லையானாலும், அதுசட்டமாக 90 நாள் அமலில் இருக்க முடியும். 90 நாளுக்குப் பிறகு அது அமலிலிருக்க வேண்டுமானால் இரண்டு சபையின் சம்மதமும் வேண்டும்.

## பிரான்ஸ்

பிரான்ஸின் “ மேல்சபை ” (செனேட் சபை) ஜனங்களால் “நேர்முகமாக” தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. ஒவ்வொரு ஜில்லாவிலும் ஜில்லா போர்ட் மெம்பர்கள், அந்த ஜில்லாவிலிருந்து சட்டசபைக்கு (கீழ்சபைக்கு) தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆகியோர் “வோட்டுரிமை குழாம்”* (Electoral College) என்ற ஹோதாவில் கூடி செனேட் சபைக்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பார்கள்.

40 வயதுள்ளவர்கள்தான் செனேட் சபையில் மெம்பர்களாக வரலாம். பழைய ராஜ வம்சத்தைச் சேர்ந்தவர்கள் செனேட் சபைக்கு அபேக்ஷகர்களாக நிற்க முடியாது.

மூன்று வருஷத்துக்கொரு தடவை செனேட் சபையில் மூன்றிலொரு பங்கு ஸ்தானங்கள் புதுப்பிக்கப்படும். (அதாவது மூன்றிலொருபங்கு மெம்பர்களின் ஸ்தானம்

---

* “வோட்டுரிமை குழாம்” பற்றி, 188-ம் பக்கத்தில் விளக்கப்படுகிறது.

காலியாக்கப்பட்டு புது தேர்தல் நடக்கும்). ஒவ்வொரு செனேட்டரும் 9 வருஷகாலம் பதவி வகிக்கலாம்.

மேல் சபைக்கும் கீழ்சபைக்கும் சமமான அதிகாரங்களே. ஆனால் கீழ்சபையை கலைத்து பொதுத் தேர்தலுக்கு குடியரசுத் தலைவர் உத்தரவு போடுவதாயின் செனேட்டின் சம்மதம் வேண்டும்.

குடியரசுக்கெதிராக சதி செய்தவர்கள் மீது குற்றம் சாட்டும்போது செனேட் சபையை ஒரு நீதி மன்றமாக வேலை செய்யும்படி குடியரசுத் தலைவர் உத்தரவு போடலாம்.

செனேட் அமைப்பு சம்பந்தமாக மேலே கூறியிருப்பது 1875 ஆகஸ்டுக்குப் பிறகு நிர்ணயித்த அமைப்பு. 1874-ல் அரசியல் தயாரித்தபோது 300 பேர் கொண்ட அந்த சபையில் 75 பேரை கீழ்சபையே தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற முறை இருந்தது. இந்த 75 பேர் ஆயுள்காலம் முழுதும் பதவியிலிருக்கலாம். இந்த முறை 1875-ல் மாற்றப்பட்டது.

## ஒரு பொது அம்சம்

நாம் பிரஸ்தாபித்துள்ள ஒவ்வொரு தேசத்திலும் மேல் சபை ஒவ்வொரு விதமாக இருக்கிறது. சிலவற்றில் மேல் சபை மெம்பர்கள் ஜனங்களால் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். சிலவற்றின் கீழ் சபை மெம்பர்களே செனேட்டர்களை தேர்ந்தெடுக்கிறார்கள். சிலவற்றில் செனேட் சபையினர் ஜனங்களால் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படாமல் "வோட்டுரிமை குழாம்கள்" மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். சிலவற்றில் செனேட் சபை அங்கத்தினர்களின் தொகை ஜனத்தொகை விதாசாரப்படி இருக்கிறது. சிலவற்றில் மாகாணங்களின் ஜனத்தொகை எப்படியிருந்தாலும் செனேட் சபையில் சமமான பிரதிநிதித்துவம் வழங்கப்படுகிறது. சிலவற்றில் செனேட்டுக்கு உண்மையான அதிகாரம் எதுவும் இல்லை. சிலவற்றில் மேல் சபைக்கும் கீழ் சபைக்கும் சமமான அதி

காரம் கொடுக்கப்படுகிறது. சிலவற்றில் கீழ் சபையைவிட மேல் சபைக்கு சில விசேஷாதிகாரங்கள் கொடுக்கப்படுகின்றன. சிலவற்றில் கீழ் சபையைவிட மேல் சபைத் தேர்தலில் வோட்டர்கள், அபேட்சகர்களுக்கு சில விசேஷ யோக்கியதாம்சங்கள் குறிப்பிடப்படுகின்றன.

ஆனால் இரண்டு விஷயங்களில் எல்லா தேசங்களிலும் ஒரே முறை இருக்கிறது. அதாவது (1) தேர்தல் மூலம் ஏற்படும் மேல் சபைகள் யாவற்றிலும் அங்கத்தினர்கள் தொகை கீழ் சபை அங்கத்தினர் தொகையைவிட குறைவாக இருக்கிறது. (2) மேல் சபையின் ஆயுட்காலம் கீழ் சபையின் ஆயுட்காலத்தைவிட அதிகமானது.

கீழ் சபைகள்

அநேகமாக எல்லா தேசங்களிலும் கீழ் சபை பிரதிநிதிகளின் தொகை ஜனத்தொகைக்கு தகுந்தபடியே இருக்கும். தற்காலம் அநேகமாக எல்லா தேசங்களிலும் 21 வயது வந்த ஆண் பெண்களுக்கு வோட்டுரிமை கொடுக்கப்படுகிறது. இந்தியாவின் மொத்த ஜனத்தொகை சுமார் 40 கோடி இருப்பதால் அகில இந்திய பார்லிமெண்டில் கீழ் சபைக்கு எத்தனை மெம்பர்கள் இருக்கவேண்டுமென்பது முக்கியமான பிரச்னையாக இருக்கும். ஆகவே சில தேசங்களில் ஜனத்தொகையையும், அவற்றின் பிரதிநிதி சபையின் அங்கத்தினர் (கீழ் சபையின்) தொகையையும் கவனிப்போம். அமெரிக்காவின் ஜனத்தொகை சுமார் 13 கோடி. பிரதிநிதி சபையினர் தொகை 435 பேர். (சுமார் 3 லக்ஷம் பேருக்கு ஒரு பிரதிநிதி வீதம் ஆகிறது.)

இங்கிலாந்தின் மொத்த ஜனத்தொகை சுமார் 470 லக்ஷம். காமன்ஸ் சபை (கீழ் சபை) மெம்பர்கள் 615 பேர். சுமார் 75,000 பேருக்கு ஒரு பிரதிநிதி.

அயர் குடியரசில் 30,000 பேருக்கு ஒரு பிரதிநிதி.

அமெரிக்காவில் இருப்பதுபோல இந்தியாவில் பிரதிநிதித்துவம் அளிப்பதானால் சுமார் 1400 மெம்பர்கள்

தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கும். சமீபத்தில் நடந்த அரசியல் நிர்ணய சபைத் தேர்தலில் பத்து லக்ஷம் பேருக்கு ஒரு பிரதிநிதி வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## ராஜாங்க அதிபதி

ஒரு ராஜாங்கத்தின் காரியங்களை நிர்வகிக்க எத்தனை ஸ்தாபனங்களும், உறுப்புகளும் இருந்தாலும் அவை யாவற்றுக்கும் மேலாக, அவை யாவற்றுக்கும் பொதுவாக ஒரு ராஜாங்க "அதிபதி" இருப்பது அவசியம். உண்மையான அதிகாரம் அந்த "அதிபதி"யிடம் இல்லாவிட்டாலும் அவர் பேராலேயே எல்லா அதிகாரங்களும் அமல் நடப்பதாகக் கருதப்படும். முடியரசு உள்ள இடங்களில் அந்த நாட்டின் மன்னரே ராஜாங்க "அதிபதியாக" இருப்பார். உதாரணமாக, பிரிட்டனை எடுத்துக்கொள்வோம். அந்த ராஜ்யத்தின் இப்போதைய "அதிபதி" ஆறுவது ஜார்ஜ் என்ற தனி நபர்தான். உண்மையில் பிரிட்டிஷ் மன்னர் தன் யுக்தானுசாரமாக அந்த நாட்டின் நிர்வாகத்தில் எதுவும் செய்ய முடியாது. ஆனாலும் சட்டமியற்றுவது, நிர்வாகத்தை நடத்துவது, நீதி வழங்குவது ஆகிய மூன்று காரியங்களும் அவரது பேரால்தான் நடைபெறுகின்றன. பிரிட்டனின் ராணுவம், கடற்படை முதலியன யாவும் மன்னர் பிரானின் படையென்றே அழைக்கப்படும். பார்லிமெண்டு இயற்றின எந்த சட்டமும் மன்னரின் அங்கீகாரம் பெற்ற பின்னர்தான் அமலுக்கு வருவதாகக் கருதப்படும். வெளி நாடுகளுக்கு அனுப்பப்படும் ஸ்தானிகர்கள் பிரிட்டிஷ் மன்னராலேயே நியமிக்கப்படுவதாக ஐதீகம். நீதி மன்றங்களில் தண்டனை விதிக்கப்படுகிறவர்களுக்கு மன்னிப்பு வழங்குவதும் மன்னர்தான்.

பிரிட்டிஷ் மன்னரிடம் சில விசேஷ அதிகாரங்கள் இருப்பதாகச் சொல்வதுண்டு. ஆனால் அந்த அதிகாரங்கள் யாவும் பொதுஜனங்களின் ஆதரவையும், பார்லிமெண்டின் ஆதரவையும் பெற்றுள்ள மந்திரி சபையின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவே உபயோகிக்கப்படுகிறது.

காரியாம்சத்தில் மந்திரிகளின் ஆலோசனைக்கெதிராக மன்னர் எதுவும் செய்ய முடியாதென்றாலும் பிரிட்டனில் உள்ள சர்க்கார் அவர் பேராலேயே நடக்கிறது. அவர் தான் அந்த ராஜாங்கத்தின் "அதிபதி".

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் உள்ள டொமினியன் களில் (கானடா, தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா முதலியவற்றில்) கவர்னர்-ஜெனரலே சர்க்காரின் "அதிபதி". இந்த கவர்னர்-ஜெனரல் பிரிட்டிஷ் மன்னரால் நியமிக்கப்படுவதாகத்தான் சட்டத்தில் சொல்லப் படும். ஆனால் காரியாம்சத்தில் அந்த டொமினியன்களின் மந்திரி சபையினரது விருப்பத்தை அனுசரித்தே பிரிட்டிஷ் மன்னர் தம் கவர்னர்-ஜெனரலை நியமிப்பார். பிரிட்டிஷ் சர்க்காரில் மந்திரி சபைக்கும், மன்னருக்கு மிடையே என்ன உறவு இருக்கிறதோ அதே உறவுதான் டொமினியன்களில் கவர்னர்-ஜெனரலுக்கும், மந்திரி சபைக்கும் உள்ள உறவு.

முடிமன்னர் இல்லாத தேசங்களிலும், சர்க்காரின் அதிபதி என்று ஒருவர் இருந்தே தீரவேண்டும். இந்த அதிபதியை நியமிப்பதில் ஒவ்வொரு தேசமும் ஒவ்வொரு முறையைக் கையாளுகிறது. அந்த "அதிபதி"யின் விசேஷாதிகாரங்கள் சம்பந்தமாகவும் ஒவ்வொரு தேசத்திலும், ஒவ்வொரு விதமான நிபந்தனைகள் இருக்கும். சில தேசங்களில் ராஜாங்க "அதிபதிக்கு" நேர்முகமான நிர்வாகப் பொறுப்பு எதுவும் இருக்காது. சில விசேஷாதி காரங்கள் மட்டும்தான் இருக்கும். இப்பொழுது இது சம்பந்தமான சில உதாரணங்களை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு தேசத்திலும் "அதிபதி" தேர்ந்தெடுக்கப்படும் முறையையும், அவரது அதிகாரத்தின் தன்மையையும் கவனிப்போம்.

## அமெரிக்கா

அமெரிக்க சர்க்காரின் "அதிபதிக்கு" பிரஸிடெண்ட் (அக்ராசனர்) என்று பெயர். தமிழில் "ஜனாதிபதி" என்று சொல்வது பொருந்தும்.

அமெரிக்க ஜனாதிபதி அந்த தேச முழுவதிலுமுள்ள பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இந்த தேர்தலில் அனுஷ்டிக்கப்படும் முறை இந்தியாவில் பலருக்கு சிறிது புதுமையாக இருக்கும். அந்த முறையை நேர்முகத் தேர்தல் முறை (Direct Election) என்றும் சொல்ல முடியாது; ஆனால் மறைமுகத் தேர்தல் (Indirect Election) என்றும் சொல்லமுடியாது. அங்கு "வோட்டுரிமை குழாம்கள்" (Electoral College) மூலம் ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படுகிறார்.*

---

* சமீபத்தில் நடந்த அரசியல் நிர்ணய சபைத் தேர்தலில் அனுஷ்டிக்கப்பட்ட முறையை மறைமுகத் தேர்தலுக்கு ஒரு உதாரணமாகச் சொல்லலாம். சென்னை மாகாணத்துக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் 45 பேரும் சென்னை மாகாணத்து வோட்டர்களால் "நேர்முகமாக"த் தேர்ந்தெடுக்கப்படவில்லை. சட்டசபை மெம்பர்கள்தான் இவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். அதாவது அரசியல் நிர்ணய சபை மெம்பர்கள் ஜனங்களால் நேரில் தேர்ந்தெடுக்கப்படாமல் ஜனங்களின் பிரதிநிதிகளான சட்டசபை மெம்பர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதாவது மறைமுகமாக தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

சட்டசபை மெம்பர்கள் நேர்முகமாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

அரசியல் நிர்ணய சபைத் தேர்தலில் சட்டசபையானது ஒரு Electoral College (எலக்டொரல் காலேஜ்) ஆக வேலைசெய்தது என்று சொல்லலாம். எலக்டொரல் காலேஜ் என்ற ஆங்கில வார்த்தையை "வோட்டுரிமை குழாம்" என்று மொழி பெயர்க்கலாம். அதாவது ஜனங்களுக்கு சொந்தமான வோட்டுரிமை இவர்களது பொறுப்பில் விடப்பட்டிருப்பதாக அர்த்தம்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் "வோட்டுரிமை குழாம்கள்" மூலம்தான் நடைபெறுகிறது. ஆனாலும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலை மறைமுகத் தேர்தல் என்று கூறமுடியாது. ஏனென்றால் (1) அந்த வோட்டுரிமை குழாம்கள் யாருக்கு வோட்டுப்போடும் என்பது வோட்டர்களுக்கு ஏற்கனவே தெரியும். (2) இந்த வோட்டுரிமை குழாம் அந்த ஜனாதிபதி தேர்தலுக்கென்றே நியமிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் உள்ள 48 மாகாணங்கள் ஒவ்வொன்றும், அமெரிக்க பார்லிமெண்டில் (காங்கிரஸ்) அதற்கு எத்தனை ஸ்தானம் உண்டோ அத்தனை நபர்கள் கொண்ட ஒரு "வோட்டுரிமை குழாத்தை" நியமிக்கிறது. ஒரு மாகாணம் அமெரிக்கப் பார்லிமெண்டுக்கு 10 மெம்பர்களை தேர்ந்தெடுக்கலாமென்றால் வோட்டுரிமை குழாத்துக்கும் அத்தனை பேர்களைத் தேர்ந்தெடுக்கலாம். உதாரணமாக நியூயார்க் மாகாணம், அமெரிக்க பிரதிநிதி சபைக்கு 45 பேரையும் அமெரிக்க செனேட்டுக்கு 2 பேரையும் அனுப்பலாம். ஆகையால் அம்மாகாணம் 47 பேர் கொண்ட ஒரு வோட்டுரிமை குழாத்தை தேர்ந்தெடுக்கிறது.

ஜனாதிபதி பதவிக்கு 1944-ம் வருஷத்தில் ஸ்ரீ ரூஸ்வெல்ட்டும், ஸ்ரீ டூவேயும் போட்டி யிட்டனர். ஸ்ரீ. ரூஸ்வெல்ட், டெமாக்ராடிக் கட்சியை சேர்ந்தவர். ஸ்ரீ. டூவே, ரிபப்ளிகன் கட்சியைச் சேர்ந்தவர். நியூயார்க் மாகாணத்தில் வோட்டுரிமை குழாத்துக்கு டெமொக்ராடிக் கட்சியைச் சேர்ந்த 47 பேர் கொண்டதாக ஒரு ஜாப்தா இருக்கும்; ரிப்பப்ளிகன் கட்சியைச் சேர்ந்த 47 பேர் கொண்டதாக ஒரு ஜாப்தா இருக்கும். ஜனங்கள் தனி நபர்கள் பேரில் வோட்டு செய்யாமல் ஜாப்தாக்களுக்கே வோட்டு செய்வார்கள். இந்த 47 பேரும் தம் கட்சியின் சார்பில் ஏற்கனவே ஜனாதிபதி பதவிக்கு நிறுத்தப்பட்டவருக்கு வோட்டு செய்வார்கள்.

இந்தியாவின் ஜனத்தொகையும் விஸ்தீர்ணமும் மிகவும் அதிகமாக இருப்பதால் ஜனங்களே சுதந்திர இந்தியக் குடியரசின் தலைவரைத் தேர்ந்தெடுப்பது, சரியான வழியாக இருக்காது என்று சிலர் கருதுகின்றனர். மறைமுகத் தேர்தல்தான் வேண்டுமென்று இவர்கள் வாதிக்கக் கூடும். ஆகையால் மறைமுகத் தேர்தல், நேர்முகத் தேர்தல் இரண்டின் அம்சங்களும் பொருந்தியதாக அமெரிக்காவில் அனுஷ்டிக்கப்படும் வோட்டுரிமை குழாம் முறையை பின்பற்றலாமா என்பதில் இந்திய அரசியல் நிர்ணய சபை கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

அதிகாரம் விஷயமாகவும், அமெரிக்க ஜனாதிபதியின் நிலைமை குறிப்பிடத் தக்கது. அங்கு நிர்வாக அதிகாரம் முழுவதும் அவரது பொறுப்பிலேயே விடப்பட்டிருக்கிறது. அநேகமாக மற்றெல்லா நாடுகளிலும் ராஜாங்க அதிபதியிடம் உண்மையான நிர்வாகப் பொறுப்பு எதுவும் கிடையாது.

அமெரிக்க ஜனாதிபதியிடம் உள்ள விசேஷாதிகாரம் பற்றி ஒரே ஒரு விஷயம் மட்டும் குறிப்பிடத் தக்கது. அவர் பார்லிமெண்டுக்குக் கட்டுப்பட்டவரேயானாலும், பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்ட மசோதா அவருக்கு பிடிக்கவில்லையானால் அந்த சட்டத்துக்கு அவர் கையெழுத்து செய்ய மறுக்கலாம். அதே மசோதா மறுபடியும் பார்லிமெண்டுக்கு வரவேண்டியதுதான். பார்லிமெண்ட் மீண்டும் அதை விவாதித்து பின்னர் மறுபடியும் அதை நிறைவேற்ற விரும்பினால் சாதாரண மெஜாரிட்டி மூலம் நிறைவேற்றிவிட முடியாது. மூன்றில் இரண்டு பங்கு மெம்பர்கள் சம்மதித்தால்தான் நிறைவேற்ற முடியும். உதாரணமாக பார்லிமெண்டில் 300 பேர் ஆஜராக இருந்தால் 150 மெம்பர்கள் ஆதரித்தால் போதாது. 200 பேர் ஆதரித்தால்தான் ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்ட மசோதாவை சட்டமாக்க முடியும். அதாவது பார்லிமெண்டில் மூன்றில் இரண்டு பங்கு பேருக்கு எவ்வளவு அதிகாரமுண்டோ, அவ்வளவு அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு என்று கூறலாம்.

### ஸ்விட்ஜர்லாந்து

ஸ்விட்ஜர்லாந்தில் ராஜாங்க அதிபதி ஜனங்களால் நேரில் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. ஸ்விட்ஜர்லாந்தின் பார்லிமெண்ட்தான் அவரைத் தேர்ந்தெடுக்கிறது. அந்த பார்லிமெண்டு 7 பேர் கொண்ட ஒரு நிர்வாக சபையைத் தேர்ந்தெடுக்கிற தென்பதையும், ஒவ்வொரு நிர்வாக சபையும் மூன்று வருஷ காலம் பதவி வகிக்கிறதென்பதையும், அந்த 7 பேரில் ஒருவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர் ஒரு வருஷ காலம் பதவி வகிப்பார்

என்பதையும் ஏற்கனவே கூறியுள்ளோம். நிர்வாக சபையின் அக்ராசனரே அங்கு சர்க்காரின் "அதிபதி". நிர்வாக சபையில் அவரும் ஒரு மெம்பர் என்பதைத் தவிர அவருக்கென்று பிரத்தியேகமாக ஒரு அதிகாரமும் கிடையாது. கையெழுத்துப் போடும் ஒரு இயந்திரமாகவே அவரை மதிக்க வேண்டும். அவரது பதவி ஒரு மரியாதைப் பதவியே. சட்டசபை நிறைவேற்றிய மசோதாவுக்கு கையெழுத்துப் போட அவர் மறுக்க முடியாது. அந்நாட்டுப் பிரஜைகளில் 30,000 பேர் விரும்பினால் எந்த மசோதாவும் சர்வஜன வோட்டுக்கு விடப்பட வேண்டும். சட்டத்துக்கு அங்கீகாரமளிப்பது அல்லது ரத்து செய்வது என்ற உரிமையை ஜனங்களே நேரில் உபயோகிக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் அங்கு குடியரசுத் தலைவருக்கு விசேஷ அதிகாரம் எதுவும் கொடுக்கப்படவில்லை.

## பிரான்ஸ் *

பிரான்ஸின் ராஜாங்க அதிபதி ஜனங்களால் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. செனேட் சபையும், பிரதிநிதி சபையும் ஒரே தேசிய சபையாக கூடி மொத்த மெம்பர்களின் மெஜாரிட்டி மூலம் இந்த தேசத்து அதிபதி தெரிந்தெடுக்கப்படுகிறார். அவர் 7வருஷ காலம் பதவி வகிக்கலாம். எல்லா மசோதாக்களும் அவர் கையெழுத்திட்ட பிறகுதான் சட்டமாகக் கருதப்படும். செனேட் சபையும், பிரதிநிதி சபையும் நிறைவேற்றிய ஒரு மசோதா இவருக்கு பிடிக்கவில்லையானால் அந்த மசோதாவை மறுபடியும் விவாதிக்கும்படி கோரி அந்த சபைகளுக்கு இவர் அனுப்பலாம். அந்த சபைகள் மசோதாவை மறுபடியும் நிறைவேற்றினால் இவர் கையெழுத்துப் போட்டு சட்டமாக அமுலுக்கு கொண்டுவந்து விடவேண்டும். கீழ்

* இந்த புத்தகத்தில் பிரெஞ்சு அரசியலைப்பற்றி குறிப்பிடுவதெல்லாம் இப்போது தயாராகும் அரசியலைப்பற்றியல்ல. 1940க்கு முன் இருந்த அரசியலையே குறிப்பிடுகிறோம்.

சபையைக் கலைப்பதற்கு இவருக்கு அதிகாரம் உண்டு. ஆனால் மேல் சபையின் சம்மதத்தைப் பெற்றுத்தான் அவர் இந்த அதிகாரத்தை உபயோகிக்கலாம். ராஜ்யத்தின் நிர்வாக அதிகாரம் முழுவதும் அவர் கையிலிருப்பதாகத்தான் சம்பிரதாயம். ஆனால் அவர் எந்த உத்தரவு போட்டாலும் அதற்கு ஒரு மந்திரியின் கையெழுத்தைப் பெற வேண்டும். பழைய ராஜ வம்சத்தைச் சேர்ந்த எவரும் ஜனாதிபதியாகத் தெரிந்தெடுக்கப்படக் கூடாது.

## அயர்லாந்து

அயர்லாந்தில் குடியரசின் அதிபதி ஜனங்களால் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவர் 7 வருஷ காலம் பதவி வகிப்பார். இப்பதவிக்கு அபேட்சகராக நிற்பவருக்கு 35 வயதாகி யிருக்கவேண்டும். சட்ட சபையில் அங்கம் வகிக்கும் 20 மெம்பர்கள் பிரேரித்தால் தான் ஒருவர் இப்பதவிக்கு அபேட்சகராக நிற்க முடியும். இதுவுமின்றி 4 ஸ்தல ஸ்தாபனங்களாவது அவரை அபேட்சகராக சிபார்சு செய்தால்தான் அவர் தேர்தலுக்கு நிற்க முடியும். பிரதம மந்திரியை நியமிப்பது போன்ற ராஜாங்க அதிகாரங்களுக்கெல்லாம் அவரே உறைவிடம்.

பிரிட்டிஷ் மன்னரைப் போல இவர் எந்தக் காரியத்திலும் மந்திரிசபையின் ஆலோசனைப்படியே தமது அதிகாரங்களை உபயோகிக்கவேண்டும்.

## அரசியலமைப்பை திருத்துவது

அரசியலமைப்பை மாற்றுவதற்கு ஒவ்வொரு தேசத்திலும் சில விசேஷ நடை முறைகளை நிர்ணயித்திருக்கிறார்கள். பிரிட்டனில் அரசியலமைப்புச் சட்டத்துக்கும், மற்ற சட்டங்களுக்கும் வித்தியாசம் கிடையாது. ஜனங்களும், ராணுவமும் புரட்சி செய்யாது என்ற நம்பிக்கை இருந்தால், பிரிட்டனில் பார்லிமெண்டின் ஆதரவுடன்

மந்திரி சபை என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஆகையால் பிரிட்டனின் உதாரணத்தை ஒரு பொது விதியாகக் கொள்ள முடியாது.

அமெரிக்காவில் அரசியலமைப்பைத் திருத்துவதற்கு என்ன முறையை அனுஷ்டிக்க வேண்டுமென்பது அரசியலமைப்பிலேயே கூறப்பட்டுள்ளது. அரசியலமைப்பைத் திருத்தும் எந்த பிரேரணையும், பிரதிநிதி சபையிலும் செனேட் சபையிலும், மூன்றில் இரண்டு பங்கு மெம்பர்கள் மெஜாரிட்டி ஆதரவைப் பெறவேண்டும். அந்த மெஜாரிட்டியுடன் திருத்தம் நிறைவேற்றப்பட்ட பிறகு அந்த திருத்தம் மாகாண சட்ட சபைகளுக்கு அனுப்பப் படவேண்டும். 48 மாகாணங்களில் 36 மாகாணங்கள் அந்த திருத்தத்தை ஆதரித்தால்தான், அரசியலமைப்பு திருத்தப்படும்.

தென்னுப்பிரிக்காவில் அரசியலமைப்பின் சில ஷரத்துக்களை திருத்துவதாயின், நாட்டின் பார்லிமெண்டில் இரண்டு சபைகளும் ஒப்புக்கொண்ட பிறகு இரண்டு சபைகளும், ஒன்ருகக் கூடி மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டி ஆதரவுடன் அதை நிறைவேற்ற வேண்டும்.

ஆஸ்திரேலியாவில் மத்ய சர்க்காரின் இரண்டு சட்ட சபைகளிலும், அரசியலமைப்பு பற்றிய திருத்தத்தை நிறைவேற்றிய பிறகு, அது ஒவ்வொரு மாகாணத்திலும் பொதுஜன வோட்டுக்கு விடப்படும். தேசம் முழுவதிலுமுள்ள வோட்டர்களின் மெஜாரிட்டி ஆதரவும், பெரும்பான்மையான மாகாணங்களில் உள்ள வோட்டர்களின் மெஜாரிட்டி ஆதரவும் வேண்டும். உதாரணமாக, ஆஸ்திரேலியாவில் உள்ள 6 மாகாணங்களில் வோட்டெடுத்ததில் மொத்தத்தில் மெஜாரிட்டி கிடைத்தால் மட்டும் போதாது. மாகாண வாரியாகக் கவனித்து 4 மாகாணங்களின் மெஜாரிட்டி இருக்கிறதா என்று பார்க்கவேண்டும்.

ஸ்விட்ஜர்லாந்தில் சாதாரண சட்டத்துக்குக் கூட 30,000 பேர் கோரினால், சர்வஜன வோட்டெடுக்கவேண்டு மென்ற நிபந்தனை யிருப்பதால், அரசியலமைப்பு சட்டத்தை திருத்துவதற்கென்று தனி ஏற்பாடில்லை.

பிரான்ஸில் அரசியலமைப்பை திருத்துவதென்றால், பார்லிமெண்டின் இரண்டு சபைகளும், ஒரே கூட்டமாகக் கூடவேண்டும். சபையில் ஆஜரான மெம்பர்களின் மெஜாரிட்டிமட்டும் போதாது. மொத்த மெம்பர்களின் மெஜாரிட்டி மெம்பர்களது ஆதரவு இருந்தால்தான், அரசியலமைப்பைத் திருத்த முடியும்.

ஆனால் "எந்த திருத்தமும் பிரான்ஸில் முடியாட்சியை ஏற்படுத்துவதாக இருக்கக்கூடாது" என்று ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது பிரான்ஸ் சதாகாலமும் குடியரசாகத்தான் இருக்க வேண்டும்.

இத்தாலியில் அரசியலமைப்பை மாற்றுவதற்கு எவ்வித நிபந்தனையும் கிடையாது. சாதாரணமாக சட்டமியற்றுவது போலவே அரசியல் அமைப்புச் சட்டத்தையும் மாற்றிவிடலாம்.

1848-ம் வருஷத்தில் இத்தாலிய மன்னர் வெளியிட்ட அரசியலமைப்பு சாஸனத்தில், அரசியலைத் திருத்துவது பற்றி எவ்வித ஷரத்தும் இல்லை. ஆகையால் அரசியலைத் திருத்துவதற்கு எவ்வித நிபந்தனையும் கிடையாது என்று வியாக்கியானம் செய்யப்பட்டது. இந்தவசதி இருந்ததால்தான் முஸோலினி தேர்தல் தொகுதிகளையும், வோட்டுரிமையையும் மாற்றியமைத்து, இத்தாலிய ஜனநாயக அரசியலை பாஸிஸ்ட் சர்வாதிகார அரசியலாக மாற்றிவிட முடிந்தது.

## விஷயப் பிரிவினை

சமஷ்டி முறையில் மத்ய சர்க்காரின் ஆதிக்கத்தில் உள்ள விஷயங்கள், மாகாண சர்க்காரின் ஆதிக்கத்தில் உள்ள விஷயங்கள் இரண்டும் தெளிவாகப் பிரிக்கப்பட்டிருக்கும் என்பதை ஏற்கனவே கூறியுள்ளோம்.

தூது கோஷ்டி சிபார்சு செய்துள்ள அகில இந்திய யூனியனில் யுத்த பாதுகாப்பு, வெளிநாட்டுறவு, போக்கு வரத்து ஆகிய மூன்றும் மட்டுமே "யூனியன் விஷய"ங்களாக சிபார்சு செய்யப்பட்டிருக்கின்றன. மற்ற சமஷ்டிகளில் என்ன செய்திருக்கிறார்கள் என்பதை கவனிப்போம்.

## ஆஸ்திரேலியா

ஆஸ்திரேலியாவின் சமஷ்டிப் பார்லிமெண்டு பின்வரும் விஷயங்களில் சட்ட மியற்றலாம் என்று ஒரு ஜாப்தா தரப்பட்டிருக்கிறது. ஜாப்தாவில் உள்ள முக்கிய இனங்கள் பின்வருமாறு :—

(1) வெளி நாட்டு வர்த்தகமும், மாகாணங்களிடையே நடக்கும் வர்த்தகமும்.

(2) மாகாணத்துக்கு மாகாணம் தாரதம்மியம் காட்டாத வரி விதிப்பு.

(3) பொருள் உற்பத்திக்கும் ஏற்றுமதிக்கும் எல்லா மாகாணங்களிலும் ஒரே மாதிரியான முறையில் மான்யம் கொடுத்து உதவுவது.

(4) தபால், தந்தி, டெலிபோன் முதலியன.

(5) கடற் படை, ராணுவம்.

(6) மாகாண பாங்கிகள் தவிர மற்ற பாங்கித் தொழில்; மாகாண பாங்கிகள் தம் மாகாண எல்லைக்கு அப்பாலும் தொழில் நடத்தினால், அவற்றைப் பற்றியும் சட்டம் இயற்றலாம்.

(7) செலாவணி நோட்டுகள் வெளியிடுவது.

(8) இன்ஷியூரன்ஸ் தொழில்.

(9) பிராமஸரி நோட்டுகள் பற்றிய சட்டங்கள்.

(10) வெளி நாட்டுக் கம்பெனிகள்; உள் நாட்டுக் கம்பெனிகள்.

(11) ராணுவக் காரியங்களுக்காக ரயில் போக்குவரத்தின் மீது ஆதிக்கம் ஏற்படுத்திக் கொள்ளுதல்; மாகாணங்களுக்குச் சொந்தமான ரயில் வேக்களை, விலைகொடுத்து வாங்கிக் கொள்ளு

தல்; எந்த மாகாணத்திலும் அதன் சம்மதம் பெற்று ரயில்வேக்கள் அமைத்தலும், விஸ்தரித்தலும்.

### ஸ்விட்ஜர்லாந்து

ஸ்விட்ஜர்லாந்தின் அரசியலமைப்பில் விஷய ஜாப்தா என்று தனியாகக் கொடுக்கப்படவில்லை. ஒவ்வொரு அதிகாரமும் தனி ஷரத்தின்மூலம் குறிப்பிடப்படுகிறது. அந்த ஷரத்துகளின்படி பின்வரும் உரிமைகள் அந்த தேசத்தில் மத்ய சர்க்காரிடம் இருக்கிறது.

(1) வெளி நாடுகளுடன் வர்த்தகம் பற்றியும், யுத்தம் சமாதானம் பற்றியும் உடன்படிக்கை செய்து கொள்ளுதல்.

(2) ராணுவம்; அதற்கான வசதிகள்.

(3) ஸ்விட்ஜர்லாந்து முழுவதற்கும் பொதுவான கட்டிட வேலைகள் (மராமத்திலாகா)

(4) காடுகளின் பாதுகாப்பு.

(5) நீர்வீழ்ச்சி மின்சாரம்.

(6) ரயில்வேக்கள்.

(7) சுங்க வரிகள்; ஏற்றுமதி, இறக்குமதி வரிகள்.

(8) தொழிற் சாலைகளில் வேலை செய்யும் சிறுவர் சம்பந்தமான சட்டம்.

(9) இன்ஷியூரன்ஸ்.

(10) தபால், தந்தி, ரோடுகள், பாலங்கள்.

(11) நாணயம், நோட்டு செலாவணி வெளியிடுதல்.

(12) வெடி மருந்து உற்பத்தியில் ஏகபோக உரிமை.

### அமெரிக்கா

அமெரிக்க அரசியலமைப்பில் சமஷ்டிப் பார்லிமெண்டுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் பின்வருமாறு:—

(1) அமெரிக்க ஐக்கிய நாடுகளின் க்ஷேமத்துக்காகவும், தற்காப்புக்காகவும் கடன்களைத் தீர்ப்பதற்காகவும் வரிகள், கட்டணங்கள் விதிக்க

அதிகாரம் தரப்படுகிறது. இந்த வரிகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் எல்லா பகுதிகளிலும் ஒரே மாதிரியாக இருக்கவேண்டும்.

(2) கடன் வாங்குவதற்கு அதிகாரம்.

(3) வெளி நாட்டு வர்த்தகம், அமெரிக்காவுக்குள்ளேயே மாகாணத்துக்கு மாகாணம் நடக்கும் வர்த்தகம், இவற்றை ஒழுங்கு படுத்தும் அதிகாரம்.

(4) தபாலாபீஸ்கள் ஏற்படுத்தல் [அரசியலமைப்பு தயாரித்த காலத்தில் அமெரிக்காவில் தந்தி ஏற்பட்டாகவில்லை. ஆதலால் இது இந்த ஜாபிதாவில் சேர்க்கப்படவில்லை. இப்போதும் கூட அமெரிக்காவில் தந்தி, சர்க்கார் ஆதிக்கத்தில் இல்லாமல் தனிப்பட்டவரால் நடத்தப்படும் கம்பெனிகள் மூலமே நடக்கிறது.]

(5) நாணயம், நோட்டு வெளியிடுதல்

(6) ராணுவம், கடற்படை

சமஷ்டி பார்லிமெண்டின் அதிகாரங்களை இவ்வாறு விவரித்திருப்பது மட்டுமல்லாமல் என்னென்ன காரியங்களை அந்த பார்லிமெண்டு செய்யக்கூடாதென்றும் அந்த சட்டத்தில் சொல்லி யிருக்கிறார்கள். பிறகு மாகாணங்கள் என்னென்ன விஷயங்களில் சட்டமியற்றக் கூடாது என்றும் ஒரு ஜாபிதா இருக்கிறது.

எந்த மாகாணமும் தனியாக ஏற்றுமதிகள், இறக்குமதிகள் மீது சமஷ்டி சர்க்காரின் சம்மதமில்லாமல் வரி விதிக்கக் கூடாது. எந்த மாகாணமும் தனியாக நாணயங்களோ செலாவணியோ வெளியிடக்கூடாது.

## இந்தியாவில்

1935 ஆம் வருஷத்திய சமஷ்டித் திட்டப்படி இந்தியாவில் மத்ய சர்க்காரின் ஆதிக்கத்தில் விடப்பட்ட விஷயங்கள் :—

(1) ராணுவம், கடற்படை, விமானப் படை.

(2) வெளி நாட்டுறவு.

(3) நாணயம், செலாவணி.

(4) கடன் வாங்குதல்.

(5) தபால், தந்தி, டெலிபோன், ரேடியோ, சமஷ்டி ரயில்வேக்கள், மற்ற ரயில்வேக்களை ஒழுங்கு படுத்துதல், கப்பல் போக்கு வரவு.

(4) ஏற்றுமதி, இறக்குமதி வரிகள்.

(5) துறைமுகங்கள்.

(6) பிராமிஸரி நோட்டுகள், பாங்கு செக்குகள்

(7) வெடி மருந்து, ஆயுத உற்பத்தி

(8) இந்தியா முழுவதுக்கும் பொதுவான ஒழுங்கு முறைகள் இருப்பதே நலமென்று எந்தக் கைத் தொழில்கள் விஷயத்தில்சமஷ்டி சட்டசபை தீர் மானிக்கிறதோ அந்த தொழில்களின் வளர்ச்சி.

(9) ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்களில் வர்த் தகம் நடத்தும் கம்பெனிகள், பாங்கிகள், இன் ஷியூரன்ஸ்

(10) வருமான வரி, உப்பு வரி, கம்பெனி வரி, முதலியன.

மேலே சொல்லப்பட்ட உதாரணங்களில் ஆஸ்தி ரேலியா, ஸ்விட்ஜர்லாந்து, அமெரிக்கா ஆகிய மூன்றும் சமஷ்டிகளே. ஸ்விட்ஜர்லாந்தை சம்மேளனம் என்று கூட வர்ணிப்பதுண்டு. அந்த சம்மேளனத்தில் கூட (1) நாணயம், செலாவணி (2) வெளிநாட்டு ஏற்றுமதி, இறக்குமதி (3) உள்நாட்டில் மாகாணத்துக்கு மாகாணம் நடக்கும் வர்த்தகம், கம்பெனிகள், பாங்கிகள், இன்ஷியூ ரன்ஸ் ஆகியவை மத்திய சர்க்காரிடமே விடப்பட் டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## சமஷ்டி சர்க்காரின் வருமானத் துறைகள்

தூதுகோஷ்டியின் திட்டப்படி மத்திய சர்க்காரில் விடப்படும் மூன்று விஷயங்களில் ''போக்கு வரத்து சாத னங்கள்' என்ற ஒரு இனத்தில்தான் நிகர வருமானம் எதிர்

பார்க்க முடியும். அதில் கிடைக்கும் வருமானத்தைகொண்டு தற்காப்பு வெளிநாட்டு உறவு ஆகிய இரண்டையும் நிர்வகிப்பது சாத்தியமே இல்லை. ரயில்வேக்களில் போடப் பட்டுள்ள மூலதனம் சுமார் 800 கோடி ரூபாய். இதை எவ்வளவு லாபகரமாக நிர்வகித்தாலும் சுமார் 10 கோடி ரூபாய்க்குமேல் வருமானம் கிடைத்துவிடாது. திறமை யான ராணுவம், கடற்படை, வெளிநாடுகளில் ஸ்தானீக ராலயங்கள் முதலியவற்றுடன் சுதந்திர இந்தியா சிறப் பாக விளங்க வேண்டுமாயின் வருஷா வருஷம் சுமார் 200 கோடி ரூபாய்க்கு மேலேகூட வேண்டியிருக்கலாம். இந்த பணத்துக்கு என்ன செய்வதென்பது முக்கியமான பிரச்னை. வருமான வரி, உப்பு வரி, ஏற்றுமதி, இறக்கு மதி சுங்க வரிகள் முதலியவற்றின் மூலம்தான் இப்போது மத்ய சர்க்கார் நடந்து வருகிறது.

புதிய அரசியலமைப்பில் வெளிநாட்டு வர்த்தக இலாகா சமஷ்டியில் இல்லையானல் சமஷ்டி சர்க்காருக்கு முக்கியமான ஒரு வருமான இனம் இல்லாது போய்விடும். தற்காலம் மத்ய சர்க்காரின் பொக்கிஷத்தில் பாதிப் பாகம் சுங்கவரிகளால்தான் நிரப்பப்படுகிறது. ஆகையால் நிதிப் பிரச்னையாகக் கவனித்தாலும் ஏற்றுமதி இறக்கு மதி சுங்க வரிகளை மத்ய சார்க்காரின் ஆதிக்கத்தில் விடுவதுதான் மிகவும் பொருத்தமாக இருக்கும்.

மத்ய சர்க்கார் தன் சொந்த உரிமையிலேயே வரி விதித்து தன் செலவுகளை நிர்வகித்துக் கொள்ளக்கூடிய உரிமைகள் இருந்தாலொழிய அந்த சர்க்காரை நம்பி, யாரும் கடன் கொடுக்கமாட்டார்கள்.

நோட்டு செலாவணி வெளியிடும் உரிமையும், ரிஸர்வ் பாங்கும், சமஷ்டி சர்க்காரின் ஆதிக்கத்தில் இல்லா விட்டால் யுத்த காலத்தில் ஏற்படக்கூடிய ராணுவச் செலவுக்கு அவசரமாக வழி தேடுவது மிகவும் சிரமமாக இருக்கும்.

அதனால்தான் நாம் மேலே பிரஸ்தாபித்த எல்லா சமஷ்டிகளிலும், செலாவணி உரிமையும், சுங்க உரிமையும் சமஷ்டி சர்க்காரிடம் வைக்கப்பட்டிருக்கின்றன.

## அடுத்த அத்தியாயத்தில்

நிர்வாகம், சட்டசபையமைப்பு, ராஜாங்க அதிபதி, விஷயப்பிரிவினை, சமஷ்டி பொக்கிஷம் முதலியவை பற்றி பிறநாடுகளில் உள்ள நிலைமைகள் சம்பந்தமாக சில உதாரணங்களை இந்த அத்தியாயத்தில் கூறினோம்.

இந்தியா விஷயத்தில் வேறு சில பிரச்னைகளையும் கவனிக்கவேண்டும். இந்த புத்தகத்தின் கடைசி அத்தியாயமான அடுத்த அத்தியாயம் இந்தியாவின் சில விசேஷ பிரச்னைகளை பிரஸ்தாபிப்பதோடு இந்த புத்தகத்தின் முடிவுரையாகவும் அமையும்.

---

## பதினெட்டாவது அத்தியாயம்

# எதிர்கால முறை என்ன?


இந்திய அரசியல் நிர்ணய சபை முடிவு செய்யவேண்டிய பிரச்னைகளின் தன்மை என்ன என்பதை முந்திய அத்தியாயங்களிலிருந்து ஒருவாறு ஊகித்துக்கொள்ளலாம்.

இப் புத்தகத்தில் நாம் உதாரணமாக எடுத்துக் கொண்ட பல தேசங்களுள் அமெரிக்கா, ஸ்விட்ஜர்லாந்து, ஆஸ்திரேலியா, இம்மூன்றிலும் இருப்பது சமஷ்டி. அந்த சமஷ்டியமைப்பை தயாரித்த அரசியல் நிர்ணய சபைகள், சமஷ்டியில் சேர்ந்த மாகாணங்களின் அல்லது "நாடுகளின்" அரசியலமைப்பைத் தயாரிக்கவில்லை. இந்தியாவிலோ இப்பொழுது கூடும் அரசியல் நிர்ணய சபை மூன்று பிரிவுகளாகப் பிரிந்து, அந்தந்த பிரிவினர் மூலம் மூன்று தொகுதி வட்ட அரசியல்களையும், அந்த தொகுதி வட்டங்களில் உள்ள மாகாணங்களின் அரசியலையும் தயாரிக்கப் போகின்றது. நாம் எடுத்துக்கொண்ட


உதாரணங்களில் "விஷயப் பிரிவினை" சம்பந்தமாக மத்ய சர்க்கார் விஷயம், மாகாண சர்க்கார் விஷயம் என்ற இரண்டு விஷயங்கள் தான் இருந்தன. இந்தியாவில் மத்ய விஷயம், மாகாண விஷயம் என்று இரண்டாகப் பிரித்தபின்னர், மாகாண விஷயங்களைத் தனியாக எடுத்துக்கொண்டு அவற்றையும் இரண்டு பிரிவாகப் பிரிக்க வேண்டியிருக்கும். அதாவது மாகாண விஷயங்கள், தொகுதிவட்ட விஷயங்கள் என்று பிரிக்கவேண்டியிருக்கும்.

## தொகுதி வட்ட சர்க்காரின் அந்தஸ்து

மத்ய சர்க்கார், மாகாண சர்க்கார், தொகுதிவட்ட சர்க்கார் என்று மூன்று ரகமான சர்க்கார்கள் தூதத்



திட்டத்தின்படி ஏற்படும். இந்த மூன்று சர்க்கார்களிடையே உள்ள பரஸ்பர உறவு சம்பந்தமாக, என்ன முறையை அனுஷ்டிப்பது என்பதையும் அரசியல் நிர்ணய சபை கவனிக்கவேண்டியிருக்கும். (1) மகாணங்கள் தனித்தனியாக மத்ய சர்க்காரை நேரில் அணுகலாமா? அல்லது தொகுதி வட்ட சர்க்கார் மூலம்தான் அணுக வேண்டுமா? அதாவது தொகுதி வட்ட சர்க்கார் என்பது மாகாணங்களுக்கும், மத்ய சர்க்காருக்கும் இடையே உள்ள ஒரு இணைப்பு ஸ்தாபனமா? அல்லது (2) மத்ய சர்க்கார் சம்பந்தப்பட்ட மட்டில் தொகுதிவட்ட சர்க்கார்களுடன் எந்த உறவும் கிடையாது; மத்திய சர்க்காருக்கும், மாகாணத்துக்கும்தான் நேரடியான தொடர்பு; தொகுதிவட்ட சர்க்கார் என்பது மாகாணங்கள் தம்மிடையே ஏற்படுத்திக்கொள்ளும் ஒரு தனி கூட்டுறவு; என்று ஏற்படுமா? (3) அப்படியானால் அரசியலமைப்புத் தயாரிக்கப்பட்ட பின்னர் (தூது கோஷ்டி அறிக்கையின் 19-வது பாரா 8-வது ஷரத்தின்படி) தொகுதி வட்டத்திலிருந்து பிரிந்து போகும் மாகாணம் மத்ய சர்க்காரிடம்



நேர்முகமாக உறவு வைத்துக்கொள்ளலாம் என்று ஏற்படும். தொகுதி வட்ட சர்க்கார்களும், மாகாணங்களும் தம்மிடையே பங்கிட்டு நிர்வகிப்பனவாக எத்தனை "விஷயங்கள்" இருக்கின்றனவோ அத்தனை விஷயங்களையும் எந்த மாகாணமும் தனித்து நின்று நிர்வகிக்க முடியுமா? (4) அவ்வாறு பிரிந்துபோகும் மாகாணத்தின் அரசியலை யார் நிர்ணயிப்பது? என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.

## புது மாகாணங்கள் ஏற்படுத்துவது

ஸ்விட்ஜர்லாந்தில், சமஷ்டியில் சேர்ந்துள்ள பல ஜில்லாக்களின் அரசியலமைப்பை சமஷ்டி சர்க்கார் பாதுகாத்துத் தர உத்தரவாதமளிக்கிறது. அமெரிக்காவில் எந்த மாகாணமும் இரண்டு அல்லது மூன்று துண்டுகளாக பிரிக்கப்படலாகாது என்று சமஷ்டி அரசியலமைப்பிலேயே ஒரு ஷரத்து இருக்கிறது. இந்தியாவிலும் அதே போல மாகாண எல்லைகளுக்கு சமஷ்டி சர்க்கார் உத்தரவாதமளித்தால் ஆந்திரா, தமிழ் என்று புது மாகாணங்கள் ஏற்படுத்துவதையும் இப்பொழுதே முடிவு செய்ய வேண்டியிருக்கும்.

ஏனென்றால் மாகாண எல்லைகளுக்கு உத்தரவாதமளிக்கும் ஷரத்து சமஷ்டியரசியலமைப்பில் ஏறிய பின்னர் எந்த மாகாண எல்லையையும் மாற்றவோ, பிரிக்கவோ முடியாமல் போய்விடும்.

சமஷ்டி சர்க்கார்களின் மேல்சபைகளில் எல்லா மாகாணங்களுக்கும் சமமான பிரதிநிதித்துவம் வழங்குவது வழக்கம் என்று முந்தின அத்தியாயத்தில் சொல்லியிருக்கிறோம். அதே முறையை இந்திய யூனியன் விஷயத்தில் பின்பற்றி மேல்சபையை அமைப்பதாயின் இந்த மாகாண பிரிவினை விஷயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். உதாரணமாக, யூனியன் மேல் சபையில் ஒவ்வொரு மாகாணத்துக்கும் 10 ஸ்தானங்கள் கொடுப்பதாக வைத்துக் கொள்வோம். இப்போதுள்ள மாகாணங்களை அப்படியே வைத்துக்கொண்டால் 'ஏ' தொகுதி

வட்டத்துக்கு (பிரதான ஹிந்துஸ்தான் தொகுதி வட்டத்துக்கு) 60 ஸ்தானங்களும், "பி" தொகுதி வட்டத்துக்கு (பஞ்சாப் தொகுதி வட்டத்துக்கு) 40 ஸ்தானங்களும், "ஸி" தொகுதி (வங்க-அஸ்ஸாம்) வட்டத்துக்கு 20 ஸ்தானங்களும் இருக்கும். மாகாணங்களை இப்படியே வைத்துக்கொள்ளாமல் பாஷாவாரி மாகாணங்களாகப் பிரித்தால் பிரதான ஹிந்துஸ்தான் தொகுதி வட்டத்தில் பிஹார், ஒரிஸ்ஸா, ஐக்கியமாகாணம், மகா கோசலம் (மத்யமாகாணம்) மகாராஷ்டிரம், குஜராத், மலையாளம், தமிழ்நாடு, கர்நாடகம், தெலுங்கு என் 9 மாகாணங்கள் ஏற்படும். அப்பொழுது அந்த தொகுதி வட்டத்துக்கு 90 ஸ்தானங்கள் கிடைக்கும். இது தொகுதி வட்ட அரசியல் நிர்ணய சபைகளின் முன்னுள்ள பெரிய பிரச்னைகளில் ஒன்ருக இருக்கும்.

## நிர்வாக அமைப்பு

மத்ய சர்க்காரில் நிர்வாகம் பார்லிமெண்டரி நிர்வாகமாக இருக்கவேண்டுமா (Parliamentary Executive), அல்லது நிரந்தர நிர்வாகசபை முறையாக இருக்க வேண்டுமா (Irremovable Executive) என்பது கவனிக்கப் படவேண்டிய மற்ருெரு முக்கியமான பிரச்னை. மாகாணங்களை ஜாதிவாரியாகவும், பாஷைவாரியாகவும் பிரித்து விடுவதால் மாகாண சர்க்கார்களில் பார்லிமெண்டரி நிர்வாக முறை இருக்கலாம். ஆனுல் பஞ்சாப் தொகுதி வட்டத்திலும், வங்காள தொகுதி வட்டத்திலும் முஸ்லிமல்லாதாரும், முஸ்லிம்களும், முறையே பெரிய மைனுரிட்டியாகவும், சிறிய மெஜாரிட்டியாகவும் இருக்கிருர்கள். அங்குள்ள மைனுரிட்டிகள் நிர்வாக சபையில் தமக்கு சட்ட பூர்வமான பங்கு வேண்டுமென்று கோரக்கூடும். ஆகையால் அங்கு நிரந்தர நிர்வாக சபையே இருக்க வேண்டுமென்று மைனுரிட்டிகள் வற்புறுத்தக் கூடும். சமஷ்டியிலும் நிரந்தர நிர்வாக முறையே வேண்டுமென்று நிச்சயிப்பதாக இருக்கலாம். அப்போது அமெரிக்காவிலுள்ள முறையை பின்பற்றுவதா அல்லது ஸ்விட்ஜர்லாந்தில் உள்ள முறையை பின்பற்றுவதா என்ற பிரச்னை

எழும். அமெரிக்காவில் உள்ள முறையை பின்பற்றிஞல் ஒரு தடவை முஸ்லிம் ஒருவர் ஜஞதிபதியாகவும், அடுத்த தடவை ஹிந்து ஒருவர் ஜஞதிபதியாகவும் மாறி மாறி வரும்படி செய்யலாம்.

ஸ்விட்ஜர்லாந்து முறையைப் பின்பற்றுவதாஞல் நிர்வாகசபை அமைப்பதில் மாகாண வாரியாக நிர்வாக சபை மெம்பர்களை பொறுக்கலாம். அப்போது நிர்வாக சபையில் வகுப்பு வீதாசார பிரச்னையும் ஏற்படும்.

ஸ்விட்ஜர்லாந்தில் 22 சுதந்திர ஜில்லாக்கள் இருக்கின்றன. அந்த தேசத்தின் நிர்வாக சபையில் 7 மெம்பர்கள் இருப்பதாக ஏற்கனவே கூறியுள்ளோம். அந்த 7 பேரில் ஒவ்வொருவரும் வெவ்வேறு ஜில்லாவைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். ஒரே ஜில்லாவைச் சேர்ந்தவர்களாக இரண்டு பேரை பொறுக்க முடியாது. இதேபோல இந்திய நிர்வாக சபையிலும், எல்லா முக்கியமான மாகாணங்களுக்கும் பிரதிநிதித்துவம் இருக்கும்படி செய்யலாம். அவ்வாறின்றி நிர்வாக சபையில் ஜாதி வாரியாக வீதாசாரம் ஏற்படுத்தும்படி சட்டத்தில் ஷரத்துக்களைச் சேர்ப்பது விரும்பத்தக்கதல்ல. ஆஞல் சம்பிரதாயத்தின் மூலம் வகுப்பு அபிலாஷைகளை திருப்தி செய்ய ஏதாவது ஏற்பாடு செய்யலாம்.

மத்ய நிர்வாக சபையின் அமைப்பைப் பற்றி 1944-ம் வருஷத்தில் சப்ரு கமிட்டியார் வெளியிட்ட சிபார்சுகளில் ஹிந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் சட்டசபையில் என்ன வீதாசாரத்தில் பிரதிநிதித்துவம் இருக்கிறதோ, அதே முறையில் நிர்வாக சபையிலும் இருக்கலாமென்று கூறியிருக்கிருர்கள். பிரதம மந்திரி, உதவி பிரதம மந்திரி ஆகிய இருவரும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடாதென்றும், அவர்கள் கூறியிருக்கிருர்கள். ஆஞல் அவர்கள் சிபார்சு செய்தது "நிரந்தர நிர்வாக சபை" அல்ல; "பார்லிமெண்டரி நிர்வாக சபை"யே என்பது குறிப்பிடத்தக்கது.

எப்படியானாலும் நிர்வாக சபையின் அமைப்பு, சட்ட மன்றத்தின் அமைப்பை போன்றதாகவே இருக்கும். உண்மையில் அரசியலமைப்பின் தன்மை முழுவதுமே சட்டசபை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது என்பதை பொறுத்ததாக இருக்கும். சட்டசபையை எவ்வாறு அமைக்கிறதென்பதில் ஒற்றுமை ஏற்பட்டுவிட்டால், பிறகு எல்லா பிரச்னைகளும் தீர்ந்துவிட்டது போலத் தான்.

## சட்டசபை பிரதிநிதித்துவம்

மத்ய சர்க்காருக்கு சட்டசபையே வேண்டாமென்று ஸிம்லா சம்பாஷணையின்போது ஜனுப் ஜின்னு கூறி வந்தார். ஆனால் சட்டசபை இருக்கவேண்டியதுதான் என்று தூதுகோஷ்டி சிபார்சு செய்திருக்கிறது. வகுப்புப் பிரச்னைக்கு சம்பந்தமுள்ள எந்த பிரேரணையானலும், ஹிந்து அங்கத்தினர்களின் பெரும்பாலோரது சம்மதமும் முஸ்லிம் அங்கத்தினர்களின் பெரும்பாலோரது சம்மதமும், இருந்தால்தான் நிறைவேற்றலாம் என்று தூது கோஷ்டி சிபார்சு செய்திருக்கிறது. உதாரணமாக சட்ட சபையில் 100-ல் 25 ஸ்தானங்கள்தான் முஸ்லிம்களுக்கு இருப்பதாக வைத்துக்கொள்வோம். அப்போதும் வகுப் புப் பிரச்னைக்கு சம்பந்தமுள்ள பிரேரணையை 13 முஸ் லிம்கள் எதிர்த்தால் போதும். ஹிந்துக்கள் கொண்டு வந்த பிரேரணை நிறைவேருது.

இவ்வாறு ஒரு ஏற்பாடு இருக்குமாயின் மத்ய சட்ட சபையில் முஸ்லிம்களுக்கு ஸ்தானம் குறைவாக இருப் பதைப் பற்றி அவர்கள் கவலைகொள்ள இடமில்லை. ஆகவே, சட்டசபையில் ஹிந்து, முஸ்லிம் முதலிய வகுப் புக்களுக்கு கொடுக்கப்படும் ஸ்தானம் அவர்களது ஜனத் தொகை வீதாசாரப்படியே இருப்பதுதான் நியாயம். இதற்கு அரசியல் நிர்ணய சபையில் முஸ்லிம்கள் உடன் படுவார்கள் என்று நாம் எதிர்பார்க்கலாம். ஆனால் சட்ட சபைக்கு அனுப்பப்படும் முஸ்லிம் மெம்பர்கள் தனித்

தொகுதி மூலம் வரவேண்டுமா? பொதுத் தொகுதி மூலம் வரவேண்டுமா என்பதுதான் மிகவும் சர்ச்சைக்கு இடமளிக்கக்கூடிய விஷயம்.

ஜனத்தொகை விதாசாரப்படி சட்டசபையில் முஸ்லிம்களுக்கு ஸ்தானங்களை ஒதுக்கி, தேர்தலை கூட்டுத் தொகுதி மூலம் நடத்துவதுதான் அரசியல் உணர்ச்சி வளருவதற்கு சரியான முறையாகும். 1928-ம் வருஷத்தில் நேரு கமிட்டி விவாதத்தின்போது, இந்தக் கூட்டுத் தொகுதி முறைக்கு ஜனுப் ஜின்னு இணங்கி யிருக்கிரு ரென்பதை 32-வது பக்கத்தில் சொல்லி யிருக்கிறோம்.

இவ்வாறு கூட்டுத் தொகுதியை வைத்தால், அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் முஸ்லிமானவர் முஸ்லிம்களின் உண்மையான பிரதிநிதியாக இல்லாமல், அந்தத் தொகுதியில் உள்ள ஹிந்துக்களின் "கையாளாக"வே இருந்து விடுவார் என்ற பீதியால் சில முஸ்லிம்கள் கூட்டுத் தொகுதியை எதிர்க்கிறார்கள். இந்த பீதியை நீக்குவது அவசியம். உதாரணமாக 5000 ஹிந்துக்களும், 3000 முஸ்லிம்களும் உள்ள ஒரு தொகுதியை எடுத்துக் கொள்வோம். அந்தத் தொகுதியில் ஒரு முஸ்லிம் ஸ்தானத்துக்கு ஜனுப் அப்துல்லா என்ற அபேக்ஷகரும், ஜனுப் இஸ்மாயில் என்ற அபேட்சகரும் நிற்பதாக வைத்துக் கொள்வோம். ஜனுப் அப்துல்லாவுக்கு 3500 ஹிந்து வோட்டுகளும், 200 முஸ்லிம் வோட்டுக்களுமாக 3700 வோட்டுகள் கிடைப்பதாகவும், ஜனுப் இஸ்மாயிலுக்கு 2700 முஸ்லிம் வோட்டுகளும் 500 ஹிந்து வோட்டுகளுமாக 3200 வோட்டுக்கள் கிடைப்பதாகவும் வைத்துக் கொள்வோம். இவ்விருவரில் ஜனுப் அப்துல்லாவுக்கே அதிகமான வோட்டுக்கள் கிடைத்ததால் அவரே தேர்ந்தெடுக்கப்பட்டதாகக் கருதப்படுவார். ஆனால் அவரை முஸ்லிம்களின் பிரதிநிதியாக எவ்வாறு கருத முடியும் என்பதுதான் இந்த முறைக்குள்ள ஆட்சேபம்.

இந்த ஆட்சேபத்தை தீர்ப்பதற்குப் பலவிதமான பரிகாரங்கள் கண்டுபிடிக்கலாம். உதாரணமாக ஒரு அபேட்சகர் முஸ்லிம்களில் 100க்கு 35 பேருடைய வோட்-

டையாவது பெற்றால்தான், அந்த தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டதாக மதிக்கலாம் என்று நிபந்தனை போடலாம். அல்லது முஸ்லிம்களுக்கு ஸ்தானங்களை ஒதுக்கும்போது, அவர்கள் மெஜாரிட்டியாக இருக்கக்கூடிய தொகுதிகளில் ஸ்தானத்தை ஒதுக்கலாம். மைனாரிட்டி உரிமைகள் சம்பந்தமாக தனி ஏற்பாடுகளை சிபார்சு செய்ய அரசியல் நிர்ணய சபை ஒரு "ஆலோசனை போர்டு" ஏற்படுத்தப் போகிறது. மைனாரிட்டிகளின் கலாச்சாரம், கல்வி முறை, மத சுதந்திர முதலியவற்றிற்கான ஷரத்துக்கள் அரசியல் சட்டத்திலேயே இருக்கும். இப்படியெல்லாம் தனி ஏற்பாடுகள் இருப்பதால், சட்டசபை தர்தல் விஷயத்தில் வகுப்பு வேற்றுமை இல்லாமல் ற்ற நாடுகளைப்போலவே இருப்பதற்கு லீகர்கள் ணங்க வேண்டும்.

இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டிலும் சட்டசபைத் தேர்தலில் மைனாரிட்டி பிரச்னையைப் புகுத்திக் குழப்புவதில்லை. அங்கு "ஒற்றை மெம்பர் தொகுதி" வேண்டுமா அல்லது "பன்மை* மெம்பர் தொகுதி"

---

* ஒரு தொகுதிக்கு ஒரு மெம்பர் இருந்தால் அதற்கு "ஒற்றை மெம்பர் தொகுதி" என்று பெயர். இரண்டு அல்லது மூன்று அல்லது நான்கு மெம்பர்கள் ஒரே தொகுதி மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதாக இருந்தால், அதற்கு "பன்மை மெம்பர் தொகுதி" என்று பெயர்.

இரண்டு (அல்லது மூன்று) மெம்பர்கள் உள்ள தொகுதியில் ஒரு வோட்டர் தம்மிடமுள்ள இரண்டு (அல்லது மூன்று) வோட்டுகளையும் ஒரே அபேட்சகருக்குக் கொடுக்கலாமென்று இருந்தால் அதற்கு "குவியல் வோட்டு" என்று பெயர். அவ்வாறின்றி வோட்டர் தம்மிடமுள்ள இரண்டு (அல்லது மூன்று) வோட்டுகளில் ஒரு அபேட்சகருக்கு ஒரு வோட்டுத்தான் கொடுக்கலாமென்றிருந்தால் அதற்கு "பங்கீடு வோட்டு" முறை என்று பெயர்.

வோட்டர் தம்மிடமுள்ள மூன்று அல்லது நான்கு வோட்டுகளில் முதல் வோட்டு இன்னாருக்கு இரண்டாவது வோட்டு இன்னாருக்கு என்று அபேட்சகர்களிடையே ஏற்றத்

(இதன் தொடர்ச்சி அடுத்தப் பக்கம் பார்க்க)

வேண்டுமா, ஒற்றை வோட்டு முறை வேண்டுமா? குவியல் வோட்டு முறை வேண்டுமா? பங்கீடு வோட்டு முறை வேண்டுமா? அல்லது ஒற்றை மாற்று வோட்டு முறை வேண்டுமா என்றெல்லாம்தான் சர்ச்சைகள் நடப்பது வழக்கம்.

சமீப காலத்தில் பிரதிநிதித்துவ முறை சம்பந்தமாக உலகில் சில புதிய கருத்துக்களும் கிளம்பியிருக்கின்றன. அதாவது தேர்தல் தொகுதிகளை பிரதேச வாரியாக அமைக்காமல் தொழில் வாரியாக அமைப்பது. அதாவது மாயவரம் தாலூகா தொகுதி, தஞ்சை நகரத் தொகுதி, திருப்பத்தூர் டிவிஷன் தொகுதி என்றில்லாமல் கைத் தறி தொழிலாளர் தொகுதி, ஜவுளி வர்த்தகர் தொகுதி, வைத்தியர்கள் தொகுதி, விவசாயிகள் தொகுதி, வக்கீல் கள் தொகுதி, வர்த்தகக் குமாஸ்தாக்கள் தொகுதி என்று தொழில் வாரியாக தொகுதிகள் ஏற்படுத்துவது. அயர் லாந்தின் பார்லிமெண்டில் மேல் சபையில் பெருவாரியான ஸ்தானங்கள் இந்த முறையில் அமைக்கப்பட்டிருப்பதைப் பற்றி, ஏற்கனவே 183வது பக்கத்தில் பிரஸ்தாபித் துள்ளோம்.

---

(முன் பக்கம் தொடர்ச்சி)

தாழ்வு காட்டும் முறையில் வோட்டுச் செய்ய வசதியளித்தால் அதற்கு "ஒற்றை மாற்று வோட்டு முறை" என்று பெயர். இந்த முறைதான் சமீபத்தில் நடந்த அரசியல் நிர்ணய சபை மெம்பர் தேர்தலில் உபயோகிக்கப்பட்டது.

இந்த "ஒற்றை மாற்று வோட்டில்" பல அனுகூலங்கள் உண்டு. தனித் தொகுதிகளின் மூலம் சில வகுப்பினர் எதிர் பார்க்கும் நன்மையை இந்த "ஒற்றை மாற்று வோட்டு முறை" மூலம் சாதித்துக்கொள்ள முடியும். அதாவது தொகுதிகளைப் பெரிதாக வைத்து, அவற்றில் 7 அல்லது 8 ஸ்தானங்களை ஏற்படுத்தி தேர்தலை ஒற்றைமாற்று வோட்டு முறை மூலம் நடத்தினால், சமூகத்தில் உள்ள முக்கியமான வகுப்பினருக்கெல்லாம் ஒவ்வொரு ஸ்தானமாவது கிடைத்து விடும். ஆனால் ஓரளவு எழுத்தறிவு பரவியிருந்தால்தான் வோட்டுகள் தவறில்லாமல் பதிவாகும்.

இத்தாலியில் முஸொலினி பதவிக்கு வந்த பிறகு பார்லிமெண்டை மாற்றி யமைத்த போது, இந்த முறையைப் பின்பற்றினர். அவரது இத்தாலிய பார்லிமெண்டில் தொழில்வாரியாக முதலாளிகளின் சங்கங்களுக்கும், தொழிலாளர்களின் சங்கங்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது. இந்த முறைக்கும், சர்வாதிகாரத்துக்கும் ஏதோ சம்பந்தமிருப்பதாக யாரும் தவருக நினைத்துக் கொள்ளக்கூடாது. ஆனல் மேல் சபைக்குத்தான் இது பொருந்தும்; கீழ்சபைக்குப் பொருந்தாது.

கீழ்சபை பிரதிநிதித்துவத்தை பிரதேச வாரியாகவும், மேல்சபை பிரதிநிதித்துவத்தை தொழில்வாரியாகவும் அமைக்கலாமென்பது சிலருடைய அபிப்பிராயம்.

இந்தியாவில் சட்டசபைகளை இந்த முறையில் அமைக்காவிட்டாலும், பொருளாதாரத் திட்டங்களைச் செம்மையாக உருவாக்கும் நோக்கத்துடன் தொழில்வாரி பிரதிநிதித்துவத்தின் மூலம் பொருளாதார ஆலோசனை சபைகளைச் சட்ட பூர்வமாக ஏற்படுத்துவது பயன் தரும். 1919ம் வருஷத்தில் ஜெர்மனியில் தயாரித்த ஜனநாயக அரசியலமைப்பில் ஜில்லா தோறும் தொழிலாளர் ஸ்தாபனங்களும், முதலாளிகள் ஸ்தாபனங்களும் சேர்ந்து பொருளாதாரக் கௌன்ஸில்கள் அமைக்கவும், இவற்றின் மூலம் ஜெர்மனி முழுவதற்கும் ஒரு பொருளாதாரக் கௌன்ஸில் அமைக்கவும் ஏற்பாடு செய்தார்கள். பொருளாதார முன்னேற்றம், ஜனங்களின் வாழ்க்கை வசதிகள் பற்றி சட்டசபையில் வரும் மசோதாக்கள் முதலில் இவர்களுடைய ஆலோசனைக்கும், அபிப்ராயத்துக்கும் அனுப்பப்படும். இந்தக் கௌன்ஸில்கள் தாமாகவே சில பிரேரணைகளை மசோதாக்களாகத் தயாரித்து சட்ட சபைகளுக்கு அனுப்பலாம். அந்த பிரேரணைகளைச் சட்டசபை நிறைவேற்றினலும் சரி, நிறைவேற்ருவிட்டாலும் சரி, விவாதித்துத் தீரவேண்டும். இதேபோன்ற ஒரு ஏற்பாடு இந்தியாவில் இருக்கவேண்டுமா என்பது அரசியல் நிர்ணயசபை யோசிக்கவேண்டிய பிரச்னைகளில் ஒன்ருக இருக்கும்.

## "மைனாரிட்டி" பாதுகாப்புகள்

பிரஜா உரிமைகள், மைனாரிட்டிகளுடைய உரிமைகள், தற்காலம் சாதாரண நிர்வாகத்தில் இல்லாத பிற்போக்கு பிரதேசங்களின் பராமரிப்பு, மலை ஜாதியாரின் பிரதேசங்கள் ஆகியவைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்து இவற்றுக்கு அரசியலமைப்பு சட்டத்தில் என்ன பாதுகாப்புகள் அமைக்கவேண்டுமென்று சிபார்சு செய்ய இந்திய அரசியல் நிர்ணய சபை ஒரு ஆலோசனை கமிட்டியை ஏற்படுத்தவேண்டுமென்று தூது கோஷ்டியின் திட்டத்தில் 20வது பாராவில் சொல்லப்பட்டிருக்கிறது. அரசியல் நிர்ணய சபையில் தயாராகும் திட்டத்தை ஏற்றுக்கொண்டு பிரிட்டன் தன் அதிகாரத்தை இந்தியரிடம் மாற்றிக் கொடுப்பது, மைனாரிட்டிகளின் உரிமைகள் பற்றிய ஏற்பாடு திருப்திகரமாக இருப்பதையே பொறுத்தது என்று தூது கோஷ்டியினர் மே 25ந் தேதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். ஆகையால் "மைனாரிட்டி உரிமைகள்" என்பது என்ன? என்ற பிரச்னை மிகவும் முக்கியமானதாகும்.

உலகில், இந்த நூற்றாண்டில் மைனாரிட்டி (சிறுபான்மை ஜாதியார்) என்ற வார்த்தையை ஒரே ஒரு அர்த்தத்தில்தான் உபயோகிப்பது வழக்கம். உதாரணமாக செக்கோஸ்லோவாகியாவில் சில ஜெர்மனியர்கள் இருந்தால், அவர்களை ஒரு மைனாரிட்டி என்பர். துருக்கியில் கிரேக்கர்கள் இருந்தால், கிரேக்கர்களை மைனாரிட்டி என்பார்கள். அதாவது தனியாக வேறு ஒரு தாயகம் உள்ளவர்கள் ஒரு அன்னிய நாட்டிலிருந்தால், அவர்களை மைனாரிட்டிகள் என்று அழைப்பர்.

சாதாரண பிரஜைகளுக்குள்ள எல்லா உரிமைகளும் தமக்கும் வேண்டும் என்று கோர, இந்த மைனாரிட்டிகளுக்கு உரிமையுண்டு. அது மட்டும் போதாது என்றும், தமது பாஷை, கலாச்சாரம், மதம், முதலியவைகள் மெஜாரிட்டியென்ற பெரு வெள்ளத்தில் மறைந்து போய் விடாமல் சில பாதுகாப்புகள் வேண்டுமென்றும் மைனாரிட்டிகள் கேட்பதுண்டு. ஆனால் இந்த கோரிக்கைகளை

வற்புறுத்துவதற்கு சில வரம்புகள் உண்டு. ஜனத் தொகையில் நூறில் ஒரு பங்குகூட இல்லாதவர்கள் தமக்குத் தனியாகப் பள்ளிக் கூடங்கள் வேண்டும் என்றோ, தமது பாஷையிலேயே கல்வி போதிக்கப்பட வேண்டுமென்றோ கோரினால், அதைத் திருப்தி செய்வது முடியாத காரியம். ஆகையினால் மொத்த ஜனத் தொகையில் எத்தனையில் ஒரு பங்கு இருந்தால் ஒரு ஜாதிக்கு மைனாரிட்டி அந்தஸ்து உண்டு என்ற கேள்வி பிறக்கிறது.

துருக்கியில்

உதாரணமாக 1920ம் வருஷத்தில் ஏற்பட்ட துருக்கி அரசியலை எடுத்துக் கொள்வோம். ஜனத்தொகையில் நூறில் 20 பங்காவது இருந்தால்தான் ஒரு வகுப்பினர் விசேஷ உரிமைகள் கோர முடியும் என்று துருக்கி தேசத்தின் அரசியலமைப்பு கூறுகிறது. அவ்வாறு நிர்ணயித்து விட்டு பின்வரும் பாதுகாப்புக்களை அளித்தார்கள்:—

(1) மைனாரிட்டி வகுப்பைச் சேர்ந்த குழந்தைகளுக்கு பிரைமரி பள்ளிக் கூடங்களில் அவர்களது பாஷையில், அவர்களுடைய எழுத்து மூலமே கல்வி போதிக்க வசதி செய்யப்படும். ஆனால் குறைந்தது அந்த வகுப்பைச் சேர்ந்த 40 குழந்தைகளாவது (ஒரு ஊரில்) பள்ளிக் கூடத்தில் படிப்பதாக இருந்தால் தான் இந்த வசதி அளிக்கப்படும்.

(2) ஆரம்பக் கல்விக்காக சர்க்கார் மான்யம் அளிக்கும்போது, மைனாரிட்டி ஜாதி மாணவர்களின் தொகைக்குத் தகுந்தபடி சர்க்காரின் பட்ஜெட்டில் விதாசாரமாக பணம் ஒதுக்கப்படும்.

(3) பழக்க வழக்கங்கள், நடை உடை பாவனைகள், விவாக முறைகள், சொத்து வாரிஸ் உரிமைகள் முதலியவற்றை அந்த சமூகங்கள் தம் இஷ்டப்படி ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம்.

(4) மைனாரிட்டிகள் தம் இஷ்டம் போல தர்ம ஸ்தாபனங்கள், மதஸ்தாபனங்கள், பள்ளிக்கூடங்கள் அமைத்துக் கொள்ள உரிமை உண்டு.

(5) உத்யோகங்கள், சர்க்கார் பட்டங்கள், பதவிகள், முதலியவைகளை வழங்கும் விஷயத்தில் துருக்கியில் உள்ள எல்லோரும் சமமாகப் பாவிக்கப்பட வேண்டும்.

எஸ்தோனியாவில்

ஐரோப்பாவில் பால்டிக் கடற்கரையில் உள்ள எஸ்தோனியாவில் 1925-ம் வருஷத்தில் "மைனாரிட்டிகள் சுதந்திர சட்டம்" என்று ஒரு சட்டத்தை இயற்றி மைனாரிட்டிகளுக்கு பாதுகாப்பு அளித்தார்கள். கலாச்சார தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளவும், கல்வி ஸ்தாபனங்கள் அமைத்தல், அவற்றை மேற்பார்வையிடுதல் முதலிய காரியங்களுக்காகவும் தம்மிடையே ஸ்தாபனங்களை அமைத்துக்கொள்ள மைனாரிட்டிகளுக்கு உரிமை கொடுக்கப்பட்டது. இந்த ஸ்தாபனங்களுக்கு சட்ட பூர்வமான அந்தஸ்து அளித்து பின்வரும் உரிமைகளை வழங்கினார்கள்:—

(1) சர்க்காரின கல்வி பட்ஜட்டில் மைனாரிட்டிகளுக்கு என்று ஒதுக்கும் பணத்தை மைனாரிட்டி சுதந்திர ஸ்தாபனங்களிடம் சர்க்கார் ஒப்படைத்து விடும். அந்த மைனாரிட்டி சுதந்திர ஸ்தாபனங்கள் தம்மிஷ்டம்போல விதிகள் தயாரித்துக்கொண்டு, அந்த பணத்தை விநியோகம் செய்யலாம்.

(2) அந்த ஜாதியார்கள் விரும்பினால் சில குறிப்பிட்ட காரியங்களுக்காக அந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் மீது சர்க்காரே வரிவிதித்து அந்தப் பணம் முழுவதையும் அந்த மைனாரிட்டி சுதந்திர ஸ்தாபனங்களிடம் கொடுத்து விடுவார்கள்.

(3) மைனாரிட்டி வகுப்பினரின் செலவுக்கென்று பணத்தை அவர்களிடமே ஒப்படைத்து விடுவதால், அந்த ஜாதியைச் சேர்ந்த மாணவர்கள் மற்ற பள்ளிக்கூடங்களுக்கு வரும்போது அவர்களுடைய கல்விச் செலவை மைனாரிட்டி ஸ்தாபனமே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மேலே எடுத்துக்காட்டியுள்ள தகவல்கள் மைனாரிட்டிகள் கோரக்கூடிய விசேஷ உரிமைகள் என்ன என்பதற்கு உதாரணங்களாகும். இந்த விசேஷ உரிமைகள் அளிக்கப்பட்ட போதிலும், மற்றவர்களுக்குள்ள எல்லா உரிமைகளும் இவர்களுக்கும் உண்டு என்பது குறிப்பிடத் தக்கது. அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் சர்க்காரின் அதிபதிகளாகவோ, மந்திரிகளாகவோ வருவதற்குக் கூடத் தடை கிடையாது.

நாம் ஏற்கனவே சொல்லியபடி மைனாரிட்டி பிரச்னை அரசியல் பிரச்னையில் குறுக்கிட்டு, குழப்ப இடமில்லாத படி அந்த பிரச்னையை தனியாக ஒதுக்கித் தீர்ப்பதுதான் இந்த ஏற்பாடுகளின் நோக்கம்.

ஒரு புது யோசனை

இதே லக்ஷியத்துடன் 1940-ம் வருஷத்தில் ஸ்ரீ. பாட்ரிக் ஸ்பியர் என்ற ஒருவர் வெளியிட்ட ஒரு துண்டு பிரசுரத்தில் சில யோசனைகள் கூறியுள்ளார்:—

> மாகாண பார்லிமெண்டின் கீழ் சபையில் வகுப்பு வாத தொகுதிகள் எதுவுமில்லாமல் பிரதேச வாரியாக பிரதிநிதித்துவ மளிப்பது. மேல் சபையில் மாகாணத்தில் உள்ள எல்லா முக்கியமான வகுப்புக்களுக்கும் சமமான பிரதிநிதித்துவமளிப்பது. உதாரணமாக ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள், ஹிரிஜனங்கள் ஆகிய ஒவ்வொரு சமூகத்துக்கும் பத்து பிரதிநிதிகள் வீதம் 40 பேர் கொண்ட ஒரு மேல் சபையை ஏற்படுத்துவது. இந்தப் பிரதிநிதிகள் அந்தந்த வகுப்பினரால் ஏற்படுத்தப்படும் மாகாண சங்கத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். இந்த மாகாண சங்கங்கள் (எஸ்தோனியாவில் உள்ள மைனாரிட்டிகள் சுதந்திரஸ்தாபனம்போல) சட்ட பூர்வமான அந்தஸ்து உள்ளவையாக இருக்கும். அந்தந்த சமூகத்தின் கல்வி, கலாச்சார விஷயங்களை நிர்ணயிக்கும் உரிமை அவற்றுக்கு உண்டு. இந்த ஏற்பாட்டில் மாகாண பார்லிமெண்டின் கீழ் சபையானது ஓர் அரசியல் சபையாகவும்

> மேல் சபையானது ஓர் சமூக சபையாகவும் வேலைசெய்யும். அரசியல் சபையில் நிறை வேறிய சட்டத்தில் சமூக கலாச்சார சம்பந்த முள்ள விஷயங்கள் ஏதேனும் இருந்தால் அந்த மசோதா மேல் சபைக்குச் சமர்ப்பிக்கப்படும். அங்கு, சம்பந்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த எல்லோரும் ஏகமனதாக எதிர்த்தால் அந்த மசோதா நிறைவேறாது.

இதுதான் ஸ்ரீ. ஸ்பியர் கூறிய யோசனைகளின் சுருக்கமான கருத்து. இந்த யோசனை பற்றி பலர் பல விதமான ஆட்சேபங்கள் சொல்ல முடியும். இருந்தாலும் மைனாரிட்டி பிரச்னை விஷயமாக இது போன்ற யோசனைகளையும் அரசியல் நிர்ணய சபை கவனிக்க வேண்டியிருக்கும்.

## உடன்படிக்கை விஷயங்கள்

பிரிட்டன் தன்னிடமுள்ள அதிகாரத்தை இந்தியாவிடம் மாற்றி கொடுப்பது சம்பந்தமாக அரசியல் நிர்ணய சபைக்கும், பிரிட்டிஷ் சர்க்காருக்கு மிடையே ஒரு உடன்படிக்கை பேசி முடிக்கப்பட வேண்டுமென்று தூது கோஷ்டியின் அறிக்கை 22வது பாரா கூறுகிறது. இந்த உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டுதான் பிரிட்டன் இந்தியாவை விட்டு "வெளியேறும்".

பிரிட்டிஷ் ஆட்சி போய் இந்திய ஆட்சி வருகிறதென்பதை உத்தேசித்து, பல பிரிட்டிஷ் அதிகாரிகள் சர்க்கார் வேலையிலிருந்து உடனடியாகவே விலக விரும்பலாம். இந்த அதிகாரிகளில் பெரும்பாலோர் பிரிட்டிஷ் சர்க்காரால் நியமிக்கப்பட்டவர்கள். ஆகையால் இவர்களுக்கு பென்ஷன், நஷ்ட ஈடு முதலியவை கொடுப்பதற்கு இந்தியா பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென்று பிரிட்டன் கோருவதாயிருக்கலாம். ஆனல் இது தர்மநியாயத்துக்கு ஒவ்வாத கோரிக்கையே. பிரிட்டனின் க்ஷேமலாபங்களுக்காகத்தான் பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் இந்திய சர்க்காரில் வேலை பார்த்தார்கள். அந்த பென்

ஷன் பொறுப்புகளை இந்தியாமீது சுமத்தாமல், பிரிட்டன் பெருந்தன்மையோடு நடந்துகொள்வது அவசியம்.

பிரிட்டிஷ் வர்த்தகத்துக்கு பாதகமாக இந்திய வர்த்தகத்துக்கு சலுகை யளிக்கக்கூடாதென்று 1935 வருஷத்திய இந்திய அரசியல் சட்டத்தில் பல ஷரத்துக்கள் இருக்கின்றன. இந்த ஷரத்துக்களை உடன்படிக்கையாக மாற்றுவதற்கு பிரிட்டன் முயற்சிக்கும். இதற்கு இந்தியா உடன்பட முடியாது. ஏனென்ருல் இந்தியத் தொழில்களை வளர்த்து பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுதான் தேசீய சுதந்திரத்தின் உடனடியான நோக்கம்.

ராணுவம், யுத்த வசதி சம்பந்தமாக இந்தியாவின் உதவி பிரிட்டனுக்குத் தேவை; பிரிட்டனின் உதவியும் இந்தியாவுக்கு தேவை. சுய மதிப்பும், திறமையுமுள்ள ஒரு இந்திய ராணுவம் உலக சமாதானத்துக்கு மிகவும் அவசியம். இதை கருத்தில் கொண்டு இந்தியாவின் அரசியல், பொருளாதார சுதந்திரத்துக்கு பாதகமில்லாதவாறு சில ஏற்பாடுகள் செய்யலாம். 1922-ம் வருஷத்தில் ஐரிஷ் குடியரசு சம்பந்தமாக பிரிட்டனும், சுதந்திர ஐரிஷ்பிரதிநிதிகளும் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் அயர்லாந்தில் உள்ள சில துறைமுகங்களை யுத்தகாலத்தில் பிரிட்டன் உபயோகித்துக் கொள்ளலாம் என்று ஏற்பாடு செய்தார்கள். அதே போல இந்தியா விஷயத்திலும் செய்வதாயின், அந்த ஏற்பாடுகள் இந்தியாவின் ராஜாங்க உரிமைகளுக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும்.

இந்தியாவில் உள்ள போர்ச்சுகீசிய, பிரெஞ்சு பிரதேசங்கள் இந்திய சர்க்காரிடம் ஒப்படைக்கப்படவேண்டுமென்பது அவசியம். இவ்விஷயத்தில் சுதந்திர இந்தியாவின் கோரிக்கைக்கு ராஜதந்திர துறையில் ஆதரவளிக்க பிரிட்டன் இணங்கவேண்டும். சுயாட்சி இல்லாத பிரிட்டிஷ் நாடுகளில் (கிழக்காப்ரிக்கா போன்ற இடங்களில்) மற்றவர்களுக்கு சமமான உரிமை அங்கு குடியேறியுள்ள இந்தியருக்கும் கிடைப்பதற்கு ஆதரவளிப்பதாக

பிரிட்டன் உத்தரவாதமளிக்கவேண்டும். ஜனத்தொகையில் 20 சத விகிதம் இந்தியர்கள் இருந்தால் இந்த சமத்துவம் நிச்சயமாக அளிக்கப்படவேண்டும்,)

## தேச விசுவாசம்

அகில இந்திய யூனியன் ஏற்படுத்துவதின் லக்ஷியம் நாம் எல்லோரும் இந்திய பிரஜைகள் என்ற உணர்ச்சியை ஸ்திரப்படுத்துவதுதான். ஆகையால் எல்லா மாகாணங்களிலும் சட்டசபை மெம்பர்கள், நிர்வாகிகள் சர்க்கார் அதிபதிகள், இலாகா தலைவர்கள் ஆகியோர் தம் பதவிகளில் அமரும்போது, அகில இந்திய யூனியனுக்கே விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்தியாவின் தேசியக் கொடி, இந்தியாவின் தேசீய கீதம் இவைபற்றி அரசியல் நிர்ணய சபையில் ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

## முடிவுரை

இந்த புத்தகத்தில் நாம் கூறியுள்ள யோசனை எதையும் முடிவான அபிப்பிராயமாக வாசகர்கள் கருதக்கூடாது என்பதை முன்னுரையிலேயே சொல்லி யிருக்கிறோம். இங்கும் அதை வற்புறுத்துவது அவசியம். பிரச்னைகளின் தன்மையை புரிந்துகொள்ளும்படி செய்வதற்காகத்தான் ஆங்காங்கு சில அபிப்பிராயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. ஒன்றே ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறோம். புதிய அரசியலமைப்பு ஏற்பட்ட பிறகு இப்போதிருக்கும் அரசியல் கட்சிப் பிரிவினைகள் இப்படியே இருக்குமென்று எதிர்பார்க்கக்கூடாது. சமூக, பொருளாதார விஷயங்களில் பலவிதமான அபிப்ராயங்களுள்ளவர்களும் காங்கிரஸில் இருக்கிறார்கள். அன்னிய ஆதிக்கம் ஒழியவேண்டுமென்ற ஒரு விஷயத்தில்தான் அவர்கள் எல்லோரும் ஒரே கட்சியில் இருக்கிறார்கள். அன்னிய ஆதிக்கம் ஒழிந்த பிறகு காங்கிரஸ் ஸ்தாபனத்தை இப்போதுள்ள கட்டுப்பாடுகளுடன் நீடிக்க முடியாது; நீடிப்பது விரும்பத் தக்கதுமல்ல. முஸ்லிம்

Nk. 2436



லீகின் நிலைமையும் அதுவேதான். ஆகையால் அரசியல் நிர்ணய சபையில் எந்த பிரச்னையையும் பழைய சர்ச்சைகளையே கருத்தில் கொண்டு பார்க்காமல் வருங்காலத்தில் இந்த தேச மக்களின் வாழ்க்கைத் தரம் உயருவதற்கு வசதியான ஓர் அரசியல் கருவியை தயாரிக்கும் மனப்பான்மையுடன் விவாதிக்க வேண்டும். இந்த மனப்பான்மை இருந்தால் அரசியலமைப்பின் விவர நுணுக்கங்கள் எவ்வாறு இருந்தாலும் பரவாயில்லை. 40 கோடி மக்களுக்கு ஒரு அரசியலைத் தயாரிப்பதென்பது அரசியல் கட்சி வாதத்தால் முடியக்கூடிய காரியமல்ல. கட்சி வாதமும், வரட்டு ஜம்பமும் மறைந்துபோகும்படியான உயரிய ராஜதந்திரமே இப்போது தேவை. அது இருக்குமானால் உலகத்துக்கே இந்தியா ஓர் சிறந்த உதாரணமாக விளங்க முடியும்.